# நீங்கள் இருக்குமிடத்தில் கிறிஸ்துவின் சபையை ஆரம்பிப்பது எப்படி?

# HOW TO BEGIN THE CHURCH OF CHRIST WHERE YOU ARE?

**J.C.சோட்**

**J.C. CHOATE**

வெளியீடு

**உலக இலக்கிய பதிப்பகம்**

*288, தாராபுரம் ரோடு,*

*காங்கயம் - 638 701*

*இந்தியா*

# How To Begin The Church of Christ Where You Are?


| | | |
|---|---|---|
| Author | : | **J.C. CHOATE** |


© Copy Right Reserved


| | | |
|---|---|---|
| Language | : | Tamil |
| Copies | : | 2000 |
| First Printing | : | January 24, 2001 |
| Typeset by | : | **Aarthi Computers**<br>Erode - 638 001.<br>Ph : 260971 |
| Printed by | : | **Konar Printers**<br>Madurai - 625 012<br>Ph : 670255 |
| Published by | : | **World Literature Publications**<br>C/o Church of Christ<br>288, Dharapuram Road,<br>Kangayam - 638 701. India<br>Ph:(04257) 20030, 23282<br>**e-mail:kangayam cofc@eth.net** |

# முன்னுரை

சுத்த சுவிசேஷத்தை ஓங்கி ஒலிக்கும் திருமறை ஆசான் மாத இதழில், கடந்த சில ஆண்டுகளாக வெளிவந்த, தொடர் கட்டுரைகளின் தொகுப்பு தான், **நீங்கள் இருக்குமிடத்தில் கிறிஸ்துவின் சபையை ஆரம்பிப்பது எப்படி?** என்ற இந்நூல். இதை, நூல் வடிவில் கொண்டு வர, பரலோகத்தின் தேவன் எனக்கு மிகுந்த இரக்கம் காட்டினார்.

மெய்கிறிஸ்தவத்தை, வேத வசனங்களின் உபதேசப்படி ஏற்றுக்கொண்டு, பல காரணங்களினிமித்தம், தமிழ் பேசும் நல் உலகமெங்கும் பரவி இருக்கின்ற கிறிஸ்தவர்கள், தாங்கள் இருக்க நேருமிடத்தில், தேவனை ஆவியோடும், உண்மையோடும் தொழும்படியான ஆராதனையைத் தொடங்கவும், அதை உபதேசக் குறைபாடுகளின்றி நடத்தவும், அங்குள்ள மக்களுக்கு கிறிஸ்துவின் சபையைக் குறித்து எடுத்துச் சொல்லவும், அவர்களையும் வேத வசனங்களின் அதிகாரப்படி ஆராதிக்கத் தூண்டவும் இந்நூல் பெரிதும் உதவியாக இருக்குமென நம்புகிறேன், ஜெபிக்கிறேன்.

உலக இலக்கிய பதிப்பகத்தின் நிறுவனரும், இந்நூலின் ஆசிரியருமான சகோ. **J.C.சோட் (J.C.CHOATE)** அவர்கள், இந்நூலை, தமிழில் கொண்டுவர அடியேனுக்கு பேராதரவு காட்டினார். இன்னும், அடியேனின் பல இலக்கியப் பணிகளை இச்சகோதரன் வெகுவாகத் தாங்கி வருகிறார். இவருக்கு நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன்.

இந்நூல், நமது தாய் மொழில் சிறப்பாக வெளிவர எனக்குத் துணை நின்ற எங்களுடைய உலக வீடியோ வேதாகமக் கல்லூரி யின் ஆசிரியர் J.பிக்கின்ஸ் அவர்களுக்கும், எனக்கு உதவிசெய்த உடன் ஊழியர்கள் சகோ. K. சேகர் (திருப்பூர்), சகோ.M.ஜார்ஜ் சாலமோன் (பல்லடம்) அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேறொன்றையும், இங்கு என்னால் குறிப்பிடாமல் இருக்க முடியவில்லை. திருமறை ஆசானின் நிறுவன ஆசிரியரும், காலஞ்சென்ற எனது தந்தையுமான E.Z. செல்வநாயகம் அவர்கள், ஆங்கிலத்தில் மட்டுமே உள்ள புதிய ஏற்பாட்டு உபதேசங் களடங்கிய பல நூல்கள் தமிழ் மொழியில் வெளியாக வேண்டு மென்று பெரிதும் விரும்பிப் பாடுபட்டார். ஒருவேளை, அவரு டைய நாட்களில் அவை நிறைவேறாவிட்டாலும், அவர் எடுத்துக் கொண்ட முயற்சியின் பயனாகவே இப்பொழுது இந்நூல் வெளிவருகிறது.

நீங்கள் இருக்குமிடத்தில் கிறிஸ்துவின் சபையை ஆரம்பிக்கும் உங்கள் முயற்சி வெற்றி பெற வாழ்த்துகிறேன். தேவ கிருபை உங்களோடிருப்பதாக ! ஆமென்.

கிறிஸ்துவின் இராஜ்ஜியத்தின்
விரிவாக்கப்பணியில்

சகோ. S.ராஜநாயகம்

ஜனவரி 24, 2001
காங்கேயம்.

# ஆசிரியர் உரை

பரிசுத்த வேதாகமம் சம்பந்தப்பட்ட, பல்வேறு தலைப்புகளின் கீழாக, தொடர் கட்டுரைகள் எழுதவும். இலங்கை வானொலியின் மூலமாக தொடர் பாடங்களை ஒலி பரப்பவும், நான் புது டெல்லியில் வாய்ப்பு பெற்றேன். அப்படிச் செய்யும்போது, நான் என்னுடைய வாசகர்கள் மற்றும் வானொலி நேயர்களின் தேவைகளை நிறைவேற்ற முயற்சிக்கிறேன். அதனடிப்படையில், இம்முறை, *"நீங்கள் இருக்குமிடத்தில் கிறிஸ்துவின் சபையைத் தொடங்குவது எப்படி?"* என்ற தலைப்பின் கீழாக,26 பாடங்களைக் கொண்டு வர முடிவெடுத்தேன், ஏனெனில், கர்த்தருடைய சபையின் அங்கத்தினர்கள், தேசத்தின் எந்தவொரு பகுதியில் போய் இருக்க நேர்ந்தாலும், அவர்கள் இருக்குமிடத்தில் கர்த்தருடைய சபையைத் தொடங்குவதற்கான அவர்களின் முயற்சியில், இது உதவிகரமாக இருக்கலாம் என உணர்ந்தேன். உங்களில் யாராவது ஒருவர், அப்படிப்பட்ட இடத்தில் இருந்தால், நீங்கள் எடுக்க வேண்டிய முயற்சியில், இந்நூல் உதவிசெய்வதாகவும், ஊக்கமளிப்பதாகவும், இருக்கவேண்டு மென்பது என்னுடைய ஜெபம்.

கர்த்தருடைய சபை இல்லாத ஒரு பட்டணத்திலோ அல்லது பகுதியிலோ நீங்கள் இருந்தால், அப்பட்டணத்தில் ஒரு பிராந்திய சபையைத் தொடங்கவோ அல்லது பட்டணத்திற்கு அருகாமையிலுள்ள கிராமத்திற்கு போய் அப்படிப்பட்ட பணியைச் செய்யவோ, இதன் மூலம் நீங்கள் உற்சாகமடைய முடியும். இக்காரியத்தில், தேவன் உங்கள் உதவியை நாடுகிறார். இதற்காக, நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள் என்பது உங்களைப் பொறுத்துள்ளது.

இது சம்பந்தமான நூல்கள் அனுப்புவது அல்லது கேள்விகளுக்குப் பதிலளிப்பது என்று, ஏதாவது ஒரு வகையில் எங்கள் உதவி தேவைப் பட்டால், தயவுசெய்து எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.அது, போலவே, ஒரு பிராந்திய சபை ஆரம்பிப்பதில், நீங்கள் வெற்றி பெற்றால், உங்களுடன் சேர்ந்து, நாங்களும் மகிழ்ச்சியடைய, அதையும் எங்களுக்கு எழுதுங்கள்.

**J.C.சோட்**
புதுடெல்லி
*அக்.16.1990*

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | மனிதனுக்கான தேவனுடைய திட்டம் | 1 |
| 2. | உங்களுக்கு ஒரு வேதாகமம் தேவை | 6 |
| 3. | நீங்கள் இரட்சிக்கப்படுவது அவசியம் | 11 |
| 4. | சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிவது எப்படி? | 17 |
| 5. | கர்த்தருடைய சபையை அடையாளம் காண்பது எப்படி? | 22 |
| 6. | நீங்கள் கர்த்தருக்கு முக்கியமானவர் | 28 |
| 7. | நீங்கள் இருக்குமிடத்தில் ஏன் சபை அவசியம்? | 33 |
| 8. | கர்த்தருடைய சபையை ஆரம்பிப்பது எப்படி? | 38 |
| 9. | ஞானஸ்நானம் கொடுப்பது எப்படி? | 43 |
| 10. | ஆராதிப்பது எப்படி? | 48 |
| 11. | கர்த்தருடைய பந்தியை கொடுப்பது எப்படி? | 52 |
| 12. | ஜெபிப்பது எப்படி? | 56 |
| 13. | பாடுவது எப்படி? | 61 |
| 14. | கொடுப்பது எப்படி? | 65 |
| 15. | வேத பாட வகுப்புகள் | 70 |
| 16. | நற்செய்தி அறிவிப்பது எப்படி? | 75 |
| 17. | சபையின் ஆளுகை அமைப்பு | 80 |

18. எங்கே கூடுவது? 86
19. சபையில் பெண்கள் 91
20. ஊழியர்களைத் தாங்குவது எப்படி? 97
21. தேவையிலிருப்போருக்கு உதவுவது எப்படி? 102
22. ஒருமித்து வேலை செய்வது எப்படி? 107
23. மன்னிப்பது எப்படி? 112
24. கொள்கை சுத்தமாக இருப்பது எப்படி? 117
25. கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வதெப்படி? 122
26. பிரச்சினைகளைக் கையாளுவதெப்படி? 127

# மனிதனுக்கான தேவனுடைய திட்டம்

இம்முதல் பாடந்தொடங்கி, *"நீங்கள் இருக்குமிடத்தில் கிறிஸ்துவின் சபை தொடங்குவது எப்படி?"* என்ற தலைப்பின் கீழாக, பாடம் படிக்க உள்ளோம். கிறிஸ்துவின் சபையின் முக்கியத்துவம் பற்றி, வேதாகமம் போதிக்கின்ற பல உண்மைகளையும், நாம் இருக்குமிடத்தில் அது இருக்க வேண்டிய அவசியம் பற்றியும், அப்படி இல்லாத பட்சத்தில் , அதை எப்படி சாத்தியமாக்குவது என்பது பற்றியும், வேத வசனங்களின் ஆதாரத்தோடு நாம் பார்க்க உள்ளோம்.

இப்பொழுது, *" மனிதனுக்கான தேவனுடைய திட்டம்"* என்ன என்பது பற்றிப் பார்ப்போம். தேவன் இருக்கிறார் என்றும், நாம் அவருடைய படைப்பு என்பது பற்றியும் நாம் தெரிந்திருந்தால் மட்டும் போதாது. மாறாக, தேவன் மனிதனுக்காக, ஒரு பெரிய திட்டம் வைத்திருக்கிறார் என்பதையும் நாம் அறிந்திருக்க வேண்டும்.

தேவன் எப்பொழுதும் ஜீவித்துக்கொண்டுள்ளார். இப்பொழுதும் ஜீவிக்கிறார். என்றென்றும் ஜீவிப்பார். அவர் சரீரப்பிரகாரமானவர் அல்ல. யோவான் 4:24ன்படி அவர் ஆவியாயிருக்கிறார். " எல்லாருக்கும் ஒரே தேவனும், பிதாவும் உண்டு. அவர் எல்லார்மேலும், எல்லாரோடும், உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர்" (எபே.4:6). அவர், வானத்தையும், பூமியையும் மாத்திரமல்ல, (ஆதி.1:1) அதிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கினார். ஆதியாகமம், முதல் மூன்று அதிகாரங்களை நாம் தொடர்ந்து வாசிப்போமானால், ஆணையும், பெண்ணையும் தமது சாயலில் படைத்ததின் மூலம், அவனை தனது படைப்புகள் அனைத்திற்கும் கிரீடமாக்கினார் என்பதை அறியலாம். (ஆதி.1:26,27;ஆதி.2:7).

மனிதன் தற்செயலாக, இந்த உலகத்திற்குள் வந்து விட வில்லை. இன்னும், பூமியின் இடத்தை நிரப்பும்படியாகவும், அல்லது எந்த நோக்கமும் அல்லது வழி காட்டுதலும் இல்லாமல், பூமியில் சுற்றித் திரியும்படியாகவும் உண்டாக்கப்படவில்லை. இவ்வுலகின், சிற்றின்பத்தை நாடி, அதில் மகிழ்ந்து தன்னுடைய நாட்களைக் கழிப்பதைக் காட்டிலும் , மேம்பட்ட ஒன்றாக அவர் இருக்கவேண்டியதாயிருந்தது. தன்னைப் படைத்

தவரை கனப்படுத்தும்படியாக இங்கு வைக்கப்பட்டான். நீண்ட காலத்திற்கு முன்பு, சங்கீதக்காரனாகிய தாவீது இவ்விதம் எழுதியுள்ளான். '' கர்த்தரே தேவனென்று அறியுங்கள். நாம் அல்ல, அவரே நம்மை உண்டாக்கினார்; நாம் அவர் ஜனங்களும், அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாயிருக்கிறோம். அவர் வாசல்களில் துதியோடும், அவர் பிராகாரங்களில் புகழ்ச்சியோடும் பிரவேசித்து, அவரைத் துதித்து அவருடைய நாமத்தை ஸ்தோத்திரியுங்கள்'' (சங்.100:3,4)

மனிதன் உண்டாக்கப்படுவதற்கு முன்பே, அவனைப் பற்றிய ஒரு திட்டம் தேவனுக்கு இருந்தது. நீதிமான்கள் இரட்சிப்படையவும், அநீதிக்காரர்கள் இரட்சிப்பை இழந்து போகவும் வேண்டுமென்று, அவர் அநாதி நாட்களிலேயே முடிவு செய்திருந்தார் அல்லது தீர்மானித்திருந்தார். எபேசு பட்டணத்து கிறிஸ்தவர்களிடம், பவுல் அப்போஸ்தலன், இவ்விதம் பேசுகிறார். ''தமக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களும் குற்றமில்லாதவர்களுமாயிருப் பதற்கு, அவர் உலகத்தோற்றத்துக்குமுன்பே கிறிஸ்துவுக்குள் நம்மைத் தெரிந்து கொண்டபடியே, பிரியமானவருக்குள் தாம் நமக்குத் தந்தருளின தம்முடைய கிருபையின் மகிமைக்குப் புகழ்ச்சியாக, தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படியே, நம்மை இயேசு கிறிஸ்துமூலமாய்த் தமக்குச் சுவிகாரபுத்திரராகும்படி முன் குறித்திருக்கிறார்'' (எபே.1:4-6). நீதிமானை இரட்சிக்கவும், துன்மாக்கரை ஆக்கினைக்குள்ளாக்கவும், தாம் ஏற்கனவே முடிவு செய்திருந்தாலும், ஒவ்வொரு மனிதனும் தான் எந்தக் கூட்டத்தில் இருக்கவேண்டுமென்று முடிவு செய்யும் அதிகாரத்தை ஒவ்வொருவருக்கும் கொடுத்திருந்தார். ஒருவன் இந்த உலகத்திலும், இனிவரும் உலகத்திலும் இரட்சிக்கப்பட்ட, நீதிமான்களின் கூட்டத்தில், தான் சேரவேண்டுமென்று முடிவு செய்தால், தான் இந்தப் பூமியில்இரட்சிக்கப்படும்படியாக, கர்த்தருக்கும், அவருடைய வசனங்களுக்கும் தன்னைக் கீழ்ப்படுத்த வேண்டும். அப்பொழுது அவன், சபையில் சேர்க்கப்படுவான். (மாற்கு.16:15,16;அப்.2:47). ஒருவன் இந்த தேவ சட்டத்திற்கு கீழ்ப்படியத் தவறினால், அவன், தான் தண்டிக்கப்படும் கூட்டத்தில் சேர முடிவெடுத்திருக்கிறான் என்றுதான் பொருள்.

ஒருவன், இப்பூமியில் பிறக்கும்போது, பாவமில்லாதவனாக, அல்லது சுத்தமாக, பரிசுத்தமாகப் பிறந்திருந்தபோதிலும், அவன்,நன்மை, தீமை அறியத்தக்க பருவத்தை அடையும்போது, பாவியாகிறான். அப்பொழுதிருந்து,அவனுடைய செயலுக்கு தேவன் அவனைப் பொறுப்

பாளியாக்குகிறார். இதையே, வேறுவிதமாகச் சொல்வதென்றால், தேவச்சட்டத்தை மீறி, இழந்துபோன நிலையை அடைகிறான். நியாயப் பிரமாணத்தை மீறுகிறதே, அதாவது தேவச் சித்தத்திற்கு எதிரான ஒன்றைச் செய்வதே பாவம். (1.யோவான்.3:4). இவ்வகையான மக்களைக் குறித்துத்தான் பவுல், ''எல்லாரும் பாவம் செய்தார்கள்'' என்று சொல்லுகிறார். (ரோமர்.3:23)

மனிதன் பாவத்திலிருப்பதையும், அப்பாவம் அவனுக்கு ஆவிக்குரிய மரணத்தைத் தருமென்பதையும், தேவன் கண்டு (ரோம.6:23). அவனை இரட்சிக்கும்படியாய், தன்னுடைய குமாரனை, பூமிக்கு அனுப்பினார். யோவான், ''தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுபோகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்'' (யோவான் 3:16,17) என்று சொல்லியுள்ளான்.

மனிதன் தன்னுடைய சொந்த நீதியிலும், மிருகங்களின் பலியாலும் தன்னை இரட்சித்துக்கொள்ள முடியாது. (எபே.2:8,9; எபி.10:14). ஆகவேதான், தேவன் தன்னுடைய சொந்த குமாரனை பூமிக்கு அனுப்பி, மனிதர்கள் மத்தியில் வாழச் செய்து, இறுதியில், உலகத்தின் பாவங்களுக்காக மரிக்கும்படி செய்தார்.'' நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, அவராலே கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே'' (ரோமர்.5:8,9) என்று வாசிக்கிறோம். ''கிறிஸ்து தமது சரீரத்திலே, நம்முடைய பாவங்களைச் சுமந்தார்'' என்று பேதுரு சொல்லியுள்ளார். (1.பேதுரு.2:24) நம்முடைய பாவங்களிலிருந்து, நாம் இரட்சிப்படைய தம்முடைய் இரத்தம் சிந்தப்பட்டதாக, கிறிஸ்துதாமே, சொல்லியுள்ளார். (மத்.26:28).

ஆனால், ஒருவரின் மரணமும், இரத்தம் சிந்துதலும், நம்முடைய பாவங்கள் அல்லது தவறுகளிலிருந்து, நம்மை எப்படி இரட்சிப்படையச் செய்யும்? இங்கே, யாரோ ஒருவரின் மரணம் அல்லது இரத்தம், ஒருவனை இரட்சிக்கப்போதுமானதல்ல என்பதை நாம் உணர வேண்டும். ஆனால், அதே சமயம், எந்தவொரு பாவத்தையும் ஒருபோதும் செய்யாத,

தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவின் மரணமும், அந்த மரணத்தின் மூலம் அவர் சிந்தின இரத்தமும் நம்மை இரட்சிக்க வல்லமையுள்ளதாயிருக்கிறது. ஆம், அந்த தியாக மரணமும், அந்த இரத்தமும், நம்முடைய பாவங்களிலிருந்து நம்மை இரட்சிக்கப் போதுமானதாயுள்ளது.

நாம் இப்படிச் சொல்லும்போது, நமது மனதுக்கு வரும் அடுத்த கேள்வி, ''அப்படியானால், ஒருவனுடைய பாவங்கள் அவனிலிருந்து எடுத்துப்போடப்படும்படியாய், கிறிஸ்துவின் இரத்தம் எப்படி ஒருவனுடைய பாவங்களுக்குச் செலுத்தப்படவேண்டும்?'' என்பது. வேத வசனங்களின்படி, கர்த்தரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும்போது, அது, நடக்கும். கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்தெழுதல் இவைகளுக்குப் பிறகு, இந்தக் கட்டளையோடு அவர் சீஷர்களை அனுப்பினார். ''பின்பு, அவர் அவர்களை நோக்கி; நீங்கள் உலகமெங்கும்போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவானகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப் படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்'' (மாற்கு.16:15,16). ஒருவன், கர்த்தரில் விசுவாசம் வைத்து, தன்னுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்பி, தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு, திரு முழுக்குப் பெறும்போது, ஒருவன் தன்னுடைய கீழ்ப்படிதலின் மூலம், கிறிஸ்துவின் இரத்தத்தோடு தொடர்பை ஏற்படுத்திக்கொள்கிறான். அது, அவனுடைய பாவங்களிலிருந்து அவனைக் கழுவுகிறது. பவுல், ''அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவமன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது'' (எபே.1:7) என்று கூறியுள்ளார். இங்கே, அவர் கிறிஸ்துவின் இரத்தத்தைக் குறிப்பிடுகிறார்.

அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தைப் படிக்கும்போது, அங்கே மனமாற்றமடைந்தவர்களின் பட்டியல் கொடுக்கப் பட்டுள்ளது. அதில் பதினொரு மாதிரிகள் உண்டு. அவைகள் ஒவ்வொன்றையும் கவனித்தால், நற்செய்தியின் கட்டளைகளுக்கு அவர்கள் கீழ்ப்படிந்தபடியினாலே தான் அவர்கள் இரட்சிக்கப்பட்டார்களென்று தெளிவாகக் காணலாம். ஆம், அவர்கள் கிறிஸ்துவின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தபடியினாலே, கிறிஸ்துவினாலும், அவருடைய இரத்தத்தினாலும் கழுவப்பட்டார்கள், பாவமன்னிப்படைந்தார்கள் அல்லது இரட்சிக்கப்பட்டார்கள், இது தவிர, வேறொரு முறையில், அவர்கள் இரட்சிக்கப்பட்டதாக இல்லை.

கர்த்தரின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தவர்களும், அதன் மூலம் இரட்சிப்படைந்தவர்களும், சபையாக, ஒரு கூட்டமாக சேர்க்கப் பட்டார்கள். அதுதான் கிறிஸ்துவின் சபை. எருசலேம் பட்டணத்தில், அப்போஸ்தலர்கள் சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்த போது, மூவாயிரம் பேர் அதற்குக் கீழ்ப்படிந்தார்கள். இது குறித்து வேதாகமம், ''இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்'' என்று சொல்கிறது (அப்.2:47) இந்தச் சபையானது மனிதனால் தோற்றுவிக்கப்பட்ட ஒன்றல்ல அல்லது எல்லா பிரிவினைச் சபைகளைப் போன்று இதுவுமல்ல. அது, கிறிஸ்துவின் பெயரைக் கொண்டுள்ள சபை.அந்த சபைக்காகத்தான். அவர் மரித் தார்.(அப்.20:28).அந்த ஒருசபைதான் அவருடைய பெயரைத் தரித்துள்ளது. ஒருநாளில், அந்த ஒரு சபைக்காகத்தான் அவர் வரப்போகிறார். சபையானது ஒருவரையும் இரட்சிப்பதில்லையென்பது உண்மைதான். ஆனால், கிறிஸ்து சபைக்கு தலைவராயிருக்கிறார் என்று சொல்லியிருக்கிறபடியால் (எபே.5:23).ஒருவன் பரலோகம் செல்ல வேண்டுமெனில், அந்த சபையில் அங்கமாக இருக்க வேண்டியது அவசியம். (எபே.5:25-27).

கிறிஸ்தவர்களும், கர்த்தருடைய சபையின் அங்கத்தினர்களு மாகிய இரட்சிக்கப்பட்ட மக்கள், தேவனைத்தொழுது கொண்டு, விசுவாசமுள்ள மெய்க்கிறிஸ்தவ வாழக்கை வாழ்ந்தால், பரலோகம் அவர்களுடைய நித்திய வீடாகும். இதுவே, மனிதனுக்காக, தேவனுடைய திட்டமாகும்.

நீங்கள் வேத வசனங்களில் சொல்லப்பட்டிருக்கிறபடி, அந்த ஒரு சபையாகிய கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினராயிருப்பதன் மூலம், ஒரு கிறிஸ்தவனாயிருந்தால், நாங்கள் உங்களை வாழ்த்துகிறோம். அப்படியில்லாதிருந்தால், இப்பொழுது, நாம் பார்த்த காரியங்களைக் குறித்து, கருத்தாய் சிந்தித்துப் பார்த்து, கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, அதனடிப்படையில், ஒரு கிறிஸ்தவனாய் மாத்திரம் இருக்க, உங்களை ஊக்கப்படுத்துகிறோம்.

# உங்களுக்கு ஒரு வேதாகமம் அவசியம்

தேவன், மனிதனுக்கென்று ஒரு திட்டம் வைத்திருந்தார் என்றும், அவனை ஒரு நோக்கத்தோடு பூமியிலே வைத்தார் என்றும், அவன் செய்யும்படியான ஒரு வேலையை அவனுக்குக் கொடுத்தார் என்றும், அழியாத் தன்மையுடைய, அவனுடைய ஆத்துமாவிற்கு, ஒரு நித்திய வீட்டை ஏற்படுத்தினார் என்றும் உங்களுக்கு நினைப்பூட்டுகிறோம். இவையனைத்தும், வேதாகமத்தில்,வெளிப்படுத்தப்பட்டிருக்கிறபடியால், உங்களுக்கான தேவனுடைய திட்டமென்ன என்பதைப் பூரணமாகத் தெரிந்து கொள்வதற்கு, ஒரு முழு வேதாகமமோ அல்லது புதிய ஏற்பாடோ தேவை. முழு வேதாகமம் மிகச்சிறந்தது.

உங்களுக்கு ஒரு வேதாகமம் இருக்குமென நம்புகிறேன். ஒருவேளை, இல்லையெனில், தயவுசெய்து, ஒரு வேதாகமத்தை உங்களுக்காகப் பெற்றுக்கொள்ளுங்கள். அது புத்தகக்கடைகளிலும், வேதாகமச் சங்கங்களிலும் அல்லது சபைகளிலும் கிடைக்கும். சிறப்பாக, மொழியாக்கம் செய்யப்பட்டதொரு, வேதாகமத்தை உபயோகிக்க உங்களை ஊக்கப் படுத்துகிறேன்.

முதலாவது, வேதாகமம், சர்வவல்லமையுள்ள தேவனுடைய வார்த்தையென்பதை நீங்கள் உணரவேண்டும். அது மனிதனுக்கான, தேவனுடைய சித்தம் அல்லது இறுதி வெளிப்பாடாகும். வேதாகமத்தைக் கொடுத்தவர் யார் என்பது பற்றியும் , அதனுடைய தெய்வீக ஏவுதல் பற்றியும், இதுதான் இறுதியானதென்று ஏற்றுக்கொள்ள வேண்டியதின் அவசியம் பற்றியும், வலியுறுத்தி, வசனங்களில் பல இடங்களில் சொல்லப்பட்டிருக்கிறது. பவுல்,'' வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக, அவைகள் உபதேசத்துக்கும், கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது'' என்று சொல்லியுள்ளார். (II.தீமோ.3:16,17) அது, சுயாதீனப் பிரமாணமாகிய, பூரணப்பிரமாணமென்றும் குறிப்பிடப் பட்டிருக்கிறது. (யாக்.1:25) கிறிஸ்துவானவர், ''வானமும், பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை'' என்று

கூறியுள்ளார். (மத்.24:35). இதோடு, நாம் எதையாகிலும் கூட்டவோ, குறைக்கவோ, மாற்றவோ கூடாது.(வெளி.22:18-19; கலா.1:6-9) நாம் வசனத்தின்படி செய்கிறவர்களாக இருக்கவேண்டும் (யாக்.1:22). ஒரு நாளில், அந்த வசனங்களின்படியாக, நாம் நியாயந்தீர்க்கப்படுவோம். (யோவான் 12:48)

உங்களிடம் வேதாகமம் இருந்தால், அதனைச் சரியாகப் பகுத்தறிய உங்களுக்குத் தெரிந்திருக்கவேண்டும். (II.தீமோ.2:15) அதன் பொருள், வேதாகமத்தில் பழைய, புதிய ஏற்பாடுகள் என்று இரண்டு பெரும்பகுதிகள் இருக்கிறதென்று, நீங்கள் உணரவேண்டும். பழைய ஏற்பாடு, படைப்பிலே தொடங்கி, கிறிஸ்துவின் சிலுவை மரணத்தில் முடிந்துள்ளது. அந்தக் கால கட்டத்தில் வாழ்ந்த மக்களுக்கு, அதுதான், தேவனுடைய சட்டம். ஆனால், கிறிஸ்து, தேவனுடைய புதிய சட்டத்தை பிறகு கொடுத்தார். அப்படிக் கொடுத்ததினாலே முந்தினது பழமையாய்ப் போனது. நாம், மேலானதொரு சட்டத்தைப் பெற்றுக் கொள்ளும்படியாக அது நீக்கிப்போடப்பட்டது. கிறிஸ்துவைக் குறித்தும், இந்த மாற்றத்தைக் குறித்தும், எபிரேய ஆசிரியர், '' தேவனே, உம்முடைய சித்தத்தின்படி செய்ய, இதோ வருகிறேன் என்று சொன்னார். இரண்டாவதை நிலைநிறுத்துவதற்கு, முதலாவதை நீக்கிப் போடுகிறார். இயேசு கிறிஸ்துவினுடைய சரீரம் ஒரே தரம் பலியிடப் பட்டதினாலே, அந்தச் சித்தத்தின்படி நாம் பரிசுத்தமாக்கப் பட்டிருக் கிறோம்'' (எபி.10:9,10) என்று சொல்லியுள்ளார். ஆகையால், நாம், இப்பொழுது கிறிஸ்துவின் பிரமாணத்தின் கீழ் வாழ்கிறபடியால், பழைய பிரமாணத்திற்கு நாம் கட்டுண்டவர்களல்ல. பழைய ஏற்பாட்டின் கீழாக வாழ்ந்த மக்கள், எப்படி புதிய ஏற்பாட்டின் பிரமாணங்களைக் கைக்கொள்ள வில்லையோ, அதைப்போல, புதிய ஏற்பாட்டின் கீழ் வாழும் நாம், பழைய பிரமாணங்களைக் கைக்கொள்ள வேண்டிய அவசியமில்லை.

பழைய ஏற்பாடும் தேவனுடைய வார்த்தையே. அது உன்னத மானதொரு நோக்கத்தை நிறைவாக்குகிறது. மனிதனுடைய சரித்திரத் தையும், தேவன், எப்படித் தன்னுடைய ஜனங்களோடு உறவு கொண்டி ருந்தார் என்றும் சொல்லுகிறது. யாரெல்லாம் தேவனுக்குக் கீழ்ப்படிந் தார்களென்றும், அதற்காக அவர்கள் எப்படி ஆசீர்வதிக்கப் பட்டார்க ளென்றும், இன்னும் யாரெல்லாம் தேவனுக்குக் கீழ்ப்படியாத வர்களென்றும், அதற்காக கிடைத்த தண்டனை என்னவென்றும் சொல்லுகிறது. எல்லாவற்றுக்கும் மேலாக, கிறிஸ்துவின் வருகை, அவருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியன பற்றிய தீர்க்க

தரிசனங்கள் பற்றியும் சொல்லுகிறது. நாம், புதிய ஏற்பாட்டைப் படிக்கும்போது, அவைகளெல்லாம் எப்படித் துல்லியமாக நிறைவேறின என்று அறிந்து கொள்ளலாம். ஆகையால், பழைய ஏற்பாட்டிற்குப் பல நோக்கங்கள் உண்டு. ஆனால், அதை நாம் சட்டமாகப் பின் பற்றவோ, அல்லது அது நம்மை இரட்சிக்குமென்றோ ஏற்றுக்கொள்ள முடியாது.

புதிய ஏற்பாடு, மனிதனுக்கான தேவனுடைய திட்டத்தை வெளிப்படுத்துகிறது. கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலில் ஆரம்பித்து, தொடர்ந்து சென்று, சபையானது எப்படி தொடங்கப் பட்டதென்று காட்டுகிறது. அதன்பிறகு, சுவிசேஷம், உலகமெங்கும் எப்படி எடுத்துச் செல்லப்பட்டதென்றும் சொல்லுகிறது.

இவைகளையெல்லாம் மனதில் கொண்டுதான், எபிரேய ஆசிரியர், "பூர்வகாலங்களில் பங்குபங்காகவும், வகைவகையாகவும், தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பிதாக்களுக்குத் திருவுளம் பற்றின தேவன், இந்தக் கடைசி நாட்களில் குமாரன் மூலமாய் நமக்குத் திருவுளம் பற்றினார். இவரைச் சர்வத்துக்கும் சுதந்தரவாளியாக நியமித்தார். இவரைக் கொண்டு உலகங்களையும் உண்டாக்கினார்" (எபி.1:1,2) என்று கூறியுள்ளார். இயேசு மறுரூபமானபோது, தேவன் பரலோகத்திலிருந்து, "இவர் என்னுடைய நேசக்குமாரன். இவரில் பிரியமாயிருக்கிறேன். இவருக்குச் செவி கொடுங்கள்" என்றார் (மத்.17:5). ஆகவே, யாருக்கு நாம் செவிகொடுக்க வேண்டுமென்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. ஏனெனில், அவர் கிறிஸ்துதான், அதுபோலவே, கிறிஸ்துவின் உபதேசத்தை எந்த ஏற்பாடு கொண்டிருக்கிற தென்ப திலும் சந்தேகமில்லை. அது, புதிய ஏற்பாடுதான்.

இப்பொழுது, நாம் தேவனுடைய வார்த்தைகளைத் தொடர்ந்து படிக்கும்போது, நமது மனதில் கொள்ளவேண்டிய காரியங்கள் உண்டு. முதலாவது, இது மனிதனுடைய வார்த்தையல்ல, இது தேவனுடைய வார்த்தையென்று உணரவேண்டும். ஆகையால், இந்த அடிப்படையில் நாம் அதை மதிக்கவும், ஏற்றுக்கொள்ளவும் வேண்டும். நாம் அதைத் தள்ளவோ அல்லது கேள்விகேட்கவோ கூடாது. ஏனெனில் தேவன் சொன்னார், ஆகவே, அது இறுதியானது.

இரண்டாவதாக, தேவனுடைய வார்த்தை நம்மை பிரிக்காது. ஆனால், இன்று வேதாகமத்தின் போதனைகளைப் பின்பற்றுகிறோமென்று சொல்லும் அநேகர், தங்கள் பேச்சிலும், செயலிலும் பிரிந்துள்ளார்கள் என்பது நமக்குத் தெரியும். இது சாத்தியமாகுமா? கண்டிப்பாக ஆகாது.

கர்த்தர் நம் எல்லோரிடமும், வசனங்களின் வழியாய்ப் பேசியுள்ளார். அவர் சொன்னவைகளை விசுவாசித்து, அவைகளுக்கு கீழ்ப்படிவோமானல், அவை, நம்மை ஒற்றுமைதான் படுத்தும், பிரிக்காது. அதன் பொருள், எல்லோரும், ஒன்றையே விசுவாசிப்போம். எல்லோரும் ஒரேவிதமாகவே இரட்சிக்கப்படுவோம். எல்லோரும் ஒரே சபையின் அங்கத்தினர் களாயிருப்போம்; ஒன்றாகவே ஆராதிப்போம். எல்லோருக்கும் ஒரே நம்பிக்கையே இருக்கும். கிறிஸ்து, நாம் எல்லோரும், ஒன்றாயிருக்கும் படியாகவே ஜெபித்தார். பிரிந்திருக்கும்படியல்ல. (யோவான்.17:20-22) புதிய ஏற்பாடு முழுவதையும், நீங்கள் வாசித்தால், கர்த்தருடைய பிள்ளைகள் ஒன்றாயிருந்தார்களென்றே காணமுடியும். இன்றைக்கு , நிலைம எப்படியுள்ளது? கிறிஸ்தவம் பல கூறுகளாகப் பிரிந்துள்ளது. இது கர்த்தருக்கு பிரியமாயிருக்குமா?.

மூன்றாவதாக, தேவனுடைய வார்த்தை இறுதியானது. மனிதனுக்காக, புதிய செய்தி எதுவும் இன்றைக்கு அவரிடத்தில் இல்லை. வருகின்ற காலங்களில், அவர் எந்தப் புதிய வெளிப்பாட்டையும் கொடுக்கப்போவதுமில்லை. கர்த்தர் தனது சித்தத்தை மனிதனுக்கு வெளிப்படுத்தியுள்ளார். அதை முழுமையாகவே செய்துள்ளார். வேறு எதையாகிலும் சொல்ல அவர் விரும்பியிருந்தால், அதை அப்பொழுதே செய்திருக்க முடியும். ஆனால், அவர் , நம்மிடத்தில் எது உள்ளதோ, அதை மாத்திரம் கொடுத்துள் ளப்படியால், நமக்கு அவர் அதற்கு மேல்கொடுக்க எதுவுமில்லை என்றுதான் முடிவுசெய்ய வேண்டியுள்ளது.

இன்னும், சிலர், தேவன் தங்களிடம் பேசினதாகச் சொல்லுகிறார்கள். எதற்காக அப்படிச் செய்யவேண்டும்? வேதாகமத்திலிருப்பதையே, அவர் திரும்பவும் வெளிப்படுத்தினார் என்றால், அவர் ஏன் மனிதனிடத்தில், அப்படி நேரிடையாகப் பேச வேண்டும்? ஒருவேளை அவர் புதிதாக எதையாவது வெளிப்படுத்தினாரென்று வைத்துக்கொண்டால், ஒருவருக்கு புதிய வெளிப் பாட்டை கொடுப்பதன் மூலம், மற்றவர்களுக்குப் பாரபட்சம் காட்டுகிறார்தானே? தேவன் தங்களிடத்தில்பேசினார் என்று சொல்லிக் கொள்ளும் எல்லோரும், தேவன் தங்களுக்குச் சில செய்திகளைக் கொடுத்தார் என்று சொல்வார்கள். ஆனால், அது எழுதிக்கொடுக்கப் பட்டிருக்கும் வேத வசனங்களுடன் முரண்படுகிறதாகவே இருக்கும். அதன் பொருள் , தேவன், தன்னுடைய வசனங்களுடன் முரண்படு கிறதாகவே இருக்கும். இதை நாம் நம்பமுடியுமா? முடியவே முடியாது.

ஆகவே, தேவன் தான் கொடுத்த வசனங்களல்லாமல், எந்தவொரு மனிதனோடும், பேசுவதில்லையென்று முடிவு செய்யவேண்டும். தேவனுடைய சித்தத்தை நாம் அறிந்து கொள்ள வேண்டுமானால், அவர்கொடுத்த வேதத்திற்கு நாம் செல்ல வேண்டும். தேவன், தனக்கு விசேஷித்த வெளிப்பாட்டைக் கொடுக்கிறார் என்று யாராவது, சொன்னால், அப்படிப்பட்டவன், வஞ்சிக்கப்பட்டிருக்கிறான் என்று பொருள்.

நான்காவதாக, கர்த்தருடைய வார்த்தையைக் கொண்டு, ஒருநாளில் நாம் நியாயந்தீர்க்கப்படுவோம் (யோவான்.12:48). அப்படியானால் அது எந்த வார்த்தை? அது, வேதாகமத்தில் காணப்படுகின்ற வார்த்தை. இதையே, வேறுவிதமாகச் சொல்வதானால், நாம் எந்த வார்த்தையை வேதாகமத்தில் வாசிக்கிறோமோ அந்த வார்த்தையே நம்மைக் கடைசி நாளில் நியாயந்தீர்க்கும். நாம் ஒரு பிரமாணத்தின் கீழ்வாழ்ந்து, வேறொரு பிரமாணத்தின்படி நியாயந்தீர்க்கப்படோம். வெளிப்படுத்தப்பட்டுள்ள வார்த்தைகளில் அவர் என்ன சொல்லியிருக்கிறாரோ, அதன்படி தான் நியாயத்தீர்ப்பிலும் செய்வார். நம்முடைய சூழ்நிலைக்கேற்ப அதைக் கண்டிப்பாக மாற்றமாட்டார். ஆகவேதான், அவர் என்ன சொல்லியிருக்கிறாரோ அதன்படி செய்ய நாம் ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்கவேண்டும். அவருடைய போதனைகள் எதையாவது நாம் தள்ளினால், நாம் அந்நாளில் அவருக்கு முன்பாக நிற்கும்போது, அவர் நம்மைத் தள்ளிவிடுவார். நாம் வசனத்தை விசுவாசிப்பதாய் இருந்தால், அதற்குக் கீழ்ப்படிய வேண்டும். அதன்படி வாழவேண்டும். அப்படிச் செய்தால் அது அந்நாளில் நம்மை நிச்சயமாக ஆசீர்வதிக்கும்.

நண்பர்களே, உங்களிடம் வேதாகமம் இருக்குமென நம்புகிறேன். இல்லையெனில், அதைப் பெற்றுக்கொள்ள சிறப்பு முயற்சி எடுங்கள். பிறகு, தேவ சித்தத்தை அறிந்து கொள்ள, வாசித்து தியானியுங்கள். இயேசு, தேவனுடைய குமாரனென்று உங்கள் இருதயத்தில் விசுவாசிக்க, மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் போன்ற நூல்களைப் படியுங்கள். நீங்கள் இரட்சிக்கப்பட, அதாவது, கிறிஸ்துவில் விசுவாசம் வைத்து, பாவங்களுக்காக மனந்திரும்பி, கிறிஸ்து தேவனுடைய குமாரனென்றும் அறிக்கையிட்டு, பாவ மன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்போஸ்தலர் நடபடிகள் நூலில் கிறிஸ்துவின் சபை தோற்றுவிக்கப் பட்டதையும் படியுங்கள். ஒருவன் கர்த்தருக்குக் கீழ்ப்படியும் போது, கிறிஸ்து, இரட்சிக்கப்படுகிறவர்களை சபையிலே சேர்க்கிறார் என்பதையும் தெரிந்து கொள்ளுங்கள். மேலும், கிறிஸ்தவ வாழ்க்கை எப்படி வாழவேண்டுமென்பது பற்றியும், நித்திய ஜீவனுக்கான நம்பிக்கையைப் பெற்றுக் கொள்ளும் படியாகவும், தொடர்ந்து, புதிய ஏற்பாடு முழுவதையும் படியுங்கள்.

# நீங்கள் இரட்சிப்படைய வேண்டும்

இப்பாடத்தில், நீங்கள் இரட்சிப்படைய வேண்டும் என்பது குறித்து பார்க்க உள்ளோம். ஒருவேளை நீங்கள் ஏற்கனவே இரட்சிப்படைந்தவராக இருப்பின், உங்களோடு நான் பேசவில்லை. இன்றைக்கு அநேகர் தங்களை கிறிஸ்தவரென்று எண்ணிக் கொண்டுள்ளனர். ஆனால் உண்மைநிலை அதற்கு மாறாக இருக்கும். அவர்களுக்கு கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று போதிக்கப்பட்டிருக்கும். அவர்களும் அதை விசுவாசித்திருப்பர். பிறகு அந்த விசுவாசத்தினடிப்படையில் அவர்கள் இரட்சிக்கப்பட்டுவிட்டதாக சொல்லப்பட்டிருக்கும். இன்னும் அநேகருக்கு,வேறு ஏதாவது போதிக்கப்பட்டு, அதற்காக அவர்கள் கர்த்தருக்கு ஏற்புடையவர்களானார்கள் எனச் சொல்லப்பட்டிருக்கும்.

ஆனால், இந்தப் பாடத்தில்,ஒருவன் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்வதற்கு, வேதாகமத்தின் அடிப்படையில், ஒருவன் என்ன செய்யவேண்டுமெனக் காட்டமுடியுமென்று நம்புகிறோம். அதைத் தெளிவாகக் கற்றுக் கொண்டவுடன்,நீங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டீர்களா அல்லது இல்லையா என்பதை ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ள முடியும். நீங்கள் இரட்சிக்கப்பட்டாயிற்று என்று வெறுமனே நம்பி, ஒருவேளை வேதவாக்கியங்களினடிப்படையில் இரட்சிக்கப்படாமலிருந்தால், நீங்கள் கற்றுக்கொண்ட சத்தியத்தினடிப்படையில் செயல்பட்டு உங்கள் இரட்சிப்பை உறுதிப்படுத்திக் கொள்ளுமளவுக்கு, நீங்கள் உங்களோடும், தேவனோடும் உண்மை யுள்ள வர்களாயிருக்க வேண்டுகிறேன்.

பாவமில்லாத நிலையில்தான், எல்லாரும் பூமியில் பிறக்கிறார்கள். ஒவ்வொருவரும், தங்கள் வாழ்வின், முதல் சில வருடங்களுக்கு, தங்கள் செயல்களுக்குப் பொறுப்பாளியாக்கப்படுவதில்லை. நம்முடைய தேசத்தின் சட்டங்கள் கூட நன்மை தீமை அறியாத அந்த கால கட்டத்திலான தவறுகளுக்கு தண்டனை தராது. ஆனால், நன்மை தீமை அறியத்தக்க நிலை வந்த போது தேவனுடைய பார்வையில் அவர்கள் பாவிகளாகிறார்கள். பாவம் என்பதற்கு ''குறிதப்புதல்'' அல்லது ''சட்டத்தை மீறுதல்'' என்று விளக்கம் கொடுக்கப்படுகிறது. *(I.யோவா.3:4)* ஒரு முறை ஒருவன் பாவியாகிவிட்டால், அவன் இழந்து போகிறான். அப்பொழுது, அவன்

பாவங்களிலிருந்து மன்னிக்கப்பட வேண்டும் அல்லது இரட்சிப்படையவேண்டும். ஒருவனுடைய நீதியோ அல்லது நற்தன்மையோ அவனை இரட்சிக்காது என்பதை ஒருவன் தெரிந்து கொள்ள வேண்டும். (எபே.2:8,9) ஏற்கனவே, நாம் குறிப்பிட் டுள்ளது போல் தேவ நம்பிக்கையுள்ளவர்களே கூட இழந்துபோக வாய்ப்புண்டு. ஒருவன் கர்த்தாவே, கர்த்தாவே கூப்பிடுவதாலும், கர்த்தருடைய நாமத்தினாலே மகத்தான காரியங்களைச் செய்வதும், இரட்சிக்கப் படுவதற்கு போதுமானதல்ல என்று கிறிஸ்து கூறியுள்ளார். (மத்.7:21-23) இறுதியாக, ஒருவன் கர்த்தருக்குக் கீழ்படிந்து பாவ மன்னிப்புப் பெற்றிருந்தாலும், இரட்சிப்பில் நிலைத்திருக்க, இறுதிவரை உண்மை யாயிருக்க வேண்டும். (வெளி. 2:10) வேறுவிதமாகச் சொன்னால், ஒருவன் விழுந்து போவதற்கும், பாவத்திற்குத் திரும்புவதற்கும், அதன் மூலம் மீண்டும் இழந்து போவதற்கும் வாய்ப்புண்டு.

உங்களை தனிப்பட்ட முறையில் நான் அறியாததினால், உங்களுடைய சூழ்நிலை எனக்குத் தெரியாது. அதாவது, நீங்கள் தேவனுடைய பிள்ளையா என்பதும் நீங்கள் இரட்சிக்கப்பட வேண்டுமா என்பதும் தெரியாது. ஆனால், ஆவிக்குரிய ரீதியில் உங்களின் தற்போதைய நிலை என்ன என்பதை நீங்கள் அறிந்து கொள்ள உங்களுக்கு உதவ முடியும் என எண்ணுகிறேன்.

உதாரணமாக, நீங்கள், இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கவில்லையானால், அப்பொழுது நீங்கள் இரட்சிப்படையவில்லை. கிறிஸ்துதாமே இவ்வாறு கூறியுள்ளார். ''அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான். விசுவாசியாதவனோ, தேவனுடைய ஒரே பேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்பட்டாயிற்று'' (யோவா.3:18) மீண்டும் கிறிஸ்து இவ்வாறு கூறியுள்ளார். ''ஆகையால் நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன். நானே அவர் என்று நீங்கள் விசுவாசியா விட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார்.''(யோவா.8:24) விசுவாசம் மாத்திரம் ஒருவனை இரட்சிக்காது என்றாலும் இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று விசுவாசியாதவரை, அவன் கர்த்தருக்குச் சொந்தமாக முடியாது. இதன் பொருள் என்னவெனில், ஒருவன் கிறிஸ்துவில் விசுவாசமுள்ளவனாகி, பிறகு, இரட்சிக்கப்படும்படி கர்த்தருடைய சித்தத்துக்குக் கீழ்படிய வேண்டும்.

அடுத்து, ஒருவன், கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று விசுவாசித்தும், தன்னுடைய பாவங்களிலிருந்து மனந்திரும்பி இயேசுவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு, திருமுழுக்குப் பெறவில்லையானால், அவன் இரட்சிக்கப்படவில்லை என்றுதான் பொருள். மனந்திரும்புங்கள் இல்லாவிட்டால் அழிவீர்கள் என்று கிறிஸ்து சொல்லியுள்ளார். அதாவது ஒருவன் இரட்சிப்படையும்படியாய் தன்னுடைய பாவங்களிலிருந்து விலக வேண்டும். (லூக். 13:3) வேறொரு சந்தர்ப்பத்தில் பரலோகத்திலிருக்கிற பிதாவுக்கு முன்பாக தன்னை அறிக்கை செய்ய வேண்டுமென்று கிறிஸ்து கூறியுள்ளார். (மத். 10:32) இதையே பவுல் இவ்விதம் கூறியுள்ளார். "நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும். இரட்சிப்புண்டாக வாயினால் அறிக்கை பண்ணப்படும்." (ரோம. 10:10) விசுவாசமுள்ள வனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான், விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான் (மாற். 16:16) என்றும் கிறிஸ்து வெளிப்படுத்தியுள்ளார்.

இப்பொழுது இவைகளின் பொருள் என்ன? அதாவது ஒருவன், தன்னுடைய பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட வேண்டுமெனில், அவன் முதலாவது, இயேசுகிறிஸ்து தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்க வேண்டும். அவன் பாவங்களிலிருந்து மனந்திரும்ப வேண்டும், கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட வேண்டும். அடுத்தபடியாக அவன் ஞானஸ்நானம் பண்ணப்பட வேண்டும் அல்லது பாவமன்னிப் புக்காக தண்ணீருக்குள் அடக்கம் பண்ணப்பட வேண்டும். ஒருவன் இதன்படி செய்யாவிட்டால் அவன் இன்னும் இழந்துபோனவனாகவே இருப்பான்.

மேற்சொன்னவைகளின்படி ஒருவன் செய்திருந்தாலும், அவன் கிறிஸ்துவுக்குச் சொந்தமான சபையில் அங்கத்தினராயிராவிட்டால் அவன் இரட்சிக்கப்படவில்லை. ஒருவேளை, பல பிரிவினைச் சபைகளில் அவன் அங்கமாக இருக்கலாம். ஆனால், இன்னும், சரியான சபையில் அவன் அங்கத்தினனல்ல. பரலோகம் செல்வதற்கு ஒரு குறிப்பிட்ட சபையில் அங்கமாக இருக்கத் தேவையில்லையென்று வாதிடுவோர் உண்டு. ஆனால் அப்படிப்பட்டவர்களுக்கு வேதாகமத்தின் போதனை தெரியவில்லையென்பதே உண்மை. ஒருவன் இரட்சிக்கப்பட்டு, எந்தவொரு பிரிவினைச் சபையிலும் அல்லது மனிதரால் தோற்றுவிக்கப்பட்ட சபையிலும்,

அங்கத்தினராக இல்லாமல், பரலோகம் செல்ல முடியுமென்பது உண்மை. ஆனால் இரட்சிப்படைந்து கிறிஸ்துவின் சபையில் அங்கமாக இல்லாமல் ஒருவன் பரலோகம் செல்லமுடியாது.

ஆனால், கிறிஸ்துவின் சபையும் இன்னொரு பிரிவினைக் கூட்டம் தானே என்று நீங்கள் கேட்கலாம். அதற்குப் பதில் ''இல்லை'' என்பதே. இரட்சிக்கப்பட்டவர்களை, கிறிஸ்து, இந்த சபையிலேதான் சேர்த்தார். பெந்தெகொஸ்தே நாளில், சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்ட போது மூவாயிரம் பேர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தார்கள். வேதவாக்கியம் இவ்வாறாகச் சொல்கிறது. ''அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்.''(அப்.2:41) என்று. மீண்டும்''... இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்'' என்று வாசிக்கின்றோம் (அப்.2:47). ஆக, இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் சபையிலே சேர்ப்பதால், ஒருவன் கர்த்தருடைய சபையில்அங்கமாக இராவிட்டால், அவன் இரட்சிக்கபட வில்லையென்ற முடிவுக்கு நாம் வரலாம். அதாவது, அவன் இரட்சிக்கப் படாததால், சபையில் சேர்க்கப்படவில்லை யென்று பொருள். எபே.5:23 ல், கிறிஸ்து, சரீரம் அல்லது சபைக்கு இரட்சகர் என்று வாசிக்கிறோம். அப்படியானால், கிறிஸ்துவுக்கு எத்தனை சரீரம் இருக்கிறது? எபே. 4:4 ன் படி ஒன்றே ஒன்றுதான். அந்த ஒரு சரீரத்திற்கு அவர் இரட்சகராயிருக்கிறார்.

ஒருவனுடைய இரட்சிப்பு சம்பந்தமாக கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டிய பிற உண்மைகளும் உண்டு. அதாவது, ஆராதனை, கிறிஸ்தவ வாழ்க்கை, கர்த்தருடைய பெயரைத் தரித்துக் கொள்ளுதல்போன்றவை. ஆனால், ஒருவன் இரட்சிக்கப்பட கண்டிப்பாக கிறிஸ்து, தேவனுடையகுமாரனென்று விசுவாசித்து, நற்செய்திக்குக் கீழ்படிந்து, கர்த்தருடைய சபையில் அங்கமாக இருக்கவேண்டும். இப்பொழுது, கீழ்க்கண்ட கேள்விகளை நான் உங்களிடம் கேட்கிறேன்.

1. கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறீர்களா?

2. கிறிஸ்துவின் நற்செய்திக்குக் கீழ்ப்படிந்துவிட்டீர்களா?

3. நீங்கள் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினரா?

இந்தக் கேள்விகளில் ஏதேனும் ஒன்றுக்கோ அல்லது அதிகமானதற்கோ பதில் ''இல்லை'' என்பதாக இருக்குமானால், நீங்கள் இரட்சிக்கப்படவில்லை என்று பொருள். நீங்கள் இரட்சிக்கப்பட்டு விட்டீர்கள் என்பதை உண்மையான மனதுடன் சொல்லமுடிந்தால், இந்த மூன்று கேள்விகளுக்கும் ''ஆம்'' என்ற பதிலைக் கொடுக்கக் கூடியவர்களாயிருக்கவேண்டும். இந்தக் கேள்விகளில் ஏதேனும் ஒன்றுக்கோ அல்லது இரண்டுக்கோ ஆம் என்று சொல்வது போதுமானதாக இருக்காது. மூன்றுக்குமே நீங்கள் ஆம் என்று சொல்ல வேண்டும்.

நீங்கள் தேவனுடைய பிள்ளையாயிராவிட்டால், நீங்கள் இரட்சிப் படையும்படியாய் கர்த்தருக்குக் கீழ்ப்படிய வேண்டுகிறேன். நீங்களே உங்களை இரட்சித்துக்கொள்ள முடியாதென்பதையும் அல்லது மனிதர்களின் போதனைகளுக்கு ஒத்துப் போவதாலும் உங்களை இரட்சித்துக் கொள்ள முடியாதென்பதையும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். கர்த்தர் என்ன சொல்கிறாரோ அதின்படி செய்வதுதான் இரட்சிப்படைவதற்கான ஒரே வழி. விசுவாசத்திற்கும், இரட்சிப்புக்கும் மாற்று எதுவும் இல்லை. ஒரு சபையில் சேர்கிறோமே என்பது குறித்தும் நீங்கள் கவலைப்பட வேண்டாம். கிறிஸ்துவின் சபையில் நீங்கள் சேரமுடியாது. நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, அவர் உங்களை இரட்சித்தால். பின்பு, அவரே உங்களை, அவருடைய சபையில் சேர்ப்பார்.

நீங்கள் அப்படிச் செய்யும்போது இயேசுக்கிறிஸ்து தாம் கட்டுவேன் என்று சொன்ன சபையில் நீங்கள் அங்கமாக இருக்கிறீர்கள் (மத்.16:18) அந்த சபையானது உலகெங்கிலுமுள்ள பல பிராந்திய சபைகளால் உருவாக்கப்பட்டது. அதாவது அந்த சபையின் அங்கத்தினன் எங்கு வேண்டு மானாலும் இருக்கலாம். நீங்கள் இருக்கும் இடத்தில், இரண்டு, மூன்று அங்கத்தினர்களோ அல்லது அதிகமானவர்களோ இருந்தால், நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்ததையும் அவர்களோடு ஐக்கியம் வைத்துக்கொள்ள விரும்புவதையும் அவர்களுக்குச் சொல்லவேண்டும். ஒருவேளை நீங்கள் இருப்பது அவர்களுக்கு ஏற்கனவே தெரிந்திருந்தும், உங்கள் கீழ்ப்படி தலைக் குறித்து அறியாமலிருப்பார்களானால், உங்கள் கீழ்ப்படிதலைக் குறித்து அவர்கள் அறிந்துகொள்ளும்படியான முயற்சியை நீங்கள் எடுக்க வேண்டும்.

ஆனால், நீங்கள் கிறிஸ்துவின் சபை இல்லாத இடத்திலோ அல்லது கர்த்தருடைய சபையைச் சேர்ந்த ஒன்றிரண்டு பேர் இல்லாத இடத்திலோ இருக்க நேர்ந்தால், உங்களைச் சுற்றிலுமிருக்கின்ற ஒருவரோ அல்லது அதிகமானோரோ கர்த்தருக்குக் கீழ்ப்படிவார்கள் என்ற நம்பிக்கையோடு அவர்களுக்கு சத்தியத்தைப் போதிக்கும் முயற்சி எடுக்க வேண்டும். அதன்மூலம் நீங்கள் இருக்கும் இடத்திலே ஒரு கிறிஸ்துவின் சபையை நீங்கள் தொடங்க முடியும். தயவு செய்து சத்தியத்தோடு சமரசம் செய்து, ஏற்கனவே அங்கு உள்ள எந்தவொரு பிரிவினை சபையிலும், கூட்டத்திலும் சேர்ந்துவிட வேண்டாம். மாறாக, புதிய ஏற்பாட்டு உபதேசத்தின்படியாக ஒரு சபையைத் தொடங்குவதற்கான உறுதியான முயற்சி எடுங்கள்.

## சபை அல்லாதது

1. சபை மனிதனால் உண்டாக்கப்பட்ட ஸ்தாபனமல்ல.
   *(எபே.3:10,11, ஏசா.2:1-4)*
2. சபை குறிப்பிட்ட நாட்டுக்கு சொந்தமனதல்ல.
   *(மாற்.16:15,16; மத்.28:18-20)*
3. சபை சமூக நிலையை உயர்த்துவதற்கான ஸ்தாபனமல்ல.
   *(மத். 25:31-46)*
4. சபை மனிதனால் உருவாக்கப்பட்ட கட்டிடம் அல்ல.
   *(அப். 5:11)*
5. சபை ஒருமார்க்க பிரிவினைக் கூட்டமல்ல.
   *(அப்.20:29,30, I.தீமோ.4:1-3)*
6. சபை தனக்கு சொந்த நியாயப்பிரமாணத்தை அளிக்கக் கூடியதல்ல. *(யாக்.4:12)*

# சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிவது எப்படி?

இப்பாடத்தில், சுவிசேஷத்திற்கு எப்படிக் கீழ்ப்படிவது என்று பார்க்கப்போகிறோம். நற்செய்தி என்றால் என்னவென்று உங்களுக்குத் தெரியுமா? அநேக ஜனங்களுக்கு இதன் பொருள் தெரியாது. பொருள் என்னவென்று தெரியாதபொழுது சுவிசேஷத்திற்கு அவர்கள் எப்படிக் கீழ்ப்படிய முடியும்? அவர்களால் முடியாது. ஆகவேதான், நாம் சுவிசேஷம் என்றால் என்னவென்றும், அதற்குக் கீழ்ப்படிவது எப்படியென்றும் அறிந்து கொள்ள விரும்புகிறோம்.

முதலாவது, *''சுவிசேஷம்''* என்ற வார்த்தையைக் கவனிப்போம். இவ்வார்த்தையை எல்லா நேரங்களிலும் பயன்படுத்துகிறோம். ஆனால் நாம் பயன்படுத்துகிற இவ்வார்த்தையின் பொருள் தெரியாமல், அது என்ன சொல்லுகிறது என்று விளங்காமல் பயன்படுத்துவதால் என்ன நன்மையுண்டு? சுவிசேஷம் என்ற வார்த்தை ''நற்செய்தி'' என்று விளக்கப் பட்டிருக்கிறது . அப்போஸ்தலன் பவுல் கூறுகிறார், அனுப்பப்படாவிட்டால் எப்படி பிரசங்கிப்பார்கள்; சமாதானத்தைக் கூறி நற்காரியங்களைச் சுவிசேஷமாய் அறிவிக்கிறவர்களுடைய பாதங்கள் எவ்வளவு அழகான வைகள் என்று (ரோமர் 10:15), சுவிசேஷம், ஏன் நற்செய்தியாகிறது? ஏனெனில், இது இயேசு கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல், ஆகிய இவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது. கொரிந்து பட்டணத்தாருக்கு பவுல் இவ்விதம் கூறுகிறார். அன்றியும், சகோதரரே, நான் உங்களுக்கு பிரசங்கித்த சுவிசேஷத்தை மறுபடியும் உங்களுக்குத் தெரியப்படுத்துகிறேன் நீங்களும் அதை ஏற்றுக்கொண்டு அதிலே நிலைத்திருக்கிறீர்கள். நான்உங்களுக்கு பிரசங்கித்த பிரகாரமாய், நீங்கள் அதை கைக்கொண்டிருந்தால், அதினாலே நீங்கள் இரட்சிக்கப்படுவீர்கள் மற்றபடி உங்கள் விசுவாசம் விருதாவா யிருக்குமே.

நான் அடைந்ததும் உங்களுக்கு பிரதானமாக ஒப்புவித்ததும் என்னவென்றால் கிறிஸ்துவானவர், வேதவாக்கியங்களின்படி, நமது பாவங்களுக்காக மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, வேதவாக்கி யங்களின்படி மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார் (1.கொரி.15:1-4) ஆனால், இயேசு

கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகிய இதுஎப்படி நற்செய்தியாக முடியும்? கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக மரித்து, நாம் இரட்சிப்படையும்படியாய், உயிர்த்து தம்முடைய மரணத்தின் மூலம் நித்திய வாழ்வுக்குண்டான நம்பிக்கையை நமக்குக் கொடுத்தபடியால் இது நற்செய்தியாகிறது. ஆனால், அவருடைய மரணம் ஒரு முடிவு அல்ல. அவர் மரணத்தைவென்று கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்து, தான் தேவனுடைய குமாரனென்றும், மனிதனை பாவத்திலிருந்து இரட்சிக்கமுடியும் என்று நிரூபித்தபடியால், நாம் நம்முடைய பாவங்களிலிருந்து இரட்சிப் படைய முடியும். பவுல்கூறுகையில், ''நாம் பாவிகளாயிருக் கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்'' என்றும் சொல்லியுள்ளார். *(ரோமர் 5:8)* மேலும், பேதுரு அப்போஸ்தலன், நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களை சிலுவையின் மேல் சுமந்தார். அவருடைய தழும்புகளால் குணமானீர்கள். *(I. பேதுரு 2:24)* என்று கூறியுள்ளார்.

இன்னும் அநேக வசனங்கள் கர்த்தருடைய மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றை விளக்கமாக பேசி இக்கருத்தை உறுதி செய்கிறது. ஆனால், அது உன்னையும், என்னையும் எப்படி இரட்சிக்கிறது? சரி, முதலாவது, நாம் அதை விசுவாசிக்க வேண்டும். ''நாம், கிறிஸ்து தேவனுடைய குமாரனென்றும், அவர் நமது பாவங்களுக்காக, மரித்து அடக்கம் பண்ணப்பட்டு, கல்லறையிலிருந்து எழுந்தார் என்றும் விசுவாசிக்க வேண்டும். இதை விசுவாசிக்காத பட்சத்தில் நாம் இரட்சிப்படைய முடியாது. கிறிஸ்துவே இக்கருத்தை வலியுறுத்துகிறார். ஆகையால், நீங்கள் உங்கள் பாவங்களில் சாவீர்கள் என்று உங்களுக்குச் சொன்னேன்; நானே அவரென்று விசுவாசியாவிட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள் என்றார். *(யோவா.8:24)* இதை ஏற்றுக் கொண்டால்தான் நம் ஜீவன் இழந்து போயுள்ளது என்பதை விசுவாசிக்க முடியும். பிறகு, நாம் விசுவாசிப்பதோடு மாத்திரமல்ல, அந்த நற்செய்திக்குக் கீழ்ப்படிய வேண்டும். வேதவாக்கியங்களை நாம் தொடர்ந்து படித்தால், நற்செய்தியில், கட்டளைகள் உண்டு என்று நமக்கு சொல்லப்பட்டி ருப்பது விளங்கும்.

முதலாவது, நாம் நற்செய்தியை கேட்கவேண்டும். ஆகவேதான், கிறிஸ்து உலகமெங்கும் போய்; சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தை பிரசங்கியுங்கள் என்று சீஷர்களுக்குக் கட்டளையிட்டார் (ரோமர் 16:15) விசுவாசம் கேள்வியினாலே வரும் கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் என்று பவுல் சொல்லியுள்ளார். (ரோமர் 10:17) அதைத்தான் நாம் இப்பொழுது செய்து கொண்டுள்ளோம் நாம் விசுவாசிக்கும்படியாக தேவனுடைய வார்த்தையை படிக்கிறோம். இன்னும், அறிந்து கொள்ளும்படியாக நற்செய்தியை கேட்கிறோம். அடுத்து, நாம் நற்செய்தியை விசுவாசிக்க வேண்டும். விசுவாச முள்ளவனாகி ஞானஸ் நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் என்று கிறிஸ்து சொல்லியுள்ளார் (மாற்கு 16:16) விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம் என்று எபிரேய ஆசிரியர் கூறியுள்ளார் (எபி.11:6).

பிறகு, மனந்திரும்புதல் என்ற கட்டளை வருகிறது. அதன் பொருள் ஒருவன் தன் பாவங்களிலிருந்து விலக வேண்டும் அல்லது மோசமான , தவறான பழக்கங்களிலிருந்து விடுபட வேண்டும். ஒருவன் தன் பாவங்க ளிலிருந்து இரட்சிப்படையவேண்டுமானால், தன் பாவங்களிலிருந்து மனந்திரும்பும் விருப்பமுள்ளவனாக இருக்கவேண்டும். மனந்திரும்பா விட்டால் அழிந்து போவீர்கள் என்று கிறிஸ்து கூறியுள்ளார்.(லூக்கா 13:3) எங்குமுள்ள மனுஷர் யாவரும் மனந்திரும்ப வேண்டுமென்று கட்டளையிட் டுள்ளதாக பவுல் அறிவிக்கிறார் (அப்.17:30).

மனந்திரும்புதலுக்குப்பிறகு வருவது அறிக்கையிடுதல். அதாவது, ஒருவன் இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கை யிடவேண்டும். ஒருவன் கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்க வேண்டுமெனதேவன் எதிர்பார்க்கிறார். ஒருவன் கர்த்தரைக் குறித்து வெட்கப்பட்டாலோ அல்லது அறிக்கையிட மறுத்தாலோ அவன் இரட்சிப்படைய முடியாது. நாம் மனிதர் முன்பாக அவரை அறிக்கையிட்டால் பரலோகத்திலிருக்கிற பிதா முன்பாக நம்மை அறிக்கையிடுவேன் என்று கிறிஸ்து கூறியுள்ளார் (மத்.10:32) இரட்சிப்புண்டாக வாயினால் அறிக்கை பண்ண வேண்டும் என்று பவுல் அப்போஸ்தலன் கூறியுள்ளார். (ரோமர் 10:10) ஞானஸ்நானம் பெறவேண்டுமானால், கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட வேண்டுமென்று எத்தியோப்பிய மந்திரியிடம் பிலிப்பு கேட்டார்.

(அப்.8:37) இறுதியாக ஒருவன் பாவங்கள் கழுவப்பட ஞானஸ்நானம் பண்ணப்பட வேண்டும் அல்லது தண்ணீருக்குள் அடக்கம் பண்ணப்படவேண்டும் (மாற்கு 16:16) பாவங்கள் கழுவப்பட ஒவ்வொருவரும் ஞானஸ்நானம் பண்ணப்படவேண்டும் என்று பிரசங்கித்தார் (அப்.2:38) ஞானஸ்நானத்தின் மூலமாக ஒருவன் கிறிஸ்துவை தரித்துக்கொண்டு, சபையில் சேர்க்கப்படுகிறான் என்பதற்கு பல வேத வசனங்கள் சான்றாக உண்டு. ரோமர் 6:3,4;1கொரி.12:13 ; யோவா.3:3-5 போன்ற வசனப்பகுதிகளில் சொல்லப்படும் மறுபிறப்பு இந்தவகையைச் சேர்ந்ததுதான். எல்லாவற்றிற்கும் மேலாக, ஞானஸ்நானமானது இயேசு கிறிஸ்துவின் மரணம் அடக்கம், உயிர்த்தெழுதல் இவைகளின் சாயலாக உள்ளது.

அதாவது, கிறிஸ்து சிலுவையில் மரித்ததைப் போலவே, ஒரு பாவி தன்னுடைய பாவங்களுக்காக மரிக்கிறான். கிறிஸ்து அடக்கம் செய்யப்பட்டதைப் போலவே தண்ணீருக்குள் அடக்கம் பண்ணப் படுகிறான். அதேபோல் தண்ணீருக்குள்ளிலிருந்து புதிய ஜீவனுக்காய் எழுந்து வருகிறான்.(ரோமர்.6:1-12)இது மிக நேர்த்தியாக இல்லையா? பவுல் தொடர்ந்து இவ்விதம் விளக்குகிறார். முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாகக் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம்.

பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு நீதிக்கு அடிமைகளானீர்கள் (ரோமர் 6:17,18) இங்கே இது, கிறிஸ்துவின் மரணம், அடக்கம் உயிர்த்தெழுதல் ஆகியவைகளை ஏற்றுக்கொண்டு செய்யும் கீழ்ப்படிதல், மனந்திரும்புதல், தண்ணீருக்குள் அடக்கம் செய்யும் ஞானஸ்நானம் பிறகு உயிர்த்தெழுதலுக் கொப்பான மறுபிறப்பு ஆகிய எல்லாவற்றையும் குறிக்கிறது. இதற்கு முன்பாக, ஒருவன் பாவத்திற்கு அடிமையாயிருந்தான். ஆனால், இவைகளை நிறைவேற்றியதற்குப் பின் அவன் நீதிக்கு அடிமையா யிருக்கிறான். ஆகையால் ஒருவன் கர்த்தருக்குக் கீழ்ப்படியும்பொழுது கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலில் தனக்கிருக்கும் நம்பிக்கையை வெளிப்படுத்துகிறான். அது நற்செய்திக்குக் கீழ்ப்படிவதின் மூலம் நடைபெறும்.

ஒருவன் நற்செய்திக்குக் கீழ்ப்படிய முடியுமாதலால், தேவனை அறியாதவர்களுக்கும், நற்செய்திக்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள

ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு ஒரு நாளில் கர்த்தர் மீண்டும் வருவார் என்று பவுல் சொல்லியுள்ளார். (II. தெச.1:7-9) பேதுரு இவ்விதம் கூறுகிறார். ''நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டிலே துவக்குங்காலமாயிருக்கிறது; முந்தி நம்மிடத்திலே அது துவக்கினால் தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்?'' (1பேதுரு 4:17) இந்த தேவ தாசர்களெல்லாம், பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு, நற்செய்திக்குக் கீழ்ப்படியாதவர்கள் மேல் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படி கர்த்தர் வருவார் என்று சொல்லியிருப்பதால், பரலோகம் செல்லும்படியாய் இரட்சிப்படைய ஒருவன் நற்செய்தி க்குக் கீழ்ப்படிய வேண்டும் என்பது எவ்வளவு அவசியம் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது. நீதிமானே இரட்சிக்கப்படுவது அரிதாய் இருக்கும்போது, கர்த்தருக்குக் கீழ்ப்படிய எந்தவொரு முயற்சியும் செய்யாமலிருந்தால், நிலைமை என்னவாகும்?

மீண்டுமாக, ஒருவன் எப்படி நற்செய்திக்குக் கீழ்ப்படிவது? சத்தியத்தை அறிந்து கொள்ள ஒருவன் தேவனுடைய வார்த்தையை படிக்க வேண்டும் அல்லது விசுவாசிக்கும்படியாக வசனம் பிரசங்கிக்கப்படுவதைக் கேட்கவேண்டும். பிறகு, கிறிஸ்து தேவனுடைய குமாரனென்றும், இந்த உலகத்தினின்றும், இனிவரும் உலகத்தினின்றும் அவரால் நம்மை இரட்சிக்க முடியுமென்றும் விசுவாசிக்க வேண்டும். அடுத்து, அவன் தன்னுடைய பாவங்கள் எல்லாவற்றிலுமிருந்தும் மனந்திரும்ப வேண்டும். அதன் பொருள் தன்னுடைய மோசமான எல்லா பழக்கங்களையும் விட்டுவிட வேண்டும். தேவ சித்தத்திற்கு விரோதமான காரியங்களை ஒருவன் தொடர்ந்து செய்து கொண்டு பாவத்திற்காய் மனந்திரும்ப முடியாது. மனந்திரும்புதலுக்கு பிறகு இயேசுக் கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று தன்னுடைய இருதயத்திலிருந்து வாயின் மூலம் வரும் வார்த்தைகளால் அறிக்கையிடவேண்டும். கிறிஸ்துவை விசுவாசியாத பட்சத்தில், அவர் தன்னை இரட்சிக்க வேண்டுமென்று ஒருவன் எதிர்பார்க்க முடியாது. இறுதியாக, ஒருவன் ஞானஸ்நானம் பண்ணப் படவேண்டும். அல்லது பாவமன்னிப்புக்காக தண்ணீருக்குள் அடக்கம் பண்ணப்பட வேண்டும்.

இப்பொழுது ஒருவன் இவைகளைச் செய்துவிட்டால் பிறகு கர்த்தர் இவனை இரட்சித்து அவருடைய சபையில் சேர்த்துக் கொள்வார். இது எவ்வளவு சுலபமானது? நீங்கள் கிறிஸ்தவராக இல்லாவிட்டால் கிறிஸ்துவின் சபையில், அங்கமாக இல்லாவிட்டால் நீங்கள் தேவனுக்கு கீழ்ப்படிய இந்தபாடம் உதவுமென்று நம்புகிறேன்.

# கிறிஸ்துவின் சபையை அடையாளம் காண்பது எப்படி?

நாம் இப்போது "கிறிஸ்துவின் சபையை அடையாளம் காண்பது எப்படி? '' என்று பார்க்க உள்ளோம்.

முதலாவது, வேதாகமத்திலிருந்து, சபையைக் குறித்து, நாம் ஒவ்வொருவரும் வாசித்தறிந்து கொள்ளமுடியுமென்பதை திட்டமாகத் தெரிவித்துக்கொள்கிறேன். அதை நாம் அடையாளம் கண்டுகொள்ளவும் முடியும். எல்லா மார்க்க கூட்டங்களிலிருந்தும் அதை வேறுபடுத்திக் காட்டக்கூடிய சில அடையாளங்கள் அங்கே உள்ளது. உதாரணமாக, நீங்கள் ஏதாவது ஒரு சபையில் அங்கமாக இருந்தால் அல்லது உங்களைச் சுற்றிலுமிருக்கும் சபையை நீங்கள் கவனித்தால், வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள சபையின் அடையாளங்களோடு, நீங்கள் சென்று கொண்டிருக்கும் சபை அல்லது மற்ற சபைகளோடு அவைகளை ஒப்பிட்டுப் பார்த்தால், அது உண்மையாகவே கிறிஸ்துவின் சபையா அல்லது போலியானதா என்பதைக் கண்டுகொள்ளலாம்.

ஒரு சபையில் அங்கமாக இருப்பது, என்ன வேறுபாட்டை ஏற்படுத்தப்போகிறதென்பதை அறிந்துகொள்ள நீங்கள் விரும்பலாம். சபை முக்கியமானதல்லவென்றும், சபை ஒருவனை இரட்சிக்காது என்றும், எந்த சபையிலும் அங்கமாக இல்லாமலே ஒருவன் பரலோகம் செல்ல முடியுமென்றும் நீங்கள் வாதிடலாம். இந்த வாதம் கேட்பதற்கு நன்றாக இருக்கிறது. உண்மையில், இது ஒரு சத்தற்ற வாதம். சபையானது முக்கியமற்றதாக இருக்குமானால், அல்லது எல்லா சபைகளும் ஒன்று என்றால்,பின் எதற்காக கர்த்தர் தன் உயிரையே ஒரு சபைக்காகக் கொடுத்து, தன்னுடைய சபையை இந்தப் பூமியில் கட்டினார். சபை ஒருவனை இரட்சிக்காது என்பது உண்மை. ஏனெனில், இரட்சிக்கப்பட்டவர்களின் கூட்டம் தான் சபையாகும். ஆனால், கிறிஸ்து இரட்சகராக இருக்கிற படியால், ஒருவன் இரட்சிக்கப்பட்டு பரலோகம் செல்வதற்கு, அவர் இரட்சகராக உள்ள சபையில் அங்கமாக இருக்க வேண்டியது அவசியம்.

இக்காரியத்தை இன்னும் தெளிவாகத் தெரிந்து கொள்ள, வேதாகமத்திற்குச் சென்று சபையின் அடையாளங்களை அறிந்து கொள்வோம். வெகுகாலத்துக்கு முன்பே, தேவனுடைய தீர்க்கதரிசிகள், கர்த்தர் தமது ராஜ்ஜியம் அல்லது சபையை ஸ்தாபிக்கும் நாளைக் குறித்துப் பேசியுள்ளனர். ஏசாயா தீர்க்கதரிசி இப்படிக் கூறியுள்ளார். ''திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து,நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும் , யாக்கோபின் தேவனுடைய ஆலயத்திற்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள். ஏனெனில், சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்.அவர் ஜாதிகளுக்குள் நியாயந்தீர்த்து, திரளான ஜனங்களைக் கடிந்துகொள்வார். அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள் களாகவும் அடிப்பார்கள். ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம் எடுப்பதில்லை. இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை.'' *(ஏசா.2:2,3)* யோவேல் தீர்க்கதரிசியும் இந்தவிதமாக எழுதியுள்ளார்.''அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்.அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ்சொல்வார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள். ஊழியக்காரர் மேலும் ஊழியக்காரிகள் மேலும், அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன்'' (யோவேல் 2:28,29) தொடர்ந்து தானியேலும் இப்படி சொல்லியுள்ளார். ''அந்த ராஜாக்களின் நாட்களிலே பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார்; அந்த ராஜ்யம் வேறே ஜனத்துக்கு விடப்படுவதில்லை; ஒரு கல் கையால் பெயர்க்கப்படாமல் மலையி லிருந்து பெயர்ந்து, உருண்டு வந்து, இரும்பையும், வெண்கலத்தையும் , களிமண்ணையும், வெள்ளியையும், பொன்னையும் நொறுக்கினதை நீர் கண்டீரே, அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும் *(தானி.2:44)*

தேவனுடைய இந்த தீர்க்கதரிசிகளெல்லாம் என்ன சொல்கிறார்கள்? அவர்களனைவரும் ஏகோபித்த குரலில், கர்த்தருடைய ஆவிக்குரிய ராஜ்யமாகிய சபை தோற்றுவிக்கப்படும் என்று சொல்லியுள்ளனர். இது எருசலேமிலே ஸ்தாபிக்கப்படுமென்றும், அங்கிருந்து கர்த்தருடைய

வசனம் உலகெங்கும் போகுமென்றும் உள்ளது. இது ஆவியின் பலத்தோடு வருமென்றும், இது ஒருபோதும் அழியாததென்றும் என்றென்றைக்கும் நிலைத்திருக்குமென்றும் சொல்லப்பட்டுள்ளதை நாம் காணமுடிகிறது.

இவைகள் அனைத்தும், கனகச்சிதமாக நிறைவேறியுள்ளது. எருசலேம் பட்டணத்தில் அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின்படி சபையாக தோற்றுவிக்கப்பட்டு, நற்செய்தியானது உலகெங்கும் எடுத்துச் செல்லப்பட்டது. அந்த நாளிலே தானே, சபையானது கட்டப்பட்டது. அந்நாள் முதல், சபையானது இருந்து கொண்டுள்ளது. கிறிஸ்துவின் வருகை மட்டும் அது நிலைத்திருக்கும்.

இயேசு தமது சபையைக் கட்டுவேனென்று சொன்னார். (மத்.16:18) அப்போஸ்தலர்களின் உதவியோடு, தான்சொன்னபடியே அதைச் செய்தார். அவர்களை சகல சத்தியத்திற்குள்ளாகவும் வழிநடத்த பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனை அனுப்புவதாக வாக்குக் கொடுத்தார். (யோவா.16:13) பிறகு, பரலோகத்திலிருக்கிற பிதாவினிடத்திற்குத் திரும்புவதற்கு கொஞ்சம் முன்னதாக, அவர் இப்படிச் சொன்னார். பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும் பூமியின் கடைசிபரியந்தமும் எனக்குச் சாட்சிகளா யிருப்பீர்கள் என்றார். (அப்.1:8) சபையானது, அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில் ஸ்தாபிக்கப்பட்டதென்று நாம் வாசிக்கிறோம். நாம் ஏற்கனவே பார்த்தமாதிரி, கர்த்தருடைய சபை அல்லது இராஜ்ஜியம் எருசலேம் பட்டணத்தில் ஸ்தாபிக்கப்படும் என்று பெயர் முதலாய் குறிப்பிடப்பட்டுள்ளது. கர்த்தருடைய வசனம் இந்தப் பட்டணத்திலிருந்து எல்லா இடங்களுக்கும் போகுமென்றும் சொல்லப்பட்டுள்ளது. கிறிஸ்து அப்போஸ்தலர்களைப் பார்த்து, எழுதியிருக்கிறபடி, கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது. அன்றியும் மனந்திரும்புதலும், பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கி சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள் என்று கூறியுள்ளார். பேதுருவும் மற்ற அப்போஸ்தலரும் எருசலேம் பட்டணத்தில் திரளான ஜனக் கூட்டத்திற்கு பிரசங்கித்ததற்குப் பிறகு பிரசங்கத்தைக் கேட்டவர்களின் இருதயங்கள் குத்தப்பட்டு நாங்கள் என்ன செய்ய வேண்டு

என்று கேட்ட பொழுது, ''பேதுரு அவர்களை நோக்கி; நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்'' என்று சொன்னான். அன்றைக்கு மூவாயிரம் பேர் அதின்படி செய்தனர். இரட்சிக்கப்பட்டவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்தார். *(அப்.2:47)*

இயேசுக்கிறிஸ்து உயிர்த்தெழுந்ததற்குப் பிறகு வந்த முதலாம் பெந்தெகொஸ்தே நாளில், நற்செய்தி அறிவிக்கப்பட்டு கிறிஸ்துவின் சபையானது ஸ்தாபிக்கப்பட்டது என்று அப்போஸ்தலர் 2 ல் நாம் வாசிக்கிறோம். பெந்தெகொஸ்தே பண்டிகை வாரத்தின் முதல் நாளில் வந்தது. இவைகளனைத்தும் தோராயமாக கி.பி. 33-ல் நடந்தேறியது.

அப்போஸ்தலர்கள், கூடியிருந்தவர்களின் பற்பல பாஷைகளில் பேசும்படியாகவும், தாங்கள் தேவனுடையவர்கள் என்று அவர்கள் நம்பும்படி அற்புதங்கள் நடப்பிக்கும்படியாகவும், தாங்கள் சகல சத்தியத்திற்குள்ளாகவும் வழி நடத்தும்படியாகவும், பரிசுத்த ஆவியின் வல்லமையைப் பெற்றனர். *(அப்.1:8, 2: 1-4,8).*

இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் சபையிலே சேர்ப்பதால், சபையென்பது இரட்சிக்கப்பட்டவர்களைக்கொண்டதாக இருந்தது. *(அப்.2:41,47)* இது உண்மையானால், சபையென்பது கிறிஸ்துவின் ஆவிக்குரிய சரீரமாகவும், கிறிஸ்து அதற்குத் தலையாகவும் இருக்கிறார். கிறிஸ்துவைக் குறித்து அப்போஸ்தலன் பவுல், ''அவரே சபையாகிய சரீரத்திற்குத் தலையானவர், எல்லாவற்றிலும் முதல்வராயிருக்கும்படி, அவரே ஆதியும் மரித்தோரிலிருந்து எழுந்த முதற்பேறுமானவர்'' என்று கூறியுள்ளார். இன்னும் எபேசியர் 1:22, 23 யும், எபே.5:23யும் வாசியுங்கள்.

கிறிஸ்துவின் இரத்தத்தாலே சபையானது வாங்கப்பட்டது. எபேசுவிலிருந்த மூப்பர்களுக்கு பவுல் கூறும்போது, ''ஆகையால் உங்களைக் குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக் கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும் எச்சரிக்கையாயிருங்கள் '' என்று கூறியுள்ளார். இன்னும் எபேசியருக்கு எழுதின போது

கிறிஸ்து சபைக்கு தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான் அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார் என்றும் கூறியுள்ளார். கிறிஸ்து சபைக்காக தன் உயிரைக் கொடுத்து மரித்து அதற்கு இரட்சகராகவும் இருக்கிறாரென்றால், அதன் பொருள் என்ன? கிறிஸ்து மிக அதிகமான முக்கியத்துவத்தை சபைக்கு கொடுத்திருக்கிறாரென்பதுதானே. கிறிஸ்து சபைக்கு அஸ்திபாரமாக இருப்பாரென்று சொல்லப் பட்டுள்ளது. பேதுருவும், மற்ற அப்போஸ்தலரும் கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டதற்குப் பிறகு அவர்கள் செய்த அறிக்கையின் மீது அல்லது அந்தக் கல்லின்மீது, கல்லாகிய தம்மீது தமது சபையைக் கட்டு வேன் என்று சொன்னார்.(மத்.16:18) பவுல், போடப்பட்டிருக்கிற அஸ்திபாரமாகிய இயேசுகிறிஸ்துவை அல்லாமல் வேறே அஸ்திபாரத்தை போட ஒருவனாலும் கூடாது என்று கூறியுள்ளார். பேதுரு கிறிஸ்துவைக் குறித்து பிரதான மூலைக்கல் என்று குறிப்பிட்டுள்ளார் (1பேது.2:1-8).

சபையும், சபையின் அங்கத்தினர்களும் கர்த்தருடைய பெயரைத் தரித்துக் கொள்கிறார்கள், கிறிஸ்துவின் நாமமேயல்லாமல் இரட்சிப்பில்லை (அப்.4:12) ஆங்காங்கே உள்ள பிராந்திய சபையைக் குறித்து, வேதாகமம், கிறிஸ்துவின் சபைகள் என்று குறிப்பிடுகிறது.(ரோமர் 16:16) இது தேவனுடைய சபை என்றும் சொல்லப்பட்டுள்ளது. (அப்.20:28) கர்த்தரைக் கனப்படுத்தும் வேறு பெயர்களாலும் சொல்லப்பட்டுள்ளது. இதில் அங்கத்தினர்கள் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட்டுள்ளனர். (அப்.11:26, அப்26:28,1பேது.4:10).

மனமாற்றம் அடைந்தவர்கள் பற்றி அப்போஸ்தலருடைய நடபடிகளில் நாம் படிக்கும்போது, இந்த கிறிஸ்துவின் சபைக்குள்ளாக எப்படி வருவதென்பதைப் பற்றி மீண்டும் மீண்டும் சொல்லப்பட்டுள்ளது. நற்செய்தியைக் கேட்ட போது, தேவன் மீதும் கிறிஸ்து மீதும் விசுவாசம் வைத்தார்கள். பாவத்திலிருந்து மனந்திரும்பினார்கள். கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட் டார்கள். தங்களுடைய பாவ மன்னிப்புக்காக ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள் (அப்.2.38;2:47).

அவர்கள் கிறிஸ்தவர்களாயிருந்து, கர்த்தரை ஆராதித்து விசுவாசத்தில் உறுதியாயிருந்து, கிறிஸ்து தமது சபைக்காக திரும்ப ஒரு நாளில் வருவார் என்ற வாக்குத்தத்தத்தில் நம்பிக்கை வைத்திருந்தனர் (எபே.5:27,1தெச 4:15-18).

ஆக, சபையானது வேதவசனங்களில் தெளிவாக அடையாளம் காட்டப்பட்டுள்ளது. இப்பொழுது, கர்த்தருடைய சபையை நீங்கள் எப்படிக் கண்டுபிடிக்கலாம்? இப்பொழுது நாம் பார்த்த அதே அடையாளங்களைக் கொண்டு கண்டுபிடிக்க முடியும். ஒரு சபையானது, தன்னைக் கர்த்தருடையது என்று சொல்லிக் கொள்ளலாம். ஆனால் அதற்கு இந்த அடையாளங்கள் இல்லையானால், அது அவருடையது அல்ல, நீங்கள் இருக்கும் இடத்தில். கர்த்தருடைய சபை இல்லையானால், நீங்கள் தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கித்து, ஒருவரையோ அல்லது அதிகமானவர்களையோ மனமாற்றமடையச் செய்வதின் மூலம் நீங்கள் கிறிஸ்துவின் சபையை அங்கே ஆரம்பிக்கமுடியும்.

## ஞானஸ்நானத்தின் நோக்கம்

| | | |
|---|---|---|
| 1. | பாவங்கள் கழுவப்பட | (அப்.2:38; 22:16) |
| 2. | கிறிஸ்துவுக்குள்ளாக | (கலா.3:27) |
| 3. | கிறிஸ்துவைத் தரித்துக்கொள்ள | (கலா.3:27) |
| 4. | சபைக்குள்ளாக்க | (அப்.2:47, Iகொரி.12:13) |
| 5. | புதிய ஜீவனை துவங்க | (ரோமர் 6: 3-5) |
| 6. | பழைய மனுஷனை களைந்து போட | (ரோமர் 6: 3-5) |
| 7. | இரட்சிக்கப்பட | (I.பேதுரு 3 : 21) |
| 8. | பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெற | (அப்.2:38) |
| 9. | கிறிஸ்துவின் இரத்தத்தோடு சம்பந்தப்பட | (ரோமர் 5:9) |
| 10. | எல்லா நீதியையும் நிறைவேற்ற | (மத். 3:15) |

# நீங்கள் கர்த்தருக்கு முக்கியமானவர்

இப்பாடத்தில் நீங்கள் கர்த்தருக்கு முக்கியமானவர் என்பதை வலியுறுத்த விரும்புகிறேன். தேவன் மனிதனைப் படைத்தார். அவனை தமது சொந்த சாயலிலே படைத்தார் (ஆதி.1:26,27,2:7),அதாவது அவனுக்கு ஆவி,ஆத்துமா போன்ற அழியாதவற்றை தந்தார், (மத்.16:26) அவர் தமது ஒரே பேறான குமாரனை கொடுமையான சிலுவையில் சாகக் கொடுக்கும் அளவிற்கு அவனை நேசித்தார். (யோவா. 15:13) ஏதோ ஒருவனுக்காக மாத்திரம் இதைச் செய்யாமல், எல்லா மனுக்குலத்துக்காகவும் இதை செய்தார். அதன் பொருள், ஒவ்வொரு மனிதனும் மிக முக்கியமானவர். இன்னும் அதன் பொருள், நீங்கள் அவருக்கு முக்கியமானவர் என்பதே.

வேதாகமத்தில் சிறப்புக்குரியவர்களாக உள்ள தனி மனிதர்களை கவனியுங்கள். கர்த்தர் அவர்களை உபயோகப்படுத்த அனுமதித்ததால் அவர்கள் மகத்தான மனிதர்களாக மாறினர். நோவா, ஆபிரகாம், மோசே, தானியேல், ஏசாயா, எலியா, எலிசா, யோவான்ஸ்நானகன், அப்போஸ்தலர்கள் போன்ற இன்னும் அநேகரை எண்ணிப்பாருங்கள்.

உதாரணத்திற்கு, அப்போஸ்தலன் பவுலை கவனியுங்கள். தன்னுடைய வாழ்நாட்காலத்தில் கர்த்தருக்காக அவனால் என்ன சாதிக்கமுடிந்தது என்றும் பாருங்கள். கர்த்தருக்கும், அவருடைய பிள்ளைகளுக்கும் விரோதி என்றளவில் தன் வாழ்க்கையைத் துவக்கினான். ஆனால், அவன் மனமாற்றமடைந்த பின் கர்த்தருடைய காரியத்திற்காக மிக கடுமையாக வேலை செய்தான். அவன் மேற்கொண்ட சுவிசேஷப் பிரயாணங்களையும், கிறிஸ்துவினண்டையில் அவனால் வழிநடத்தப்பட்டவர்களையும் எண்ணிப்பாருங்கள். மற்ற அப்போஸ்தலர்களுடன் சேர்ந்தும், தனிப்பட்ட அளவிலும் மிகச் சிரத்தை எடுத்து ஊழியம் செய்து அநேகரை மனமாற்றம் அடையச் செய்ததால், முப்பது வருடங்களுக்குள்ளாகவே நற்செய்தியானது, உலகெங்கிலும் எடுத்துச் செல்லப்பட்டது. ஆர்வமும், ஒப்புக்கொடுத்தலும், ஊழிய வாஞ்சையும் இருந்தால் நம்பமுடியாத அளவுக்கு நன்மைகளை மிகச் சிலரால் அல்லது தனி ஒருவரால் செய்ய முடியும்.

அப்போஸ்தலர் 10-ம் அதிகாரத்தில், ஒரு மனிதனுக்கும், அவனுடைய குடும்பத்திற்கும் கொடுக்கப்பட்டிருக்கும் முக்கியத்துவத்தை கவனியுங்கள். அந்தக் குடும்பம், கொர்நேலியுவும் அவன் குடும்பத்தாரும் தான். கொர்நேலியு இராணுவத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும் நல்ல மனிதன்.அவன் பக்தியுள்ளவனும் கூட. எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம் செய்து, தானதர்மங்களைச் செய்து கொண்டிருந்த இவனை தேவன் கவனித்தார். தொடர்ந்து நாம் வாசித்தால், சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் படியான நோக்கத்தோடு பேதுரு இவன் வீட்டிற்கு வரும்படியான ஒரு ஏற்பாட்டை தேவன் செய்தார். இந்த ஏற்பாடு நடந்தேறியவுடன், காரியங்கள் இவ்விதம் நடந்ததென்று வேதாகமம் கூறுகிறது. *(அப்.10:44-48)*

கொர்நேலியும், அவன் வீட்டாரும் மனம் மாற்றப்பட்ட இச்சம்பவத்தில் விசேஷமாக அடங்கியிருக்கிற ஒரு காரியம் என்னவென்றால், அவர்கள் புறஜாதிகளாயிருந்தார்கள். கர்த்தருக்குள்ளாக மனமாற்றப்பட்ட, முதல் புறஜாதியார் இவர்கள்தான். அப்போஸ்தலர் 8-ம் அதிகாரத்தில், எத்தியோப்பியாவில் இருந்து வந்த ஒரு மனிதனின் மனமாற்றத்தை நாம் படிக்கலாம். அவன் தொழுது கொள்ளும்படி எருசலேமுக்குப் போயிருப்பதால், அவன் யூத மார்க்கத்தமைந்தவனாயிருக்கவேண்டும். புறஜாதியானாக இருந்த கொர்நேலியுவும், அவன் வீட்டாரும் அந்நாட்களில் மனம் மாற்றப்பட்டது. கிறிஸ்துவின் காரியமாக என்ன அர்த்தம் தந்தது என்று எண்ணிப்பாருங்கள். புறஜாதியாரில் இருந்து வந்த முதல் கனி அவர்கள் தான். புறஜாதிகள் கிறிஸ்தவர்களாகவும், சபையின் அங்கத்தினர்களாகவும், வருவதற்கு மாதிரியாக, அந்நாள் முதற்கொண்டு பேசப்பட்டு வருகிறார்களென்பதில் சந்தேகமில்லை. அது மாத்திரமல்ல, அவர்கள் வழியாக வந்த எல்லா புறஜாதியாரையும் நினைத்துப்பாருங்கள். இந்நாள் வரை பெரும்பாலான கிறிஸ்தவர்கள் புறஜாதிப் பின்னணியிலிருந்துதான் வந்துள்ளார்கள்.

இப்பொழுது எத்தியோப்பிய மந்திரியின் மனமாற்றத்திற்குச் செல்வோம். பிலிப்பு சமாரியாவில் குறிப்பிடத்தக்க வெற்றியுடன் ஊழியம் செய்து கொண்டிருந்த போதிலும், வேதம் இவ்விதம் கூறுகிறது. பின்பு கர்த்தருடைய தூதன் பிலிப்பை நோக்கி; நீ எழுந்து தெற்கு முகமாய் எருசலேமிலிருந்து காசாபட்டணத்துக்குப் போகிற வனாந்திரமார்க்கமாய்ப் போ என்றான். அந்தப்படி அவன் எழுந்து போனான். அப்பொழுது எத்தியோப்

பியருடைய ராஜஸ்திரீயாகிய கந்தாகே என்பவளுக்கு மந்திரியும் அவளுடைய பொக்கிஷ மெல்லாவற்றிற்கும் தலைவனுமாயிருந்த எத்தியோப்பியனாகிய ஒருவன் பணிந்து கொள்ளும்படி எருசலேமுக்கு வந்திருந்து;ஊருக்குத் திரும்பிப் போகும் போது தன் இரதத்திலே உட்கார்ந்து, ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசித்துக் கொண்டிருந்தான். ஆவியானவர்; நீ போய், அந்த இரதத்துடனே சேர்ந்து, கொள் என்று பிலிப்புடனே சொன்னார். அப்பொழுது பிலிப்பு ஓடிப்போய் சேர்ந்து அவன் ஏசாயா தீர்க்கதரிசியின் ஆகமத்தை வாசிக்கிறதைக் கேட்டு; நீர் வாசிக்கிறவைகளின் கருத்து உமக்குத் தெரியுமா என்றான். அதற்கு அவன் ஒருவன் எனக்குத் தெரிவிக்காவிட்டால் அது எனக்கு எப்படித் தெரியும் என்று சொல்லி; பிலிப்புவை, ஏறி தன்னுடனே உட்காரும் படி அவனை வேண்டிக் கொண்டான். அவன் வாசித்த வேத வாக்கியம் என்னவென்றால்; அவர் ஒரு ஆட்டைப் போல் அடிக்கப்படுவதற்குக் கொண்டு போகப் பட்டார்; மயிர் கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டுக்குட்டியைப் போல் அவர் தமது வாயைத் திறவாதிருந்தார். அவர் தம்மைத் தாமே தாழ்த்தின போது அவருடைய நியாயம் எடுத்துப் போடப்பட்டது. அவருடைய ஜீவன் பூமியிலிருந்து எடுபட்டுப் போயிற்று. அவருடைய வம்சத்தை யாராலே சொல்லிமுடியும் என்பதே. மந்திரி பிலிப்பை நோக்கி; தீர்க்கதரிசி யாரைக் குறித்து இதைச் சொல்லுகிறார்? தம்மைக்குறித்தோ,வேறொருவரைக் குறித்தோ? எனக்குசொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொண்டான். அப்பொழுது பிலிப்பு பேசத்தொடங்கி, இந்த வேத வாக்கியத்தை முன்னிட்டு இயேசுவைக் குறித்து, அவனுக்குப் பிரசங்கித்தான். இவ்விதமாய் அவர்கள் வழிநடந்து போகையில் தண்ணீருள்ள ஓர் இடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி; இதோ தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறுகிறதற்குத் தடையென்ன என்றான். அதற்குப் பிலிப்பு நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லையென்றான். அப்பொழுது அவன்; இயேசுக்கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொல்லி; இரதத்தை நிறுத்தச் சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள். பிலிப்பும், அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினபொழுது கர்த்தருடைய

பிலிப்பைக்கொண்டு போய்விட்டார். மந்திரி அப்புறம் அவனைக் காணாமல், சந்தோஷத்தோடே தன் வழியே போனான்.(அப்.8:26-39)

இந்த மனமாற்ற சம்பவத்தை வாசிப்பதிலிருந்து நாம் அநேக மகத்தான பாடங்களை தெரிந்துகொள்ள முடியும். ஆனால், இந்த இடத்தில் நாங்கள் வலியுறுத்த விரும்புவது, இந்த மனிதன் தேவனுக்கு முக்கியமானவனாக இருந்துள்ளான் என்பதுதான். இவனுக்கு சத்தியம் போதிக்கப்பட்டு இவன் கர்த்தருக்குக் கீழ்ப்படியும் வாய்ப்பைப் பெறும்படியாக, கர்த்தருடைய தூதன் இவனையும் பிலிப்பையும் ஒன்று சேர்த்தார். சரி, யார் இந்த மனிதன்? இவன் மிகபக்தியுள்ளவன். யூதமார்க்கத்தின்படியாக தேவனை தொழுது கொள்வதற்கு எத்தியோப்பியாவிலிருந்து எருசலேமிற்குப் பிரயாணம் பண்ணி வந்தவன். அதன் பொருள், அவன் தாழ்மையும், நேர்மையும் ஒப்புக்கொடுத்தலும் உள்ளவன். கந்தாகே என்ற ராஜஸ்திரீக்கு பொக்கிஷதாரியாக இருந்த படியால், இவன் அதிகாரமுள்ளவனாகவும் இருந்தான். இப்பொழுது சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, தன் தேசத்திற்குத் திரும்பி வந்து, தனி மனிதனாகிய இவன் தன் தேசத் தலைவர்களிடமும், குடும்ப அங்கத்தினர்களிடமும், குடிமக்களிடமும் எந்த வகையான செல்வாக்குப் பெற்றிருந்திருப்பான் என எண்ணுகிறீர்கள்? தன்னுடைய காரியமாக செயல்படும் மாபெரும் திராணியை கர்த்தர் இவனுக்குள்ளாக கண்டிருக்கக் கூடுமென்று நாம் முடிவெடுக்க வேண்டும். ஆனால், இந்த எத்தியோப்பியன் மற்றவர்களுக்கு கர்த்தரைக் குறித்துச் சொல்லுவதில்,கர்த்தரை ஏமாற்றமடைய செய்துவிட்டானோ என நான் கடுமையாக சந்தேகிக்கிறேன்.

இப்பொழுது நீங்கள் யார்? ஒருவேளை, நான் ஒன்றுமில்லையென்று நீங்கள் நினைக்கலாம்.ஆனால், நீங்கள் உங்களுக்கு ஒன்றுமில்லாதிருக்கும் பொழுது, நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து அவருக்கு உங்களை ஒப்புக் கொடுக்கும் போது, அவர் உங்களை எடுத்துப் பயன்படுத்தமுடியும். நீங்கள் இளைஞராக, முதியவராக, ஒரு பெண்ணாக, ஒரு ஆணாக,பணக்காரராக, ஏழையாக,படித்தவராக, படிக்காதவராக, அல்லது எப்படிப்பட்டவராகவும் இருக்கலாம். இந்நிலையில் நான் கர்த்தருக்கு ஒருபோதும் ஒரு பொருட்டாக இருக்க முடியாதென்று அதை ஒரு சாக்காக பயன்படுத்தலாம். ஆனால் உங்கள் எண்ணம் தவறானது. வேதாகமத்தில் உள்ள

ஆண்களையும், பெண்களையும் கவனியுங்கள். அவர்களை தேவன் எப்படி எடுத்து தனக்காகச் சிறந்த ஊழியர்களாக பயன்படுத்தினார் என்று பாருங்கள். அதையே ஏன் உங்களிடம் தேவன் செய்யமுடியாது? நான் சொல்ல வருவது இதுதான். நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, அவருடைய சபையில் அங்கமானால், இன்று நீங்கள் உங்களை அவருக்கு கொடுத்தால், அதாவது நீங்கள் அவருக்காக வேலை செய்தால், பிறகு நீங்கள் ஒரு பிரசங்கியாகவோ, வேத ஆசிரியராகவோ அல்லது அவருடைய காரியமாக ஏதாவது ஒருவகையில் அவருக்காக பணியாற்றக் கூடியவராக இருக்கமுடியும்.

இந்த தொடர் பாடங்களில் நாங்கள் வலியுறுத்துவது போல கிறிஸ்துவின் சபை இல்லாத இடத்தில் நீங்கள் ஒருவேலை தொடங்கும்படியாக நீங்கள் தலைமையேற்றுக் கொள்ளமுடியும். ஆம், நீங்கள் அதைச் செய்ய முடியும். கர்த்தர் உங்களோடிருந்து உங்களுடைய முயற்சிகளை ஆசீர்வதிப்பேன் என்று வாக்குக் கொடுத்துள்ளார். தயவுசெய்து இந்தக் காரியங்களை உங்கள் மனதில் நினைத்து தேவ சித்தம் உங்கள் வாழ்க்கையில் நடந்தேறும்படியாக ஜெபியுங்கள்.

## கிறிஸ்துவின் சபையில் இருக்கும் ஆசீர்வாதங்கள்

| | | |
|---|---|---|
| *1.* | ஆக்கினைத் தீர்ப்பில்லை | *(ரோமர் 3: 1,2)* |
| *2.* | பாவமன்னிப்பு | *(கொலோ. 1:13,14)* |
| *3.* | பிதாவோடும், கிறிஸ்துவோடும், விசுவாசிகளோடும் ஐக்கியம் | *(எபே.5:23)* |
| *4.* | புதிய ஜீவன் | *(IIகொரி. 5:17)* |
| *5.* | எல்லா ஆவிக்குரிய ஆசீர்வாதங்கள் | *(எபே.1:3)* |
| *6.* | பரிசுத்த ஆவியின் வரம் | *(கலா.5:25)* |
| *7.* | உயிர்த்தெழுதலுக்கான உறுதிமொழி | *(ரோமர் 8:11)* |
| *8.* | பரலோகத்திற்கான உறுதிமொழி | *(யோவா.14:1-3)* |

# நீங்கள் இருக்குமிடத்தில், சபை ஏன் தேவைப்படுகிறது?

இப்பாடத்தில், நீங்கள் இருக்குமிடத்தில் சபை ஏன் தேவைப் படுகிறது என்பதை உங்களுக்குச் சொல்ல விரும்புகிறேன். நாங்கள் ஏற்கனவே சொன்னதுபோல், அங்கே சபையிருக்குமானால் மிக நன்று. ஒருவேளை இல்லையென்றால், உங்கள் பகுதியில் சபை தேவைப் படுகிறது.

நாங்கள் ஏதோ, இன்னும் ஒரு சபையைக் குறித்து இங்கு பேச வரவில்லை. நீங்கள் இருக்குமிடத்தில், பல சபைகள் இருக்கக்கூடும். பிரிவினைச் சபைகள் குறித்தோ, மனிதன் உருவாக்கிய சபைகளைப் பற்றியோ பேசவில்லை. மாறாக, வேதாகமத்தில் இடம் பெற்றிருக்கிற கர்த்தருடைய சபையைக் குறித்தே பேசுகிறோம். அந்த சபை கர்த்தருக்கு சொந்தமானது. அந்த ஒரே சபைக்காகத் தான் கிறிஸ்து மரித்தார். அந்த சபைக்குத்தான் அவர் இரட்சகராகவும், தலைவராகவும் இருக்கிறார். அந்த சபை அவருடைய பெயரைத் தரித்திருக்கிறது. இப்படிச் சொல்வது, நீங்கள் பிரிவுச் சபையில் அங்கத்தினராய் இருந்தும், இழந்துபோக வாய்ப்புண்டு என்பதைத் தெரிந்து கொள்வதற்குத்தான். மனிதனால் உருவாக்கப்பட்ட சபைகளைச் சேர்ந்தவர்கள், ஒருவன் எந்தச் சபையிலும் அங்கத்தினராக இல்லாத நிலையிலும் இரட்சிக்கப்படமுடியும் என்று சொல்வார்கள். ஆகவே தான்; உங்களுக்காகவும், கர்த்தருக்குக் கீழ்ப்படிய விரும்பும் மற்றவர்களுக் காகவும் கர்த்தருடைய சபை அங்கு தேவைப்படுகிறது என்று சொல்லுகிறோம்.

கர்த்தருடைய சபை முக்கியமானது. சபை இரட்சிப்பதில்லை என்பது உண்மைதான். ஆனால்,ஒருவன் இரட்சிக்கப்பட சபையில் அங்கத்தினராக இருக்கவேண்டும். உண்மையில், ஒருவன் இரட்சிக்கப்பட்டால்,அவனை கர்த்தர் சபையிலே சேர்க்கிறார். (அப்.2:47).இங்கே,பவுல் அப்போஸ்தலன் வார்த்தையைக் கவனியுங்கள். ''கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறது போல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான்; அவரே சரீரத்திற்கும் இரட்சகராக இருக்கிறார்.'' (எபே.5:23) கிறிஸ்து, சரீரத்திற்கு இரட்சகர் என்று கூறுவதைக் கவனியுங்கள். சரீரம் என்றால் என்ன?

எபே.1:22,23 மற்றும் கொலோ.1:18 ன்படி சரீரம் என்பது சபை. அதன் பொருள், கிறிஸ்து சபைக்கு இரட்சகராக இருக்கிறார் என்பதே. அப்படியானால், எத்தனை சரீரம் இருக்கமுடியும்? மீண்டும் பவுல், ஒரே ஒரு சரீரம் என்று தான் கூறுகிறார். (எபே.4:4) சபை என்பதும், சரீரம் என்பதும், ஒரே பொருளைத் தந்து,ஒரே சரீரம் என்று சொல்லப் படுமானால், அதன் தீர்மானமான பொருள் ஒரே சபை தான் என்பதாகும். ஏன், கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினாராக இருக்க வேண்டுமென்பதற்கு இது சரியான பொருள் கொடுக்கிறது. அதுமாத்திரமல்ல, நீங்களும், உங்களோடிருக்கும் மற்றவர்களும், அந்த ஒரு சபையில் அங்கத்தின ராயிருந்து, தேவனைப் பிரியப்படுத்துவதற்கு, நீங்கள் இருக்கும் இடத்தில் சபை இருக்க வேண்டியது அவசியமாய் இருக்கிறது.

அங்கு சபை இருக்க வேண்டுமென்பதற்கு, வேறு ஒரு காரணமும் உண்டு. நீங்களும், சபையின் மற்ற அங்கத்தினர்களும் சேர்ந்து, ஆராதனை செய்யும்படியாய், ஒரு கூட்ட மக்களை ஏற்படுத்த அது உதவும். நீங்களும், மற்றவர்களும் அங்கிருந்தும் சபை கூடி வருதல் இல்லையென்றால், நீங்கள் அங்குள்ள மற்ற பிரிவுச் சபையாரோடு சேர்ந்து ஆராதிக்குமளவுக்கு பெலவீனப்பட்டுப் போகலாம். கர்த்தருடைய சபை மக்களோடு சேர்ந்து கூடி வரமுடியவில்லையென்பதற்காக, பிரிவினைச் சபையோடு சேர்ந்து ஆராதிப்பது, பிரச்சனைக்குத் தீர்வாகாது.

நீங்கள் ஏன் மற்ற பிரிவினைச் சபையராடு சேர்ந்து ஆராதிக்க முடியாதென்பதற்கு காரணம் தருகிறேன். நீங்கள் கிறிஸ்துவின் சபையில் அங்கத்தினராயிருக்கிறீர்கள் என்றால், அதன் பொருள், நீங்கள் வேறெந்த பிரிவினைச்சபையிலும் அங்கத்தினரல்ல என்பது கிறிஸ்துவின் சபையானது கிறிஸ்துவுக்குச் சொந்தம். அது அவர் பெயரைத் தரித் திருக்கிறது. இன்னும், அதன் ஆராதனை முறை, போதனைகள் அனைத்தும் மற்ற பிரிவினைச் சபைகளிலிருந்து வித்தியாசமானது. அப்படியானால், கிறிஸ்துவுக்குச் சொந்தமில்லாத ஒரு சபையோடு சேர்ந்து நீங்கள் எப்படி ஆராதிக்க முடியும்? அவர்கள் இசைக்கருவிகளை வைத்துப் பாட்டு பாடுவதால் நீங்கள் அவர்களோடு சேர்ந்து பாடமுடியாது. அப்போஸ்தலன் பவுல் ''நாம் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் செய்ய வேண்டுமென்று கூறுகிறார்.(எபெ.5:19) அவர்கள் இரட்சிக்கப் படாதவர் களாயிருக்கிறபடியால், நீங்கள் அவர்களோடு சேர்ந்து ஜெபிக்க முடியாது.

தம்முடைய பிள்ளைகளின் ஜெபத்தைக் கேட்பேன் என்று தான் தேவன் வாக்களித்துள்ளார். பாவிகளின் ஜெபத்தையல்ல. (யோவா.9:31) அவர்கள் தேவனுடைய வார்த்தைகளோடு, மனித கோட்பாடுகளையும் சேர்த்திருப்பதால்,அவர்களோடு சேர்ந்து, நாம் வேதத்தைப் படிக்கவும் முடியாது. அவர்கள் வாரத்தின் முதல்நாள் தோறும், கர்த்தருடைய பந்தியை கடைபிடிக்காததால், நீங்கள் கர்த்தருடைய பந்தியிலும் பங்குபெற முடியாது. (அப்.20:7) தங்களுடைய காணிக்கையைக் கொண்டு அவர்கள் கள்ள உபதேசம் செய்வதால், நாம் கர்த்தருக்கு காணிக்கையும் கொடுக்க முடியாது. அவர்களோடு நீங்கள் ஐக்கியம் கொள்ளவும் முடியாது. அவர்கள் கர்த்தருடைய சபையில்லாதபடியால், உபதேசத்தில் நிலைத்திருங்கள் என்று ஊக்கப்படுத்தவும் முடியாது. ஆகவே, இந்தக் காரணங்களினால், நீங்கள் ஏதாவதொரு பிரிவினைச் சபையாரோடு சேர்ந்து ஆராதிக்க முடியாது.

நீங்கள் இருக்குமிடத்தில் கிறிஸ்துவின் சபையில்லை யென்றால், நீங்கள் ஒட்டுமொத்தமாக உங்கள் பக்தி நிலையிலிருந்து விலகிப் போகும் ஆபத்தும் உண்டு. கிறிஸ்துவின் சபையும் இல்லை. பிரிவுச் சபையாரோடு சேர்ந்து ஆராதிக்கவும் முடியாது. வேறென்ன செய்ய முடியும்? என்று நீங்கள் வாதிடலாம். இப்படிச் சொல்லி வாதிடுவதும் பிரச்சினைக்குத் தீர்வாகாது. மாறாக, இந்தச் சூழ்நிலையில், உங்களால் ஏதாவது செய்யமுடியும் என்பதை நீங்கள் உணர வேண்டும்.

உங்கள் வாழ்நாள் முழுவதும் நீங்கள் அங்கு வாழ்ந்திருக்கலாம். அஞ்சல் வழியில் வேதாமத்தைக் கற்றிருக்கலாம், வானொலியில் சுவிசேஷப் பிரசங்கங்கள் கேட்டிருக்கலாம், கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து உங்கள் பகுதியில் நீங்கள் ஒருவர் தான் கிறிஸ்தவன் என்று அறிந்திருக்கலாம் அல்லது சபை இருக்கின்ற ஒரு இடத்திலிருந்து, அப்பகுதிக்கு குடிபெயர்ந்து வந்திருக்கலாம். ஒருவேளை நீங்கள் அப்பகுதியிலிருப்பதற்கான காரணம் எதுவாக இருந்தாலும், நீங்கள் அங்கிருப்பதற்காக தேவனுக்கு நன்றி. நீங்கள் இருக்கும் இடத்தில் சபையைத் தொடங்குவதற்கு, இது ஒரு நல்ல தருணமாக இருக்கட்டும். ஒருவேளை, நீங்கள் கேட்கலாம். ''கர்த்தருடைய சபையை ஆரம்பிப்பதற்கு நான் எம்மாத்திரம்? என்று பல சாக்குப் போக்குகளை நீங்கள் சொல்லமுடியும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால்,நீங்கள் இளைஞராக இருந்தாலும், ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ இருந்தாலும் அல்லது வேறு எப்படிப்பட்ட நிலையில்

இருந்தாலும், என்ன செய்ய வேண்டுமோ, அதைச் செய்ய வேண்டுமென்ற விருப்பமிருந்தால், அது உங்களால் கட்டாயம் முடியும். நமது அடுத்த பாடத்தில் சபையை ஆரம்பிப்பதற்கு நீங்கள் என்ன செய்ய வேண்டுமென்பது பற்றிப் படிக்க அதிக நேரத்தை ஒதுக்குகிறேன். ஆனால், இப்பொழுது, சபை ஏன் அங்கிருக்க வேண்டுமென்பதற்கான காரணத்தை மேலும் வலியுறுத்த விரும்புகிறேன்.

நீங்களும், உங்கள் பகுதியைச் சேர்ந்தவர்களும் அங்கு வசிப்பதாலும், உங்கள் பகுதியைச் சுற்றி இன்னும் பலர் இருக்கிறபடியினாலும் அங்கு சபை அவசியமாயிருக்கிறது. நீங்களும், சபையும் அங்குள்ளவர்களுக்கு கிறிஸ்துவைக் காட்டுகிறீர்கள். நீங்கள் தேவ உண்மையை வெளிக்காட்டி, ஜனங்கள் சத்தியத்திற்கும், அசத்தியத்திற்குமான வேறுபாட்டை உணர்ந்து கொள்ளும்படியான சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கிறீர்கள். சத்தியத்தை எடுத்துச் சொல்லும்படியாய் சபையானது அங்கு இல்லையானால், அப்பகுதி மக்கள், தேவசித்தத்தை அறிந்து கொள்ளாமல் போகலாம். கர்த்தருடைய வழியைக் காட்டும் ஒளிவிளக்காய் சபை திகழ்கிறது. சபையில்லையானால், அங்கு இருள் தான் மிஞ்சும்.

தேவனை ஆராதிப்பதற்கு மாத்திரம் அங்கு சபை இல்லாமல், கிறிஸ்துவின் நற்செய்தியை உற்சாகத்தோடு உபதேசிக்கவும் இருக்கவேண்டும். இதை நாம் ஆராதிப்பதன் மூலமும் செய்யமுடியும். இன்னும், நற்செய்திக் கூட்டங்கள், தனிப்பட்ட ஊழியம், பத்திரிக்கை, கைப்பிரதிகள் விநியோகம் போன்றவற்றின் மூலமும் செய்யமுடியும். தேவசித்தத்தை வெளிப்படுத்த பல வழிகள் உண்டு. ஆனால், இவைகளை ஒரு சபை தான் தலைமையேற்றுச் செய்ய வேண்டும்.

இதைச் செய்வதற்கு சபை எவ்வளவு பெரிதாக இருக்க வேண்டும்? அல்லது எவ்வளவு அங்கத்தினர்களைக் கொண்டதாக இருக்கவேண்டும்? இயேசுவின் வார்த்தைகளைக் கவனியுங்கள். ஏனெனில், "இரண்டு பேராவது, மூன்று பேராவது என் நாமத்தினாலே எங்கே கூடியிருக்கிறார்களோ,அங்கே அவர்கள் நடுவிலே இருக்கிறேன்" *(மத்.18:20)* அதன் பொருள், நீங்கள், உங்களோடு இன்னொரு கிறிஸ்தவர் இருந்தால், இரண்டு பேருமாகச் சேர்ந்து ஒரு சபையை ஆரம்பிக்க முடியும். அதன் பிறகு எண்ணிக்கையினடிப்படையில் அது எவ்வளவு பெரிதாக வேண்டுமானலும் வளரலாம்.

இரட்சிக்கப்பட்டவர்களைக் கொண்டது தான் கர்த்தருடைய சபை என்பதும், கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறவர்களை அவர் இரட்சிக்கிறார் என்பதும், இரட்சிக்கப்படுகிறவர்களைத்தான் தமது சபையில் சேர்க்கிறார் என்பதும் நினைவிலிருக்கட்டும். பிறகு, கூடி ஆராதித்து, கர்த்தருக்காக வேலை செய்வோம் என்கிற இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்களைக் கொண்டு கர்த்தருடைய சபை ஆரம்பமாகிறது.

ஒரு பிராந்திய சபையென்பது, உலகப்பிரகாரமான காரியங்களுக்காக கூடிவரக்கூடிய ஒரு சபைக் கட்டிடமல்ல. உண்மையில், ஒரு சபை எங்கு கூடிவருகிறது என்பது ஒரு பிரச்சனையே அல்ல. சபையானது, தனக்குச் சொந்தமாக ஒரு கட்டிடத்தை வைத்துக் கொள்ளமுடியும் அல்லது ஒரு வீட்டிலே கூட ஆரம்பிக்கலாம், ஒரு வாடகை கட்டிடத்திலோ, பள்ளிக் கட்டிடத்திலோ அல்லது வேறு ஏதாவது ஒரு இடமாக கூட அது இருக்கலாம். கர்த்தருடைய சபையைப் பொறுத்தளவில், சபை எங்கு கூடுகிறது என்பதைக் காட்டிலும், யார் கூடுகிறார்கள் என்பதே முக்கியம்.

சபையானது, கிறிஸ்துவின் சபை என்று அறியப்படும் அல்லது, வேதாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ள பெயரை அது தரித்துக்கொள்ளும். அதனுடைய ஆராதனை, போதனை இன்னும் அது செய்கின்ற அனைத்தையும் வேதவசனங்களின் ஆளுகையின்படி தான் செய்யும். கிறிஸ்துவின் காரியத்தைப் பரப்புவதே இதன் பிரதான பணி. இதன் மூலம், கிறிஸ்துவை கனப்படுத்த வேண்டும்.

ஒரு கிறிஸ்தவனாகவும், கர்த்தருடைய சபையின் அங்கத்தினனாகவும் இருப்பது எவ்வளவு மகிழ்ச்சிக்குரியதாயிருக்கிறதென்று பாருங்கள். ஒரு பிராந்திய சபையின் அங்கத்தினனாக இருந்தாலும், ஒருவேளை கர்த்தருடைய சபையே இல்லாத இடத்தில் இருந்தாலும், உண்மை யாதெனில், ஒரு சபையானது வளர்ச்சி பெற, நீங்கள் ஒரு முக்கியமானவராகவும், அல்லது புதிதாக ஒரு பிராந்திய சபையை உருவாக்கும் கருவியாகவும் நீங்கள் இருக்கமுடியும். இது மகத்தான சிலாக்கியம்.

# கர்த்தருடைய சபையை ஆரம்பிப்பது எப்படி?

இந்தப்பாடத்தில், நீங்கள் வசிக்குமிடத்தில் கர்த்தருடைய சபையை தொடங்குவது எப்படி என்பதை நாம் அறிந்து கொள்வோம்.

நாங்கள் இந்த காரியத்தைப் பற்றி மேலும் சொல்வதற்கு முன், மீண்டுமாக கூறிக்கொள்வது என்னவென்றால், நீங்கள் வசிக்குமிடத்தில் சபை இல்லாதிருக்கும் பட்சத்தில் சபை ஆரம்பிப்பது பற்றிச் சொல்கின்றோம். சபை ஏற்கனவே அங்கு இருந்தால், நீங்கள் அந்த பிராந்திய சபையின் அங்கத்தினராய் இருப்பது தான் சரி, அப்படித்தானே. சபை நீங்கள் இருக்கும் இடத்திலிருந்து நியாயமான தூரத்தில் இருக்குமானால், உங்கள் வீட்டிலோ அல்லது உங்கள் நகரத்திலோ, அல்லது கிராமத்திலோ உள்ள வேறொரு இடத்தில் சபையை ஆரம்பிக்க வேண்டாம். கிறிஸ்துவின் சபையானது பிரிவினை சபையல்ல என்பதில் தெளிவாயிருங்கள். அதைப் பற்றி சோதித்துப் பாருங்கள். அங்கே சென்று அதன் ஆராதனை முறைமைகளை கவனியுங்கள். அது எந்தப் பெயரை தரித்துக் கொண்டிருக்கிறது என்பதையும் மற்றும் சிலவற்றையும் கவனியுங்கள். நாம் இப்படி செய்வதால் அந்தச் சபை கர்த்தருடைய சபைதானா? இல்லையா? என்று அடையாளம் காண்கிறோம். இதில் என்ன வித்தியாசம் இருக்கிறதென்று சிலர் அறிந்துகொள்ள விரும்புவார்கள். இதற்கு நாம் எளிதாய் பதில் காணலாம். சரிதானே. சரியானதற்கும், தவறானதற்கும் உள்ள வித்தியாசத்தை அது காண்பிக்கின்றது. கர்த்தர் எது தேவை என்பதை அறிந்திருக்கிறார். அவர் அறிந்திருப்பதினால் அதுவே சரி. மற்ற எல்லா வழிகளும் தவறுதானே.

சில நகரங்களில் அளவுக்கு அதிகமான சபைகள் இருக்கின்றன. இதை எதற்காக சொல்கிறோமென்றால், கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறவர்கள் அருகாமையில் உள்ள பிராந்திய சபைக்குச் சென்று ஆராதிக்காமல் தங்கள் வீட்டிலோ அல்லது வாடகை இடத்திலோ சபையை தொடங்குகின்றனர். சில வேளைகளில், ஒரே வீதிகளில் இரண்டு அல்லது மூன்று சபைகள் கூடுகின்றன. அது சரியானதல்ல. சகோதரர்கள் மத்தியில் பிரிவினையை இது காண்பிக்கிறபடியினால் இது சரியானதல்ல. சிறுசிறு சபைகளாக இருந்து

கொண்டு நாம் கஷ்டப்படுவதைவிட ஒரே சபையாக சேர்ந்து ஒருவருக்கொருவர் ஊக்குவித்து, கர்த்தருக்காக பெரிய காரியங்களை செய்யலாம்தானே. அப்படி செய்யாவிடில் அது சரியானதல்ல. சரியானது எது என்பதை அறிந்து கொள்ள என்னோடு தொடர்ந்து படியுங்கள்.

நீங்கள் வசிக்கும் இடத்தின் அருகாமையில் கிறிஸ்துவின் சபைகள் இருந்தும். மேலும் ஒருசபையை ஆரம்பிப்பது குறித்து நாங்கள் சொல்லவில்லை. மாறாக, எந்த நகரத்தில் அல்லது இடத்தில் கர்த்தருடைய சபை இல்லையோ அங்கே சபை ஆரம்பிப்பதற்கு ஊக்குவிக்கிறோம். ஆனால், நீங்கள் கிறிஸ்துவின் சபையை ஆரம்பிப்பது எப்படி அல்லது நிலைநிறுத்துவது எப்படி என்பதைக் குறித்து அறிய ஆவலாயிருப் பீர்கள் தானே. உண்மையில் சபையை ஸ்தாபிப்பதைக் குறித்தோ, வேறொரு சபையை ஆரம்பிப்பதைக் குறித்தோ நம் சொந்த சபையை ஆரம்பிப்பதைக் குறித்தோ நாங்கள் இங்கு பேசவில்லை. கர்த்தர் தனது சபையை ஏற்கனவே ஸ்தாபித்துவிட்டார் என்பது நமக்குத் தெரிந்ததே. *(மத்.16:18)* முதன் முதலில் சபையானது, எருசலேமில் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டு ஏறக்குறைய மூவாயிரம்பேர் அதற்குக் கீழ்ப்படிந்து, இரட்சிக்கப்பட்டு, கர்த்தரால் அதில் சேர்க்கப்பட்டபொழுது ஸ்தாபிக்கப்பட்டது.அதற்கு பின்பு எங்கெல்லாம் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டதோ, எங்கெல்லாம் அதற்குக் கீழ்ப்படிந் தார்களோ அங்கெல்லாம் கர்த்தருடைய சபை ஆரம்பிக்கப்பட்டது. அந்தக் காலகட்டத்திலிருந்து கர்த்தருடைய வார்த்தை எங்கெல்லாம் பிரசங்கிப்பட்டு , மக்கள் கீழ்ப்படிந்தார்களோ, அங்கெல்லாம் சபை யானது ஆரம்பிக்கப்பட்டு வருகிறது.அது இன்றைக்கும் பொருந்தும். சபையை ஆரம்பிப்பது எப்படி என்று சொல்லும் பொழுது இதைத்தான் சொல்லுகிறோம். கர்த்தருடைய சபையானது ஆரம்பிக்கப்பட நீங்களும், மற்றவர்களும் கர்த்தருக்கு கீழ்ப்படிய வேண்டும். இது எளிது தானே.

இப்பொழுது சரியானது எது என்பதைப் புரிந்து கொண்டீர்கள். இன்னும் கொஞ்சநேரம் எங்களோடு சேர்ந்து கவனியுங்கள். நீங்கள் கிறிஸ்தவர்களாய் இருப்பதினால் தேவனை ஆராதிக்க வேண்டு மென்று விரும்புகிறீர்கள். நீங்கள் பிராந்திய சபையின் அங்கத்தினராக இருக்க விரும்புகிறீர்கள்.ஆனால், நீங்கள் இருக்கும் இடத்திலோ கிறிஸ்துவின் சபை இல்லை. அப்பொழுது நீங்கள் என்னசெய்யமுடியும்?

*முதலாவதாக,* உங்களுக்குக் கூறுவது என்னவென்றால், ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைகளிலும், அதாவது வாரத்தின் முதல்நாளிலோ அல்லது கர்த்தருடைய நாளிலோ வேதவசனங்களைப் படிக்கவும், தேவனிடத்தில் விண்ணப்பம் பண்ணவும், ஆவிக்குரிய பாடல்கள் பாடவும்.ஒரு குறிப்பிட்ட நேரத்தை ஒதுக்குங்கள். கர்த்தர் தம்முடைய ஜனங்கள் வாரத்தின் முதல்நாள் தோறும் தம்முடைய பந்தியில் பங்கு பெறவேண்டுமென்று விரும்புவதால், நாங்கள் உங்களுடைய சூழ்நிலையில் இருப்போமானால் புளிப்பில்லாத அப்பத்தையும், திராட்சரசத்தையும், எடுத்துக்கொண்டு ( I.கொரி. *11:23-29)* ல் சொல்லப்பட்ட மாதிரியின்படியே. கிறிஸ்துவின் சரீரத்தை நினைவு படுத்துகிற புளிப்பில்லாத அப்பத்திலும், அவருடைய மரணத்தை நினைவு கூரும்படி பங்கு பெறுவோம். பின்பு எங்களுடைய வருமானத்திலிருந்து ஒரு பகுதியை கர்த்தருடைய வேலைக்கென்று அதாவது வேதாகமம் வாங்கவோ, கர்த்தருடைய பந்திக்கு தேவையானதை வாங்கவோ தனியாக ஒதுக்கி வைப்போம். நீங்களும் அப்படியே செய்வது நலம். நீங்கள் தனிநபராக இருந்தாலும் கூட இப்படிச் செய்வது உங்களை ஊக்குவிக்கக் கூடியதாயும், உங்களோடு கூட சேர்ந்து ஆராதிக்கும் நபரை கண்டுபிடித்து கர்த்தருடைய சபையை ஆரம்பிக்கும் வரை உங்களை பெலப்படுத்தக் கூடியதாகவும் இருக்கும்.

*இரண்டாவதாக,* நாங்கள் உங்களைப்போல இருப்போமானால் உங்களுடைய குடும்ப அங்கத்தினர்களையும், நண்பர்களையும் கூட்டிச் சேர்த்து ஆராதிக்க முயற்சிப்போம். தனிநபர்கள், ஆண்கள், பெண்கள், வாலிபர்கள் ஆகியோரை சந்தித்து அவர்களோடு பேசி அவர்களை சத்தியத்திற்கென்று மாற்றும்படி வேதத்தை ஆராய்வோம். நாங்கள் அவர்களோடு பொறுமையாய் இருந்து நேரத்தை செலவழித்து, ஒருவன் இரட்சிக்கப்பட என்ன செய்யவேண்டும் என்பதையும் கர்த்தருடைய சபையைக் குறித்து வேதாகமம் என்ன சொல்லுகிறது என்பதையும் வேதத்திலிருந்து வசன ஆதாரத்துடன் எடுத்துரைப்போம்.அத்தருணத்தில் ஒருவரோ அல்லது அதற்கு மேற்பட்டவர்களோ கர்த்தருக்குக் கீழ்ப்படிய முடிவெடுக்கலாம். அப்பொழுது, நீங்கள் அவர்களுக்கு, கர்த்தர் மேல் விசுவாசம் வைத்து, பின்பு பாவத்திற்கு மனஸ்தாபப்பட்டு, மனந்திருந்தி கிறிஸ்துவை தேவனுடைய குமாரரென்று அறிக்கையிடவேண்டும்

என்பதைக் குறித்து எடுத்துரைக்க வேண்டும். அதற்காக நீங்கள், அப்.8:26-39 வசனப் பகுதியிலிருந்து, எத்தியோப்பியாவில் இருந்து வந்த மனிதனின் மன மாற்றத்தின் சம்பவத்தை இதற்கு எடுத்துக் காட்டலாம். அதன்பின்பு அவர்களிடம் நீங்கள் ''இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரரென்று விசுவாசிக்கிறீர்களா?'' என்று கேட்டு அவர்களுடைய அறிக்கையின் பேரில் அவர்களை ஒரு குளத்திற்கோ அல்லது ஒரு ஆற்றுக்கோ, அல்லது ஒரு ஓடைக்கோ அல்லது அவர்கள் ஞானஸ்நானத்தில் தண்ணீருக்குள் மூழ்கும் அளவுக்கு எங்கே தண்ணீர் இருக்கிறதோ, அங்கே அழைத்துச் செல்லலாம். அப்படி அவர்கள் வரும்பொழுது மாற்றுடை எடுத்துவர வேண்டும் என்பதையும் அவர்களுக்குக் கூறி திருமுழுக்குக்கு முன்பு, இயேசுகிறிஸ்து எங்களுக்குக் கொடுத்த அதிகாரத்தின் பேரில் பாவ மன்னிப்புக்கென்று பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்நானம் தருகிறோம் என்பதைக் கூறவேண்டும். (மத்.28:18-20) பின்பு அவர்களை ஒவ்வொருவராக அழைத்து தண்ணீருக்குள் முழுக்குதல் அவசியம். தண்ணீருக்குள் அவர்களுடைய உடல் முழுவதும் மூழ்க வேண்டும் என்பதை மனதில் நிலை நிறுத்திக் கொள்ள வேண்டும். ஏனென்றால் ஞானஸ்நானம் என்பது தண்ணீருக்குள் மூழ்குதல் என்று ரோமர் 6:3,4ம் கொலோ. 2:12 ம் வாசிக்கிறோம்.

இப்பொழுது நீங்கள் ஒருவரையோ அல்லது அதற்கு மேற்பட்டவரையோ திருமுழுக்கின் மூலம் கர்த்தருக்கு கீழ்ப்படியச் செய்வதால் நீங்கள் வசிக்கும் இடத்தில் அல்லது உங்கள் நகரத்தில் கர்த்தருடைய சபை ஆரம்பமாகிவிட்டது.

கர்த்தருடைய நாளின் ஆராதனைக்கென்று உங்களுடைய வீட்டிலோ அல்லது இரட்சிக்கப்பட்டோரின் வீட்டிலோ அல்லது பொது இடத்திலோ நீங்கள் கூடிவரலாம். மீண்டுமாக, நீங்கள் உங்கள் குடும்பத்தாரையும், உங்கள் நண்பர்களையும் பங்கேற்கும்படி அழைக்கலாம். பொதுமக்களை, நீங்கள் கூடிவரும் இடத்திற்கு, வரும்படி ஊக்குவிக்கலாம். இரட்சிக்கப்பட்டவர்களுக்குள்ளே யார் பிரசங்கம் செய்வது, ஜெபத்தில் வழிநடத்துவது, கர்த்தருடைய பந்தியை நடத்திக்கொடுப்பது, பாடல்களை வழிநடத்துவது என்பதை நீங்கள் அறிவீர்கள்தானே. பெண்கள் கர்த்தருக்காக என்னதான் செய்யலாம் என்று கேட்கிறீர்களா? சொல்கிறேன் கேளுங்கள். கர்த்தருடைய பந்திக்குத் தேவையான அப்பத்தையும் திராட்ச ரசத்தையும்

தயாரிப்பதில் அவர்கள் நமக்குதவலாம், குழந்தைகளுக்கு வேதபாடம் சொல்லிக்கொடுப்பதிலும், மற்ற பெண்களோடு வேத ஆராய்ச்சி நடத்துவதிலும் அவர்கள் உதவலாம்.

பிரசங்கத்தை பற்றியோ, அல்லது வேத ஆராய்ச்சியையோ நாம் சிந்திப்போமானால் நாம் ஒரு பொன்னான காலத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். யாரும் பிரசங்கிக்க முன் வராத பொழுது, வேதாகமத்திலிருந்து ஒரு பகுதியையோ, சுவிசேஷக் கைப்பிரதியையோ, கட்டுரையோ வாசிப்பதில் தவறொன்றும் இல்லை.

மேலும் நீங்கள் எங்களுக்கோ அல்லது வேறொரு கிறிஸ்துவின் சபைக்கோ இதைக்குறித்து தெரிவித்தால் நாங்கள் உங்களுக்கு உதவும்படியாக ஒரு சுவிசேஷப் பிரசங்கியாரை அனுப்பி வைப்போம்.

நீங்கள் ஒரு இளம் கிறிஸ்தவனாகவோ, அல்லது ஒரு பெண்ணாகவோ இருந்தால் கிறிஸ்துவின் சபையை ஆரம்பிப்பது கடினம் என்று எண்ணுகிறீர்கள். அப்படித்தானே, நீங்கள் அதில் தொடர்ந்து முயற்சிப்பதாலும், உங்களுக்கு இதில் உதவக் கூடியவர்களுடன் தொடர்புகொள்வதாலும். உங்கள் குடும்ப அங்கத்தினர்களோடும் நண்பர்களோடும் வேத ஆராய்ச்சி செய்வ தாலும் இந்த கடினமான காரியத்தை உறுதியாக நிறைவேற்ற முடியும். இப்படிச் செய்வதற்கு நீண்ட நாட்களாகும் என்று நினைத்தாலும் அது வெற்றியை கொடுக்கும் என்று அறிந்து கொள்ளுங்கள்.

இதை நீங்கள் வாசிக்கும் பொழுது கஷ்டமாக அல்லது சிரமமாக தெரிந்தாலும், உண்மையில் இதைச் செய்ய என்ன தேவையென்றால் ஒருவரோ அல்லது அதற்கு மேற்பட்ட உறுதியான கிறிஸ்தவர்களோ கர்த்தருடைய இந்த வேலையையும், சபையின் ஆரம்பப்பணியையும் உறுதிபடச் செய்வார்களானால் அதன் வளர்ச்சி தானாய்த் தொடரும் என்பதில் ஐயம் ஒன்றுமில்லை.

# ஞானஸ்நானம் கொடுப்பது எப்படி?

இப்பாடத்தில், நாம் ஞானஸ்நானம் என்ற தலைப்பின் கீழாக பாடம் படிக்க உள்ளோம்.குறிப்பாக, எப்படி ஞானஸ்நானம் கொடுப்பது என்று பார்ப்போம்.

முதலில் ஞானஸ்நானம் என்பதின் வேதாகமப் பொருள் என்னவென்றும் அதன் நோக்கம் என்ன என்பதையும் வலியுறுத்த விரும்புகிறோம். ஞானஸ்நானமென்பது தண்ணீரைக் கொண்டு செய்யப்படும் அடக்கம் அல்லது முழுகுதல் ஆகும். பவுலடியார் சொல்லும்போது, ''ஞானஸ்நானத்தினாலே அவரோடே கூட அடக்கம் பண்ணப்பட்டவர்களாகவும், அதிலே அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின தேவனுடைய செயலின் மேலுள்ள விசுவாசத்தினாலே அவரோடே கூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள்'' என்கிறார்.(கொலோ.2:12) வேறொரு சந்தர்ப்பத்தில், கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்துக்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனேகூட அடக்கம் பண்ணப்பட்டோம் (ரோமர் 6:3,4) யோவானிடத்தில் கிறிஸ்து ஞானஸ்நானம் பெற்றபோது, ''தண்ணீரிலிருந்து கரையேறினார்'' என்று வேதாகமம் கூறுகிறது.

இன்னும் அப்போஸ்தலர் 8-ம் அதிகாரத்தில், பிலிப்பு எத்தியோப்பிய மந்திரிக்கு இரதத்தில் போதித்துக் கொண்டிருக்கையில், தண்ணீருள்ள ஓரிடத்திற்கு வந்தார்கள். அப்பொழுது மந்திரி, பிலிப்புவை நோக்கி, தண்ணீர் இருக்கிறதே, நான் ஞானஸ்நானம் பெறலாமா என்று கேட்டான். அதற்கு பிலிப்பு, ''நீர் முழு இருதயத்தோடு விசுவாசித்தால் தடையேதுமில்லை'' என்றான். அப்பொழுது, அந்த மந்திரி கிறிஸ்துவை, தேவனுடைய குமாரனென்று அறிக்கை செய்து, தாங்கள் பயணம் செய்த இரதத்தை நிறுத்தச் சொல்லி இருவரும் தண்ணீருக்குள் இறங்கினார்கள். பின்பு பிலிப்பு, மந்திரிக்கு ஞானஸ்நானம் கொடுத்தான். இருவரும் கரையேறினார்கள்.ஏன் இருவரும் தண்ணீருக்குள்ளாகச் செல்ல வேண்டும்?

அப்பொழுதுதான், ஞானஸ்நானம் பெற்றுக்கொள்கிறேன் என்று வேண்டிக் கொண்டவனை, தண்ணீருக்குள் முழுக்க முடியும். ஞானஸ்நானத்திற்காக இருவரும் தண்ணீருக்குள் சென்றபடியால், அக்காரியம் முடிந்தவுடன் , மந்திரியும், பிலிப்பும் தண்ணீரை விட்டு கரையேறினார்கள். ஆகையால், ஞானஸ்நானம் என்பது தண்ணீரில் முழுகுதல் என்று வேதாகமம் தெளிவாகப் போதிக்கிறது.

அடுத்து, ஞானஸ்நானம் பாவமன்னிப்புக்கென்பதை சொல்லிக் கொள்ள விரும்புகிறோம். இங்கே நாம், ஞானஸ்நானம் மாத்திரம் நம்மை இரட்சிக்கிறதென்று சொல்லவில்லை. ஆனால், ஒருவன் சத்தியத்தைக் கேட்டு, தேவனிடத்தில் விசுவாசம் வைத்து, பாவத்திலிருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட்டு ஞானஸ்நானம் பெறும்பொழுது, அது நம்மை பாவத்திலிருந்து விடுவித்து, இரட்சிக்கிறது. இயேசு அப்போஸ்தலர்களுக்கு, ''நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்'' என்று கட்டளையிட்டார். அவர்கள் அப்படிச் செய்கையில், ''விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான் விசுவாசியாதவனோ ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படுவான்'' (மாற்கு 16:16) என்று போதித்தார்கள்.

பேதுருவும், மற்ற அப்போஸ்தலரும் எருசலேம் பட்டணத்தில், திரளான ஜனங்களுக்குப் போதிக்கையில், நாங்கள் என்ன செய்ய வேண்டுமென்று அவர்கள் கேட்டபொழுது, பேதுரு அவர்களை நோக்கி **''நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்''** என்றான் (அப்.2:38)ஞானஸ்நானம் ஒருவனை கிறிஸ்துவுக்குள்ளும் சபைக்குள்ளும், உட்படுத்துகிறது. இக்கருத்தை நாம் கலாத்தியர் 3:26,27 வசனங்களில் காணலாம் '' நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே. ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக்கொண்டீர்களே'' என்றார்.

இறுதியாக, ஞானஸ்நானத்தில் ஒருவன், கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதல் ஆகியவற்றை வெளிப்படுத்துகிறான். கிறிஸ்துசிலுவையில் மரித்தார். கர்த்தருக்குக் கீழ்ப்படிவதன் மூலம் ஒருவன் பாவத்தை விட்டுத் திரும்புகிறான் அல்லது பாவத்துக்கு மரிக்கிறான்.

கிறிஸ்து கல்லறையில் அடக்கம் பண்ணப்பட்டார். கர்த்தருக்குக் கீழ்ப்படிகிற ஒருவன் ஞானஸ்நானத்தின் மூலம் தண்ணீருக்குள் அடக்கம் பண்ணப்படுகிறான். கிறிஸ்து கல்லறையிலிருந்து மீண்டும் உயிர்த் தெழுந்தார். புதிதான ஜீவனுள்ளவர்களாய் வாழும்படி, தண்ணீராலான ஒருவன் கல்லறையிலிருந்து எழுகிறான். இவையனைத்தையும் ரோமர் 6-ம் அதிகாரத்தின் மூலம் தெரிந்துகொள்கிறோம். ஆகவே, ஒருவன் ஞானஸ்நானம் பெறும்பொழுது, கர்த்தருடைய மரணம், அடக்கம், உயிர்தெழுதல் ஆகியவற்றை தன்னுடைய கீழ்ப்படிதலின் மூலமாய் தெரிவிக்கிறான். இது மிக அழகான ஒரு காரியம்.

நீங்கள் இதைச் செய்திருப்பீர்களானால், நீங்கள் கிறிஸ்துவின் சபையின் அங்கத்தினராயிருக்கிறீர்கள். இந்தச் சத்தியத்தை உங்களைச் சுற்றியிருப்பவர்களுக்கும் போதிக்கத் தயாராயிருக்கிறீர்கள். இப்பொழுது, ஒருவர் ஞானஸ்நானம் பெற விரும்பினால், நீங்கள் என்ன செய்வீர்கள்? ஒருவேளை, அவருக்கு ஞானஸ்நானம் கொடுக்க உங்களைத் தவிர வேறுயாரும் இல்லையெனில், நீங்கள் தான் ஞானஸ்நானம் கொடுத்தாக வேண்டும். நீங்கள் அதை எப்படிச் செய்வீர்கள்? உண்மையில் அது ஒரு எளிதான காரியம்தான்.

முதலில், அவர் மூழ்கும் அளவுக்கு ஆழமான தண்ணீர் கண்டு பிடியுங்கள். அது ஒரு நதியாகவோ அல்லது ஓடையாகவோ அல்லது ஏரியாகவோ அல்லது தண்ணீர் நிறைந்த ஒரு இடமாகவோ இருக்கலாம். நீங்கள் ஒரு கடலருகே வாழ்பவராக இருந்தால் நீங்கள் எப்பொழுதும் அங்கேயே ஞானஸ்நானம் தரலாம். ஞானஸ்நானம் கொடுப்பதற்கு ஒரு நேரத்தைக் குறிப்பிடுங்கள். எங்கே தண்ணீர் இருக்கிறதோ, அங்கே ஞானஸ்நானம் பெறுபவரை வரவழையுங்கள். ஞானஸ்நானம் எடுக்கும் போது அணிந்து கொள்வதற்கு ஒரு உடையும், எடுத்த பின்பு மாற்றிக் கொள்ள ஒரு உடையும், துடைக்க துண்டும் எடுத்து வரச் சொல்லுங்கள்.

ஞானஸ்நானம் அளிப்பவரும், தனக்கு துண்டும், மாற்றுடையும் எடுத்து வரலாம். உங்கள் குடும்ப அங்கத்தினர்களோடும், நண்பர்களோடும், நீங்கள் ஞானஸ்நானத்திற்குக் கூடி வந்திருக்கும்போது, ஓரிரு பாடல்கள் பாடலாம். வேதாகமத்திலிருந்து ஒரு பகுதியை வாசிக்க விரும்பினால், எத்தியோப்பிய மந்திரி ஞானஸ்நானம் பெற்றுக்கொண்ட சம்பவத்தை *(அப்.8:26-29)* வாசிக்கலாம். அதில் கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசம் அறிக்கை செய்யப்பட்டுள்ளது. அந்தப் பகுதி வாசிக்கப்பட்டவுடன்,

ஞானஸ்நானம் பெறுபவரிடம் நீங்கள் இயேசுக்கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறீர்களா என்ற கேள்வியைக் கேட்கலாம். அவர்கள் விசுவாசத்தால், '' நாங்கள் இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறோம் '' என்பார்கள்.

அவர்கள் செய்த அறிக்கையின் பேரில், அந்த நபரை தண்ணீருக்குள் அடக்கம் செய்யும் அளவுக்கு எங்கே தண்ணீர் இருக்கிறதோ, அப்பகுதிக்கு அந்நபரை தண்ணீருக்குள் அழைத்துச் செல்ல வேண்டும். ஞானஸ்நானம் கொடுப்பதற்கு முன்பாக, நீங்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிய விரும்புவதினாலும், இயேசுகிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று நீங்கள் செய்த விசுவாச அறிக்கையின் பேரிலும் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து கொடுத்த அதிகாரத்தின் பேரிலும், பாவ மன்னிப்புக்கென்று, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே நான் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்கிறேன் என்று கூற வேண்டும். இவ்வசனப்பகுதியை நீங்கள் மத் 28:18-20 ல் வாசிக்கலாம்.

ஞானஸ்நானம் பெறப்போகிறவரின் இரு கைகளையும் எடுத்து, ஒன்றோடொன்று சேர்த்து, தண்ணீருக்குள் போகும்போது அவர்கள் என்ன செய்யவேண்டுமென்று அவர்களுக்கு விவரித்து, பயமேதுமில்லையென்று சொல்லவேண்டும். அதே சமயத்தில், அவர்கள் முதுகில் உங்கள் கைகளை வைத்து தண்ணீருக்குள் அவர்கள் முழுமையாக அடக்கம் செய்ய அவர்களை தண்ணீர்க்குள் மெதுவாக சாய்க்க வேண்டும். முற்றும் முழுகின பின்பு, அந்த நபரை உடனே தண்ணீரிலிருந்து வெளிக்கொண்டு வரவேண்டும். இவைகள் தான் நீங்கள் செய்யவேண்டியவை. இவை யாவும் செய்வதற்கு எளிதானவை. பயப்பட ஒன்றுமேயில்லை. ஏனென்றால், தண்ணீரின் ஆழம் மிகுந்த இடத்திற்குச் செல்வதில்லை. அதற்கான ஒட்டுமொத்த நேரமே ஒரு சில வினாடிகள் தான்.

நான் இந்த விதமாகக் கொடுக்க விரும்புவேன். அந்தநபரை தலை மாத்திரம் தெரியும்படி தண்ணீருக்குள் முழங்காலிடச் செய்து, தலையை மாத்திரம் தண்ணீருக்குள் சாய்ப்பேன். இப்படிச் செய்யும்பொழுது அந்த நபரின் எடையை நாம் முன்னும், பின்னும் தாங்கத் தேவையில்லை. முக்கியமான காரியம் அந்த மனிதனின் முழுக வேண்டுமென்பது. அதை செய்தவுடன், கர்த்தர் தனக்கு என்ன கட்டளையிட்டாரே அதைச் செய்து முடித்துவிட்டார். அதன் மூலம் அவரோ அல்லது அவளோ கர்த்தரின் ஞானஸ்நானக் கட்டளைக்குக் கீழ்ப்படிந்தாயிற்று.

பாடல் புத்தகம் அங்கே கொண்டு வரப்பட்டிருந்தால், ஞானஸ்நானம் முடிந்தவுடன் ஒன்றிரண்டு பாடல்கள் பாடலாம். ஞானஸ்நானம் பெற்றவர் ஒரு ஆணாக இருந்தால், வழக்கமாக, அந்தப் புதிய கிறிஸ்தவரை நான் ஜெபத்தில் வழிநடத்தக் கேட்பேன். கிறிஸ்தவானக மாறியவர் அவர். தேவனுடைய குடும்பத்தில் பிறந்த ஒரு குழந்தை என்ற அந்தஸ்தோடு, தேவனுக்க நன்றி சொல்லி ஜெபிக்கிற ஜெபம் கேட்பதற்கு எவ்வளவு அருமையாய் இருக்கும்.ஞானஸ்நானத்தின் மூலம் கர்த்தருக்கு கீழ்ப்படிந்தவுடன் சிலர் ஜெபித்த அருமையான சில ஜெபங்களை நான் கேட்டிருக்கிறேன்.

இப்பொழுது, அந்த நபர் ஞானஸ்நானம் பெற்றிருக்கிறபடியால், கர்த்தர் அவரை தம்முடைய சபையில் சேர்த்திருக்கிறார். உங்கள் பகுதியில் ஏற்கனவே நீங்கள் கிறிஸ்தவராக இருக்கிறபடியாலும், இப்பொழுது அவர் கிறிஸ்தவராக மாறியிருப்பதாலும், உங்கள் பகுதியில் கர்த்தருடைய சபையை ஏற்படுத்த இருவரோ அல்லது அதற்கு அதிகமானாரோ இருக்கிறீர்கள். மற்றவர்களுக்கும் சுவிசேஷம் போதிக்கப்படும்போது ஞானஸ்நானமானது பல முறை திரும்பத் திரும்ப நடக்கும்.தொடர்ந்து நடைபெறும்.

தெளித்தலும், தலையின்மேல் தண்ணீர் ஊற்றுதலும், வேறு எந்த வகையான ஞானஸ்நானமும், வேதாகமத்தின் அடிப்படையிலான ஞானஸ்நானமல்ல என்பது உங்களுக்கு இப்பொழுது புரிந்திருக்கும்.

நீங்கள் ஞானஸ்நானத்தின் மூலம் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து விட்டீர்களா? இல்லையெனில், நீங்கள் ஞானஸ்நானம் பெற நாங்கள் ஜெபிக்கிறோம். இவை சம்பந்தமாக நாங்கள் உங்களுக்கு உதவத் தயாராக இருக்கிறோம்.

# ஆராதிப்பது எப்படி?

நீங்கள் இருக்குமிடத்தில்,எப்படி ஒரு கர்த்தருடைய சபையைத் தொடங்கி, சபை சம்பந்தப்பட்ட பல காரியங்களை முறையாகச் செய்து, சபையை எப்படி மேம்படுத்துவதென்று விவாதித்துக் கொண்டுள்ளோம். நம்முடைய இந்த முயற்சியில், இப்பொழுது ''எப்படி ஆராதிப்பது'' என்று பார்க்க உள்ளோம். நாம் ஒரு புதிதான பிராந்திய சபையைத் துவங்குவதாக இருந்தால், தேவனை எப்படி ஆராதிப்பதென்பதை தெரிந்து கொள்வது அவசியம்.

ஆராதனையைப் பற்றிச் சொல்ல வேதாகமத்தில் நிறைய உண்டு. சாத்தான் தன்னை சோதித்து, அவனைப் பணிந்து கொள் என்று சொன்னபோது இயேசு இவ்விதம் பதிலளித்தார். அப்பொழுது இயேசு;அப்பாலே போ சாத்தானே, உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக என்று எழுதியிருக்கிறதே என்றார். (மத்.4:10) மீண்டும் இயேசு ''தேவன் ஆவியாயிருக்கிறார் அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும், உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும் என்றார்.'' (யோவான் 4:24)ஆகவே, தேவனை ஆராதிப்பது மட்டும் போதாது. மாறாக தேவனை உண்மையோடும், அவர் சித்தப்படியும் அவர் தமது வசனங்களில் காட்டியுள்ளபடியும், ஒருவன் ஆராதிக்க வேண்டும்.

தங்களுடைய ஆராதனை பரலோகத்தின் தேவனை நோக்கியிருக்கிறதென்பது கூடத் தெரியாமல், அநேகர் அறியாமையினால் ஆராதித்துக் கொண்டுள்ளனர். இந்த வகையான மக்களை அப்போஸ்தலன் பவுல் அத்தேனே பட்டணத்தில் சந்தித்தார். (அப்.17:23) மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் என்று எழுதியிருக்கிறதாக இயேசு சொன்னார் (மாற்.7:7) தேவன் எந்த வகையான ஆராதனையை விரும்புகிறார் என்று இந்த வசனங்கள் காட்டுகிறது.

எந்த வகையான ஆராதனையை தேவன் விரும்புகிறார்? ஒரு புதிய பிராந்திய சபையை ஆரம்பிக்கும்போது தேவன் எப்படி ஆராதிக்கப்பட வேண்டும்? தேவனை ஆராதிப்பதற்கு என்ன தேவை என்பதை தெரிந்து

கொள்ள நாம் தேவனுடைய வார்த்தைக்குச் செல்வோம். தங்கள் சிருஷ்டிகராகிய தேவனுடைய வார்த்தைகளை வாசிக்கவும். அதைப் பற்றி ஆராயவும், அவரைத் துதித்துப்பாடவும் தேவனுடைய ஜனங்கள் எந்த இடத்திலும் எப்பொழுது வேண்டுமானாலும் கூடலாம். ஆனால், அதுவே சபையாகக் கூடி வரும்போது அவருடைய ஜனங்கள் அவரை ஆராதிப்பதற்கென்று சில குறிப்பிட்ட காரியங்களை வைத்துள்ளதோடல்லாமல், ஒவ்வொரு வாரத்தின் முதல்நாள் தோறும் தான் ஆராதிக்க வேண்டுமென்றும் வசனங்களில், வெளிப்படுத்தியுள்ளார். அப் 20:7ல் ஆராதிப்பதற்கென்று சபையானது வாரத்தின் முதல்நாளில் கூடி வந்ததென்று நாம் காணலாம். மேலும் அப்போஸ்தலன் பவுல் கொரிந்தியருக்குக் கட்டளையிடும்போது ''.... உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள்தோறும் தன் தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்து வைக்கக் கடவன் என்றார்''.(I.கொரி.16:2)

பழைய பிரமாணத்தின் கீழாக, ஆராதிக்கும்நாள் ஏழாம்நாளாக அல்லது ஓய்வு நாளாக இருந்தது. இயேசுக்கிறிஸ்து வந்து சிலுவையில் மரித்ததினாலே அவர் பழைய பிரமாணத்தை நீக்கி விட்டு, புதிய மேலான பிரமாணத்தைக் கொடுத்தார். (எபி.8:13; எபி.9:15-17) அந்தப் புதிய பிரமாணத்தின் மூலம் ஆராதிப்பதற்கென்று ஒரு புதிய நாளைக் கொடுத்தார். அந்த நாள் வாரத்தின் முதல்நாள். அது கர்த்தருடைய நாள் ஆகும். நாம் அந்நாளை ஞாயிற்றுகிழமை என்று அழைக்கிறோம்.

ஆகவே, சத்தியத்தின்படியான கிறிஸ்தவர்கள் ஆராதிப்பதற்கு அந்த நாளிலே கூடி வரவேண்டும். கூடி வருபவர்கள் இரண்டு அல்லது மூன்று பேராக இருந்தால் கூட அவர்களை ஆசீர்வதிப்பேன் என்று கர்த்தர் வாக்குக்கொடுத்துள்ளார்.(மத்.18:20) வேத வசனங்களைக் கொண்டு அவர் நம்மிடம் பேசும்போது அவரை ஆராதிக்கும் ஆராதனையில் பல பங்குகள் உள்ளது என்பதை நாம் அறிந்துகொள்ளலாம். நாம் அவரைக் கிட்டிச்சேர்ந்து, அவருடைய நாமத்தை கனப்படுத்தி மகிமைப்படுத்துகிறோம்.

தேவனை அடைவதற்கான வழிகளில் ஒன்று நாம் அவருடைய வார்த்தைகளை வாசித்து அறிந்து கொள்வது. இதன் மூலம் நாம் என்ன செய்ய வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறாரோ அவைகளை நம்மிடம் பேசுகிறார். ஆகவே, நாம் வேத வாக்கியங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று கிறிஸ்து சொல்லியுள்ளார். (யோவா.5:39) அப்போஸ்தலன்

பவுலும் இப்படிச் சொல்லியுள்ளார். ''நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும், சத்திய வசனத்தை நிதானமாய்ப்பகுத்துப் போதிக் கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு'' (2.தீமோ.2:15) தம்முடைய வார்த்தைகளைக் கொண்டு நம்மோடு பேசுகிறார். ஆகையால் நாம் பயத்தோடும், தாழ்மையோடும் அவர் என்ன சொல்லுகிறார் என்று கவனித்து அவருக்குக் கீழ்ப்படிய வேண்டும். ''அல்லாமலும் நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்'' என்று யாக்கோபு கூறியுள்ளார். (யாக்.1:22) அதே யாக்கோபு 1:21ல் இந்த வசனங்கள் நம்முடைய ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளது என்று கூறியுள்ளார். தொடர்ந்து 1:25ல் ''சுயாதீனப் பிரமாணமாகிய பூரணப் பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்'' என்று நமக்கு நினைவுப் படுத்துகிறார். ஆகவே நாம் ஆராதனைக்கென்று கூடிவரும்போது தேவனுடைய வார்த்தையைப் படிப்பது அல்லது கேட்பது எவ்வளவு முக்கியமானது என்பதை நாம் அறிந்து கொள்ளலாம்.

ஆராதனையின் இன்னொரு பங்கு ஜெபம் ஆகும். தேவன் தமது வசனத்தின் மூலமாக நம்மிடத்தில் பேசவிரும்புகிறார். அதே நேரத்தில் நாம் அவரை நோக்கி ஜெபிக்க வேண்டுமென்றும் எதிர்பார்க்கிறார். நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையில் மாத்திரமல்ல, அவருடைய பிள்ளைகள் சபையாக கூடி ஜெபிக்க வேண்டுமென்றும் விரும்புகிறார். சபை ஸ்தாபிக்கப்பட்ட பின்பு அவருடைய சீஷர்கள் ''அப்போஸ்தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்'' என்று பார்க்கிறோம். (அப்.2:42) சோர்ந்து போகாமல் எப்பொழுதும் ஜெபம் பண்ணவேண்டு மென்று இயேசு சொல்லியுள்ளார். (லூக்கா 18:1) இன்னும் ''இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள்'' என்று பவுல் கூறியுள்ளார். (I.தெச.5:17) பிலிப்பியருக்கு எழுதின நிருபத்தில் ''நீங்கள் ஒன்றுக்குங் கவலைப் படாமல், எல்லாவற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத் திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்'' (பிலி.4:6) என்று சொல்லியுள்ளார்.

ஜெபத்தைப் பற்றி பேசும் அநேக வேதபகுதிகளை நாம் பார்க்கமுடியும். ஆனால், தனிப்பட்ட ஜெபமாக இருந்தாலும், சபையாகக் கூடி நாம் ஜெபித்தாலும் யோவான் அப்போஸ்தலன் சொன்னதை நாம் மனதில் நிறுத்திக்கொள்ளவேண்டும். ''நாம் எதையாகிலும் அவருடைய சித்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்தோமானால் அவரிடத்தில் நாம் கேட்டவை களைப் பெற்றுக் கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம்.'' (I.யோவா.5:14,15) இங்கே நாம் கவனிக்க வேண்டியது, நாம் அவருடைய சித்தத்தின்படி ஜெபிக்க வேண்டுமென்பது. நாம் அப்படிச்செய்தால் நம்முடைய தேவன் அதைக்கேட்டு நமக்கு பதிலளிப்பார். நமக்கு என்ன தேவையென்பது தேவனுக்கு தெரியும் என்பதை நாம் உணரவேண்டும்.

விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல,தன் மனதில் நியமித்தபடியே, உற்சாகமாய்க் கொடுக்கவேண்டும் (II.கொரி.9:7) இது மன விருப்பத்தின்படியாகச் செய்யப்படவேண்டும். அப்படி கொடுக்கப் புடுவது, கர்த்தருடைய வேலைக்காக பயன் படுத்தப்படவேண்டும்.

ஒரு சபை புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருந்தால், யார் எந்தப் பங்கைச் செய்வது என்று தீர்மானிப்பதற்காக, அதாவது, யார் வேதம் வாசிப்பது , யார் பிரசிங்கிப்பது, யார் ஜெபிப்பது, யார் பாடல் நடத்துவது, யார் கர்த்தருடைய பந்தியை ஏற்றுச் செய்வது என்று முடிவெடிப்பதற்காக ஆண் அங்கத்தினர்கள் ஆராதனை நேரத்திற்கு முன்பாகவே கூடிவரவேண்டும். அப்பொழுதுதான் ஒவ்வொன்றையும் சரியான நேரத்திற்கும், சரியான முறையிலான ஆயத்தத்தோடும் செய்யமுடியும்.

இவை ஒவ்வொன்றைப் பற்றியும் நாம் இன்னும் விளக்கமாக வரும் பாடங்களில் படிக்க உள்ளோம். சொல்லப்போகும் அனைத்தும் எளிமையானதாகவும், நேரிடையானதாகவும் இருக்கும். இதில் குழம்புவதற்கோ, குழப்புவதற்கோ ஒன்றுமேயில்லை.

# கர்த்தரின் பந்தி கொடுப்பது எப்படி?

இப்பாடத்தில், நாம் கர்த்தரின் பந்தி நடத்துவது எப்படி என்று படிக்க உள்ளோம்.

புளிப்பில்லாத அப்பப் பண்டிகை அல்லது பஸ்கா பண்டிகையின் சமயத்தில் தன்னுடைய சீஷர்களோடு இறுதியாக அவர் போஜனம் செய்தபோது, இயேசுகிறிஸ்து இப்பந்தியை ஏற்படுத்தினார். இயேசு, மோசேயின் பிரமாணத்தின் கீழாக வாழ்ந்து மரித்தார். ஆனால், அது அவருடைய மரணத்தோடு முடிவுக்கு வரவேண்டியதாயிருந்தது. தன்னுடைய மரணத்தின் மூலம் புதிய பிரமாணத்தை கொடுத்ததினாலே, பழைய பிரமாணத்தை நீக்கிப்போட்டார். ஆகையால், கிறிஸ்துவும், அவருடைய அப்போஸ்தலரும்,பஸ்காபண்டிகைக்கு கூடிவந்த சந்தர்ப் பத்தைப் பயன்படுத்தி, இயேசு, கர்த்தரின் பந்தியை ஏற்படுத்தினார். வேத வசனம் இப்படிக் கூறுகிறது. அவர்கள் போஜனம் பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப்பிட்டு சீஷர்களுக்குக் கொடுத்து; நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார்.பின்பு பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து; நீங்கள் எல்லாரும் இதிலே பானம் பண்ணுங்கள். இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காக சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது. இது முதல் இந்த திராட்சப்பழரசத்தை நவமானதாய் உங்களோடே கூட என் பிதாவின் ராஜ்யத்திலே நான் பானம் பண்ணும் நாள் வரைக்கும் இதைப் பானம் பண்ணுவதில்லையென்று உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார். (மத்.26:26-29) தன்னுடைய மரணம், அடக்கம், உயர்த்தெழுதல் வரை பங்குபெறப் போவதில்லை என்று குறிப்பிடுவதை நாம் காணலாம். அதன்பிறகு அவருடைய சீஷர்கள் அவரை நினைவு கூறும்படியாக கர்த்தருடைய பந்தியில் பங்குபெறும்போது அவர்களோடு இருப்பார். கர்த்தருடைய பந்தி ஆரம்பிக்கப்பட்டது குறித்து, மாற் 14:22,25 மற்றும் லூக்.22:14-20 ஆகிய வசனப்பகுதியில் இடம் பெற்றுள்ளது.

அப்போஸ்தலன் பவுல் கொரிந்து பட்டணத்திலிருந்த கிறிஸ்தவர் களுக்கு கர்த்தருடைய பந்தியைக் குறித்துச் சொல்லும் போது, இப்படி எழுதுகிறார். நான் உங்களுக்கு ஒப்புவித்ததைக் கர்த்தரிடத்தில் பெற்றுக்

கொண்டேன். என்னவெனில் கர்த்தராகிய இயேசு தாம் காட்டிக் கொடுக்கப்பட்ட அன்று இராத்திரியிலே அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி அதைப் பிட்டு ,நீங்கள் வாங்கிப்புசியுங்கள். இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது. என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். போஜனம் பண்ணின பின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து, இந்தப் பாத்திரம் என் இரத்தத் தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது. நீங்கள் இதைப் பானம் பண்ணும்போதெல்லாம் என்னை நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார். ஆதலால், நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தை தெரிவிக்கிறீர்கள். இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து அவருடைய பாத்திரத்தில் பானம் பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான்.எந்த மனுஷனும் தன்னைதானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணக் கடவன். (I.கொரி.11:23-29).

மேற்சொன்ன வசனங்களில், கர்த்தர் அவருடைய ஜனங்களை, இந்தப் பந்தியில் பங்குபெறச் செய்வார் என்பது வெளிப்படையாக உள்ளது என்று நான் நினைக்கிறேன். அது மாத்திரமல்ல, கிறிஸ்துவின் சரீரத்தின் நினைவாக அப்பமும், அவர் சிந்தின இரத்தத்தின் நினைவாக, திராட்சரசமும் இருக்க வேண்டுமென்பதும் தெரிகிறது. கர்த்தர், ஏன் இந்தப் பந்தியைக் கடைபிடிக்கச் செய்கிறார்? ஏனெனில், நாம் இரட்சிக்கப் படும்படியாக உயிர்நீத்த அவரையும், அவர் செய்த தியாகத்தையும் நாம் நினைவுகூரும் பொருட்டுதான். நாம் இதில் பங்கு பெறும்போது, இயேசுக்கிறிஸ்து ஒரு நாளில் மீண்டும் திரும்பி வருகிறார் என்பதை நமக்கும், கர்த்தருக்கும், உலகத்திற்கும் நாம் தெரிவிக்கிறோம்.

நாம் இந்தப் பந்தியில் பங்குபெறுவதற்குமுன், நம்மை நாமே சோதித்துப் பார்க்க வேண்டுமென்று பவுல் கூறுகிறார். அதாவது நாம் நம்முடைய இருதயத்தையும், வாழ்க்கையும், சோதித்துப்பார்க்கும் போது, மனம்திரும்பாத ஒரு பாவத்தையோ அல்லது மன்னிப்புப் பெற்றிராத ஒரு பாவத்தையோ கண்டால், நாம் நம்முடைய நிலையை கர்த்தரோடு சரியாக்கிக் கொண்டு, இந்தப் பந்தியில் பங்கு பெற வேண்டும். நாம், இதைச் செய்ய மறுப்போமானால், நம்முடைய இருதயத்தை தேவனுக்கு விரோதமாக கடினப்படுத்துகிறோமென்று பொருள். இது இறுதியில் நம்மை இழந்து போகச் செய்யும்.

அப்படியானால் யாரெல்லாம், கர்த்தரின் பந்தியில் பங்குபெறலாம்? உண்மையில், இது அவருடைய வசனங்களின்படி, அவருடைய பிள்ளைகளாக மாறியவர்களுக்காகத்தான் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் இந்தப் பந்தியை சபையில் கொடுக்கும் போது, இதிலே கலந்துகொள்வதா? வேண்டாமா? என்பது கூடிவந்திருக்கிற தனிப்பட்டவர் தீர்மானித்துக் கொள்ளவேண்டியது. உதாரணமாக, நாம் முன்பின் அறிந்திராத ஒருவர் ஆராதனைக்கு வந்திருக்கக் கூடும். அப்பொழுது, இவர்கள் மாத்திரம் சத்தியத்தின்படி கிறிஸ்தவர்களென்று நமக்குத் தெரிந்தவர்களுக்கு மாத்திரம் கொடுத்தால், அந்த ஆராதனைக்கு வந்திருக்கிற சரியான கிறிஸ்தவன் ஒருவனுக்கு கொடுக்க மறுத்தவர்களாகிவிடுவோம். கிறிஸ்தவரல்லாதவர், இதிலே பங்குபெற விரும்பமாட்டார் என்று நாம் நினைத்துக் கொண்டு இப்பந்தியைக் கொடுக்கவேண்டும்.

அடுத்து, இப்பகுதியை எப்பொழுது கடைபிடிக்க வேண்டும்? எவ்வளவு நாளைக்கொருமுறை செய்யவேண்டும்? அப்.20:7-ல் நமக்கு முன் உதாரணம் உண்டு. அங்கு கர்த்தருடைய சீஷர்கள் கிறிஸ்தவர்கள் அவரை ஆராதிக்கும்படியாக வாரத்தின் முதல் நாளிலே கூடிவந்திருக்கையில், கர்த்தரின் பந்தியில் பங்கு பெற்றார்கள் என்றுள்ளது. வசனம் இவ்வாறு கூறுகிறது, ''வாரத்தின் முதல்நாளிலே அப்பம் பிட்கும்படி சீஷர்கள் கூடி வந்திருக்கையில்,பவுல் மறுநாளிலே புறப்பட வேண்டுமென்றிருந்து, அவர்களுடனே சம்பாஷித்து நடுராத்திரி மட்டும் பிரசங்கித்தான்.'' (அப்.20:7) இன்னும் அப்.2:42ல் அவர்கள் (கிறிஸ்தவர்கள்) அப்போஸ்தலருடைய உபதேசத்தில் உறுதியாய்த் தரித்திருந்தார்கள் என்று பார்க்கிறோம். அவைகளில் ஒன்று அப்பம் பிட்குதல், ஆக, இந்த இரண்டு வசனப்பகுதிகளும், கர்த்தரின் பந்தி பற்றி குறிப்பிடுகிறது.

கிறிஸ்தவர்கள் எவ்வளவு நாளைக்கொருமுறை, பாடவும், ஜெபிக்கவும், வேதவசனங்களைப் படிக்கவும், காணிக்கை கொடுக்கவும், கூடுகின்றனர்? ஒவ்வொரு வாரத்தின் முதல் நாளிலும் அல்லது ஞாயிற்று கிழமைகளிலும் தானே. இதேபோல்தான் கர்த்தரின் பந்திக்காகவும் கூடிவருகின்றனர்.ஆகையால், நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து இந்தப் பாத்திரத்தில் பானம் பண்ணும் போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள் என்று பவுல் சொல்வதைக் கவனியுங்கள். (I.கொரி.11:26) அது எவ்வளவு நாளைக்கொருமுறை? ஒவ்வொரு வாரத்தின் முதல்நாள்தோறுமே.

இப்பொழுது, நீங்கள் இருக்குமிடத்திலோ அல்லது வேறு எங்கேயாகிலுமோ, ஒரு பிராந்திய சபையை தொடங்குவதாக இருந்தால், வாரத்தின் முதல்நாளிலான ஆராதனையின் ஒரு பங்காக, கர்த்தரின் பந்தி அவசியம் இருக்கவேண்டுமென்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். அங்கே இரண்டுபேர் இருந்தாலும்சரி. இருபதுபேர் இருந்தாலும் சரி. ஆராதனைக்கு முன்பாக ஆண் அங்கத்தினர்கள் கூடி யார் யார் என்னென்ன பங்கைச் செய்வது என்று ஆலோசிக்க வேண்டும். அப்பொழுது, கர்த்தரின் பந்திக்காக, ஒருவர் நியமிக்கப்படவேண்டும்.அவர் கர்த்தரின் பந்தியை சபையாருக்குக் கொடுக்கு முன்பாக, வேதாகமத்திலிருந்து I.கொரி.11:23-29 அல்லது மத்.26:26-29 போன்ற பகுதிகளிலிருந்து ஒன்றை வாசித்து, அது பற்றி சில வார்த்தைகள் சொல்லலாம். கிறிஸ்துவின் மரணத்தைக் குறித்தும் வேறுசில வசனங்களையும் இச்சந்தர்ப்பத்தில் உபயோகிக்கலாம். அதன்பிறகு, பந்தியை நடத்துபவர், கலந்துகொள்ளும் எல்லோரும் கிறிஸ்துவின் பாடு, மரணம் ஆகியவைகளை நினைவு கூறும்படியாக கலந்துகொள்ளவேண்டுமென்று சொல்லி, அப்பத்திற்காக ஜெபிக்க வேண்டும். அதன்பிறகு, பந்தியில் கலந்துகொள்ள விரும்பும் யாவரும் பங்குபெறும்படியாய் கொண்டு செல்லவேண்டும். வேறு யாராவது ஒருவரும் இவருக்கு உதவலாம்.அப்பத்தில் பங்குபெற்ற பிறகு,இயேசுக் கிறிஸ்துவால் சிந்தப்பட்ட இரத்தத்திற்கு அடையாளமாக உள்ள திராட்சை ரசம் வைக்கப்பட்டுள்ள பாத்திரத்திற்காக ஜெபிக்கவேண்டும்.அதன் பிற்பாடு, சிறு,சிறு கோப்பைகளில் திராட்சரசம் கொடுக்கலாம்.

கர்த்தருடைய பந்திக்கு தேவையானவைகளை ஆயத்தமாக்குவதைப் பொறுத்தளவில், பெண்கள் பெரும்பாலும் இதைச் செய்கின்றனர். இது தன்னார்வத்தில் செய்யப்படுகிறது. புளிப்பில்லா அப்பம் செய்து, திராட்ச ரசம் வாங்கவேண்டும். ரசம் கிடைக்காத பட்சத்தில் திராட்ச பழம் அல்லது திராட்சை வத்தல் வாங்கி அதிலிருந்து பிழிந்தோ அல்லது கொதிக்க வைத்தோ ரசம் உண்டாக்கலாம். இவைகளை சனி இரவோ அல்லது ஞாயிறு காலையோ செய்யவேண்டும்.அப்பத்தை ஒரு தட்டில் வைக்கவேண்டும். திராட்சரசத்தை ஒருபாத்திரத்திலோ அல்லது ஒரு கண்ணாடி குவளையிலோ அல்லது சிறுசிறு கோப்பைகளிலோ ஊற்றி வைக்கவேண்டும். பிறகு, இப்பாத்திரங்களை, வெள்ளைத்துணியால் மூடி, சிறு மேஜையின் மீது வைக்கவேண்டும். இதில் பங்குபெறுகிற யாவரும் இப்பந்தியில் பங்குபெற முடிந்ததை ஒரு கனமான காரியமாகக் கருத வேண்டும்.

# ஜெபம் பண்ணுவது எப்படி?

நீங்கள் ஒரு பிராந்திய சபை தொடங்கி, அங்கு ஆராதனை, வேதபாட வகுப்பு போன்றவற்றைச் செய்ய வேண்டுமெனில், ஜெபம் பற்றியும், அதன் முக்கியத்துவம் பற்றியும், அதை எப்படிச் செய்ய வேண்டுமென்பது பற்றியும் உங்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

முதலாவது, ஜெபம் என்றால் என்ன என்று விளக்குகிறோம். பரலோகத்திலிருக்கிற தகப்பனோடு நாம் பேசுவதற்கு நமக்குக் கிடைத்திருக்கும் ஒரு வழிமுறை தான் ஜெபமாகும். வேறு வகையாகச் சொன்னால், ஜெபம் என்பது, தேவனுடைய பிள்ளைகளுக்குக் கூட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிற ஆசீர்வாதம் அல்லது சிலாக்கியமாகும். ஆனால், தேவனுடைய பிள்ளைகள் என்பவர்கள் யார்? தேவனுக்குக் கீழ்ப்படிந்து. இரட்சிப்படைந்து, கிறிஸ்தவர்களாக மாறினவர்கள். இன்னும், தேவனுடைய ஆவிக்குரிய குடும்பமாகிய கிறிஸ்துவின் சபையில் அங்கமாக இருப்பவர்கள்.

நீங்கள் வேதாகமத்தைப் படித்துப் பார்த்தால், ஜெபமானது, தேவனுடைய மகன் அல்லது மகள் என்ற உறவில் சம்பந்தப்பட்டிருப்பவர்களுக்குத் தான் உரிமையாக்கப்பட்டிருக்கிறதென்று தெரிந்து கொள்ளமுடியும். இரட்சிப்பைப் பெறாத ஒரு பாவி அதாவது தேவனுடைய பிள்ளை என்ற அந்தஸ்தைப் பெறாத ஒருவன் தன்னுடைய ஜெபம் கேட்கப்படும் என்ற எதிர்பார்ப்போடு தேவனை நோக்கி ஜெபிக்கும் தகுதியைப்பெற அவனால் முடியாது. இயேசுவால் சுகமாக்கப்பட்ட குருடன் இவ்விதம் சொல்லுகிறான் . ''பாவிகளுக்குத் தேவன் செவிக்கொடுக்கிறதில்லையென்று அறிந்திருக்கிறோம். ஒருவன் தேவ பக்தியுள்ளவனாயிருந்து, அவருக்குச் சித்தமானதைச் செய்தால் அவனுக்குச் செவிகொடுப்பார்'' (யோவா.9:31)

இந்த மனிதன் ஒரு உண்மையை இங்கு வெளிப்படுத்துகிறான். இவன்,பாவிகளுக்கு தேவன் செவிகொடுக்கிறதில்லையென்று சொல்லும் போது, அதாவது அவர்களின் ஜெபத்தைக் கேட்பதில்லையென்று சொல்லும்போது, இதன் பொருள் தேவனுடைய உபதேசங்களுக்குக்

கீழ்ப்படிந்து சத்தியத்தின்படி அவருடைய பிள்ளையாக மாறி, அவரை உண்மையாக ஆராதிக்கும்பொழுது, ஜெபத்தைக் கேட்கிறார் என்பதே. பேதுரு ''கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள் மேல் நோக்கமாயிருக்கிறது.அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது.தீமை செய்கிறவர்களுக்கோ கர்த்தருடைய முகம் விரோதமாயிருக்கிறது'' என்று கூறியுள்ளார் (I. பேதுரு 3:12) வெகு காலத்துக்கு முன்பு, ஏசாயா தீர்க்கனும் இவ்வாறே கூறியுள்ளார். ''இதோ இரட்சிக்கக் கூடாதபடிக்கு, அவருடைய கை குறுகிப்போகவும் இல்லை கேட்கக் கூடாதபடிக்கு அவருடைய செவி மந்தமாகவுமில்லை. உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது.'' (ஏசா.59:1,2)

நம்முடைய ஜெபம் தேவனால் கேட்கப்படுவதற்கு, நாம் தேவனுடைய பிள்ளைகளாக இருப்பது அவசியம் என்ற இவ்வுண்மையைப் புரிந்து கொள்ள ஒரு உதாரணம் தருகிறேன்.ஓர் அரசாங்கத்தால் தன்னுடைய குடிமகனுக்கு மாத்திரம் கொடுக்கப் பட்டிருக்கும் உரிமையை, சிலாக்கியத்தை அந்நாட்டைச் சேராத ஒருவன் பெற்றுக்கொள்ளும்படி வேண்டினால், எப்படியிருக்குமோ அது போல்தான் இதுவும். அவனுக்கு கிடைக்காது என்பது நமக்கு நன்றாகவே தெரியும். அதைப்போலவே தன்னுடைய பிள்ளைகளுக்குச் செவி கொடுப்பது போலவே மனந்திரும்பாத ஒரு பாவியின் ஜெபத்தையும் கேட்டு, அதற்கு தேவன் செவிகொடுப்பாரானால், அவருடைய பிள்ளைகளாக இராதவர்களைக் காட்டிலும், அவருடைய பிள்ளைகள் எந்த வகையில் சிறந்தவர்களாயிருக்க முடியும்? இரண்டு பேருக்கும் கண்டிப்பாக வித்தியாசம் உண்டு. இங்கே தெரிந்து கொள்ள வேண்டியது யாதெனில், ஜெபம் என்னும் சிலாக்கியம் ஒருவனுக்குத் தேவையெனில் அவன் தேவனுடைய பிள்ளையாக மாற வேண்டும்.

வேதவசனங்களில் ஜெபம் பற்றி அதிகமாகச் சொல்லப்பட்டுள்ளது.ஆதிகிறிஸ்தவர்கள்,'' அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அந்நியோந்நியத்திலும் அப்பம் பிட்குதலிலும் ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்'' (அப்.2:41) மேலும் பவுல் ''நீங்கள் ஒன்றுக்குங்கவலைப்படாமல் எல்லா வற்றையும் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும், வேண்டு

தலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள்'' என்று கூறியுள்ளார் (பிலி.4:6) இன்னும் யோவான் அப்போஸ்தலன் நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிக்கொடுக்கிறா ரென்பதே அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்.நாம் எதைக்கேட்டாலும், அவர் நமக்குச் செவிக்கொடுக் கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால் அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக்கிறோம். (I.யோவான் 5:14,15.)

தனிப்பட்ட முறையிலும், சபையாகவும் சேர்ந்து ஜெபிக்க வேண்டுமென்பதை ஊக்கப்படுத்தும் அநேக வேத பகுதிகளை நாம் மேற்கோள் காட்டமுடியும். இருப்பினும் நாம் மனதிலே வைத்துக் கொள்வதற்கு சில குறிப்பான வழிகாட்டல்கள் கொடுக்கப் பட்டுள்ளது. கிறிஸ்து சீடர்களைப் பார்த்து ''நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக அதைச் செய்வேன்.என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன் (யோவா.14:13,14)என்றார். யோவான் 15:16-ல் நீங்கள் என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ அதை அவர் உங்களுக்குக் கொடுப்பார் என வாக்குக் கொடுப்பார்'' என வாக்குக் கொடுத்துள்ளார். மேலும் கிறிஸ்து நீங்கள் என்னிலும் என் வார்த்தைகள் உங்களிலும்நிலைத்திருந்தால், நீங்கள் கேட்டுக் கொள்வதெதுவோ அது உங்களுக்குச் செய்யப்படும் (15:7) மேற்சொன்ன வசனங்களிலிருந்து ஒருவன் ஜெபிக்க முடியுமென்றும் அப்படி செய்யப்படும் ஜெபங்கள் கேட்கப்படுவதற்கு, சில நிபந்தனைகள் கொடுக்கப்பட்டிருப்பதையும் நாம் காண முடியும் இதை கர்த்தர் நமது சீடர்களுக்குச் சொல்லுகிறார் அல்லது அவருக்குக் கீழ்ப்படிகிறவர்களுக்குச் சொல்லுகிறார். அவரில் நிலைத்திருப்பவர்களுடனும், கிறிஸ்துவுக்குள்ளாகவோ அல்லது அவருடைய சபைக்குள்ளாகவோ இருப்பவர்களுடன் அவர் பேசுகிறார். இயேசு கிறிஸ்து நமக்காகப்பரிந்து பேசுகிறவராயிருக்கபடியால், நம்முடைய விண்ணப்பங்கள் அவருடைய நாமத்தினாலே இருக்க வேண்டும். (I.யோவான் 2:1) அத்துடன் I யோவான் 5:14,15 ல் நாம் பார்த்த ஜெபிங்கள். அவருடைய சித்தத்தின்படியாக இருக்க வேண்டுவது அவசியம்.

ஜெபம் பற்றி இன்னும் சில காரியங்களை கர்த்தர் சொல்ல வேண்டியதாயிருந்தது. உதாரணமாக, அவர் சீடர்களைப் பார்த்து,'' அன்றியும்

நீ ஜெபம் பண்ணும்போது, மாயக்காரரைப் போலிருக்க வேண்டாம்; மனுஷர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலேயும் வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம் பண்ண விரும்புகிறார்கள். அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்த்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ ஜெபம் பண்ணும்போது, உன் அறை வீட்டுக்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம் செய் அப்பொழுது வெளியரங்கமாய் உனக்கு பலனிளிப்பார்.அன்றியும் நீங்கள் ஜெபம் பண்ணும்போது, அஞ்ஞானிகளைப்போல் வீண் வார்த்தைகளை அலப்பாதேயுங்கள், அவர்கள், அதிக வசனத்தினால் தங்கள் ஜெபம் கேட்கப்படும்மென்று நினைக்கிறார்கள். அவர்களைப்போல நீங்களும் செய்யாதிருங்கள்; உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் செய்யவேண்டிக்கொள்கிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவையென்று அவர் அறிந்திருக்கிறார். (மத்.6:5-8) மனுஷர் காணும்படியாகவும், பார்வைக்காகவும் ஜெபிக்கக்கூடாதென்று சொன்ன கர்த்தர், எப்படி ஜெபிக்க வேண்டுமென்றும் மாதிரியைக் காண்பித்தார். கிறிஸ்து, அப்படி மாதிரியாக சொல்லிக்கொடுத்ததை, அநேக பிரிவினைச் சபைகளால், கர்த்தருடைய ஜெபம் என்று வர்ணிக்கப்பட்டு, தாங்கள் கூடுகையில் திரும்பத் திரும்ப சொல்லப்படுகிறது. இது கர்த்தருடைய ஜெபம் அல்ல. ஆகவே, இதை தனியாகவோ சபையாகவோ சொல்லக்கூடாது.

அப்படி திரும்பத் திரும்ப சொல்லப்படுமானால் அதுமனுஷர் காணவேண்டுமென்றும், மனுஷரால் கேட்கப்படவேண்டுமென்றும், செய்யப்படுகிற வீண் வார்த்தைகளோடு கூடிய ஜெபமாகிவிடும். கிறிஸ்துவானவர், எப்படி ஜெபிக்க வேண்டுமென்பதற்கு ஆதாரமாக இந்த ஜெபத்தை சொல்லிக்கொடுத்தார். அவ்வளவு தான். அந்த ஜெபத்தில் திரும்பத் திரும்ப சொல்வதற்கு விசேஷம் ஒன்றுமில்லை.இப்பொழுது, ஒரு சபையாகக் கூடிவரும்போது, கண்டிப்பாக அங்கு ஜெபம் இருக்கவேண்டும்.கூடி வருகிறவர்கள் தனியாகவும் ஜெபிக்கலாம், யாராவது ஒருவர் ஜெபத்தில் நடத்த, கூட்டாகவும் ஜெபிக்கலாம். கூடிவருகையில் சகலமும் கிரமமாயும், நல்லொழுக்கமாயும் செய்யப்படவேண் டுமாகையில், ஆண் அங்கத்தினர்கள் அதற்கு முன்னமே அந்தக் கூடுகையில் எத்தனை ஜெபம் இருக்க வேண்டுமென்றும், யார் யார் அதைச் செய்ய வேண்டுமென்றும் தீர்மானிக்கவேண்டும் அல்லது ஒரு பிராந்திய சபையில்

ஒருவருக்கொருவர் அனுசரித்துப் போகும் நிலை இருக்குமானால், அந்த குறிப்பிட்ட கூடுகைக்கு பொறுப்பேற்றிருப் பவரோ, அல்லது தலைமையேற்றிருப்பவரோ, கூடிவந்திருக்கிற ஆண் அங்கத்தினர்களில் ஒருவரை, ஜெபம் செய்யும்படி கேட்டுக்கொள்ளலாம். ஒரு கூடுகையில் அல்லது ஆராதனை யில் எத்தனை ஜெபங்கள் வேண்டுமானாலும் இருக்கலாம்.

ஜெபத்தில் நடத்துபவர், முதலாவது கர்த்தர் கொடுத்த ஆசீர்வாதங்களுக்காக நன்றி சொல்ல வேண்டும். சபையார்களுடைய வாழ்க்கையில் தேவனுடைய உதவியும், வழி நடத்துதலும் கிடைக்கும்படியாக ஜெபிக்கலாம். வியாதியஸ்தர்களுக்காகவும், விசேஷ தேவையாளருக்காகவும் ஜெபிக்கலாம். பாவ மன்னிப்புக்காவும் ஜெபிக்க வேண்டும். ஜெபிக்கப்படுகின்ற எல்லா ஜெபங்களும் பரலோகத்தில் இருக்கிற பிதாவை நோக்கியிருக்க வேண்டும். அது மாத்திரமல்ல, இயேசுவின் நாமத்தில் இருக்க வேண்டும். அதாவது, தேவனை நோக்கி ஆரம்பித்து, இயேசுவின் நாமத்தில் முடிக்கப்படவேண்டும்.ஜெபிப்பவர் தெளிவாகவும், கூடிவந்திருக்கிற யாவரும் கேட்கிறவகையில் சத்தமாகவும் ஜெபிக்க வேண்டும்.அப்பொழுதுதான் கேட்பவர்கள் அதை தங்களுடைய ஜெபமாகக் கருதி ''ஆமென்'' என்று சொல்ல முடியும்.

கூடிவந்திருக்கும் அங்கத்தினர்கள் உட்கார்ந்து கொண்டோ, நின்று கொண்டோ, முழங்காலிட்டோ அல்லது தங்களுக்கு சௌகரியமான , நிலையிலோ ஜெபிக்கலாம். ஆனால், எந்த நிலையாக இருந்தாலும் அது தேவனிடத்தில் உங்களது தாழ்மையையும், பயபக்தியையும் காட்டக் கூடியதாக இருக்கவேண்டும். இதை மறந்துவிடாதீர்கள். வேதாகமம் இது பற்றி தெளிவாகக் கூறுகிறது.

கர்த்தருடைய பந்தியின் போதும், பொருளாதார ரீதியாக கர்த்தர் கொடுத்த ஆசீர்வாதங்களுக்காக காணிக்கைக்கு முன்பாகவும் ஜெபிக்கவேண்டும். காணிக்கை கொடுக்கப்பட்டதற்குப் பின்பும் காணிக்கைக்காக ஜெபிக்கலாம்.

சபையாகக் கூடி வந்திருக்கும்போது, பெண்கள் ஜெபத்தில் வழிநடத்த அனுமதிக்கப்படவில்லை. இது குறித்து விபரமாக பின்னால் வரும் பாடத்தில் படிக்கலாம்.

# பாடுவது எப்படி?

இப்பாடத்தில் "எப்படிப் பாடுவது" என்று பார்ப்போம். நாம் ஆராதனை பற்றியும்,ஆராதனையில் இருக்க வேண்டிய வித்தியாசமான பங்குகள் பற்றியும் படித்து வருகிறோம். அதுமாத்திரமல்ல, அவைகளின் முக்கியத்துவம் பற்றியும், ஒவ்வொரு பங்கையும் எப்படிச்செய்வது என்பது பற்றியும் விவாதித்து வருகிறோம்.

நாம் கிறிஸ்தவர்களாயிருந்து தேவனை ஆராதிக்கும்போது நாம் பாடவேண்டுமென்று வேதாகமம் திட்டமாகப் போதிக்கிறது. நாம் தேவனைத் துதித்துப்பாட வேண்டுமென்று நினைக்கும்போது இது சம்பந்தமாக நிறைய வேத வசனங்களை நாம் குறிப்பிட முடியும்.எபேசு பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு பவுல் *''சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும், ஒருவருக்கொருவர் புத்தி சொல்லிக்கொண்டு உங்கள் இருதயத்தில் கர்த்தரைப் பாடிக் கீர்த்தனம் பண்ணி''* (எபே.5:19) என்று கூறுகிறார். அவரே, கொலோசே பட்டணத்தாருக்கு, *''கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும், ஞானப்பாட்டுகளினாலும்,ஒருவருக்கொருவர் போதித்துப்புத்தி சொல்லிக் கொண்டு, உங்கள் இருதயத்தில் கர்த்தரை பக்தியுடன்பாடி ''* என்கிறார்(3:16) இந்த இரண்டு வசனங்களில் பவுல் சங்கீதங்களினாலும், ஞானப்பாட்டுகளினாலும் பாடுங்கள் என்றும், இருதயத்தில் கர்த்தரைப்பாடிக் கீர்த்தனம் பண்ணுங்கள் என்றும் கூறுவதை நீங்கள் கவனியுங்கள்.இது கர்த்தர் அவருடைய பிள்ளைகள் வாய் வழியாகப் பாடவேண்டுமென்று விரும்பியதையே குறிப்பிடுகிறது. இதையே வேறுவிதமாகச் சொன்னால், பாடும்போது இசைக்கருவிகள் இருந்திருக்கக்கூடாது என்று தெரிகிறது. பெரும்பாலான மார்க்க பிரிவினைச் சபைகள் இன்றைக்கு தங்கள் ஆராதனைகளில் இசைக்கருவிகளை பயன்படுத்துவதால் நம்முடைய காலத்துக்கு இது விநோதமாகத் தெரியலாம். ஆனால், வேதாகமம், ஆராதனையில் இசைக்கருவிகள் உபயோகிப்பதை நியாயப்படுத்தவோ அல்லது ஊக்கப்படுத்தவோ இல்லை.

முதலாவது உலகில், இரண்டு வகையான இசை இருப்பதை நீங்கள் பார்க்கலாம் ஒன்று மற்றதைக் காட்டிலும் பழமையானது. குரல், இசை . ஒருவனது குரல் நாளங்களைக் கொண்டு, இந்த இசை உண்டாக்கப் பட்டிருக்கிறது. மனிதனுடைய சப்தங்களின் கலவையால் உண்டாக்கப் படும் இசை தான் உலகிலேயே அழகான இசை என்று சொல்லப் பட்டிருக்கிறது.இன்னொரு இசை மனிதனால் உண்டாக்கப் பட்டுள்ளது . அது கருவிகளின் மூலம் வரும் இசை. ட்ரம்களை அடிப்பதன் மூலம், வயலின் போன்ற கருவிகளை மேலும் கீழும் இழுப்பதன் மூலம் மனிதனால் உண்டாக்கப்படுபவை. இவைபோக, பியானோ, ஆர்கன் என்று பல வகையான இசைக் கருவிகளும் உண்டு. ஆனால், அவை யாவும் உயிரற்றவை. அவைகளுக்கு இருதயம் இல்லை. ஆனால், யாரோ ஒருவர் எடுத்து கையாளுவதின் மூலம் அவைகள் சப்தங்களை உண்டாக்குகின்றன. இப்பொழுது இவ்விரண்டில் கர்த்தர் எதைக் கேட்கிறார். இருதயத்தில் பக்தியுடன் பாடிக் கீர்த்தனம் பண்ணவேண்டுமென்று பவுல் சொல்லியுள்ளதை ஏற்கனவே பார்த்தோம். எபிரேய ஆசிரியர் ''ஆகையால், அவருடைய நாமத்தைக் துதிக்கும் உதடுகளின் கனியாகிய ஸ்தோத்திர பலியை அவர் மூலமாய் எப்போதும் தேவனுக்குச் செலுத்தக்கடவோம்'' என்று கூறுகிறார். (13:15) தேவ ஆவியைக் கொண்டு எழுதின எபிரேய ஆசிரியர் உதடுகளின் கனியைக் கொண்டு கர்த்தரைத் துதிக்க வேண்டுமென்று கூறுகிறார். அதன் பொருள், நாம் கர்த்தரைத் துதித்துப் பாடும்போது குரல் நாளங்களைக் கொண்டு பாடவேண்டுமென்பது. இதை நாம் இப்படிக் கூற முடியும்.கர்த்தர், அவரால் உருவாக்கப்பட்டவர்கள் தான் அவரைத் துதிக்க வேண்டுமென்று கூறுகிறார். மனிதனால் உண்டாக்கப் பட்ட வைகளைக் கொண்டல்ல. தன்னைத் துதிக்க உயிருள்ளவை வேண்டுமென்று தான் கர்த்தர் கேட்கிறார். செத்துப் போய் உயிரற்றிருப்பவைகளைக் கொண்டல்ல.

ஆனால், சிலர் இரண்டுக்கும் ஒரு வித்தியாசமுமில்லையென்று சொல்வர். கவனிக்க வேண்டியது யாதெனில், ஆராதனைக்கு என்ன தேவையென்பது கர்த்தருக்குத் தெரியும். ஆகவே நாம் அவருடைய விருப்பத்திற்கு இணங்க வேண்டும். இது நம்மை பிரியப்படுத்துகிற காரியமோ அல்லது மனிதனைப் பிரியப்படுத்துகிற காரியமோ அல்ல . மாறாக,இது கர்த்தர் பிரியப்பட வேண்டிய ஒன்று. நான் ஆவியோடும் பாடுவேன், கருத்தோடும் பாடுவேன் என்று பவுல் கூறியுள்ளார் (I.கொரி.14:15)

உலக சரித்திரத்தின்படி, முதலாம் நூற்றாண்டு சபையில் தேவனை ஆராதிக்கும்போது, குரல் இசை மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளது.ஆனால் சில நூற்றாண்டுகள் கழித்து மதத்தலைவர்கள் ஆராதனையில் கருவி இசையைப் புகுத்தியிருக்கிறார்கள். அக்காலகட்டத்தில் அது பெரும்பாலனவர்களால் அங்கீகரிக் கப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.ஆனால் நாம் கர்த்தரை ஆராதிப்பதாக இருந்தால் ஆவியோடும், உண்மை யோடும் ஆராதியுங்கள் என்று அவர் குறிப்பிட்டுள்ளபடி ஏன் ஆராதிக்கக் கூடாது? (யோ.4:24)

ஆராதனையில் ஏன் கருவி இசையை உபயோகிக்க வேண்டுமென்று நிறைய விளக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. அவைகள், தர்க்க ரீதியாகவும் பொது அறிவின் படியாகவும் உள்ளதே தவிர, எதுவுமே தேவனுடைய வார்த்தையின் அடிப்படையில் இல்லை.

கிறிஸ்தவம், தனித்துவம் உள்ள ஒரு மார்க்கம். அத்தோடு அது பாடும் மார்க்கம். பாடல் கர்த்தரைத் துதிக்கும்படியாக மாத்திரமல்ல, கூடி வருகிறவர்களுக்கு இதைக் கொண்டு போதித்து புத்தி சொல்ல முடியும். இன்னும், ஒரு ஆராதனையின் உச்ச நிலைக்கு இது கொண்டு செல்லும்.

ஆகையால், கர்த்தரை ஆராதிக்கும்படியாக கிறிஸ்தவர்கள் வாரத்தின் முதல் நாளில் கூடி வரும்போது தேவனைத் துதிப்பதற்கு ஆராதனையில் உள்ள பங்குகளில் பாடுதலும் ஒன்றாக இருக்க வேண்டும்.ஓரிடத்தில் கிறிஸ்தவர்கள் கொஞ்சமாக இருந்தாலோ அல்லது அதிகமாக இருந்தாலோ, பொதுவாக ஒருவரோ அல்லது மேற்பட்டவரோ பாடலை வழிநடத்த முடியும். ஆகையால், ஓரிடத்தில் கிறிஸ்துவின் சபையைத் தொடங்கும் முயற்சியில் நீங்கள் இருந்தால் அங்குள்ள ஆண் அங்கத்தினர்கள் தங்களுள் ஒருவரை தெரிந்து கொண்டால், வசனங்களினடிப்படையில் ஆவிக்குரிய பாடல்களில் அவர் வழி நடத்த முடியும்.

பாடுவதற்காக பாடல்களைத் தெரிந்தெடுக்கும் போது எல்லோருக்கும் தெரிந்த பாடலாக இருக்கும்படி பார்த்துக் கொள்ளவேண்டும். ஆனால், கண்டிப்பாக அவை வசனங்களினடிப்படையில் இருக்க வேண்டும்.அதாவது அந்தப் பாடல்களில் உள்ள செய்தி வேத வசனங்களின் உபதேசத்துக்கு ஒத்து வரவேண்டும். நீங்கள் தவறானதைப் பாடி, தவறானதைப் போதிக்க முடியும். ஒருவன் பாடும்போது,அந்தப் பாடலின் செய்தியை தியானிக்க வேண்டும். தன்னைச் சுற்றிலுமிருப்பவர்களுக்கும், தனக்கும் போதிக்கும்படியாக அந்தப் பாடலைப் பாடவேண்டும்.

மொத்தம் எத்தனை பாடல் இருக்கலாம் என்பதற்கு குறிப்பிட்ட அளவு எதுவும் இல்லை. அது பாடலை நடத்துபவரையும், இருக்கின்ற நேரத்தையும் பொறுத்தது. பொதுவாக, பாடலை நடத்துபவர் சபையாருக்கு முன்பாக நிற்க வேண்டும். மேற்கத்திய நாடுகளில் பொதுவாக ராகங்களுக்கான குறிப்புகளடங்கிய பாடல் புத்தகங்களை கிறிஸ்தவர்கள் உபயோகிக்கிறார்கள். அந்த ராகக் குறிப்புகளை ஒருவன் அறிந்திருந்தால் முறையாகவும் சரியாகவும் அவனால் அந்தப்பாடலைப் பாட முடியும். சில நேரங்களில் பாடலை வழி நடத்த கை அசைவுகளை உபயோகப் படுத்தலாம். பாடலை நடத்துபவர் தான் ஏற்கனவே கற்றுக்கொண்ட ராகத்தின் படியாக நடத்தலாம்.

ஒட்டுமொத்த சபையும் பாடல்களில் பங்கு பெறவேண்டும். எல்லோரும் சேர்ந்து பாடும்போது ஒரு வேளை அது உலகத்திலேயேசிறந்த பாடலாக இல்லாமல் இருக்கலாம். ஆனால், அது இருதயத்திலிருந்து பாடப்படுமானால் அது கண்டிப்பாக கர்த்தருக்குப் பிரியமானதாக இருக்கும். நாம் பாடலைப் பாட விரும்பினாலும் அதன் மூலம் நாம் உற்சாகமடைந்தாலும் நாம் நம்மை குஷிப்படுத்துவதற்கு பாடலைப் பாடுவதில்லை. தனியாகப் பாடுவதற்கோ, குழுவாக பாடுவதற்கோ நாம் சபையாகக் கூடிவருவதில்லை, மாறாக நாம் ஒட்டுமொத்த சபையாகச் சேர்ந்து சபையின் ஆராதனையில் பாடவேண்டும்.

சில சமயங்களில் நமது பாடல்கள் இருக்க வேண்டிய அளவுக்கு இல்லையென்றால், நாம் பாடல் பயிற்சிக்காக கூடி வரவேண்டி யிருக்கலாம். நாம் சில பாடல்களை புதிதாக கற்றுக்கொள்ள வேண்டி யிருக்கலாம்.அது திரும்பத் திரும்பப் பாடுவதன் மூலம் தான் முடியும். யார் நன்றாக பாடுகிறார்கள் என்பதற்காக நாம் முயற்சிப்பதில்லை. ஆனால் இது கர்த்தருக்காக செய்யப்படும் காரியமாக உள்ளபடியால் நாம் செய்வது சிறப்பாக இருக்கவேண்டுமென்பதற்கு இப்படிச் செய்கிறோம். கர்த்தருக்காகச் செய்யப்படுவது ஏனோ தானோ என்று இருக்கக் கூடாதுஎன்பது தான் இதன் நோக்கம். வேத வசனங்களின் படி சபையாகப் பாடுவதில் பெண்கள் பங்கு பெறலாம். ஆனால், அவர்கள் வெளிப் படையாகப் பாடலை நடத்துவதற்கு வேதத்தில் கட்டளையோ, முன்னு தாரணமோ இல்லை. சபையில் பெண்களின் பங்கு என்ன என்பதை பிறகு பார்ப்போம்.

நமது இளம் சகோதரர்களை பாடல்களை நடத்தும்படி நாம் ஊக்கப்ப டுத்துவது அவசியம். அப்படிச் செய்ய அவர்களுக்கு சந்தர்ப்பம் கொடுப் பதின் மூலமோ அல்லது மூத்த ஒரு சகோதரருடன் சேர்ந்து சிறப்புப் பயிற்சி பெறுவதின் மூலமோ இதைச் செய்ய முடியும்.

# கொடுப்பது எப்படி?

தேவனுக்குக் காணிக்கை கொடுத்தல் பற்றிய அநேக போதனைகளும், முன்னுதாரணங்களும் வேதாகமத்தில் நிறைந்து கிடக்கிறது என்பது நமக்குத் தெரியும். உலகத்தின் பாவங்களுக்காக,சிலுவையில் சாகும்படியாக தேவன் தம்முடைய குமாரனையே கொடுத்தார் (யோவா.3:16) மனிதன் இரட்சிக்கப்படும்படியாய் கிறிஸ்து தம் ஜீவனைக் கொடுத்தார் (I.யோவா.4:4) கொடுத்தலில் இதைவிடச் சிறந்த முன்மாதிரி எதுவாக இருக்க முடியும்? அந்தக் கர்த்தருக்கு நாம் என்னத்தைக் கொடுக்கிறோம்? நாம் எவ்வளவு கொடுக்க முடியும்?

ஒரு சமயம், வாலிபன் ஒருவன்,உலக ஆஸ்திக்கு அளவில்லாத முக்கியத்துவம் கொடுப்பதை இயேசு அறிய நேர்ந்த பொழுது, நீ இரட்சிக்கப்பட வேண்டுமானால், போய் உன்னிடத்திலுள்ளதை விற்று தரித்திரருக்குக் கொடுக்க வேண்டும் என்று சொன்னார் (மத்.20:21) அப்போஸ்தலரில், லூக்கா ஆசிரியர் சொல்லும்போது, ''வாங்குகிறதைப் பார்க்கிலும் கொடுக்கிறதே பாக்கியம்'' என்று இயேசு சொன்னதை நினைத்துக்கொள்ளுங்கள் என்கிறார்.(அப்.20:35)

பவுலின் இந்த வார்த்தைகளில் பல உண்மைகள் அடங்கியுள்ளது. முதலாவது எந்த நாளில் ஒருவன் கர்த்தருக்குக் காணிக்கை கொடுக்க வேண்டுமென்று ஒருநாளை அடையாளப் படுத்துகிறார். அந்த நாள் வாரத்தின் முதல்நாள். வாரத்தின் முதல் நாளிலே ஆராதனைக்காக சீஷர்கள் கூடிவந்த போது, கர்த்தருடைய பந்தியில் பங்கு பெற்றார்கள் என்று நாம் அப்போஸ்தலர் 20:7ல் வாசிக்கிறோம். வாரத்தின் முதல் நாளிலே ஆராதனைக்காக கூடி வருகிறபடியால், தங்கள் வருமானத்திலிருந்து கர்த்தருக்கக் கொடுப்பதற்கு, அது இயல்பாகவே, நல்ல நேரமாகிவிடுகிறது.

இரண்டாவதாக, தன் தன் வரவுக்குத்தக்கதாக என்று சொல்கிறபடியால் கடந்துபோன வாரத்தின் வருமானமாகிய வரவைப் பெற்ற ஒவ்வொருவரும், கொடுத்தலில் பங்குபெற வேண்டுமென்று கூறுகிறார். ஒருவனுக்கு எந்த வருமானமும் இல்லையென்றால், கொடுப்பதற்கு அவனிடம் ஒன்றுமிருக்காது. இச்சமயத்தில், கொடுக்க

முடியவில்லையே என்று ஒருவன் வருத்தமடையத் தேவையில்லை. ஏனெனில், அவன் கொடுக்க வேண்டுமென்று கர்த்தர் அவனிடத்தில் எதிர்பார்ப்பதில்லை. ஆனால்,அவன் சம்பாதித்து வருமானம் பெற்றிருந்தால் அவன் கொடுக்க வேண்டும். வருமானம் பெற்றிருந்தும், ஒருவன் கொடுக்க வில்லையானால் அது, கர்த்தருக்கு சொந்தமானதைத் திருடுவதற்குச் சமம்.

மூன்றாவதாக, பவுல் தன்னிடத்தில் சேர்த்து வைக்கக் கடவன் என்று சொல்கிறார். இப்பொழுதெல்லாம் கொடுத்தல் என்றாலே நாம் பொதுவாக பணமாக கொடுத்தல் என்று தான் எண்ணுகிறோம். ஆனால், கர்த்தருடைய பிள்ளைகள், கொடுப்பதற்கு பணமாக இல்லாமல் தங்களிடமிருந்த, கால்நடைகள், காய்கறிகள், பழங்கள் போன்றவற்றைக் கொடுத்து, அவைகள் பணமாக்கப்பட்டு கர்த்தருடைய வேலைக்காய் பயன்படுத்தப் பட்ட நாட்கள் இருந்திருக்கலாம்.

இன்றைக்கும், உலகத்தின் பல பாகங்களில்,பல கிறிஸ்தவர்கள், பணமாகக் கொடுக்கமுடியாமல் மற்றவைகளைக் கொடுக்கக் கூடியவர் களாக இருக்கலாம். உதாரணமாக,ஊழியருக்கு, கோழி, முட்டைகள் போன்ற பொருள்களைக் கொடுக்கக் கூடிய நிலையில் இருக்கலாம். கண்டிப்பாக, அவைகளும் காணிக்கையாகவே கருதப்படும்.

நான்காவதாக, தன் தன் வரவுக்குத்தக்கதாக கொடுக்க வேண்டுமென்று குறிப்பிடுகிறார். அதன் பொருள், தங்கள் சம்பாத்தியத்தில் ஒரு பங்கை தேவனுக்குக் கொடுக்க வேண்டியவர்களாயிருந்தார்கள். அப்படியானால்,ஒரு பங்கு என்பது எவ்வளவாக இருக்க வேண்டு மென்பது.ஒவ்வொருவரின் தனிப்பட்ட முடிவுக்கு விடப்படுகிறது. ஏனெனில்,அது எவ்வளவாக இருக்க வேண்டுமென்பது ஒவ்வொரு வருக்கும் தெரியும். யூதர்கள் பத்தில் ஒரு பங்கு தங்கள் வருமானத் திலிருந்து கொடுத்தார்கள்.

அவர்களின் மற்ற பலிகளையெல்லாம் கணக்கிலெடுத்துப் பார்க்கும்போது பத்தில் ஒரு பங்குக்கும் கூடுதலாகவே கொடுத்துள் ளார்களென்பது விளங்கும். கிறிஸ்தவர்களாகிய நமக்கு மேலான சட்டம் கொடுக்கப்பட்டுள்ளது. நமக்கு ஒரு இரட்சகர் உண்டு. அதுமாத்திரமல்ல நித்திய ஜீவனுக்கான நம்பிக்கை நமக்குண்டு. பழைய ஏற்பாட்டின் கீழ்

வாழ்ந்த யூதர்களைக் காட்டிலும் நாம் கண்டிப்பாக குறைவாகக் கொடுக்கக் கூடாது.

இறுதியாக, பரிசுத்தவான்களின் குறைவில் உதவும்படியாக அங்கு கொடுக்கப்பட்டுள்ளது. தான், வரும்போது எல்லாம் ஆயத்தமாக இருக்கும்படி கொடுக்கவேண்டுமென்கிறார். தேவனுடைய பிள்ளைகள் கொடுக்கவேண்டிய அளவுக்குக் கொடுத்தால், எந்தப் பிரச்சனையும் இல்லாமல், அவருக்காகச் செய்யப்பட வேண்டிய வேலைகள் செய்யப்பட்டுவிடும். தன்னுடைய வேலைக்காக, தேவன் உலகத்து மக்களை கண்டிப்பாக எதிர்பார்ப்பதில்லை. உலகத்தாரிடமிருந்து வந்தவைகள் வேண்டாமென்று ஒதுக்கப்படவுமில்லை, அவர்களிடம் கேட்கப்பட வுமில்லை.

அதே கொரிந்தியருக்கு பவுல் பின்னாளில் எழுதும்போது, "பின்னும் நான் சொல்லுகிறது என்னவெனில் சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான். அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிற வனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார் (II.கொரி.9:6,7) என்று கூறியுள்ளார்.

இங்கே பவுல், கொடுத்தலின் தாற்பரியத்தைக் குறித்து, விதைத்தல், அறுத்தல் என்ற உதாரணத்தை வைத்து போதிக்கிறதைக் கவனியுங்கள். இந்த உதாரணத்தின் கருத்து, இன்றைக்குப் போலவே அன்றைக்கும் எல்லோருக்கும் பரிச்சயமான ஒன்றாகவே இருந்தது. இதன் பொருள் என்னவெனில், அதிகம் விதைத்தான் அதிகம் அறுக்கலாம். கொஞ்சமாக விதைத்தால் கொஞ்சமாக அறுக்கலாம் என்பது. இக்கொள்கை, விவசாயத்தில் மாத்திரம் உண்மையல்ல. வாழ்க்கையின் மற்ற பல காரியங்களுக்கும் இது பொருந்தும். உதாரணமாக, கர்த்தருக்கு நீ அதிகமாகக் கொடுத்தால், கர்த்தர் உன்னை அதிகமாக ஆசீர்வதிப்பார். குறைவாகக் கொடுத்தால், குறைவானதை தான் நீ அவரிடமிருந்து எதிர்பார்க்கமுடியும்.ஒரு வேளை ஒருவன் நிறைய பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற நோக்கத்தோடு அதிகம் கொடுத்தால் நோக்கம் சரியில்லாததால், அது எதிர்பார்க்கும் பலனைத்தராது. ஆனால் ஒருவன் உண்மையும் , நேர்மையுமாக இருந்து கர்த்தரில் அன்பு கூர்ந்து, உண்மையா

கவே தேவ சித்தத்தை நிறைவேற்ற முயற்சித்து, பிறகு கர்த்தருக்கு அதிகம் கொடுத்தால் அதற்கு கண்டிப்பாக பலனிருக்கும். அவன் அதிகமாக, ஆசீர்வதிக்கப்படுவான்.

கொடுக்கிற விஷயத்தில், அநேகர் தேவனை வஞ்சிப்பதால் அவர்கள் ஆசீர்வதிக்கப்படுவதில்லை. அவர்கள் சுயநலமுள்ளவர்களாயிருந்து, தங்கள் தேவைகளை, கர்த்தரைக் காட்டிலும் முன்னிலைப்படுத்துகிறார்கள். அப்படிச் செய்துவிட்டு, தேவன் எங்களை ஏன் ஆசீர்வதிப்பதில்லை என்று ஆச்சரியப்படுகிறார்கள். முதலாவது, தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும்தேடுங்கள்.அப்பொழுது இவைகளெல்லாம் கூடக் கொடுக்கப்படும் என்ற வேதவசனத்தை ஒருவன் எப்பொழுதும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் *(மத்.6:33)* இந்த வசனம் சரியா, இல்லையா என்று சோதித்துப் பாருங்கள்.

தொடர்ந்து பவுல் சொல்லும்போது மனதில் நியமித்தபடி நாம் கொடுக்க வேண்டுமென்கிறார். நம்முடைய வருமானம் என்னவென்பது நமக்குத் தெரியும். நாம் என்ன கொடுக்கப் போகிறோம் என்பதை ஆராதனை கூடத்திற்கு வருமுன்பாகவே தீர்மானிக்க வேண்டும். அப்பொழுது , காணிக்கைத் தட்டோ,பையோ அல்லது கொடுக்க வேண்டிய தருணமோ வரும்போது, நாம் கொடுக்க முடியும். ஒருவேளை நாம் கடைசி நிமிடம் வரை காத்திருந்தோமானால், நாம் நினைத்ததைக் காட்டிலும் அதிகமாகவோ அல்லது நாம் விரும்பியதைக் காட்டிலும் குறைவாகவோ கொடுக்க நேரிடலாம். அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லியபடி, நாம் என்ன கொடுக்கப் போகிறோம் என்பதை முன்கூட்டியே தீர்மானிக்க வேண்டும். அப்பொழுது நாம் கொடுக்கும் தருணத்திற்கு ஆயத்தமாக இருக்கமுடியும்.

அடுத்து நம்முடைய கொடுத்தல் விசனமாகவோ, கட்டாயமாகவோ இருக்கக் கூடாது என்றும், மாறாக, உற்சாகமாகக் கொடுக்க வேண்டுமென்றும் கூறுகிறார். கொடுக்கவேண்டிய ஒரு கட்டத்தில் சிக்கிக் கொண்டோமே என்றும், கொடுக்கக் கட்டாயப் படுத்துகிறார்களே என்றும் நினைக்கக் கூடாது. மாறாக, கொடுக்க வேண்டுமென்ற விருப்பத்தோடும், கொடுக்க முடிகிறதே என்ற மகிழ்ச்சியோடும் கொடுக்க வேண்டும். இந்த வகையாகக் கொடுப்பவரைத்தான், தேவன் நேசிக்கிறார் என்று கூறுகிறார்.

இப்பொழுது, கர்த்தருடைய நாளில் ஆராதனைக்குக் கூடிவந்திருக்கிறவர்களின் மத்தியில் காணிக்கைத் தட்டைக் கொண்டு செல்ல, ஒருவர் நியமிக்கப்படவேண்டும். இது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் செய்யப்படவேண்டும். காணிக்கைப் பகுதிக்கு முன்பாக , சரீரப்பிரகாரமாக, தேவன் கொடுத்தவைகளுக்கு நன்றிசொல்லி ஜெபிக்கலாம். கொடுப்பதற்கு எல்லோருக்கும் சந்தர்ப்பம் கொடுக்கப்படவேண்டும். ஆராதனை முடிந்து இரண்டுபேர் சேர்ந்து அதை, எண்ணித் தொகை பார்த்து, ஒரு ஏட்டில் முறையாகக் கணக்கு வைத்து, பிறகு அந்த பிராந்திய சபையின் பெயரில் ஒரு வங்கியில் போட்டு வைக்க வேண்டும். ஆண் அங்கத்தினர்களில் ஒருவர் பொருளாளராக நியமிக்கப்பட்டு வரவு செலவுகளைக் கவனித்து, அதை சபைக்கு வாரா வாரம் அறிக்கை கொடுக்கச் சொல்லலாம். பிறகு, அந்தத் தொகையானது சுவிசேஷம் பிரசங்கிக்கப்படவும், சபையின் தேவைகளுக்கானவைகளை வாங்கவும் வறுமையிலும், தேவையிலுமிருப்போருக்குக் கொடுக்கவும் பயன்படுத்தலாம்.

தேவனுக்கான நமது ஆராதனையில், கொடுத்தல் என்பது மிக முக்கியமான ஒன்று என்பது நினைவில் இருக்கட்டும்.

## கிறிஸ்துவின் சபையில் அங்கமாவது எப்படி?

| | | |
|---|---|---|
| 1. | நற்செய்தியை கேட்க வேண்டும். | (ரோமர் 10:17) |
| 2. | விசுவாசிக்க வேண்டும் | (ரோமர் 3:28) |
| 3. | பாவத்திலிருந்து மனந்திரும்ப வேண்டும் | (அப்.17:30) |
| 4. | கிறிஸ்து வை தேவனுடைய குமாரனென்று அறிக்கையிட வேண்டும். | (ரோமர் 10:10) |
| 5. | பாவங்கள் மன்னிக்கப்பட ஞானஸ்நானம் பெற வேண்டும். | (அப்.22:16) |

# வேத பாட வகுப்புகள்

*நாம், பிறருக்கு சுவிசேஷம் அறிவிப்பது எப்படி? கிறிஸ்துவுக்குள் அவர்களுக்கு திருமுழுக்கு அளிப்பது எப்படி? ஆராதிப்பது எப்படி? என்பது போன்ற பாடங்களைப் பார்த்திருக்கிறோம்.இப்பொழுது நாம் தொடர்ந்து வேத பாட வகுப்புககளைக் குறித்தும், அதை நடத்தும் விதம் குறித்தும் பார்க்க உள்ளோம்.*

*கர்த்தர் தம்முடைய வார்த்தைகளை வேதாகமத்தில் தந்திருக்கிறார் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். அப்புத்தகத்தை பற்றி அறியவும், தேவனுடைய சித்தம் என்னவென்று தெரியவும், நாம் அந்த வேதத்தை தனிப்பட்ட முறையிலோ அல்லது வேதத்தை அறிந்த யாராவது. ஒருவர் முறைப்படி கற்றுத் தருவதின் மூலமோ அறியலாம்.கிறிஸ்து தம்முடைய அப்போஸ்தலர்களிடம் கூறுகையில் நீங்கள் போய் சுவிசேஷத்தை அறிவியுங்கள் என்றார்.(மாற்கு 16:15) பவுல் கூறுகையில் ''நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னை தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு என்கிறார்.''(2.தீமோ.2:15) மீண்டுமாக அவர் '' விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்'' (ரோமர் 10:17) என்கிறார். இயேசுவைக் குறித்து பரலோகத்திலிருந்து தேவன் கூறுகையில்''.... இவர் என்னுடைய நேச குமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன் இவருக்குச் செவிகொடுங்கள். ...'' என்றார். (மத்.17:5) இந்த வசனங்களிலும், மற்றவைகளிலும் தேவனுடைய வார்த்தையை கேட்பதும், கற்றுக்கொள்வதும் எவ்வளவு முக்கியம் என்பதை அறியலாம். இந்த வேதாகம அறிவினால்தான் நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து அவரால் அவருடைய சபையில் சேர்க்கப்பட முடியும்.*

*பிரசங்கிப்பதும், போதிப்பதும்,தனிப்பட்டளவில் தேவனுடைய வார்த்தைகளைப் படிப்பதும், நம்மளவில் சரிதான். ஆனால், பிறருடைய நிலைமை என்ன? உதாரணத்திற்கு, பலதரப்பட்ட வயதில் உள்ள ஆவிக்குரிய குழந்தைகளின் நிலைமை என்ன? உலக கல்வி முறைமையை பொருத்தவரையில், வயது வந்தவர்களிடம், பேருரைகளின் மூலமாய்*

போதிக்கப்படுகிறது. அங்கேயும் கூட, வகுப்புகளை அந்தந்த பாடங்களின் படி வகைப்படுத்தி கற்றுக்கொள்வதை முறைப்படுத்துகிறார்கள்.ஆனால் ஆரம்ப கல்வி என்று வரும்போது, அதுவும் பலதரப்பட்ட வயதில் உள்ள குழந்தைகள் என வரும்போது அவர்களை வயதின் அடிப்படையில் தான், பல குழுக்களாக பிரிப்பார்கள். வெவ்வேறு வயதுடைய பல நூறு பிள்ளைகளை ஒரு வகுப்பில் அடைத்து, அவர்களுக்கு ஒரு ஆசிரியரைக் கொண்டு ஒரே பாடத்தைச் சொல்லித்தரும் பள்ளிகளை நாம் ஒருக்காலும் காண முடியாது.அப்படியிருந்தால்,அதை யாரால் சகித்துக் கொள்ள முடியும்?

உலக சம்பந்தமான கல்விமுறையில் நாம் இப்படி அறிவுசார்ந்த வகுப்புகளைப் பார்க்கும்போது, ஏன், நம் வேதவகுப்புகளில் இப்படிப் பட்ட சிந்தையைச்செலுத்தக்கூடாது. நான் பார்த்த பல இடங்களில்,அதுவும் கொஞ்ச அங்கத்தினர்களைக் கொண்ட சபைகளில் வேத வகுப்புகள் வைப்பதின் அவசியத்தை ஏற்றுக்கொள்வது அவர்களுக்கு மிக கடினமானதாக இருக்கிறது. அக்கிறிஸ்தவர்கள் வெகு நாட்களாக வீடுகளிலோ, குடியிருப்புகளிலோ ஆராதனைக்காக கூடி வந்து, சில பாடல்களை பாடுகிறார்கள் ஜெபிக்கிறார்கள். மேலும் வேத பகுதிகளும் அங்கு கூடி வந்தவர்களுக்குப் போதிக்கப்படுகிறது. அவர்களனைவரும் ஏதோ, ஒரு காரணத்திற்காக அதையே தொடர்ந்து செய்ய விரும்புகிறார்கள். இவ்வகையில் அவர்கள் தங்களைப் பற்றியே நினைப்பதால் மிகவும் தன்னலமிக்கோர்களாய் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள், பிரசங்கியார் என்ன கூறுகிறார் என்று புரிந்து கொள்ளமுடியாத, ஆவிக்குரிய குழந்தைகள் பற்றி ஒருபோதும் சிந்திப்பதேயில்லை. பெரியவர்களுக்கும், வாலிபர்களுக்கும் நடக்கும் வேத வகுப்பின் போதே குழந்தைகளுக்கும் வகுப்புகள் நடக்குமானால், அது குழந்தைகளுக்கும் மிகவும் உதவியாக இருக்கும். இப்படிச் செய்வதால், குழந்தைகளுக்கு புரியும் வண்ணம் பாடங்களைத்தயாரித்து கொடுக்கலாம். பெரியோர்களுக்கு சொல்லப்படும் வேதபாடங்களை இவர்கள் கேட்டு புரிவதை விட மிக அதிகமாக புரிந்து கொள்ளும் வாய்ப்பு குழந்தைகளுக்கு ஏற்படுகிறது.

பிரசங்கவேளையும், போதிக்கின்ற நேரமும், ஏதோ பொழுது போக்கு அம்சமோ அல்லது யாரோ ஒருவர் தன்னுடைய பேச்சுத்திறமையை வெளிப்படுத்த ஒதுக்கிய நேரமோ அல்ல. அதற்கு மாறாக, அங்கே கூடி

வந்திருப்பவர்கள் தேவ சித்தம் என்ன என்பதைப் புரிந்து கொள்ள உதவுவதே அதின் மேலான நோக்கம். இதை மனதில் கொள்வோமானால், இந்த வகுப்புகளின் மதிப்பை நாம் எளிதாக புரிந்துகொள்ளலாம். பிள்ளைகளுக்கும், அவர்களின் பெற்றோர்களுக்கும் இது பொருந்தும். வேத வகுப்புகளை அதிகமாய் நடத்தும் சபைகளில், பிரசங்கங்களில் சொல்லப் படும் சத்தியத்தை பார்க்கிலும். வேத வகுப்புகளில் அமர்ந்திருக்கையில் அதிக சத்தியம் போதிக்கப்படுகிறது என்பது உண்மை. அல்லது பிரசங்க மேடையினால் கிடைக்கும் பலனைவிட வேதபாட வகுப்புகளில் கிடைக்கும் பலன் அதிகம் என்பது உண்மை.

ஆகையால், நீங்கள் இருக்குமிடத்தில் சபை ஆரம்பிக்கப் படுமானால், எத்தனை நபர்கள் கலந்து கொள்கிறார்கள் என்பதைப் பொறுத்து வேத வகுப்புகளை நடத்துவதை மனதில் கொள்ளுங்கள். ஆனால், அங்கத்தினர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தமட்டில், சிறிய சபையாக இருந்தாலும் வேத வகுப்புகளுக்கென ஒரு மணி நேரத்தை ஒதுக்கி, அதில் ஆண்களுக்கென வகுப்புகளும் , பெண்களுக்கென வேத ஆராய்ச்சியும் சிறுவர்களுக் கென தனி வகுப்பும் நடத்தலாம். சிலநேரம் ஆண்களுக்கும், பெண்களுக்கும் ஒரே வகுப்புமாக நடத்தலாம். சிறுபிள்ளைகள் அதிகமாக இருந்தால், அவர்களை இரண்டு பிரிவுகளாய்ப் பிரித்து வகுப்பெடுக்கலாம். நாம் கூடிவருகின்ற இடம் எப்படிப் பட்டது என்பதைப் பொறுத்து ஏற்பாடு செய்யலாம்.அது ஒரு பெரிய அறையாயிருந்தால், அந்த அறையின் நான்கு பகுதிகளிலும் வகுப்புகள் நடத்தலாம். வீடாக இருந்தால் ஒவ்வொரு அறையிலும் வகுப்புகள் நடத்தலாம்.

மற்றொரு காரியத்தையும் நாம் கவனமாய் அணுக வேண்டும். எந்த வகுப்புக்கு யாரை ஆசிரியராய் நியமிப்பது என்பதுதான் அது. யாருமே வகுப்பெடுக்க முன்வரவில்லை என்றால், வகுப்புகள் நடப்பது சாத்தியமல்ல. ஆனால், யாராவது ஒருவர் முயற்சி செய்தால் காலப் போக்கில் தன் திறமையை வளர்த்துக் கொள்ளலாம். ஆனால், அதற்குத் தேவை விடாமுயற்சிதான். அவர் தன் பாடங்களை வாரநாட்களில் ஆயத்தம் செய்துவிட்டு, ஞாயிற்றுகிழமை வகுப்பெடுக்கலாம்.அதுவே மற்ற வகுப்புகளுக்கும் பொருந்தும்.

வேத வகுப்புகளுக்குப் பின்பு, ஆராதனைக்காகப் பிரசங்கிக்கப் படவுள்ள தேவ செய்தியைக் கேட்கும்படியாகவும் சபையாகக் கூடிவரலாம். வேத பாடத்தை அந்த பிராந்திய சபையின் ஒரு அங்கத்தினர் போதிக்கலாம். அல்லது வேதத்தை முறையாகக் கற்ற, ஒரு சுவிசேஷப் பிரசங்கியார் பிராந்திய சபையின் ஊழியராக இருக்கும்படியாக அழைக்கப்படலாம். இவைகள் அனைத்தும் சாத்தியப்படவில்லை என்ற பட்சத்தில் சில வேதப்பகுதிகளை சபையிலுள்ள ஆண் அங்கத்தினர்கள் ஒருவர் பின்பு ஒருவராக வாசிக்கலாம்.அல்லது சுவிசேஷ கைப்பிரதியை வாசிக்கலாம். கர்த்தருக்கு கீழ்ப்படிவோம் என்கின்ற வாஞ்சை இருக்கின்றவர்களுக்கு எல்லா காரியமும் சாத்தியமே.

நாம் மீண்டுமாக வகுப்புச் சூழலுக்கு திரும்புவோமானால், வேத ஆராய்ச்சி வகுப்புகளின் மூலமாக, பல உற்சாகமான காரியங்களை நாம் வளர்த்துக் கொள்ளலாம். விசேஷமாக சபையானது வளரும் போது அதிகமான வேத வகுப்புகள் தேவையாய் இருக்கிறது.

உதாரணமாக, பாடப்பகுதிகள் என்று வரும்பொழுது, பழைய ஏற்பாட்டையோ, புதிய ஏற்பாட்டையோ, வேதாகமத்திலுள்ள புத்தகங் களையோ, கிறிஸ்துவின் உவமைகளையோ, கிறிஸ்துவின் வாழ்க்கை வரலாற்றையோ, கிறிஸ்துவின் சுவிசேஷத்தையோ,புதிய ஏற்பாட்டு ஆராதனை பற்றியோ, வேதாகம சபையைப் பற்றியோ, படிக்கலாம். இப்படியாக பாடங்களை ஒழுங்குபடுத்துவதினால், முழு வேதாகமத்தைக் கொண்டோ அல்லது புதிய ஏற்பாட்டைக் கொண்டோ பாடங்களைப் படிக்கலாம். நான் இங்கு பிரதானமாக பெரியவர்களுக்கான வகுப்புகளை குறித்துப் பேசிக்கொண்டிருக்கிறேன். ஆனால், இப்படிப்பட்ட வேத வகுப்புகள் குழந்தைகளுக்காகவும், வாலிபர்களுக்காகவும், அவரவர் களுக்குரிய புரிந்து கொள்ளும் தன்மைக்கேற்ப ஒழுங்கு செய்யப்படலாம்.

சிறப்பு வேத பாட வகுப்புகளும் ஆயத்தம் பண்ணப்படலாம். புதிய அங்கத்தினர்கள் சபையில் இருப்பார்களானால், அவர்களுக்கென்று தனி வகுப்புகள் ஏற்பாடு செய்யலாம். அந்த வகுப்புகளில் சுவிசேஷத்தைப் பற்றி, சபையைப் பற்றி, கிறிஸ்தவ ஜீவியத்தைப் பற்றி, மற்றும் கிறிஸ்தவ வளர்ச்சிக்குத் தேவையான பாடங்கள் பற்றி கற்றுத் தரலாம்.

பிரசங்கிக்கவும், பாடல்களை வழி நடத்தவும் ஜெபங்களை ஏறெடுக்கவும் மற்றும் இப்படிப்பட்ட காரியங்களுக்கென பெரியோர்களுக்கும், வாலிபர்களுக்கும் தனியே பயிற்சி வகுப்புகள் நடத்தலாம். ஆராதனைகளில், நாம் செய்கிற ஒவ்வொரு காரியமும் கர்த்தருக்காகச் செய்யப்படுவதாலும், குறிப்பிட்ட பங்கைச் செய்கிறவர் கர்த்தருக்காகவும், சபைக்காகவும் தன்னைப் பிரதிநிதித்துவப்படுத்துவதாலும், செய்ய வேண்டுவதை இப்பயிற்சியின் மூலம் சிறப்பாகச் செய்ய முயற்சிக்கிறோமேயொழிய, மற்றபடி இக்காரியங்களில் தனித்திறமை பெறுவது இதன் நோக்கமல்ல.

சிலவேளை, குழந்தைகளுக்கென்று பயிற்சி வகுப்புகள் நடத்த வேண்டுமென சகோதரர்கள் விரும்புவார்கள். அந்த வகுப்புகளில் வேதாகமத்தில் எத்தனை புத்தகங்கள் உள்ளன என்று கேட்கலாம். அந்த புத்தகங்களை வரிசைக் கிரமமாக மனப்பாடம் செய்யச் சொல்லலாம். அப்போஸ்தலர்களின் பெயரைப் பட்டியலிட்டு காட்டலாம். இன்னும் வேதாகம உண்மைகளை அவர்களுக்கேற்ற பாணியில் எடுத்துரைக்கலாம். இது அவர்களுக்கு நல்லதொரு பயிற்சியாக அமையும். இப்படிப்பட்ட வகுப்புகளில்சிறு பிள்ளைகளுக்கென பாடல்களும், சில பல்லவிகளும் கற்றுத்தரலாம்.

இப்படிப்பட்ட வகுப்புகளில் வேதாகமமோ அல்லது புதிய ஏற்பாடோ பாடப்புத்தகமாக இருப்பது அவசியம். சில வேளைகளில் இந்த வகுப்புகள் நடத்தும் ஆசிரியர்கள் தங்கள் பாடக்குறிப்புகளை தயாரித்து அவைகளைப் பிரதிகள் எடுத்து வகுப்பில் உள்ளவர்களிடம் வழங்கலாம். வேறு இடங்களிலுள்ள கிறிஸ்துவின் சபையோடு நாம் தொடர்பு கொள்கையில் வேதாகம உண்மைகளை எடுத்துரைக்கும் புத்தகங்கள் இருக்கிறதா என்று அறிந்து, அதனை வேதாகம போதனைக்கு உதவும் படியாக வடிவமைக்கலாம். அப்படியானால், அந்தப் புத்தகத்தில் சில பிரதிகளை வகுப்புக்கென்று நாம் வரவழைக்கலாம். ஆனால்,அந்தப் புத்தகத்தை மிக கவனமாக அந்த வகுப்பின் ஆசிரியர் படித்து, தேவனுடைய சத்தியம் தான் போதிக்கப்படுகிறதென்று உறுதி செய்ய வேண்டும்.

இந்த யோசனைகளும், கருத்துக்களும் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கர்த்தருடைய சபையால், வேதாகம ஆராய்ச்சி வகுப்புகள் எவ்வளவு முக்கியம் என்பதை வலியுறுத்தியிருக்கும் என்று நம்புகிறேன்.

# நற்செய்திப்பணி செய்வதெப்படி?

இப்பாடத்தில் சுவிசேஷப் பணியை செய்வதெப்படி? என்பதைக் குறித்து ஆராயலாம். சபையானது புதிதாக தொடங்கப்பட்டாலும் , கிறிஸ்துவினிமித்தம் நற்செய்தி அறிவிக்கும் பணி அதற்குண்டு. இதில் நாங்கள் அபார நம்பிக்கை யுடையவர்களாயிருப்பதால், நீங்களும் இப்பணி குறித்து உற்சாக முடையவர்களாயிருக்க விரும்புகிறோம்.

பிரதான கட்டளையிலிருந்து ஆரம்பிப்பது தான், சுவிசேஷப் பணியின் அவசியத்தை நாம் தெரிந்துகொள்வதற்கு சிறந்த வழியாகும். கிறிஸ்துவின் மரணம், அடக்கம், உயிர்த்தெழுதலுக்குப் பிறகு, அவர் பிதாவினிடத்திற்கு செல்லும் முன்பாக, இயேசு அப்போஸ்தலர்களிடம் பேசினார். பின்பு அவர் அவர்களை நோக்கி; நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படுவான் என்றார். (மாற்.16:15,16) மேலும் அவர் கூறினார். ''ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார்'' ஆமென். (மத்.28:19,20) லூக்கா, இப்படியாய் எழுதுகிறார். எழுதியிருக்கிறபடி, ''கிறிஸ்து பாடுபடவும், மூன்றாம் நாளில் மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும் வேண்டியதாயிருந்தது. அன்றியும் மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் எருசலேம் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும் அவருடைய நாமத்தினாலே பிரசங்கிக்கப்படவும் வேண்டியது. நீங்கள் இவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர்கள். என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள்'' என்றார் (லூக்கா 24:46-49) இறுதியாக, இயேசுவின் வார்த்தைகளை நாம் வாசித்தோமானால் ''பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும் ,

யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும் பூமியின் கடைசிபரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் '' என்றார்.(அப்.1:8)

மேற்கூறப்பட்டுள்ள வேதவாக்கியங்களில் இயேசு சொல்லுகிறது என்னவென்றால், சுவிசேஷம் உலகெங்கும் எடுத்துச் செல்லப்பட வேண்டும். உலகிலுள்ள எல்லா தேசத்திற்கும், உலகெங்கிலும் உள்ள ஒவ்வொரு நாட்டின் சிருஷ்டிக்கும் அது எடுத்துச் செல்லப்பட வேண்டும். இந்த சுவிசேஷம் முதலாவது எருசலேமிலும் பின்பு யூதேயாவிலும், அதற்குப் பின்பு சமாரியாவிலும், இறுதியாக பூமியின் கடைசிபரியந்தமும் பிரசங்கிக்கப்படவேண்டும் என்று சொன்னார். இந்தக் காரியத்தைச் செய்வதற்கு அவர்களை வழிநடத்தும்படியாக பரிசுத்த ஆவியின் வல்லமையை அப்போஸ்தலர்களுக்கு தருவேன் என்றும் சொன்னார். பாருங்கள், புதியஏற்பாடு, முழுமையான எழுத்து வடிவில் வெளிப்படுவதற்கு முன்பான காலத்தில் அவர்கள் வாழ்ந்தார்கள். ஆகையால், இன்றைக்கு நம்மிடம் இருக்கும் புதிய ஏற்பாடு முழுமையாக எழுத்து வடிவில் வெளிப்பட்டு இருப்பதால், இனிமேலும் நமக்கு பரிசுத்த ஆவியின் அற்புதமான வழிநடத்துதல் அவசியமில்லை.

இப்பொழுதும் அப்2-ம் அதிகாரத்துக்கு நாம் செல்லுவோமானால் , அங்கு அப்போஸ்தலர்கள் எருசலேம் பட்டணத்தில் கூடியிருந்ததைக் காணலாம். உண்மையில் அங்கே சுவிசேஷம் அறிவிக்கப்படவும் இல்லை. சபையானது அப்பொழுது நடைமுறையிலும் இல்லை. ஆனால், பிறகு அப்போஸ்தலர்களை வழிநடத்தவும், அந்த நாட்டு மக்களின் மொழிகளில் பேசும்படியாக உதவவும், அற்புதங்களை நிகழ்த்த ஏதுவாகவும் அவர்கள் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப்பட்டார்கள். அவர்கள் கள்ளப் போதகர்கள் அல்ல என்பதையும், உண்மையில் தேவனுடைய மனுஷர்கள் என்பதையும் மக்கள் நம்பும்படியாக இந்த வரம் அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. கிறிஸ்து உயிர்த்தெழுந்தப் பிறகு வந்த முதல் பெந்தெகொஸ்தே நாளில் உலகெங்குமுள்ள யூதர்கள் அதனை கொண்டாடும் படியாக கூடி வந்திருக்கின்றனர். கர்த்தர் நற்செய்தியை அறிவிக்கும்படியாக அந்த நாளை தேர்ந்தெடுத்தார்.அதன் விளைவாக மூவாயிரம் பேர் தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை அறிந்த கொள்ளவிரும்பினர். பேதுரு அவர்களை நோக்கி, நீங்கள் மனந்திரும்பி ஒவ்வொருவரும் பாவமன் னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ் நானம் பெற்றுக்

கொள்ளுங்கள் அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் என்றார்...அவனுடைய வார்த்தையைச் சந்தோஷமாய் ஏற்றுக் கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றையதினம், ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள்... இரட்சிக் கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டு வந்தார்.(அப்.2:38,41,47). இப்படியாக கர்த்தரின் சபை எருசலேமில் ஸ்தாபிக்கப்பட்டது. சுவிசேஷம் மீண்டும் மீண்டுமாக பிரசங்கிக்கப்பட்டது. அநேகர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தார்கள். பின்பு பிலிப்பு சமாரியாவரை சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கித்த வேளையில், அநேகர் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றார்கள். மேலும், அப்.8ம் அதிகாரத்தில் எத்தியோப்பியாவிலிருந்து வந்த மந்திரிக்கு பிரசங்கிக்கும்படி பிலிப்பு கர்த்தருடைய தூதனால் வழிநடத்தப் பட்டான்.அவன் கேள்விப்பட்டபடி செய்து கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தான். அவன் தன் நாட்டுக்குத் திரும்பச் சென்று,கிறிஸ்து வந்ததின் நோக்கத்தை, உலகத்தின் அந்த பகுதியிலுள்ள மக்களுக்கு எடுத்துரைத்திருப்பான் என்பதில் ஐயமில்லை. இப்படியாய் சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டு சபை அநேக இடங்களில் ஸ்தாபிக்கப் பட்டது.

அப். 9-ம் அதிகாரத்தில் சவுலின் மனமாற்றத்தைக் குறித்து வாசிக்கிறோம். அவர் தன் வெவ்வேறு சுவிசேஷப் பிரயாணங்களில் என்ன செய்தார் என்பதும் நமக்கு தெரியும். ஆசியா முழுவதிலும், ஏன் ஐரோப்பாவிலும் கூட சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். அந்த சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டு வந்தது என்று கொலோ 1:23-ல் கூறினார். மேலும் சுவிசேஷத்தின் சத்தம் பூமியெங்கும், அவைகளின் வசனங்கள் பூச்சக்கரத்துக் கடைசி வரைக்கும் செல்லுகிறது என (ரோமர் 10:18)ல் அவர் கூறினார். சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டு முப்பது ஆண்டுகளுக்குள்ளாக அது உலகமெங்கும் எடுத்துச் செல்லப்பட்டுள்ளது என்பதை சற்று சிந்தித்துப்பாருங்கள்! ஆம், சபையானது எருசலேம் அந்தியோகியா, கொரிந்து,எபேசு, பிலிப்பு, தெசலோனிக்கேயா, பெரோயா, கொலோசெ மற்றும் ரோமாபுரி ஆகியஇடங்களிலும் உலகெங்குமுள்ள ஆயிரக்கணக்கான பகுதிகளிலும் ஸ்தாபிக்கப்பட்டது. இதை எப்படிச் செய்ய முடிந்தது? அப்போஸ்தலர்கள் தங்கள் பணியை எருசலேமில் ஆரம்பித்தனர். அவர்கள் வாழ்வில் மீதமிருந்த

நாட்களில் பல்வேறு இடங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து கர்த்தருடைய சபையை ஸ்தாபித்தனர். ஆனால், செய்யவேண்டிய காரியங்கள் அனைத்தையும் அவர்களால் செய்ய இயலவில்லை.ஆகையால் அவர்கள் மூலம் மனந்திரும்பியவர்கள் சுவிசேஷத்தை உலகெங்கும் பிரசங்கிப்பதில் உதவி செய்தனர். பிலிப்பு, ஸ்தேவான், மற்றும் நூற்றுக் கணக்கான, ஆயிரக்கணக்கான விசுவாசிகள் அந்நாட்களில் இருந்தனர். அப்போஸ்தலரோ, அவர்களால் மனந்திரும்பியவர்களோ, புதிய இடங்களுக்குச் சென்று சுவிசேஷத்தை அறிவித்தபொழுது, அவர்கள் அதைக்கேட்டு விசுவாசித்து, பாவங்களிலிருந்து மனந்திரும்பி கிறிஸ்துவை தேவனுடைய குமாரன் என்று அறிக்கையிட்டு பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றார்கள். அவர்களை கர்த்தர் இரட்சித்து தமது சபையிலே சேர்த்துக்கொண்டார். இவ்வாறு கர்த்தருக்கு கீழ்ப்படிந்தவர்களின் எண்ணிக்கையைக் கொண்டு ஆங்காங்கே சபைகள் உருவாயின.சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படியாக அங்கே அவர்கள் தங்கியிருந்தனர். அநேகர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்ததால், சபை வளர்ந்தது. சிலவேளைகளில் அவர்கள் அங்குள்ள மற்ற பட்டணங்களுக்கும், நகரங்களுக்கும், கிராமங்களுக்கும் சென்று சுவிசேஷத்தைப் பிரசங்கித்தனர். அங்கேயும் சபைகள் ஸ்தாபிக்கப் பட்டன. இவ்வாறு இயேசு கிறிஸ்து வந்ததின் நோக்கம் உலகெங்கும் பரவும் வரை, இது தொடர்ந்தது.

உலகம் முழுவதும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்ல இன்றும் கர்த்தர் நமக்கு கட்டளையிடுகிறார். நீங்கள் கர்த்தருக்கு கீழ்ப்படிந்திருந்தால், இரட்சிக்கப்பட்டிருக்கிறீர்கள். மேலும், கர்த்தருடைய சபையில் அங்கத்தினராயும் இருக்கிறீர்கள்.ஆனாலும், நீங்கள் இருக்கும் இடத்தில் சபை இல்லாதிருக்கலாம். எப்படி அங்கே சபை இருக்க முடியும்? அங்கேயுள்ள மக்களுக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பதன் மூலம் தான் சபை இருக்க முடியும். உங்கள் நணபர்களையும் குடும்ப அங்கத்தினர்களையும் வைத்து அதை தொடங்கலாம். இப்படிச் செய்வது ஒரு ஆணுக்கு சுலபமாயிருக்கும். ஆனால் ஒரு பெண்ணோ அல்லது இளைஞரோ இதை எப்படிச் செய்ய முடியும்? அப்படி இருக்குமானால், நீங்கள் தனிப்பட்ட முறையில் உபதேசிக்கலாம் அல்லது சில கூட்டங்கள் நடத்த உதவும்படியாக வேறொருவரை அழைக்கலாம். நீங்கள் அங்கே கிறிஸ்தவராக இருந்தால் உண்மையாக அங்கே ஒரு சபையை உருவாக்க விரும்பினால் அதைச்சாத்தியமாக்க உதவும் படியாக ஏதாவது செய்யமுடியும் என நிச்சயமாக நம்புகிறேன்.

சுவிசேஷத்தைப் பிரசங்கிக்க சுவிசேஷக் கைப்பிரதிகளையோ பத்திரிக்கைகளையோ பயன்படுத்தலாம். தனிப்பட்ட பாடங்கள் நடத்தலாம். மேலும் வேதாகம வகுப்புகள் ஒழுங்கு செய்ய லாம்.

தேவனுடைய வார்த்தையை போதுமான அளவு உபதேசிக்கும் பொழுது மனந்திரும்புதல் உண்டாகும்.அவ்வாறு மனந்திரும்பியவர் களைக் கொண்டு சபையை தொடங்கலாம். அதாவது, அங்கேயுள்ள கிறிஸ்தவர்கள் ஒரு வீட்டிலோ, பள்ளியிலோ, அறையிலோ அல்லது மரத்தடியிலோ கூடி தொடங்கலாம். நீங்கள் கூடிவருவதும், ஆராதிப்பதும், தொடர்ந்து தேவனுடைய வார்த்தையை உபதேசிப்பதுமே முக்கியமான காரியம். சுவிசேஷப் பணியாளராய் இருங்கள். எப்போதும் பிறருக்கு உபதேசிக்கும் தருணத்தை எதிர்நோக்கி இருங்கள்.அந்தப் பணியை செய்துகொண்டே சில வேளைகளில் அந்தப்பகுதியிலுள்ள நகரத்தில் மற்றும் கிராமங்களில் சுவிசேஷத்தை பிரசங்கிக்க முயற்சிகள் எடுக்கலாம்.

நாம் இருப்பதை வைத்து திருப்தியடைவதை கர்த்தர் விரும்பவில்லை என்பதை நினைவில் கொள்ளுங்கள். நாம் போய் பிரசங்கிப்பதையும், மனமாற்றமடையச் செய்வதையும்,அவர் நோக்கத்தை அறிவிப்பதையுமே விரும்புகிறார். இந்த பணியை நாம் செய்யவே அவர் விரும்புகிறார். நாம் அதைச்செய்யும் பொழுது அவர் நம்மோடிருந்து நம்முடைய முயற்சிகளையும் ஆசீர்வதிப்பார். இந்த சுவிசேஷப்பணியைச் செய்யும் நம்முடைய பிரயாசத்தையும் ஆசீர்வதிப்பார். இந்த சுவிசேஷப் பணியைச் செய்யும் நம்முடைய பிள்ளைகளுக்கும், இளைஞர்களுக்கும் கூட நாம் உபதேசித்து ஊக்கப்படுத்த வேண்டும். நீங்கள் இருக்கும் இடத்தில் உங்களால் முடிந்ததை நீங்கள் செய்யும் பொழுது தேவன் உங்களை ஆசீர்வதிப்பார்.

## நான்கு வகையான ஆராதனை

| | | |
|---|---|---|
| 1. | வீணான ஆராதனை | மத்.15:9 |
| 2. | அறியாமல் செய்யும் ஆராதனை | அப்.17:23 |
| 3. | சுய இஷ்டமான ஆராதனை | கொலோ.2:20-23 |
| 4. | உண்மையான ஆராதனை | யோவா.4:24 |

# சபையின் ஆளுகை அமைப்பு

ஓரிடத்தில், ஒரு பிராந்திய சபையை ஆரம்பிக்கும்போது, மனதில்கொள்ள வேண்டிய ஒரு முக்கியமான காரியம் என்னவெனில், அதன் ஆளுகை அமைப்பு எப்படி இருக்கவேண்டுமென்பது. ஆகையால், அதற்கு உதவும்படியாக இப்பாடத்தில் சில சிந்தனைகளை தர விரும்புகிறேன்.

நம் எல்லோருக்கும் தெரிந்திருக்கிறபடி எந்த ஒரு ஸ்தாபனமும் ஒழுங்காகச் செயல்படுவதற்கு, அதற்கு சரியான ஆளுகை அமைப்பு முறை இருக்கிறது.பள்ளிகள், தொழில் நிறுவனங்கள், இராணுவம், அரசாங்கம் என்று இதற்கு உதாரணங்களை நாம் சொல்லிக்கொண்டே போகலாம். இவையனைத்திற்கும் ஒரு காரியம் பொதுவாக உள்ளது. அவர்கள் திட்டமிட்டு, காரியங்களை முறைப்படுத்தி வேலைசெய்கிறார்கள். அங்கே ஆளுகைக்கானகாரியங்கள் முறைப்படுத்தப்படாமலிருந்தால், குழப்பமும், உற்பத்திக் குறைவும் ஏற்பட்டு, இறுதியில் தோல்வி அல்லது நஷ்டத்தில் போய் முடியும்.

அதைப் போலவே, மார்க்க காரியங்களிலும், ஆளுகைக்கான அமைப்பு முறை இருக்கவேண்டும். கிறிஸ்து தமது சபையைக்கட்டுவேன் என்று வாக்குக் கொடுத்தார். (மத்.16:18) அதைப் போலவே செய்தார் (அப்.2அதி) சபையானது ஜனங்களை, அதாவது இரட்சிக்கப் பட்டவர் களைக் கொண்டுள்ளதால்,அது ஒழுங்காகவும் முறையாகவும் நடத்தப் படுவதற் கான தேவை ஏற்படும்.

கிறிஸ்து சபைக்கு தலையாயிருப்பார் என்றும் (கொலோ.1:18; எபே.1:22,23) சரீரமானது அல்லது சபையானது, அவருக்குக் கீழ்ப்படிந்த வர்களைக் கொண்டதாக இருக்குமென்றும் வேதாகமம் கூறுகிறது. கிறிஸ்து ஸ்தாபித்த சபையானது உலகெங் கிலும் இருந்தாலும், அது ஒரு பிராந்திய சபை என்றளவில் ஒவ்வொரு இடத்திலும் இருக்கிறது. இந்த ஒவ்வொரு பிராந்தியசபைக்கும் கிறிஸ்து தலைவராயிருக்கிறார். இரட்சிக்கப் பட்டவர்கள் அதன் அங்கத்தினர்களாய் இருக்கிறார்கள். கிறிஸ்துவின் சபைக்கு உலகளாவிய மனித ஆளுகை அமைப்பு இல்லாவிட்டாலும், பிராந்திய அளவில் அதற்கு ஆளுகை அமைப்பு முறை உண்டு.

ஒரு பிராந்திய சபையின் ஆரம்ப நாட்களில், சபையின் ஆண் அங்கத்தினர்கள் எல்லோரும் அதன் தேவைகளைச் சந்திக்கவும், சபைக்கான காரியங்களை பொறுப்பேற்றுக்கொள்ளவும் வேண்டும். இருக்கும் ஆண் அங்கத்தினர்களில் சபையானது பிரசங்கங்கள், வேதத்தைப் போதிக்கும் ஆசிரியர்கள், பாடலை நடத்துகிறவர்கள் போன்றவர்களைக் கொண்டிருக்கலாம். ஆனால் ஒரு பிராந்திய சபையானது வயதிலும் எண்ணிக்கையிலும் வளரும் போது அதற்குஆளுகை அமைப்பு முறை தேவை. ஒரு சபை முறையாக வளரும்போது மூப்பர்களாகவும், உதவிக்காரர்களாகவும் ஏற்படுத்தப்படக் கூடியவர்கள் அங்கு இருக்க முடியும்.

இந்தக் காரியங்களைக் குறித்து பவுல் அப்போஸ்தலன் தீமோத் தேயுக்கு எழுதும் போது, கண்காணிப்பை விரும்புகிறவன் நல்ல வேலையை விரும்புகிறான்.இது உண்மையான வார்த்தை. ஆகையால் கண்காணியானவன் குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியை உடைய புருஷனும், ஜாக்கிரதையுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ள வனும்,யோக்கிதையுள்ளவனும், அந்நியரை உபசரிக்கிறவனும், போதக சமர்த்தனுமாய் இருக்கவேண்டும். அவன் மதுப்பானப்பிரியனும், அடிக்கிறவனும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனுமாயிராமல், பொறுமையுள்ளவனும், சண்டை பண்ணாதவனும், பண ஆசையில்லாத வனுமாயிருந்து, தன் சொந்த குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும் தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப் பண்ணுகிறவனுமாயிருக்க வேண்டும். ஒருவன் தன் சொந்த குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்? அவன் இறுமாப்படைந்து பிசாசு அடைந்த ஆக்கினையிலே விழாதபடிக்கு, நூதன சீஷனாயிருக்கக்கூடாது. அவன் நிந்தையிலும், பிசாசின் கண்ணியிலும் விழாதபடிக்கு, புறம்பானவர்களால், நற்சாட்சி பெற்ற வனாயுமிருக்கவேண்டும்; அந்தப்படியே, உதவிக்காரரும் இரு நாக்குள்ள வர்களாயும், மதுபானப்பிரியராயும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவர் களாயும் இராமல், நல்லொழுக்கமுள்ளவர்களாயும் விசுவாசத்தின் இரகசியத்தைச் சுத்த மனசாட்சியிலே காத்துக் கொள்ளு கிறவர்களாயும் இருக்கவேண்டும். மேலும்,இவர்கள் முன்னதாக சோதிக்கப் படவேண்டும். குற்றஞ் சாட்டப்படாதவர்களானால் உதவிக்காரராக ஊழியஞ்செய்யலாம்.

அந்தப்படியே ஸ்திரீகளும் நல்லொழுக்கமுள்ள வர்களும், அவதூறு பண்ணாதவர்களுமாயிருக்க வேண்டும். மேலும் உதவிக்காரரானவர்கள் ஒரே மனைவியையு டைய புருஷருமாய் தங்கள் பிள்ளைகளையும் சொந்தக் குடும்பங்களையும் நன்றாய் நடத்துகிறவர்களுமாயிருக்க வேண்டும். இப்படி உதவிக்காரருடைய ஊழியத்தை நன்றாய்ச் செய்கிறவர்கள் தங்களுக்கு நல்ல நிலையையும், கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தில் மிகுந்த தைரியத்தையும் அடைவார்கள். (I.தீமோ.3:1-13) என்று கூறியுள்ளார்.

இன்னும், தீத்துவுக்கு எழுதும் போது ''நீ குறைவாயிருக்கிற வைகளை ஒழுங்குபடுத்தும்படிக்கும். நான் உனக்குக்கட்டளையிட்ட படியே பட்டணங்கள் தோறும் மூப்பரை ஏற்படுத்தும்படிக்கும் உன்னை கிரேத்தா தீவிலே விட்டுவந்தேனே. குற்றஞ்சாட்டப்படாதவனும் ஒரே மனைவியுடைய புருஷனும் துன்மார்க்கரென்றும் அடங்காதவர்களென்றும் பேரெடுக்காத விசுவாசமுள்ள பிள்ளைகளை உடையவனுமாகிய ஒருவனி ருந்தால், அவனையே ஏற்படுத்தலாம். ஏனெனில் கண்காணியானவன் தேவனுடைய உக்கிராணக்காரனுக்கேற்ற விதமாய், குற்றஞ்சாட்டப் படாதவனும், தன் இஷ்டப்படி, செய்யாதவனும், முற்கோபமில்லா தவனும், மதுபானப்பிரியமில்லாதவனும், அடியாதவனும், இழிவான ஆதாயத்தை இச்சியாதவனும், அந்நியரை உபசரிக்கிறவனும் நல்லோர்மேல் பிரியமுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், நீதிமானும், பரிசுத்தவானும், இச்சையடக்கமுள்ளவனும், ஆரோக்கி யமான உபதேசத்தினாலே புத்திசொல்லவும், எதிர் பேசுகிறவர்களைக் கண்டனம் பண்ணவும் வல்லவனுமாயிருக்கும்படி தான் போதிக்கப்பட்ட தற்கேற்ற உண்மையான வசனத்தை நன்றாய் பற்றிக் கொள்ளுகிறவனு மாயிருக்க வேண்டும். அநேகர், விசேஷமாய் விருத்தசேதனமுள்ளவர்கள். அடங்காதவர்களும், வீண்பேச்சுக்காரரும், மனதை மயக்குகிறவர்களுமாயி ருக்கிறார்கள். அவர்களுடைய வாயை அடக்க வேண்டும். அவர்கள் இழிவான ஆதாயத்துக்காகத் தகாதவைகளை உபதேசித்து, முழுக்குடும்பங் களையும் கவிழ்த்துப்போடுகிறார்கள் என்று கூறியுள்ளார். (தீத்து 1:5-11) இங்கே ஒன்றைக் கவனிக்க வேண்டும். சபையின் மூப்பர்களாக ஏற்படுத்தப்பட்டவர்கள், வேத வசனங்களில், மேய்ப்பர்கள், கண் காணிகள் என்றும் பேசப்பட்டிருக்கிறவர்கள். மேலும் மூப்பர்களை ஏற்படுத்து

வதற்கு,வேத வசனங்களில் குறிப்பிட்டுள்ள தகுதியம்சங்களைக் கொண்டவர்கள் குறைந்தபட்சம் இரண்டு பேராவது, அப்பிராந்திய சபையில் இருக்கவேண்டும். அப்படியிருந்தால், அச்சபையானது, மூப்பர்களாக இருக்கும்படி அவர்களை ஏற்படுத்தலாம். மூப்பர்கள் என்ற நிலையில் அவர்கள் கிறிஸ்துவுக்குக் கீழாக இருந்து, தாங்கள் செய்கின்ற சொல்லுகின்ற அனைத்தும் தேவனுடைய வாக்கியங்களின்படி உள்ளதா என்று ஜாக்கிரதையாய் கவனித்து அதன்படி மந்தையை மேய்த்து, அதாவது தேவனுடைய வார்த்தைகளின் படி தான், சபையானது போதிக்கப்படுகிறதா என்று பார்த்துஅதனடிப் படையில் அப்பிராந்திய சபையாருக்கு ஒரு சிறந்த தலைமையைக் கொடுக்கவேண்டும். ஒருவன் புதிதாக கிறிஸ்துவுக்குள் வந்த அங்கத்தினராக இருந்தால், அவனை மூப்பராக ஏற்படுத்தக் கூடாது.மூப்பனானவன், கண்டிப்பாக ஒரே மனைவியை உடைய புருஷனும், தங்கள் பிள்ளைகள் கர்த்தருக்கு கீழ்ப்படியும்படியான வயதை எட்டி, வசனத்திற்குக் கீழ்ப்படிந்து, விசுவாசமுள்ள வாழ்க்கை வாழக் கூடியவர்களை உடையவர்களாகவும் இருக்க வேண்டும். மேற்சொன்ன தகுதிகளில் இரண்டு மூன்றைத் தவிர மற்ற எல்லா தகுதிகளையும், சபையின் எல்லா அங்கத்தினர்களும் உடையவர் களாக இருக்க வேண்டும்.

ஒரு பிராந்திய சபையின் மூப்பர்கள், அச்சபைக்கு மாத்திரமே மூப்பர்களாக இருக்கமுடியும். மற்ற பிராந்திய சபைகளின் மீது அவர்களுக்கு அதிகாரமில்லை. அதைப்போல மற்ற எந்த பிராந்திய சபையும், இவர்களை ஆள முடியாது.

உதவிக்காரர்களைப் பொறுத்தமட்டில் அவர்கள் மூப்பர்கள் போலவே இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் இருக்க வேண்டும்.அவர்கள் மூப்பர்களுக்குக் கீழாக உதவிக்காரர்களாக அல்லது வேலைக்காரர்களாக பணியாற்றுவர். நாம் வாசித்தது போல அவர்களுக்கு தகுதிகளும் உண்டு. அவர்களுடைய மனைவிகளும் சில குறிப்பிட்ட தகுதிகளைப் பெற்றுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

பொதுவாக நாம் ஒரு சபையில் ஆவிக்குரிய ரீதியில் நம்மை வழி நடத்துபவர்களை ''மூப்பர்கள்'' என்றும் சபையின் சரீரபிரகாரமான தேவைகளைக் கவனிப்பவர்களை ''உதவிக்காரர்கள்'' என்றும் எண்ணுகிறோம்.

ஒரு பிராந்திய சபையின் ஆரம்ப கால கட்டத்தில் அல்லது முதல் சில வருஷங்களுக்கு அது மூப்பர்களும் உதவிக்காரர்களும் இல்லாமல் செயல்படமுடியும். ஆனால், தேவையான அளவு வளர்ச்சி பெற்ற ஒரு பிராந்திய சபை, வேதாகமத்தின் அடிப்படையிலான அதன் செயல் பாட்டிற்கு,அது மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் உடையதாக இருக்கவேண்டும்.

சபையின் அனைத்து அங்கத்தினர்களும், மூப்பர்களை நேசித்து, மரியாதை செலுத்தி, அவர்கள் கிறிஸ்துவை பின்பற்றுவது போல, அவர்களின் வழிகாட்டுதலைப் பின்பற்ற வேண்டும்.

அடுத்து, பிரசங்கிகள் பற்றியது. ஒருவேளை ஒரு இளம் சபைக்கு பிரசங்கிப்பவர் இருக்கலாம் அல்லது இல்லாமலிருக்கலாம். பிரசங்கியானவன் ஒரு சபையின் மேய்ப்பனோ அல்லது அதை ஆளுகிறவனோ அல்ல. மாறாக, ஒரு பிராந்திய சபையில் மூப்பர்கள் இருந்தால், அவர்களுக்கு கீழாக பணிபுரிகிறவர். மூப்பர்கள் இல்லாத பட்சத்தில், தேவனுடைய வார்த்தையை பிரசங்கிப்பவர் என்ற அந்தஸ்தில், சபையின் ஆண் அங்கத்தினர்களுடன் சேர்ந்து பணியாற்றுகிறவர்.ஒழுக்க ரீதியாக, ஒரு பிரசங்கி மிகச் சிறந்தவராக இருந்து, ஆரோக்கியமான உபதேசங்களைப் போதிக்க வேண்டும். இளம் பிரசங்கியாகிய தீமோத் தேயுவுக்கு பவுல், ''ஆகிலும்ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி பிற்காலங்களில் மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப் போவார்கள். விவாகம் பண்ணாதிருக்கவும்...'' I.தீமோ.4:1,2ல் சொல்லியுள்ளார். தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிகுங் காரியத்தில், கர்த்தருக்காகவும், சக கிறிஸ்தவர்களுக்காகவும் தனது கடமை மற்றும் பொறுப்பு என்னவென்பதை நினைவுப்படுத்தும் பல வேத வசனங்கள் தேவனால் கொடுக்கப்பட்டுள்ளது.

இவர்கள் தவிர, ஒரு சபையில் வேத ஆசிரியர்கள் உண்டு.இவர்கள் ஆண்களாகவும், பெண்களாகவும் இருக்க முடியும்.ஆனால், பெண்கள், மற்ற பெண்களுக்கும், சிறு பிள்ளைகளுக்கும் தான் போதிக்க வேண்டும்.

ஒரு சபையானது, எண்ணிக்கையில் பெரியதோ அல்லது சிறியதோ அதற்கு செய்து முடிக்கப்படுவதற்கான சில செயல்திட்டங்கள் இருக்கவேண்டும். யாராவது ஒருவர் பாடலை வழிநடத்த வேண்டும். பிறகு பொருளாளராக ஒருவரை தேர்ந்தெடுக்கும்படியான அவசியம் வரும். வேறொருவர் கர்த்தருடைய பந்திக்குத் தேவையானதை ஆயத்தம் செய்யவேண்டும். இன்னும் இது போல வேறு பல காரியங்களுக்கு பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டியதிருக்கும்.

ஆகையால், ஒரு பிராந்திய சபையின் காரியங்கள் மிகச் சிறப்பாக, இருப்பதற்கும் எல்லாக் காரியங்களையும் ஒழுங்காகவும், சமாதானமாகவும், செய்வதற்கும், சபையின் ஆண் அங்கத்தினர்கள் அனைவரும் வேத வசனங்களின்படி தங்களை ஒழுங்குப்படுத்திக் கொள்ளவேண்டும். அந்நிலையில் சபையானது சீராக வளர்ந்தால் ஒரு நாளில் மூப்பர்களையும், உதவிக்காரர்களையும் ஏற்படுத்தும் என்று நம்ப முடியும்.

## தேவனுடைய நியாயத்தீர்ப்பு

**ரோமர் புத்தகத்திலிருந்து....**

1. சத்தியத்தின்படி நியாயத்தீர்ப்பு இருக்கும்.
2. பாவம் செய்த அனைவருக்கும் எதிராக நியாயத்தீர்ப்பு இருக்கும்.
3. எல்லோரும் நியாயத்தீர்ப்புக்கு முன் நிற்க வேண்டும். (யூதர்கள் உட்பட)
4. தேவனின் நீடிய பொறுமையால் நியாயத்தீர்ப்பு தாமதமாகிறது.
5. நியாயத்தீர்ப்பு நாள் என்பது தேவனின் கோபாக்கினை நாள் எனப்படும்.
6. அவனவனின் கிரியைக்குத்தக்க பலனை தேவன் அவனவனுக்கு நியாயத்தீர்ப்பு நாளில் தருவார்.
7. ஒரு மனிதன் எந்த தெய்வீக சட்டத்தின் கீழ் வாழ்ந்தானோ அந்த சட்டத்தின் மூலம் நியாயந்தீர்க்கப்படுவான்.
8. தேவன், இயேசுக்கிறிஸ்துவைக் கொண்டு நியாயந்தீர்ப்பார்.

# சபையாக எங்கே கூடுவது?

இந்த பாடத்தில், ''நாம் எங்கு சபையாக கூடலாம்'' என்பது குறித்து படிப்போம். இப்பொழுது, நீங்கள் சபையில் அங்கம் வகித்தால், அல்லது அங்கத்தினராக மாறுவீர்கள் என்றால், நீங்கள் இருக்கும் இடத்தில் கர்த்தருடைய சபை இல்லாதிருந்தால், அதை ஆரம்பிக்க உங்களை ஊக்கப்படுத்துகிறோம். நாங்கள் முன்னமே சொன்னதுபோல் சபை ஆரம்பிக்கும் இந்த செயல் உங்கள் சொந்த விருப்பத்தாலும் மற்றும் உங்களைச் சுற்றி வாழும் மக்களின் நன்மைக்காகவும் செய்யப்படுகின்ற ஒன்று. அவர்களுக்குப்போதித்து மனமாற்றத்தை உண்டாக்க முயற்சி தேவை. இப்படிச் செய்வதின் மூலம், கர்த்தருடைய நோக்கத்தை நிறைவேறச் செய்து, சபை விரிவடைய வழிவகுக்கும். இதைப் படிக்கும் அநேக வாசகர்கள் வசிக்குமிடத்தில் கர்த்தருடைய சபை இருக்காது என்பது எங்களுக்கு திட்டமாய் தெரியும். நாங்கள் முன்னமே சொன்னதுபோல், நீங்கள் இருக்குமிடத்திலேயே அவருடைய வேலைக்கென்று கர்த்தர் உங்களை பயன்படுத்துவார். உங்களோடு இதைக் குறித்து தொடர்பு கொள்ள மற்றும் சில விளக்கங்கள் தர நாங்கள் மகிழ்ச்சியுடன் காத்திருக்கிறோம்.

ஒவ்வொரு வாரமும் கர்த்தரை ஆராதிக்க ஒரு கூட்ட மக்கள் கூடிவரப்போகிறார்கள் என்றால், அவர்களுக்கு பொதுவான ஒரு இடம் தேவை என்பது யதார்த்தமானது. இதற்கு,அநேக வழிமுறைகள் இருந்தாலும் ஆதி திருச்சபை இந்தக் காரியத்தில் எப்படி செயல்பட்டது என்பதை முதலில் பார்ப்போம்.

பெந்தெகொஸ்தே என்னும் நாளில் எருசலேம் பட்டணத்தில் சபை ஆரம்பிக்கப்பட்ட போது, அப்போஸ்தலர்கள் பெருந்திரளான மக்கள் கூட்டத்திற்கு பிரசங்கித்தார்கள். ஏறக்குறைய மூவாயிரம் பேர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தார்கள் என்பது நமக்கு நன்றாய் தெரிந்த ஒன்று (அப்.2:41) இது திறந்த வெளியில் நடந்ததா? அல்லது அரங்கத்தில் நடந்ததா? அல்லது தேவாலயத்து மைதானங்களில் நடந்ததா? அல்லது மற்ற இடத்தில் நடந்ததா? எங்கு நடந்தது என்பது குறித்து எதுவும் சொல்லப்படவில்லை அப்.2:42ல்மன மாற்றம் அடைந்தவர்களைக் குறித்து பேசும்பொழுது, ''அவர்கள் அப்போஸ் தலருடைய உபதேசத்திலும், அந்நியோந்நியத்திலும்

அப்பம் பிட்குதலிலும் உறுதியாய்த் தரித்திருந்து, வீடுகள் தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபடமில்லாத இருதயத்தோடும் போஜனம் பண்ணி தேவனைத் துதித்து ஜனங்களெல்லாரிடத்திலும் தயவுபெற்றிருந் தார்கள். இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபையிலே சேர்த்துக்கொண்டுவந்தார்.''(அப்.2:46,47) என்கிறார். அப்போஸ்தலர் களாகிய பேதுருவும், யோவானும் தேவாலயத்தின் அலங்காரவாசலண் டையில் ஒரு சப்பாணியை குணமாக்கினார்கள். அது அவர்கள் தேவால யத்தின் சாலமோன் மண்டபத்தில் கூடியிருந்த திரளான மக்களுக்குப் பிரசங்கிக்கும்படியான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தி தந்தது. அவர்கள் என்ன செய்யவேண்டுமென்று பேதுரு அவர்களுக்குச் சொன்னபிறகு, இவ்விதமாய் வாசிக்கிறோம். ''வசனத்தைக் கேட்டவர்களில் அநேகர் விசுவாசித்தார்கள். அவர்கள் தொகை ஏறக்குறைய ஐயாயிரமா யிருந்தது''(அப்.4:4) ஆகையால் அந்நாட்களில் சபையானது வளர்ந்து கொண்டிருந்ததென்று தெரிகிறது. ஆனால்,இவர்களெல்லாம் எங்கே கூடினார்கள் என்ற கேள்வி மீண்டும் எழுகிறது? ஒருவேளை அவர்கள் தொடர்ந்து தேவாலயத்தில் கூடிவந்திருக்கலாம். ஆனால், அப்பொழுது கூட, வேறொரு பிரச்சனைக்கு அங்கு வாய்ப்பு வருகிறது. ஏனென்றால், அவர்கள் தேவாலயத்தில் கூடி மோசேயின் பிரமாணத்தின்படி தேவனை ஆராதிக்காமல் கிறிஸ்துவின் உபதேசத்தின் படியாகவே ஆராதித்தார்கள்.

இங்கே, நாம் உபதேசிப்பதற்கான ஒரு இடத்தைக் குறித்து அதிகமாக சிந்தித்துக் கொண்டிருக்கவில்லை.அந்தக் காரியத்தை எங்கு வேண்டுமா னாலும் செய்யமுடியும். உதாரணமாக, எத்தியோப்பியாவிலிருந்து வந்த ஒரு மனிதனை பிலிப்பு, வனாந்திரமான ஒரு இடத்திலே சந்தித்து, அவனுடைய இரதத்திலே அவனோடு சேர்ந்து கொள்ளும்படியாக வாய்ப்பு பெற்று, தொடர்ந்து அவனோடு மேற்கொண்ட பிரயாணத்திலே அவனுக்கு போதிக்க முடிந்தது. (அப்.8:26,39) அப்போஸ்தலர் 9ம்அதிகாரத்தில் அனனியா என்பவன் சவுலை நேர் தெருவிலே கண்டு, கர்த்தருக்குக் கீழ்ப்படிவதற்கு அவன் என்ன செய்யவேண்டுமென்று சொல்லி, அவனு டைய கீழ்ப்படிதலிலே அவனுக்கு உதவினான். பவுலும் சீலாவும் சிறைச் சாலையிலே, பிலிப்பிய ஜெயில் அதிகாரிக்கும் அவன் குடும்பத்தாருக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார்கள். (அப்.16) யூதர்களுக்கு போதிக்க பவுல் அநேக முறை பல பட்டணத்து ஜெப ஆலயத்தில் பிரசங்கித்தார். இன்னும்

நாம் ; தொடர்ந்து பவுல் சுவிசேஷத்தை வேறு பல இடங்களில் போதித்தார் என்றும் குறிப்பிடமுடியும்.

பவுல் எபேசு பட்டணத்திலிருக்கையில் ''பின்பு பவுல் ஜெப ஆலயத்தில் பிரவேசித்து தைரியமாய்ப் பிரசங்கித்து மூன்று மாதமளவும் தேவனுடைய ராஜ்யத்துக்கடுத்தவைகளைக் குறித்து சம்பாஷணை பண்ணி புத்தி சொல்லிக்கொண்டு வந்தான். சிலர் கடினப்பட்டு அவிசுவாசிகளாகிக் கூட்டத்திற்கு முன்பாக இந்த மார்க்கத்தை நிந்தித்தபோது, அவன் அவர்களை விட்டு விலகி சீஷரை அவர்களிலிருந்து பிரித்துக்கொண்டு திறன்னு என்னும்ஒருவனுடைய வித்யாசாலையிலே அநுதினமும் சம்பாஷித்துக்கொண்டு வந்தான். இரண்டு வருஷகாலம் இப்படி நடந்ததினாலே ஆசியாவில் குடியிருந்த யூதரும் கிரேக்கருமாகிய எல்லாரும் கர்த்தராகிய இயேசுவின் வசனத்தைக்கேட்டார்கள். (அப்.19:8-10) இப்பொழுதும் பவுல் பாடம் நடத்தின வித்தியாசாலை அல்லது பள்ளி என்று சொல்லும்போது அதில் கூடி வருவதற்கென்று கட்டிடங்கள் இருந்திருக்கும். தேவனுடைய சித்தத்தை போதிக்கவே ஜெப ஆலயத்திற்கு பவுல் சென்ற போதிலும் அங்கே கூடி ஆராதிக்கவில்லை என்று எப்படி சொல்லுகிறோமோ அதைப்போலவே, இந்த வித்தியாசாலையிலே கூடி ஆராதிக்கிறார்கள் என்று கூறுவதற்கு அதிக வாய்ப்பில்லை ஆகவே மீண்டும் இந்த கேள்வியை எழுப்புகிறோம். அந்தநாட்களில் கர்த்தருடைய ஜனம் அவரை ஆராதிக்க எங்கே கூடியது?

அப்பொழுது வீடுகள் அவர்களுக்கென்று இருந்தது. பவுல் வெளியரங்கமான இடங்களிலும், வீடுகள் தோறும் பிரசங்கித்தேன் என்று கூறுகிறார். (அப்.20:20) பவுல் ரோமாபுரிக்கு அழைத்துக் கொண்டு போகப்படுகிறதை குறித்து நாம் வாசிக்கிறோம் .பின்பு பவுல் தனக்காக வாடகைக்கு வாங்கியிருந்த வீட்டிலே இரண்டு வருஷம் முழுவதும் தங்கி தன்னிடத்தில் வந்த யாவரையும் ஏற்றுக்கொண்டு மிகுந்த தைரியத்துடனே தடையில்லாமல் தேவனுடைய ராஜ்ஜியத்தைக் குறித்துப் பிரசங்கித்து. கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவைப்பற்றிய விசேஷங்களை உபதேசித்துக் கொண்டிருந்தான். (அப்.28:30,31)இரண்டு வருஷம் தனக்கென்று வாடகைக்கு எடுத்தவீட்டில் தங்கியிருப்பது உண்மையாய் இருக்கிறபோது அவன் அங்கே ஆராதித்திருக்கக்கூடும். ஆக்கில்லா, பிரிஸ்கில்லாலுடைய

*வீட்டில் கூடி வந்த சபையை பற்றி பவுல் குறிப்பிடுகிறார். (ரோமர்.16:5; I.கொரி.16:19) அநேக சபைகள் வீட்டில் கூடி வந்தது என்பதை பற்றி கொஞ்சமும் சந்தேகமில்லை.*

*ஆனால், கொரிந்து சபை எங்கே கூடியது? பிலிப்பு பட்டணத்து சபையைக் குறித்து என்ன சொல்லுவோம்? பவுல் இந்தப் பட்டணத்திற்குள் சென்று லீதியாளையும் அவள் குடும்பத்தையும் வழக்கமாய் ஜெபம் பண்ணுகிற ஆற்றினருகே கண்டு, போதித்து மனமாற்றம் அடையச் செய்தான் என்பது நாம் அறிந்த ஒன்று. பின்பு அவன் சிறைச்சாலை அதிகாரியையும் அவன் வீட்டாரையும் மனமாற்றம் அடையச் செய்தான். அங்கே சபை வளர்ந்தது மூப்பர்கள் உதவிக்காரர்கள் இருக்குமளவுக்கு சபை வளர்ந்தோங்கியது. ஏனென்றால், பிலிப்பு பட்டணத்து சபைக்கு பவுல் எழுதுகையில் பரிசுத்தவான்கள் அனைவருக்கும் கண்காணிகளுக்கும், உதவிக் காரருக்கும் எழுதுகிறதாவது (பிலி.1:1) என்கிறார். ஆனால், அவர்கள் எங்கே சபையாக கூடிவந்தார்கள் என்பது தான் கேள்வி.*

*சபைக்கென்று தனி இடம் இருப்பது கர்த்தருக்கு எதிரான ஒன்று என்று வேத வசனங்கள் கூறுவதாக தெரியவில்லை. ஆனாலும் அந்த காரியங்களைப் பற்றி வசனங்கள் ஆழமாய்ச் சொல்லவில்லை. பழைய ஏற்பாட்டுக் காலத்தில், தேவன் இஸ்ரவேலர்களை ஆசரிப்பு கூடாரம் கட்ட கட்டளை கொடுத்து அவர்களை அங்கு சந்திதது வந்தார் என்பது நமக்குத் தெரிந்த உண்மை. பின்பு எருசலேமில் சாலொமோன் ஆலயத்தைக் கட்டினான். மீண்டும் தேவன் இஸ்ரவேலரோடு சம்பாஷித்தார். ஆனால், இயேசு சமாரிய பெண்ணிடம் பேசுகையில், ஸ்திரீயே இந்த மலையிலும் எருசலேமிலும் மாத்திரமல்ல, எங்கும் பிதாவை ஆவியோடும், உண்மையோடும் தொழுதுகொள்ளுங் காலம் வருகிறது என்றார் (யோவ.4:1-30)*

*ஆதலால், கர்த்தர் கட்டிடத்தை வலியுறுத்தவில்லை என்பதை இது மிகத்தெளிவாய்க் காட்டுகிறது. ஏனெனில் இவ்விடங்கள் கோவில்களாகவும் "பரிசுத்த ஸ்தலங்களாகவும் " மாறிவிடக் கூடாதே. நாமே இது குறித்து விசேஷித்த அக்கறை எடுத்துக் கொள்ளுவோமென்று கர்த்தருக்கு தெரிந்திருக்கிறது.*

இன்றைய நாட்களை குறித்து என்ன சொல்லுவோம்? சபையானது எங்கே கூடி வரலாம்? அது வீட்டிலோ, பள்ளிக் கட்டிடத்திலோ,வாடகை இடத்திலோ கூடலாம். கர்த்தர் இதை தம் ஜனத்தாரிடமே விட்டு விட்டார். நாம் எங்கு சபையாக கூடவேண்டும் என்று ஆசைப்படுகிறோமோ அங்கு கூடலாம். கண்டிப்பாக சபை வளர்ந்து எண்ணிக்கையிலே பெரிதாக மாறும்போது கூடி வரக்கூடிய இடத்தின் தேவையும் பெருகும். சபை பெரிதானால், இடம் ஏற்படுத்திக் கொள்ளுமளவுக்கு பொருளாதார வசதியும் வளரும் என்பது யதார்த்தம். சபை தனக்கென்று ஒரு இடத்தை கொள்முதல் செய்து அதில் கட்டிடம் எழுப்பலாம்.

ஆனால் ஒன்றை நினைவில் வைக்கவேண்டியது அவசியம். கட்டிடம், என்றும் சபையாகாது. அது ஒரு பரிசுத்த ஸ்தலமுமல்ல. அது கர்த்தரைத் தொழும் வண்ணமாக மற்றும் வேத ஆராய்ச்சி செய்யும்படியாக, அவருடைய ஜனங்கள் கூடி வரும் ஒரு இடம் அவ்வளவுதான். கூடிவரும் இடம் அவ்வளவு முக்கியம் வாய்ந்தது அல்ல. அந்த இடத்தில் கூடிவரும் கர்த்தருடைய மக்கள் தான் முக்கியமானவர்கள்.ஆகவே இது உங்களை பெரிதாய் வருத்துமளவுக்கு இதில் ஒன்றுமில்லை. கண்டிப்பாக நீங்கள் இருக்குமிடத்தில் சபை ஆரம்பிக்கப்பட்டால் கூடும் இடம் குறித்து பின்பு ஒழுங்கு செய்யலாம். இப்பொழுது நாம் பார்த்த இந்த காரியங்கள் உங்களுக்குப் பிரயோஜனமாய் இருந்திருக்கும் என நான் நம்புகிறேன்.

## ஞானஸ்நானம் பெற தகுதி உடையோர் யார்?

| | | |
|---|---|---|
| 1. | பாவிகள் | (அப்.2:38) |
| 2. | கேள்விப்படுபவர்கள் | (ரோமர் 10:14) |
| 3. | விசுவாசிப்பவர்கள் | (மாற்.16:16) |
| 4. | மனந்திரும்புவர்கள் | (லூக்கா 13:3) |
| 5. | கிறிஸ்துவை அறிக்கை செய்பவர்கள் | (லூக்கா 12 : 8) |
| 6. | கிறிஸ்துவ ஜீவியத்தை வாழ விரும்புவோர் | (I. பேதுரு 2:9) |

# சபையில் பெண்கள்

இம்முறை நமது பாடத்தில் "சபையில் பெண்களின் பங்கு" குறித்து படிக்கப்போகிறோம். நீங்கள் இருக்கும் இடத்தில் சபையை ஆரம்பிப்பது எப்படி என்பதை குறித்து சொல்லும்போது, படிக்கும் நீங்கள் ஒரு முதிர்ந்த பெண்ணாகவோ,அல்லது வாலிப பெண் பிள்ளையாகவோ இருக்கலாம். ஒருவேளை அப்படியிருந்தால், இந்த விஷயத்தில் நீங்கள் என்ன செய்யமுடியும்? நாம் படிக்கவிருப்பது போல, நீங்கள் அநேக காரியங்களை செய்யலாம். ஆனால், முதலாவது, சபை என்று வரும்போது பெண்களின் பங்கு என்ன என்பது குறித்து வேதாகமம் என்ன வலியுறுத்துகிறது என்பது குறித்து பார்ப்போம்.

பெண்கள் விடுதலை இயக்கங்கள் என்றெல்லாம் இருக்கும் இந்த நவநாகரீக உலகில், சபையில் பெண்கள், இந்த பணிகளை மட்டுமே செய்யவேண்டும் என வரையறுக்கப்பட்டுள்ளது என்று சொல்லும்போது சிலர் உடனே கொதித்தெழுந்து நமக்கு, ஆண் ஆதிக்கமுடை யவர்கள், பெண்ணை வெறுக்கிறவர்கள், முதன்மையாக திகழ வேண்டும் என்பதில் மூட ஆர்வம் கொண்ட வர்கள் என்றெல்லாம் முத்திரை குத்திவிடுவார்கள். இது மார்க்க விஷயத்திலும் மற்றும் எல்லா காரியங்களிலும் உண்மையான ஒன்றாயிருக்கிறது. அநேக பிரிவு சபை நண்பர்கள், பெண்களை தலைவர் களாகவும், பிரசங்கிகளாகவும், இன்னும் பல முன்னனி காரியங்களிலும் ஈடுபட அனுமதித்திருக்கிறார்கள். ஆனால், இதில் நாம் நமது விருப்பு, வெறுப்புக்கோ,உலகம் எப்படி நம்மை பார்க்கிற தென்பதற்கோ, அல்லது இன்னும் பல காரியங்களுக்கோ கவலைப் படவேண்டிய அவசியமில்லை. மாறாக, இந்தக் காரியத்தை குறித்து வேதாகமம் என்ன போதிக்கிறது என்பதை மட்டுமே நாம் கருத்தில் கொள்ளவேண்டும். இதில்தான் நாம் ஆர்வமாயிருக்கவேண்டும். வேதாகமம் என்ன போதிக்கிறது என்பதை அறிந்தவுடன் அதையே நாம் இறுதியான ஒன்றாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

தேவன், ஆணையும், பெண்ணையும் சிருஷ்டித்தார் என்பதை புரிந்து கொள்ளுங்கள். அவர் ஒருவரை ஆணாகவும், மற்றொருவரை பெண்ணாகவும் படைத்தார். அதில் ஒருவர் தகப்பனாகவும், மற்றொருவர் தாயாகவும் செயல்படுகிறார்கள். நாம் இதை ஏற்றுக்கொள்கிறோம். அப்படித்தானே? ஒரு பெண், தகப்பனாக ஒரு குழந்தைக்கு இருக்கவேண்டுமென்று நினைப்பதோ அல்லது ஒரு ஆண், குழந்தையை பெற்றெடுக்க வேண்டுமென்று நினைப்பதோ எவ்வளவு அபத்தமாயிருக்கும். தேவன் அவர்களுக்கென்று ஒரு செயல்பாட்டை வரையறுத்திருக்கிறார். அவர்கள் அதை மாற்ற வேண்டுமென்று எவ்வளவு ஆசையும், ஆவலும் கொண்டாலும் அவர்களால் அது முடியாத ஒன்று. உண்மை என்னவென்றால், தேவன் கொடுத்த பங்கை நாம் சந்தோஷத்துடன் செய்ய வேண்டும். ஆணின் பங்கு முக்கியம். அது போலத்தான் பெண்ணின் பங்கும், ஒருவர் இல்லாமல் மற்றொருவர் ஒன்றும் செய்யலாகாது.

வேதாகமம் தேவனை பிதா (தகப்பன்) என்று பறைசாற்றும் போது, அவரை பெண்மைப்படுத்துவது எவ்வளவு அர்த்தமற்ற காரி யம் பாருங்கள். இயேசுவை பெற்றெடுத்த மரியாளின் பங்கை யார் மாற்றி யமைக்க முற்படமுடியும்? இவைகள் எல்லாம் அறிவற்ற காரி யங்கள் மற்றும் இவைகளை மனுஷனுக்கும், மனுஷிக்கும் பிரிவினை உண்டாக்கும் கருவியாய் சாத்தான் மிக மகிழ்ச்சியாய் பயன்படுத்து கிறான். அதன் விளைவாக இருவரும் ஒருவரை யொருவர் மனதளவில் காயப்படுத்து கிறார்கள்.

ஆண், பெண் என்று வரும் போது அநேக காரியங்களில் பாகுபாடின்றி சரிநிகர் சமமாக நடத்தப்படவேண்டும். உலகின் பல பகுதிகளிலும் பிரபலமான மதவட்டாரங்களிலும், பெண் சரியாக நடத்தப்படாமல், பின்னாக தள்ளப்பட்டு, ஆணுக்கு ஒரு விளையாட்டுப் பொருளாகவே நடத்தப்படுகிறாள் என்பது உண்மை. அநேக காரியங்களில் நமது பார்வையிலிருந்தே அவள் அகற்றப் படுகிறாள். ஒன்றுக்கும் உரிமை யில்லை, கடவுளை தொழுமி டத்திற்கு, பிள்ளைகளோடும், கணவனோடும் செல்லக்கூட அனுமதி இல்லை. ஆணானாலும், பெண்ணானாலும் சரி, இப்படி நடத்தப் படுவது எவ்வளவு, வேதனை தரக்கூடியதாய் இருக்கிறது பாருங்கள்.

ஆணையும், பெண்ணையும் குறித்து ஆவிக்குரிய ரீதியில் பரிசீலிக்க வேதாகமத்திற்கு நாம் செல்லும்போது, தேவன் ஒவ்வொருவருக்கும் தனித்துவம் வாய்ந்த பங்குகளை கொடுத்திருக்கிறார் என்பதை காணலாம். இந்த பங்குகள் ஒன்றோடொன்று இணையான முக்கியத்துவம் வாய்ந்தவை. ஆனால், தேவன் ஆணையும், பெண்ணையும், ஒருவருக்கொருவர் எதிராக படைக்கவில்லை; தலைமைக்காகவும், பொறுப்புக்காகவும், ஒருவரோடொருவர் போட்டிபோடக்கூடிய சூழ்நிலையில் அவர்களை தேவன் வைக்கவில்லை.

உதாரணமாக, கர்த்தர் பிரதான கட்டளையை கொடுத்தபோது அவர் முதலாக அப்போஸ்தலரிடம் (எல்லாரும் ஆண்கள்) உலகமெங்கும் போய் சுவிசேஷத்தை எல்லோருக்கும் பிரசங்கிக்க வேண்டுமென்ற கட்டளை கொடுத்தார். (மாற்கு.16:15,16) ஆதித் திருச் சபையை வழிநடத்தவும், பரிசுத்த ஆவியானவரின் வரத்தை பெறவும் அவர்களிடம்தான் வாக்குத்தத்தம் செய்யப்பட்டது.(அப்.2) பிறகு, பவுல் பிராந்திய சபையில் மூப்பருக்கும், உதவிக்காரர்களுக்கும்,தேவையான தகுதிகளை கொடுத்தார் (I.தீமோ.3:தீத்து.1) மீண்டும் ஆண்கள் மாத்திரமே மூப்பராகவும் உதவிக்காரராகவும் செயல்படமுடியும்.

அப்படியென்றால் இவைகளெல்லாம், தேவன் சபையிலோ அல்லது பொதுவாக பெண்களை குறைத்து மதிப்பிட்டிருக்கிறார் என்று பொருள் தருமா? அவள் முக்கியமானவள் அல்ல என்று அர்த்தமாகுமா? கண்டிப்பாக அப்படியல்ல, உண்மையில் பெண்களின்பங்கு மிக முக்கியம். அநேகர் ஒப்புக்கொள்வதை விட அது அதிக முக்கியம் வாய்ந்தது.ஆண்கள் செய்யும் எல்லா வேலையும் செய்தால்தான் அவள் முக்கியமாவாள் என்ற நினைப்பு வரும்போது, அவள் அந்த வேலைகளை செய்யமுடியவில்லை என்கிற போது, உடனடியாக அவளை நாம் மாறுபட்ட கோணத்தில் பார்க்க ஆரம்பிக்கிறோம். அது அவளை அநேகருடைய பார்வையில் மதிப்பு குறையச் செய்கிறது. ஆனால் நாம் பெண்களை அப்படி எவ்வேளையிலும் பார்க்கலாகாது.

தொட்டில் ஆட்டுகிற பெண் உலகாள்கிறாள் என்ற பழமொழி உண்டு. அதாவது பெண், பிள்ளைபெற்று அவர்களை ஒழுங்குபடுத்த இவளுக்குத்தான் அதிக வாய்ப்புண்டு.ஆகவே தான் பிள்ளை மூலம் அவள்

உலகாள்கிறாள் என்கிறார்கள். ஒவ்வொரு பிரதமருக்கும், ஜனாதிபதிக்கும் தலைவருக்கும் அல்லது வேறு யாருக்கும் ஒரு தாயுண்டு.அதில் மிகச் சிறந்தது எதுவென்றால், தேவனின் சித்தப்படி பிள்ளைகளை வளர்த்து அவர்களை கிறிஸ்தவர்களாகவும் தலைவர்களாகவும், சபையில் முக்கியஸ்தர்களாகவும் உண்டாக்கும் வலிமை படைத்தவள் இந்தப்பெண், மற்றும் அவள் இப்படி உலகை நன்மைக்காக மாற்றியமைக்க முடியும்.

பெண்கள் சபையில், பிரசங்கியாகவோ, மூப்பராகவோ, உதவிக்காரராகவோ இருக்கமுடியாதென்பது உண்மைதான். அவள் ஆராதனை வேளையிலும் அமைதலாய் இருக்கவேண்டும்.அதாவது அதிகாரத்தை தன் கையில் எடுத்துக்கொண்டு ஆராதனையை முன்னின்று நடத்த முடியாது.(I.கொரி.14:28; I.தீமோ.2:11,12) ஆனால், இது அவர்கள் சபையில் பாடுவதை தடைசெய்கிறது அல்லது வேத ஆராய்ச்சி வகுப்புகளில் அவர்கள் வினா தொடுக்க தடைசெய்கிறது என்றோ அர்த்தமாகாது.ஆனால், இது அவர்கள் ஆராதனையை அல்லது ஜெபக்கூட்டத்தை நடத்துகிறவரை மதித்து கீழ்ப்படிய வேண்டும் என்றே அர்த்தம் தரும்.

பவுல் தேவனால் அருளப்பட்டு இப்படி எழுதுகிறார். ஆகையால் இளவயதுள்ள விதவைகளிருந்தால், அவர்கள் இவர்களுக்கு உதவி செய்யக்கடவர்கள். சபையானது உத்தம விதவைகளானவர்களுக்கு உதவி செய்ய வேண்டியதாகையால் அந்தப் பாரத்தை அதின்மேல் வைக்கக் கூடாது.(I.தீமோ.5:14) மீண்டும் அவர் இப்படி சொன்னார். முதிர்வயதுள்ள ஸ்திரீகளும் அப்படியே பரிசுத்தத்துக்கேற்றவிதமாய் நடக்கிறவர்களும் , அவதூறு பண்ணாதவர்களும், மதுபானத்துக்கு அடிமைப்படாதவர்களுமாயிருக்கவும், தேவவசனம் தூஷிக்கப்படாதபடிக்குப் பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும், தங்கள் பிள்ளைகளிடத்திலும், அன்புள்ளவர்களும்,தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும், வீட்டில் தரித்திருக்கிறவர்களும், நல்லவர்களும், தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவர்களுமாயிருக்கும்படி, அவர்களுக்குப் படிப்பிக்கத்தக்க நற்காரியங்களைப் போதிக்கிறவர்களுமாயிருக்கவும், முதிர்வயதுள்ள ஸ்திரீகளுக்குப் புத்திசொல்லு. (தீத்து.2:3-5) பேதுரு இப்படியாய் புத்தி சொல்லுகிறார். ''அந்தப்படி மனைவிகளே,உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந் திருங்கள்; அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப்படியாதவர்களாயிருந்தால், பயபக்தியோடு கூடிய

உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக் கொள்ளப் படுவார்கள். மயிரைப்பின்னி, பொன்னா பரணங்களை அணிந்து,உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது. அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றது. இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகளும் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள். அந்தப்படியே சாராள் ஆபிரகாமை ஆண்டவர் என்று சொல்லி, அவனுக்குக் கீழ்ப்படிந்திருந்தாள்: நீங்கள் நன்மை செய்து ஒரு ஆபத்துக்கும் பயப்படாதிருந்தீர்களானால் அவளுக்குப்பிள்ளைகளாயிருப்பீர்கள். அந்தப்படி புருஷர்களே, மனைவி யானவள் பெலவீன பாண்டமாயிருக்கிறபடியினால், உங்கள் ஜெபங் களுக்குத் தடைவராதபடிக்கு, நீங்கள் விவேகத்தோடு அவர்களுடனே வாழ்ந்து, உங்களுடனே கூட அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களானபடியினால் அவர்களுக்குச் செய்ய வேண்டிய கனத்தைச் செய்யுங்கள். மேலும், நீங்களெல்லாரும் ஒருமனப் பட்டவர்களும், இரக்கமுள்ளவர்களும், சகோதர சிநேகமுள்ளவர்களும், மன உருக்கமுள்ளவர்களும், இணக்கமுள்ளவர்களுமாயிருந்து, தீமைக்கு த் தீமையையும், உதாசனத்துக்கு உதாசனத் தையும் சரிக்கட்டாமல், அதற்குப் பதிலாக, நீங்கள் ஆசீர்வா தத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறவர்களென்று அறிந்து ஆசீர்வதியுங்கள். *(I.பேதுரு.3:1-9)*

பவுல், கிறிஸ்துவையும், சபையையும், கணவனுக்கும், மனைவிக்கும் ஒப்பிட்டுப் பேசுகிறார். *''மனைவிகளே, கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறதுபோல, உங்கள் சொந்தப் புருஷருக்குங்கீழ்ப்படியுங்கள். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல, புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான். அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். ஆகையால், சபையானது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறது போல மனைவிகளும் தங்கள் சொந்தப் புருஷர்களுக்கு எந்தக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்திருக்கவேண்டும். '' (எபே.5:22-25)*

நீங்கள் இருக்குமிடத்தைப் பற்றி சிந்திக்கையில் ஒருவேளை நீங்கள் பெண்ணாக இருந்து ஒரு சபையை ஆரம்பிக்க முற்பட்டால், உங்களால் என்ன பங்காற்றமுடியும்? நீங்கள் பலதரப்பட்ட மக்களோடு வேதத்தை படிக்கவேண்டும். யாராவது ஒருவர் தேவனுக்கு கீழ்ப்படிவார்கள் என்ற நம்பிக்கையோடு இதை செய்யவேண்டும். ஒரு பெண்ணாக இருந்து மற்ற பெண்களை மனமாற்றமடையச் செய்தீர்கள் என்றால், அவர்களோடு சேர்ந்து தேவனை ஆராதிக்கலாம். பிறகு ஆண்கள் சபையின் அங்கத்தினராகிற வேளையில், அவர்கள் ஆராதனையை முன்நின்று நடத்தலாம். பெண்கள் மற்றும் சிறு பிள்ளைகளுக்கான வகுப்பில், ஒரு கிறிஸ்தவப் பெண், போதிப்பதற்கு கர்த்தரால் அனுமதிக்கப் பட்டிருக்கிறாள். அவள் தனிப்பட்ட முறையில் ஆண்களுக்கும், பெண்களுக்கும் போதிக்கமுடியும்.

## இயேசுக் கிறிஸ்துவுக்குள் கிடைக்கும் ஆசீர்வாதங்கள்

**ரோமர் 5-ம் அதிகாரத்திலிருந்து...**

1. தேவனிடத்தில் சமாதானம் *(வசனம்.1)*
2. கிருபையில் பிரவேசிக்கும் சிலாக்கியம். *(வசனம்.2)*
3. தேவ மகிமையில் நம்பிக்கையில் மேன்மை பாரட்டல் *(வசன்ம் 2)*
4. உபத்திரவத்திலும் களிகூறுதல். *(வசனம்.4)*
5. உன்னதமான நம்பிக்கை *(வசனம்.5)*
6. தேவனுடைய அளவற்ற அன்பு *(வசனம்.8)*
7. தேவனுடன் ஒப்புரவு *(வசனம்.10,11)*
8. தேவ கோபாக்கினையிலிருந்து விடுதலை *(வசனம்.15,16)*
9. நித்திய ஜீவன் *(வசனம்.17)*
10. நீதிமான்களாக்கப்படுதல் *(வசனம்.19)*

# ஊழியர்களைத் தாங்குவது எப்படி?

இந்தக் கட்டுரையில் ஊழியர்களை தாங்குவதெப்படி? என்பதைக் குறித்து நாம் கற்றுக்கொள்ளலாம். உதாரணமாக நீங்கள் இருக்கும் இடத்தில் ஒரு சபையை தொடங்குவீர்களானால், சிறிது காலத்தில் நீங்கள் உங்கள் பிராந்திய சபையின் ஊழியரை தாங்கக்கூடிய நிலையை எதிர் நோக்குவீர்கள். அந்த சமயத்தில், நீங்கள் செய்ய வேண்டிய தென்ன? அதைக்குறித்து தான் நாம் இப்பொழுது பார்க்க உள்ளோம்.

கொரிந்து சபையின் கிறிஸ்தவர்களுக்கு பவுல் எழுதும்போது, நான் அப்போஸ்தலனல்லவா? நான் சுயாதீனனல்லவா? நம்முடைய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவை நான் தரிசிக்கவில்லையா? கர்த்தருக்குள் நீங்கள் என் கிரியையாயிருக்கிறீர்களல்லவா? நான் மற்றவர்களுக்கு அப்போஸ்தலனா யிராவிட்டாலும் உங்களுக்கல்லவோ அப்போஸ்தலனாயிருக்கிறேன்; கர்த்தருக்குள் நீங்கள் என் அப்போஸ்தல ஊழியத்திற்கு முத்திரையாயிருக் கிறீர்களே. என்னை நியாயம் விசாரிக்கிறவர்களுக்கு நான் சொல்லுகிற மாறுத்தரமாவது; புசிக்கவும், குடிக்கவும் எங்களுக்கு அதிகாரமில் லையா? மற்ற அப்போஸ்தலரும், கர்த்தருடைய சகோதரரும் கேபாவும் செய்கிறதுபோல, மனைவியாகிய ஒரு சகோதரியைக் கூட்டிக்கொண்டு திரிய எங்களுக்கும் அதிகாரமில்லையா? அல்லது கைத்தொழில் செய்யாதிருக்கிறதற்கு எனக்கும், பர்னபாவுக்கும் மாத்திரந்தானா அதிகாரமில்லை? எவன் தன் சொந்தப்பணத்தைச் செல வழித்து, தண்டிலே சேவகம் பண்ணுவான்? எவன் மந்தையை மேய்த்து, அதின் பாலைச் சாப்பிடாதிருப்பான்? இவைகளை மனுஷர் வழக்கத்தின் படி சொல்லுகிறேனோ? நியாயப்பிரமாணமும் இவைகளைச் சொல்லுகிற தில்லையா? போராடிக்கிற மாட்டை வாய் கட்டாயாக என்று மோசேயின் பிரமாணத்திலே எழுதியிருக்கிறதே. தேவன் மாடுகளுக்காகவே கவலையாயிருக்கிறாரோ? நமக்காகத்தான் இதைச் சொல்லுகிறாரோ? உழுகிறவன் நம்பிக்கையோடே உழவும், போரடிக்கிறவன் தான் நம்புகிறதில் பங்கடைவேன் என்கிற நம்பிக்கையோடே போரடிக்கவும் வேண்டியதே. ஆகையால், அது நமக்காகவே எழுதியிருக்கிறது. நாங்கள் உங்களுக்கு ஞான நன்மைகளை விதைத்திருக்க, உங்கள் சரீர நன்மைகளை

அறுத்தால் அது பெரிய காரியமா? மற்றவர்கள் உங்களிடத்திலே இந்த அதிகாரத்தைச் செலுத்தினால், அவர்களிலும் நாங்கள் அதிகமாய்ச் செலுத்தலாமல்லவா? அப்படியிருந்தும், கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு யாதொரு தடையும் உண்டாகதபடிக்கு நாங்கள் இந்த அதிகாரத்தைச் செலுத்தாமல் எல்லாப்பாடும் படுகிறோம். ஆசாரிய ஊழியஞ் செய்கிறவர்கள் தேவாலயத்திற்குரியவைகளில் புசிக்கிறார்களென்றும், பலிபீடத்தை அடுத்துப் பணிவிடை செய்கிறவர்களுக்குப் பலிபீடத்திலுள்ளவைகளில் பங்கு உண்டென்றும் அறியீர்களா? அந்தப்படியே சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாகவேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார். அப்படியிருந்தும், நான் இவைகளில் ஒன்றையும் அநுபவிக்கவில்லை; இப்படி எனக்கு நடக்கவேண்டுமென்று இவைகளை நான் எழுதுகிறதுமில்லை.என் மேன்மை பாராட்டலை ஒருவன் அவத்த மாக்குகிறதைப்பார்க்கிலும் சாகிறது எனக்கு நலமாயிருக்கும். சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும், மேன்மை பாராட்ட எனக்கு இடமில்லை.அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது. சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ,நான் உற்சாகமாய் அப்படிச்செய்தால் எனக்கு பலன் உண்டு. உற்சாகமில்லாதவனாய்ச் செய்தாலும், உக்கிராண உத்தியோகம் எனக்கு ஒப்பிவிக்கப்பட்டிருக்கிறதே.ஆதலால் எனக்குப் பலன் என்ன? நான் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கையில் அதைப்பற்றி எனக்கு உண்டாயிருக்கிற அதிகாரத்தை முற்றிலும் செலுத்தாமல் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை செலவில்லாமல் ஸ்தாபிப்பதே எனக்குப் பலன். *(I.கொரி.9:1-18).*

இதில், பவுல் தான் அப்போஸ்தலனாய் இருப்பதாலும், கர்த்தருடைய ஊழியக்காரனாய் இருப்பதாலும் தனக்குள்ள சுயாதீனத்தை வெளிப்படுத்துகிறார். சுவிசேஷத்தை பிரசங்கிப் பதற்காக சகோதரரிடமிருந்து உதவியைப் பெற்றிருக்கலாம். ஆனால், அவர் அப்படிச் செய்யவில்லை.அந்தச் சூழ்நிலையில் அவர் அதை சிறந்ததாக கருதவில்லை. இருந்தாலும் மற்ற சமயங்களில் அவர் சகோதரரிடமிருந்து உதவியை ஏற்றுக் கொண்டார். மேலும், பிலிப்பியரே சுவிசேஷத்தின் ஆரம்பத்திலே நான் மக்கெதோனியாவிலிருந்து புறப்பட்டபோது கொடுக்கல், வாங்கல் காரியத்தில் நீங்கள் மாத்திரம் எனக்கு உடன்பட்டதேயல்லாமல், வேறொரு சபையும் உடன்படவில்லை என்று நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். நான் தெசலோனிக்கேயி

விருந்த போதும் என் குறைச்சலை நீக்கும்படி நீங்கள் இரண்டொருதரம் அனுப்பினீர்கள். உபகாரத்தை நான் நாடாமல்,உங்கள் கணக்குக்குப் பலன் பெருகும்படியே நாடுகிறேன். எல்லாம் எனக்கு கிடைத்தது. பரிபூரணமும் உண்டாயிருக்கிறது. உங்களால்அனுப்பப்பட்டவைகளைச் சுகந்த வாசனையும் தேவனுக்குப் பிரியமான உகந்த பலியுமாக எப்பாப் பிரோதீத்து வின் கையில் வரப்பற்றிக்கொண்டபடியால் நான் திருப்தியடைந்திருக் கிறேன். *(பிலி.4:15-18)*என்றான்.

பவுல், ஒரு கூலியாளுக்கு அவனுடைய கூலியைத் தருவது மிகவும் நியாயமானது என்று காட்டுகிறார். மேலும், அவர் விவசாயி, திராட்சத் தோட்டக்காரர், மேய்ப்பர் ஆகியோர் தனது விளைச்சலின் மூலம் எவ்வாறு ஜீவனம் செய்கிறார்கள் என்பதை எடுத்துக்காட்டி விளக்கமளித்திருக்கிறார். மேலும் அவர் ஆசாரியர்கள், பலிபீடத்திற்கு கொண்டுவரப்படும் பலிகளில் எவ்வாறு பங்கேற்றனர் என்பதையும் காட்டுகிறார். பிறகு, சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்குச் சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாகவேண்டும் என்று முடிவுரை கூறுகிறார். அதாவது,ஊழியரை அவருடைய ஊழியத்தில் தாங்கவேண்டும்.

வேறொரு சமயத்தில் பவுல் எழுதுகிறதாவது "போரடிக்கிற மாட்டை வாய்க்கட்டாயாக என்றும், வேலையாள் தன் கூலிக்குப் பாத்திரனா யிருக்கிறான் என்றும் வேதவாக்கியம் சொல்லுகிறதே." என்று *(I.தீமோ.5:18)* இதில், கர்த்தருடைய ஊழியத்திற்குத் தன்னை முழுமையாய் ஒப்புக்கொடுத்த மூப்பர்கள் இரட்டிப்பான கனத்திற்கு பாத்திரராகிறார்கள் என்பதையும் சுட்டிக்காட்டுகிறார். "நன்றாய் விசாரணைசெய்கிற மூப்பர்களை, விசேஷமாகத் திருவசனத்திலும், உபதேசத்திலும் பிரயாசப் படுகிறவர்களை, இரட்டிப்பான கனத்திற்கு பாத்திரராக எண்ணவேண்டும். *(I.தீமோ.5:17)*

எனவே,கர்த்தருக்கென்று பணிசெய்பவர்களை தாங்குவதற்கு வேதாகமம் அதிகாரம் அளித்துள்ளது என்பது மிகத்தெளிவாகத் தெரிகிறது. அந்தபணி செலவில்லாமல் செய்யக்கூடியதுதான். இருந்தாலும் பணி செய்கிறவர், மற்றவைகளின் மூலம் உதவியை பெறலாம். ஆனால், கர்த்த ருடைய் பணியில் முழுமையாக தன்னை ஒப்புக்கொடுத்தவர்.அந்த சபை யின் உதவியைப் பெறுவதிலோ, அல்லது சபையில் பகுதிநேர ஊழியம் செய் பவர் கூட, பகுதிநேர உதவியை பெறுவதிலோ நிச்சயமாக எந்தத் தவறும் இல்லை.

எல்லாகாலத்திலும் இருந்தது போல, இன்றைக்கும் சம்பளத்திற்கு வேலையாட்கள் உண்டு என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இப்படிப்பட்டவர்கள் விசுவாசத்தினாலோ அல்லது கர்த்தருக்கு ஊழியம் செய்ய வேண்டுமென்ற வாஞ்சையினாலோ அதைச் செய்யாமல், சம்பளத்திற்காக மாத்திரமே அதைச் செய்கிறார்கள். இவர்கள், ஊதியத்தைப் பெற என்னென்ன பிரசங்கிக்கவேண்டுமோ அதை பிரசங்கிப்பவர்கள். மேய்ப்பனாயிராதவனும்,ஆடுகள் தனக்குச் சொந்தமல்லாதவனுமான கூலியாள் ஓநாய் ஆடுகளைப்பீறி அவைகளைச் சிதறடிக்கும்,கூலியாள் கூலிக்காக வேலை செய்கிறவனாகையால் ஓடிப்போகிறான்.ஆடுகளுக்காக அவன் கவலைப் படான். (யோவா.10:12,13) அதாவது, வேலையாள் உண்மையும் உத்தமுமானவனல்ல. அவன் தன் வேலையை நம்புகிறதில்லை. அவன் பணத்திற்காக மாத்திரமே வேலை செய்கிறானேயன்றி கர்த்தருக்காக அல்ல. இவ்விதமான ஊழியரின் நிமித்தம் எச்சரிக்கையாயிருப்பது அந்தந்த பிராந்திய சபையைப் பொறுத்ததாகும்.அவர் எப்படிப்பட்டவர் என்பது வெகுசீக்கிரம் தெரிந்துவிடும்.என்றாலும், அதற்குள்ளாக அநேக ஆபத்துகள் நிகழ்ந்துவிடலாம்.

இப்பொழுது நீங்கள் இருக்கும் இடத்தில் ஒரு ஊழியரைத் தாங்குவதைக் குறித்து சிந்தித்துக்கொண்டிருப்பீர்களானால்,எவ்வாறு அவரை தேர்ந்தெடுக்கப்போகிறீர்கள்? அவர் சபையில் ஒருவராகவும் இருக்கலாம் அல்லது நாட்டின் வேறுபகுதியிலிருந்து வந்தவராகவும் இருக்கலாம். முதலில், பகுதிநேர ஊழியரைத் தாங்கப்போகிறீர்களா அல்லது முழுநேர ஊழியரைத் தாங்கப்போகிறீர்களா? அதாவது, பகுதிநேர உதவியைத் தரப்போகிறீர்களா? அல்லது முழுமையான உதவியைத் தரப்போகிறீர்களா? அடுத்ததாக, மாதாந்திர உதவியாக எவ்வளவுத் தர இயலும்.உங்களிடம் போதுமான அளவு இல்லையென்றால், ஒருவேளை வேறு ஒரு இடத்திலுள்ள ஒரு கிறிஸ்துவின் சபையோ அல்லது கிறிஸ்துவின் சபைகளோ உங்களுக்கு தற்காலிமாக உதவலாம்.

உங்களுக்குத் தேவை ஒரு இளம் ஊழியரா அல்லது மூத்த ஊழியரா? உங்களுக்கு தேவை ஒரு தனிமனிதனா அல்லது குடும்பஸ்தரா? உங்களுக்கு அனுபவமிக்கோர் தேவையா?எவ்வளவு கால அனுபவம்? அவர் எங்கே வாழ்ந்தவர் என்ன தொழில் செய்துகொண்டிருந்தவர் என்பதை கருத்தில்

கொள்வது மிகவும் நன்று.அவர் ஒருவிசுவாசமுள்ள கிறிஸ்தவரா? தனது கடமைகளை சரிவர செய்து முடிப்பவரா? அவர் ஒரு நல்ல நேர்மையான மனிதரா? அவரைத் தேர்வு செய்யும் முன், அவரது பிரசங்கத்தை சிறிது கேட்பது நல்லது. எப்படிப்பட்ட ஊழியர் அவர்? அவரால் மக்களோடு சேர்ந்து செயல்பட முடியுமா? அவர் அறிவுரைகளை ஏற்றுக்கொள்பவரா. அவர் கிறிஸ்துவினிடம் மக்களை கொண்டுவர அவரால் முடியுமா? அவர் ஒரு தலைமைத்துவத் தன்மை கொண்டவரா?

எந்த மட்டும் அவர் கொள்கைகளில் பற்றுடையவராகவும், முற்றிலும் அதின்படி நடப்பவராகவும் இருக்கிறார். பல்வேறு கொள்கை வெளிப் பாடுகளில் அவர் எப்படி இருக்கிறார் என்பதை நீங்கள் அறிந்து கொள்வது அவசியம்.

அவருக்கும் அவரது குடும்பத்திற்கும் எவ்வளவு உதவித் தேவைப்படும்? உங்களால் அவ்வளவு தரமுடியாவிட்டால் நீங்கள் அவரை அழைக்க இயலாது. உங்களால் அவரைத் தாங்க முடியுமானால் வேதாகமம் போதிக்கிறதுபோல அவர் உங்களது எதிர்பார்ப்புக்கேற்றவராய் இருப்பாரானால், நீங்கள் அந்த பணியைத் தொடரலாம்.

## நினைவு கூரும்படி இதைச் செய்யுங்கள்.

*(கர்த்தருடைய பந்தியில்)* I.கொரி.11:24,25

1. இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவும் வந்தார் என்று நினைவுகூரும்படி... *(லூக்கா 19:10)*
2. சிலுவையில் அவர் பட்டபாடுகளை நினைவு கூரும்படி.... *(மத்.26 :36)*
3. அவரின் உயிர்த்தெழுதலை நினைவு கூரும்படி.... *(லூக்ா 24 : 1-6)*
4. அவர் பரமேறிச் சென்றதை நினைவு கூரும்படி.... *(அப்.1: 9-11)*
5. அவரது வருகையை நினைவு கூரும்படி.... *(II.தெச. 1: 7,8)*

# தேவையிலிருப்போருக்கு உதவுவது எப்படி?

இப்பொழுது நாம் இந்தப் பாடத்தில், ஒரு பிராந்திய சபை சம்பந்தப்பட்ட மற்றொரு காரியத்தை அதாவது, "தேவையிலிப்போருக்கு உதவுவது எப்படி?" என்று பார்க்க உள்ளோம்.

தங்களுடைய பாவங்களிலிருந்து இரட்சிக்கப்படும்படியாய், எல்லா மனிதருக்கும் கர்த்தர் தேவையென்பது நமக்குத்தெரியும். ஆனால், ஒரு பிராந்திய சபை தொடங்கப்பட்டு வளர ஆரம்பித்து விட்டால் அப்பிராந்திய சபையில், சரீரப்பிரகாரமான தேவையிலிருப்பவர்கள் இருப்பார்கள். அப்பட்டணத்திலும், தேவையிலிருப்போர் இருக்ககூடும். நற்செய்தியை அறிவிப்பதுதான், சபையின் பிரதான வேலையாக இருந்தபோதிலும், சபையானது மனிதர்களைக் கொண்டதாக இருக்கிறபடியால், சபைக்கு வெளியே இருக்கிற மக்களோடும் தொடர்பு கொண்டாக வேண்டியிருப்பதால், சபையானது கண்களை இறுக்கி மூடிக்கொண்டு, மக்களுடைய சரீரத் தேவைகளைக் காணாமலிருக்க முடியாது.

இயேசு, "அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமை பொருந்தினவராய்ச்சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார். அப்பொழுது சகல ஜனங்களும் அவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும், வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறது போல அவர்களை அவர் பிரித்து, செம்மறியாடுகளைத் தமது வலது பக்கத்திலும் வெள்ளாடுகளைத் தமது இடது பக்கத்திலும் நிறுத்துவார். அப்பொழுது, ராஜா தமது வலது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து; வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தை சுதந்தரித்துக்கொள்ளுங்கள். பசியாயிருந்தேன்.எனக்குப் போஜனங் கொடுத்தீர்கள், தாகமாயிருந்தேன்,என் தாகத்தைத் தீர்த்தீர்கள், அந்நியனாயிருந்தேன்,என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள், வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள், வியாதி யாயிருந்தேன்,

என்னை விசாரிக்க வந்தீர்கள், காவலிலிருந்தேன், என்னைப் பார்க்க வந்தீர்கள் என்பார். அப்பொழுது நீதிமான்கள் அவருக்குப் பிரதியுத் தரமாக,ஆண்டவரே, நாங்கள் எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராகக் கண்டு உமக்குப்போஜனங் கொடுத்தோம்? எப்பொழுது உம்மை அந்நியராக கண்டு உம்மைச் சேர்த்து கொண்டோம்? எப்பொழுது உம்மை வஸ்திரமில்லாதவராகக்கண்டு உமக்கு வஸ்திரங்கொடுத்தோம்? எப்பொழுது உம்மை வியாதியுள்ளவராகவும் காவலிலிருக்கிறவராகவும் கண்டு, உம்மிடத்தில் வந்தோம் என்பார்கள். அதற்கு ராஜா பிரதியுத்தரமாக மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன் என்பார்.அப்பொழுது, இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர், சபிக்கப்பட்ட வர்களே, என்னைவிட்டு பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள். பசியாயிருந்தேன்,நீங்கள் என்னைச் சேர்த்துக்கொள்ளவில்லை வஸ்திரமில்லாதிருந்தேன்.எனக்குப் போஜனங் கொடுக்கவில்லை, தாகமாயிருந்தேன்,நீங்கள் என் தாகத்தைத் தீர்க்கவில்லை அந்நியனா யிருந்தேன், நீங்கள் எனக்கு வஸ்திரங் கொடுக்கவில்லை. வியாதியுள்ளவனாயும், காவலிலடைக்கப்பட்டவ னாயும் இருந்தேன், நீங்கள் என்னை விசாரிக்க வரவில்லையென்பார். அப்பொழுது, அவர்களும் அவருக்குப் பிரதியுத்திரமாக, ஆண்டவரே , உம்மைப் பசியுள்ளவராகவும், தாகமுள்ளவராகவும், அந்நியராகவும் , வஸ்திரமில்லாதவராகவும், வியாதிப்பட்டவராகவும், காவலிலடைக்கப் பட்டவராகவும் நாங்கள் எப்பொழுது கண்டு உமக்கு உதவி செய்யா திருந்தோம் என்பார்கள். அப்பொழுது அவர் அவர்களுக்குப் பிரதியுத்தர மாக மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்யாதிருந்திர்களோ அதை எனக்கு செய்யாதிருந்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன் என்பார். அந்தப்படி, இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார்.''*(மத்.25:31-46)*.

புதிய ஏற்பாட்டில் உள்ள மத்தேயு, மாற்கு, லூக்கா போன்ற நூல்களை நீங்கள் படித்திருந்தால், இயேசு இரக்கமுள்ளவராயும், சரீரத் தேவையிலிருந்தவர்களுக்கு உதவ வேண்டுமென்ற எண்ணமுடைய

வராகவும் இருந்தார் என்பது உங்களுக்குத் தெரியும், மேலே நாம் இப்பொழுது பார்த்த பகுதியில் இயேசு, அவருடைய ஜனங்கள், சரீரத் தேவையுள்ளவர்களிடம் கரிசனையும், அனுதாபமும் உள்ளவர்களாக இருக்க வேண்டுமென்றார் என்பதைக் காணமுடியும் என நினைக்கிறேன். தேவையிலிருப்போருக்கு உதவுவதன் மூலம் உண்மையில் நாம் அவருக்கு உதவிசெய்கிறோம் என்று கூறுகிறார். இதையே வேறுவிதமாகச் சொன்னால், சரீரத் தேவையிலிருப்போரை நாம் உதாசீனம்செய்தால், கிறிஸ்துவை நாம் புறக்கணிக்கிறோம் என்றுபொருள். இப்பொழுது நாம் வாசித்தபடி தேவையிலிருப்போர் விஷயத்தில் நாம் என்ன செய்கிறோம் என்பதைச் சார்ந்துதான், நமது ஆத்துமாவின் முடிவு இருக்கும்.

சபையானது ஸ்தாபிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில், பெந்தெகொஸ்தே பண்டிகையைக் கொண்டாடும்படியாக யூதர்கள் உலகம் முழுவதிலும் இருந்து எருசலேமுக்கு வந்திருந்தனர் என்று வேத வசனம் கூறுகிறது. அப்பொழுது அங்கே சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட்டதினால் மூவாயிரம் பேர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, சுவிசேஷம் மீண்டும், மீண்டும் பிரசங்கிக்கப்படுவதைக் கேட்கும் படியாகவும், ஒருவரோடொருவர் ஐக்கியம் ஏற்படுத்திக் கொள்வதற்காகவும் அங்கே தங்க நேர்ந்த சமயத்தில், அச்சகோதரர்கள் சில தேவைகளை உணர ஆரம்பித்தனர். அவர்களின் சரீரத் தேவைகளை உள்ளூர் சகோதரர்கள் சந்தித்து, நிறைவேற்றினர். இது குறிதது வேதாகமம், விசுவாசிகளெல்லாரும் ஒருமித்து சகலத்தையும் பொதுவாய் வைத்து அநுபவித்தார்கள். காணியாட்சி களையும் ஆஸ்திகளையும் விற்று, ஒவ்வொருவனுக்கும் தேவையானதற்குத்தக்கதாக அவைகளில் எல்லாருக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள் என்று கூறுகிறது. (அப்.2:44,45) பின்பு ஒரு சமயம் இப்படிப்பட்ட சூழ்நிலையில் நாம் இவ்விதம் வாசிக்கிறோம். ''விசுவாசிகளாகிய திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுமுள்ளவர்களாயிருந்தார்கள். ஒருவனாகிலும் தனக்குள்ள வைகளில் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை, சகலமும் அவர் களுக்குப் பொதுவாயிருந்தது. கர்த்தராகிய இயேசுவின் உயிர்த்தெழுதலைக் குறித்து அப்போஸ்தலர்கள் மிகுந்த பலமாய்ச் சாட்சிக்கொடுத்தார்கள், அவர்களெல் லார் மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது. நிலங்களையும், வீடுகளை யும் உடையவர்கள் அவைகளை விற்று, விற்கப்பட்ட வைகளின் கிரயத்தைக் கொண்டு வந்து, அப்போஸ்தலருடைய பாதத்திலே வைத்தார்கள்.

அவனவனுக்குத் தேவையானதற்குத்தக்கதாய் பகிர்ந்து கொடுக்கப் பட்டது,அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை. (அப்.4:32-35) இங்கே கிறிஸ்தவர்கள்,ஒருசாதரணச் சூழ்நிலையில், தங்களுடைய சொத்து, சுகங்களை விற்று, தங்களுக்குள் பங்குபோட்டி ருக்கமாட்டார்கள்.ஆனால், அங்கே ஒரு விசேஷ தேவை இருந்தது. அந்த விசேஷத் தேவையினிமித்தம் அவர்கள் அப்படிச் செய்தனர். செய்த எல்லாவற்றையும் அவர்கள் மனமுவந்து செய்தனர்.

இந்தக்காலகட்டத்தில், அப்போஸ்தலர்களும், சீஷர்களுக்கு உதவுவதில் ஈடுபட்டனர். அந்நாட்களிலே, சீஷர்கள் பெருகினபோது கிரேக்கரானவர்கள் தங்கள் விதவைகள் அன்றாட விசாரணையில் திட்டமாய் விசாரிக்கப்படவில்லையென்று எபிரெயருக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள்.அப்பொழுது பன்னிருவரும் சீஷர் கூட்டத்தை வரவழைத்து,நாங்கள் தேவ வசனத்தைப் போதியாமல், பந்திவிசாரணை செய்வது தகுதியல்ல. ஆதலால் சகோதரரே, பரிசுத்த ஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழுபேரை உங்களில் தெரிந்து கொள்ளுங்கள், அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம். நாங்களோ ஜெபம்பண்ணுவதிலும், தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் தரித்திருப்போம் என்றார்கள் (அப்.6:1-4) என வாசிக் கிறோம். அங்கே அப்போஸ்தலர்கள் 12 பேர் மட்டுமே இருந்தனர்; ஆனால், சீஷர்களோ அநேகம் பேர் இருந்தனர். பரிசுத்த ஆவியின் வல்லமை அப்போஸ்தலர்கள் குறிப்பிட்ட சில காரியங்களைச் செய்யும்படியாய் அவர்களுக்கு கொடுக்கப்பட்டது. அவர்கள் ஜனங்களின் சரீரத் தேவையைக் குறித்து கரிசனையுள்ளவர்களாயிருந்தபோது, இக்காரியத்தை செய்ய அநேகர் இருந்தார்கள்.ஆகையால் கர்த்தர் இவர்கள் செய்யவேண்டும் என எதிர்பார்த்த காரியங்களை செய்யமுடிந்தது. அப்போஸ்தலரும் அதையே செய்தார்கள்.

I.கொரி. 16:1,2ல் கலாத்தியா மற்றும் கொரிந்துவிலுள்ள சகோதரர் களிடமிருந்து எருசலேமில் உள்ள ஏழைப் பரிசுத்தவான்களுக்கு பணம் சேர்க்கிறார். பிறகு, அவர் எழுதும்போது,ஒரு சபையில் விதவைகள் இருந்தால் அவர்களுடைய குடும்பத்தார் அவர்களை கவனித்துக் கொள்ளவேண்டும். ஆனால் அந்த விதவைக்கு உதவும் படியாய் ஒருவரும்

இல்லையானால், தன்னுடைய தேவையைத் தானே சந்தித்துக்கொள்ள முடியாதநிலை இருந்தது. அறுபதும், அதற்குமேற்பட்ட வயதுடையவர்களாயிருந்து, விசுவாசமுடையவராயிருந்தால், அப்பொழுது, சபையானது அவர்களுக்கு உதவி செய்யவேண்டும். (I.தீமோ.5) அதே சமயத்தில், சபைக்கு அந்த பாரத்தை கொடுப்பதற்கு முன்பாக, இந்த வசனம் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவேண்டும். "ஒருவன் தன் சொந்த ஜனங்களையும், விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற் போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும்,அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான். (I.தீமோ.5:8) வேறொரு சமயத்தில் பவுல் ஒருவன் வேலை செய்ய மனதில்லாதிருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று நாங்கள் உங்களிடத்தில் இருந்தபோது உங்களுக்கு கட்டளையிட்டோமே. (II.தெச.3:10) என்று கூறியுள்ளார்.

இப்பொழுது,ஒரு பிராந்திய சபையில், இளவயதுள்ளவர்களாக அல்லது முதியவர்களாக,சிலரோ அல்லது அநேகரோ இருந்தால், தேவையிலிருப்போருக்கு, அதாவது,அவர்கள் உதவிக்குப்பாத்திரவான்களாயிருந்தால் சபையானது உதவவேண்டும். ஒருவேளை, அவர்கள் தற்காலிகமாக வேலையை இழந்தவராக இருக்கலாம், தீவிபத்தில் வீட்டைப் பறிகொடுத்தவராக இருக்கலாம் அல்லது இப்படிப்பட்ட காரணங்கள் வேறு ஏதாவது உடையவராக இருக்கலாம். ஆனால், பிராந்திய சபை அதன் பொருளாதார நிலைக்கேற்பத் தான் கொடுக்க முடியும். சபையின் அங்கதி னர்கள்,ஏதாவதொரு அவசரமான, திடீரென்று ஏற்பட்ட தேவையை தவிர மற்றவைகளுக்கு சபை உதவ வேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடாது. மற்ற சபையாரிடம் சிலவற்றிற்கு உதவிகோருதல் என்று பார்க்கும்போது, அது ஜீவனா அல்லது மரணமா என்ற சூழ்நிலை வரும்போதுதான் அப்படிச் செய்யவேண்டும். சபையிலிருக்கும் சகோதரருக்கோ அல்லது சபையைச் சாராத ஒரு நபருக்கோ உதவி செய்கிறபோது, அது ஜெபத்தோடும், சபையின் பெயராலும் தான் செய்யப்பட வேண்டும்.அப்படிச் செய்வது, அச்சமுதாயத்தில் ஒரு பிராந்திய சபையின் மரியாதையை உயர்த்தும், தனிப்பட்டவர்களும் தங்களால் முடியும்போது தனிப்பட்ட முறையில் பிறருக்கு உதவி செய்யலாம்.

# தேவனுடைய வேலையை ஒருமித்து செய்வதெப்படி?

வேதாகமம் ஒற்றுமையைக் குறித்தும், கிறிஸ்துவுக்குள் நாம் ஒன்றாய் இருக்கவேண்டும் என்பதைக் குறித்தும் போதிக்கிறது என்பதை நாம் அனைவரும் புரிந்து கொள்ளவேண்டுமென்பதே என் ஆசை.

கிறிஸ்து ஒரே சபையைக் கட்டினார். அந்த சபையை வளர்க்கும்படி நம்மிடத்தில் எதிர்பார்க்கிறார். யோவான். 17:20-23 வசனங்களில், அப்போஸ்தலர்களுக்காகவும், அவர்களால் மனமாற்றம் அடையப் போகிறவர்களுக்காகவும் மற்றும் அப்போஸ்தலர்களுக்குப் பின் கிறிஸ்துவுக்கு கீழ்ப்படியப் போகிறவர்களுக்காகவும் இயேசு ஜெபித்தார். நான் இவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறதுமல்லாமல், இவர்களுடைய வார்த்தையினால் என்னை விசுவாசிக்கிறவர்களுக்காகவும் வேண்டிக் கொள்கிறேன். அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காக, நீர் என்னிலேயும் நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெல்லாரும் நம்மில் ஒன்றா யிருக்கும்படி, நீர் எனக்குத் தந்த மகிமையை நான் அவர்களுக்குக் கொடுத்தேன். ஒருமைப்பாட்டில் அவர்கள் தேறினவர்களாயிருக்கும் படிக்கும், என்னை நீர் அனுப்பினதையும், நீர் என்னில் அன்பாயிருக் கிறதுபோல அவர்களிலும் அன்பாயிருக்கிறதையும் உலகம் அறியும் படிக்கும், நான் அவர்களிலும் நீர் என்னிலும் இருக்கும்படி வேண்டிக் கொள்கிறேன் என்றார்.

கர்த்தருடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, ஒற்றுமையாய் இருக்கிற தேவ ஜனங்களைக் காட்டிலும் அருமையானது வேறொன்றுமில்லை. அதாவது இரட்சிக்கப்பட்டு, ஒரே சபையில் அங்கத்தினராயிருந்து, கர்த்தருடைய நாமத்தைத் தரித்துக்கொண்டு, கர்த்தருக்காய் ஒருமித்து வேலைசெய்து, அவரைத் தொழுதுகொண்டு, அவருக்கு உண்மையாய் இருக்கவேண்டுமென்பதே அக்காரியம். கொரிந்துவிலுள்ள கிறிஸ்தவர் களுக்கு பவுல் எழுதுகையில், சகோதரரே, நீங்களெல்லாரும் ஒரே காரியத்தைப் பேசவும், பிரிவினைகளில்லாமல் ஏக யோசனையும் உள்ளவர்களாய்ச் சீர்பொருந்தியிருக்கவும் வேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களுக்குப் புத்தி சொல்

லுகிறேன்.(I.கொரி.1:10) தாவீது இதைக் குறித்து நீண்ட நாட்களுக்கு முன்பே கூறுகையில், ''இதோ சகோதரர் ஒருமித்து வாசம் பண்ணுகிறது, எத்தனை நன்மையும் எத்தனை இன்பமுமானது.'' (சங்.133:1)என்றான். ஒற்றுமையாய் இருப்பது மிகுந்த அருமையானதாயிருக்கிறது. ஆனால் பிரிவினையோ அசிங்கமும்,அழிவுமானதாயிருக்கிறது. கிறிஸ்து கூறுகையில், இயேசு அவர்கள் சிந்தனைகளை அறிந்து,அவர்களை நோக்கி, தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்தப் பட்டணமும் எந்த வீடும் நிலை நிற்கமாட்டாது.(மத்.12:25) என்று விளம்புகிறார். பவுல் கொரிந்து சபையிலிருந்த பிரிவினையைக் கண்டனம் பண்ணும்போது அதன் அங்கத்தினர்களைப் பார்த்து, கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா உங்களுக்காகச் சிலுவையிலறையப்பட்டான்? பவுலின் நாமத்தினாலேயா ஞானஸ்நானம் பெற்றீர்கள்? என்று கேட்கிறார்.(I.கொரி.1:13) ஒவ்வொரு கேள்விக்கும் இல்லை என்பதுதான் பதில் என்று அவர்களுக்குத் தெரியும். ஆனால் பவுல் இங்கு சொல்ல விரும்புவதெல்லாம் நாம் மனுஷரைப் பின்பற்றாமல்,கிறிஸ்துவைப் பின்பற்றவேண்டும் என்பதே. ரோமாபுரியிலுள்ள பரிசுத்தவான் களுக்கு பவுல் எழுதும்போது அன்றியும் சகோதரரே நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய்ப் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைக்குறித்து எச்சரிக்கையாயிருங்கள். அவர்களை விட்டு விலகவேண்டுமென்று உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன். அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியஞ்செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியஞ்செய்து, நயவசனிப்பினாலும் இச்சகப் பேச்சினாலும், கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள். (ரோமர்.16:17,18) என்று கூறுகிறார்.

ஒரு பிராந்திய சபையில் சிலவேளைகளில் சகோதரர்கள் ஒருவரோடொருவர் ஒத்துப்போவதில்லை.ஒருவேளை இப்பிரச் சனை உபதேசக்கோட்பாடுகளால் எழுவதாக இருக்கலாம்.ஆனால் பெரும் பாலும், ஒரு தனிநபரைக் குறித்தோ, அல்லது சிறு, சிறு காரியங் களைக் குறித்தோ, அல்லது பொறாமையினாலோ, பகைமையினாலோ வருகிறது. சில சமயங்களில் யார் பிரசங்கிக்க வேண்டுமென்பதிலும் யார் அநேக ருடைய கவனத்தை ஈர்க்கிறார்கள் என்பதிலும், மேலும் இதைப் போன்ற காரியங்களில் பிரச்சனை எழும்புகிறது.இது கவலைக்குரியதாயி ருக்கிறது. சபையின் அலுவல்களைத் தடுப்பதற்கு இது ஒரு காரணமாகவும்

மற்றும் சபையின் அங்கத்தினரல்லாதவர்கள் அங்கத்தினர்களுக்குள்ளே இப்பிரச்சினையைக் காணும்போது சபைக்கு மரியாதைக் குறைவை ஏற்படுத்து கிறதாகவும் இருக்கிறது. அங்கத்தினர்களிடையே பிரிவினை இருக்கும் போது மக்களைச் சந்திப்பது முடியாத காரியமாய் போகிறது. நாம் தேவனை நேசிக்கவும் ஒருவரையொருவர் நேசிக்கவும், ஒருவருக்கொருவர் அன்பு பாராட்டவும், உதவவும், அங்கத்தினர்களுக்கெல்லாம் ஜெபிக்கவும் வேண்டுமென்று தேவன் எதிர்பார்க்கிறார்.

சில நேரங்களில்,ஒரு குறிப்பிட்ட பகுதிகளில் கிறிஸ்துவின் சபைகள் ஒன்றோடொன்று ஒத்துப்போவதில்லை. அவர்கள் கூட்டாகச் சேர்ந்து ஒரு மனதாய் ஊழியம் செய்வதும் இல்லை. சுவிசேஷக் கூட்டங்களாலும் சரி, அல்லது மற்ற நற்காரியங்களாலும் சரி ஒருவருக்கொருவர் உதவியாயிருப்பதுமில்லை. பிரசங்கியார்கள் இக்காரியங்களில் சிலவேளை மோசமாக செயல்படுவதுமுண்டு. அவர்கள் ஒருவரோடொருவர் போட்டி போடுவதைப் போன்று இது அமைகிறது. இது தீமையும், தவறானதுமாகும். இப்படிப்பட்ட பிரச்சனைகள் நிறைந்திருக்கும்போது சபையானது எப்படித்தான் வளரும்? மாறாக, இப்பகுதியிலுள்ள சபைகளும் மற்றும் பிரசங்கியார்களும் ஒருவரோடொருவர் ஐக்கியம் கொண்டு, ஒருவருக்கொருவர் உதவிசெய்து, மற்றவர்களுடைய சுவிசேஷக் கூட்டங்களில் கலந்துகொண்டு, தங்களால் இயன்ற உதவியை செய்யவேண்டுமென்றே தேவன் அவர்களிடத்தில் எதிர்பார்க்கிறார்.ஒரு பிராந்திய சபை, மற்றொரு பிராந்திய சபை என்ன செய்யவேண்டும், என்ன செய்யக்கூடாதென்றும் கட்டளையிட அதிகாரமில்லை என்பது உண்மை தான். ஆனால், மற்ற பிராந்திய சபையினுடைய சுதந்திரத்தை ஒரு பிராந்திய சபை புரிந்து கொள்ளும் வரை இரண்டு பிராந்திய சபைகளும் ஒருமித்து பணிபுரிவதே சரியானதாகவும், ஒழுங்கானதாகவும் இருக்கும். இக்காரியம் புதிய ஏற்பாட்டில் போதிக்கப்படுகிறது.

ஒரு தனிப்பட்ட அங்கத்தினரிடமோ, அல்லது மற்ற பிராந்திய சபையிடமோ, கருத்துவேறுபாடு இருக்குமானால் அந்த நபரிடமோ அந்த சபையாரிடமோ, பிரச்சனையைத் தீர்க்கவேண்டும் என்ற ஆவலுடன் நாம் அணுகவேண்டும்.உபதேசக் கோட்பாட்டில் பிரச்சனை வரும்போது, வேதாகமத்திற்குச் சென்று,அது என்ன போதிக்கிறது என்பதைக் கண்டு அதின் அடிப்படையில் நடக்க வேண்டும். தேவனுக்கு முன்பாக சரியானகாரியங்களைச் செய்வதற்கும் கர்த்தருடைய மக்களோடு ஒற்றுமையைக் காப்பதற்கும் என்னவெல்லாம் செய்யவேண்டுமோ, அதை மிகுந்த ஆவலோடும், ஜெபத்தோடும் செய்ய வேண்டும். நாம் ஒரு

காரியத்தை குறித்து எரிச்சலுள்ளவர்களாகி, மற்றவர்களின் மனதை புண்படுத்தவோ, அல்லது மற்ற பிராந்திய சபையை வேண்டு மென்றே எதிர்த்து நிற்கவும் கூடாது. வருகின்ற சிறு, சிறு பிரச்சினைக் கெல்லாம் சலித்துகொண்டு சபை அலுவல் கூட்டத்திலிருந்து வெளியேறுவதும் நழுவிக்கொள்வதும் அல்லது வேண்டுமென்றே விலகி நிற்பதும் கூடாது. மாறாக நாம் பிரச்சனையைச் சரிசெய்வதில் ஆவலுள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

ஒரு பிராந்திய சபையானது தன் அங்கத்தினர்களை அப்பகுதியிலுள்ள மற்ற சபையின் அங்கத்தினர்களோடு சேர்ந்து தேவனுக்காய் செயல்பட ஊக்கப்படுத்தவேண்டும். நாம் கிறிஸ்துவுக்குள் சகோதர, சகோதரிகளென்றும், உலகின் பிற மக்களை ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது எண்ணிக்கையில் குறைந்தவர்களாய் இருக்கிறோம் என்பதையும் உணர்ந்து கர்த்தருக்காய் ஒற்றுமையுடன் செயல்படவேண்டும். உலகிற்கு சுவிசேஷத்தையும், ஆண்டவருக்காக வாழவேண்டும் என்பதையும் எடுத்துச் சொல்லுகின்ற பெரும்பணி நமக்கு முன்பாக இருக்கிறது என்பதையும் உணர வேண்டும். நாம் ஒற்றுமையாய் இருப்பதினாலே இப்பெரும் பணியைச் செய்வதற்கு வேண்டிய பலன் நமக்கு எளிதில் கிட்டும். அதுமாத்திரமல்லாமல், கர்த்தருடைய சித்தத்தை செய்ய முயலும்போது ஆண்டவரும் நம்மோடு கூட இருப்பார்.

நாம் இங்கே ஒற்றுமையைக் குறித்து பேசுவதினால் அல்லது படித்துக்கொண்டிருப்பதினால், இத்தருணத்தை பயன்படுத்தி உங்களிடம் ஒரு வினாத்தொடுக்க ஆசைப்படுகிறேன். அது என்னவென்றால், ஒற்றுமையைக் குறித்து உங்கள் புரிந்து கொள்ளுதல் என்ன? எல்லா பிரிவினரும், தாங்கள் விரும்புவதை நம்புவதற்கு உரிமைஉண்டென்று நீங்கள் நம்புகிறீர்களா? பிரிந்திருந்து கொண்டே நாங்கள் எல்லாரும் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறோம் என்று சொல்லிக்கொள்ள முடியும் என்று நினைக்கிறீர்களா? அதாவது கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் என்பதில் மாத்திரம் ஒற்றுமையாய் இருக்கமுடியும் என்பதையும் நம்புகிறீர்களா? நீங்கள் ஒரு பிரிவினைச் சபையின் அங்கத்தினரா உங்கள் சபையைக் குறித்து வேதத்தில் வாசிக்க முடியுமா? ஒரு வேளை நீங்கள் என்னைப் பார்த்து ஒரு கேள்வியைக் கேட்கலாம். நாங்கள் கிறிஸ்துவை நம்பும் பொழுது, இவ்வேறுபாடுகளெல்லாம் ஒரு பொருட்டல்லவே என்று. உங்கள் கேள்வியிலேயே பதில் இருக்கிறது பாருங்கள். நீங்கள் கிறிஸ்துவை நம்பினால் கிறிஸ்து நீங்கள் எதைச் செய்ய வேண்டுமென்று விரும்புகின்றாரோ

அதையே நீங்கள் செய்யவேண்டும் என்று விரும்புவீர்கள். கிறிஸ்துவின் ஜெபத்தில்,அவர் நாமெல்லாரும் ஒன்றாய் இருக்கவேண்டும் என்பதற்காய் ஜெபித்தார் என்பதைப் பற்றி படித்தோம். ஆண்டவர் பிரிவினையை கண்டனம் பண்ணுகிறார் என்பதற்கு வேத வசனங்களையும் மேற்கோளிட்டுக் காட்டினோம். நாம் கிறிஸ்துவை நம்புகிறோம் என்று சொல்லிக்கொண்டு, அவர் எதிர்க்கிற காரியங்களை நாம் எப்படிச் செய்யமுடியும்? அவருடைய சபையின் அங்கத்தினராய் இல்லாதபோது நாம் எப்படி அவரை விசுவாசிக்க முடியும்? அவரது குடும்பமாகிய சபையில் நாம் ஒரு அங்கமாக இடம் பெறாதபோதும், கர்த்தரோடு மாறுபடும் போதும் நாம் எப்படி பரலோகம் செல்ல முடியும்? என் நண்பர்களே, இக்காரியங்களைக் குறித்து மீண்டும் சிந்திக்கும்படியாகக் கெஞ்சிகிறேன். நான் இங்கு என் சபையை அல்லது என் மதத்தை அல்லது மற்ற எதையாகிலும் கட்டாயமாகத் திணிக்க முயற்சிக்கவில்லை. மாறாக கர்த்தருக்கும், அவர் என்ன செய்யச் சொன்னாரோ அதற்கும் கீழ்ப்படியும்படியாக, உங்கள் ஒவ்வொருவரையும் ஊக்கப்படுத்துகிறேன்.

நாம் ஒரே காரியத்தைக் குறித்துப் பேசவும், ஒரே காரியத்தை செய்யவும் வேண்டுமென்றே ஆண்டவரும் விரும்புகிறார். அவரது சரீரத்தில் அதாவது ஆவிக்குரிய சரீரத்தில் அவருடைய குடும்பத்தில், ஒற்றுமையாய், ஒரு கூட்ட மக்களாய் திகழவேண்டு மென்றும் அவர் ஆசைப்படுகிறார். பவுல் எபேசு சபைக்கு எழுதியதை நினைவில் கொள்ளுங்கள். ஆதலால், கர்த்தர் நிமித்தம் கட்டுண்டவனாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிற புத்தியென்னவெனில் நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து, மிகுந்த மனத்தாழ்மையும், சாந்தமும், நீடிய பொறுமையும் உடையவர்களாய் அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி, சமாதானக் கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள். உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல ஒரே சரீரமும் ஒரே ஆவியுமுண்டு. ஒரே கர்த்தரும், ஒரே விசுவாமும், ஒரே ஞானஸ்நானமும், எல்லாருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு. அவர் எல்லார்மேலும் எல்லாரோடும் உங்கள் எல்லாருக்குள்ளும் இருக்கிறவர், என்று கூறுகிறார். *(எபே.4:1-6).*

ஆராதிக்கும் போதும், பிரசங்கிக்கும்போதும்,தனிநபர் உறவிலும், இந்த உலகில் நாம் அனைவரும் ஒன்றுசேர்ந்து மிகப்பெரிய காரியத்தைச் செய்கிறோம் என்பதை நினைவில் கொள்ளுங்கள். நாம் பார்த்த இந்த காரியங்கள் உங்களுக்கு பிரயோஜனமாய் இருந்திருக்கும் என நம்புகிறேன்.

# மன்னிப்பது எப்படி?

இப்பொழுது, நமது தொடரின் முக்கியமான பாடமான, மன்னிப்பது எப்படி? என்பது குறித்த நாம் பார்க்க உள்ளோம்.

பாவிகளாகிய நாம் இரட்சிப்படைவதற்கு நம்முடைய பாவங்களை இரட்சிக்கும்படியான அவசியம் கர்த்தருக்கு உண்டாயிற்று. அப்படிச் செய்வதற்கு, அவர் தம்மையே சிலுவையில் தியாகம் செய்தார். அதற்காக நாம் தேவனுக்கு நன்றி சொல்லுகிறோம். அப்படித்தானே? ஆனால் கர்த்தர் நம்முடைய கடந்த காலப் பாவங்களிலிருந்தெல்லாம் நம்மை மன்னித்திருந்தும், நாம் மனிதர்களாயிருப்பதால், மீண்டும் பாவம் செய்கிறோம். ஆகையால், நமக்கு மன்னிப்பு தொடர்ந்து அவசிய மாகிறது.அப்படிப்போலவே, நமக்குவிரோதமாகப் பாவம் செய்கிறவர் களுக்கு, மன்னிக்க நாம் ஆயத்தமுள்ளவர்களாயிருக்க வேண்டும். இக்காரியத்தை எப்படிச் செய்வதென்று நாம் கற்று,அதன்படி செய்வதற்கு நாம் விருப்பமுடையவர்களாயிராவிட்டால், நாம் நம்முடைய பாவங்களி லிருந்து மன்னிக்கப்படமாட்டோம். இதிலிருந்து இது எவ்வளவு முக்கியமான தென்று நீங்கள் தெரிந்துகொள்ள முடியும். இயேசு தம் சீஷர்களுக்கு இவ்விதம் கற்றுக்கொடுத்தார். எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும் (மத்.6:12) என்று. தொடர்ந்து இயேசுவானவர் மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கு ம் மன்னிப்பார். மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னியாதிருந்தால், உங்கள் பிதா உங்களுக்கும் மன்னியா திருப்பார். (மத்.6;14,15).

நம்முடைய பாவங்களை கர்த்தர் மன்னிக்கும்படியாக நாம் எதிர்பார்த்துக்கொண்டு, நமக்கு விரோதமாக மற்றவர்கள் செய்யும் தவறை மன்னிக்க மனமில்லாமலிருப்பது ஆச்சரியமாக இல்லையா? நாம் மன்னிக்க மறுப்போமானால், அவரும் நம்மை மன்னிக்க மாட்டார் என்ற உண்மையை நாம் அறிந்து கொள்ளவேண்டுமென கர்த்தர் சொல்லுகிறார். ''ஆகையால் நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்பட நாம் கர்த்தரை எதிர்பார்த்தால், நமக்கு விரோதமான பாவங்களை நாம் மன்னிக்க

வேண்டும்.'' இது மிகச் சுலபமானது. அது ஒன்றும் பெரிய காரியமில்லை தானே? மன்னிப்பு ஒரு வழியானதாக இருக்கக்கூடாது.எல்லா மன்னிப்பையும் கர்த்தர் மாத்திரமே செய்துகொண்டிருக்கவேண்டுமென நாம் எதிர்பார்க்கக் கூடாது. நாமும் அப்படிச் செய்யவேண்டும்.

அப்போஸ்தலன் பவுல் ''ஒருவருக்கொருவர் தயவாயும் மன உருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் '' என்று கூறியுள்ளார். (எபே.4:32) மீண்டுமவர், ''ஆகையால் நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும் தரித்துக்கொண்டு, ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்குக் குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித் தது போல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள்.'' (கொலோ. 3:12,13)என்கிறார். ஆகையால்,நமக்கு விரோதமாக ஒருவர் பாவஞ்செய்து, அதற்காக நம்மிடத்தில் மன்னிப்புக் கோரினால், நாம் அவர்களுக்கு மன்னிக்க வேண்டுமென்று மிகத்தெளிவாகத் தெரிகிறது. ஒருவேளை அவர்கள் அப்படி கேட்காவிட்டால் கூட கண்டிப்பாக, அவர்களுக்கு விரோதமாக மனஸ்தாபம் கொள்ளக்கூடாது.

இப்பொழுது, நாம் தேவனுக்கு விரோதமாகவும், சகமனிதனுக்கு விரோதமாகவும் பாவம் செய்திருந்தால், நாம் என்ன செய்ய வேண்டும்? நாம் எப்படி மன்னிப்பு பெற்றுக்கொள்ள முடியும்? நாம் தனிப்பட்ட அளவிலும், வெளியிலும் தெரியாமலும் பாவம் செய்திருந்தால்,அதாவது அந்தப்பாவத்தை நாமும், தேவனும் மாத்திரம் அறிந்திருந்தால், நாம் அந்தப்பாவத்திற்காக மனந்திரும்பி, தேவனிடத்தில் மன்னிப்பு கேட்க வேண்டும். இவ்விஷயத்தில் இதற்குமேல் ஒன்றும் செய்யத்தேவை யில்லை.

ஆனால், நாம் ஒரு மனிதனுக்கு விரோதமாகப் பாவம் செய்திருந்தால் அல்லது அவனுக்கு விரோதமாய் ஏதாவது காரியம் செய்திருந்தால்,பிறகு நாம் அவனிடத்தில் சென்று, நாங்கள் செய்தவைகளுக்காக வருந்துகிறோம் என்று சொல்லி, மன்னிப்புக் கேட்கவேண்டும்.அது அப்பிரச்சனையின் முடிவாக இருக்கட்டும். இன்னும், நாம் வெளிப்படையாகப் பாவம்

செய்து,அதன் மூலம் கர்த்தருக்கும்,அவருடைய சபைக்கும் அவமானத்தைக் கொண்டு வந்திருப்போமானால் நாம் சபைக்கு முன்பாகச் சென்று நம்முடைய பாவத்திலிருந்து மனந்திரும்பி, நம்முடைய தவற்றை வெளிப்படையாக அறிக்கையிட்டு, நம்முடைய சகோதரர்களும் மன்னிக்கக் கேட்கவேண்டும். அப்போஸ்தலர் எட்டாம் அதிகாரத்தில், மாய வித்தைக்காரனாகிய சீமோன்,தான் இரட்சிக்கப்படும்படியாக கர்த்த ருக்குக் கீழ்ப்படிந்து, சபையின் அங்கத்தினரானான். ஆனால், பேதுரு வாலும், யோவானாலும் சில சமாரியக் கிறிஸ்தவர்களுக்கு பரிசுத்த ஆவியானவரின் வல்லமை தந்தருளப்படுகிறதைக் கண்டு, அந்த வல்லமையை பணத்தினாலே பெற்றுக்கொள்ளும்படி சோதிக்கப் பட்டான். இது குறித்து வேத வசனம் இவ்விதம் சொல்லுகிறது.

பேதுரு அவனை நோக்கி; ''தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக் கொள்ளலாமென்று நீ நினைத்தபடியால் உன் பாவம் உன்னோடே கூட நாசமாய்ப் போகக்கடவது. உன் இருதயம் தேவனுக்கு முன்பாக செம்மையாயிராதபடியால், இந்த விஷயத்திலே உனக்கு பங்குமில்லை, பாகமுமில்லை. ஆகையால், நீ உன் துர்க் குணத்தை விட்டு மனந்திரும்பி, தேவனை நோக்கி வேண்டிக் கொள்;ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப் படலாம். நீ கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்பட்டிருக்கிறதாகக் காண்கிறேன் என்றான். அதற்கு சீமோன், நீங்கள் சொன்ன காரியங்களில் ஒன்றும் எனக்கு நேரிடாதபடிக்கு, எனக்காக கர்த்தரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றான். *(அப்.8:20-24)*. ஆகையால், சீமோன் மனந்திரும்பி குணப்பட்டான். ஆனால், அவன் பரிசுத்த ஆவியின் வல்லமையை தவறாக பயன்படுத்த சோதிக்கப்படாதபடி அவ்வல்லமை அவனுக்கு கொடுக்கப்பட்டதற்கான ஆதாரம் இல்லை.

கெட்ட குமாரன் கதை என்று பொதுவாக அழைக்கப்படுகின்ற வேறொரு சம்பவமும் நமக்கு வேதாகமத்தில் உண்டு. தகப்பனோடிருந்த அந்த இளையகுமாரன்,எல்லாம் தனக்கிருந்தும், தனக்குச் சேரவேண்டிய பங்கை எடுத்துக்கொண்டு, தகப்பனை விட்டுப் போக முடிவு செய்துவிட்டான். அவன், அவ்விதமாகவே செய்து, தன்னுடைய ஆஸ்தி முழுவதையும் தவறான வழிகளில் செலவழித்துத் தீர்த்தான். பிறகு, தன்னிடத்தில் எதுவுமே இல்லையென்ற நிலை ஏற்பட்டு, பசிக்கொடுமையிலிருந்து தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும்படி தனக்கு

எவ்வகையிலும் ஒவ்வாத பன்றி மேய்க்கும் வேலையைச் செய்ய வேண்டியதாயிற்று. பரிசுத்த வேதாகமம் இது குறித்து; ''அவனுக்கு புத்திதெளிந்தபோது அவன்: என் தகப்பனுடைய கூலிக்காரர் எத்தனையோ பேருக்கு பூர்த்தியான சாப்பாடு இருக்கிறது, நானோ பசியினால் சாகிறேன். நான் எழுந்து, என் தகப்பனிடத்தில், உம்முடைய கூலிக்காரரில் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும் என்பேன் என்று சொல்லி; எழுந்து புறப்பட்டு, தன் தகப்பனிடத்தில் வந்தான்.'' அவன் தூரத்தில் வரும்போதே, அவனுடைய தகப்பன் அவனைக்கண்டு, மனதுருகி, ஓடி அவன் கழுத்தைக் கட்டிகொண்டு அவனை முத்தஞ்செய்தான். குமாரன் தகப்பனை நோக்கி; தகப்பனே பரத்திற்கு விரோதமாகவும், உமக்கு முன்பாகவும் பாவஞ்செய்தேன், இனி உம்முடைய குமாரன் என்று சொல்லப்படுவதற்கு நான் பாத்திரன் அல்ல என்று சொன்னான். அப்பொழுது தகப்பன் தன் ஊழியக்காரரை நோக்கி, நீங்கள் உயர்ந்த வஸ்திரத்தைக் கொண்டு வந்து, இவனுக்கு உடுத்தி, இவன் கைக்கு மோதிரத்தையும் கால்களுக்கு பாதரட்சைகளையும் போடுங்கள். கொழுத்த கன்றைக் கொண்டு வந்து அடியுங்கள். நாம் புசித்து, சந்தோஷமாயிருப்போம். என் குமாரனாகிய இவன் மரித்தான், திரும்பவும் உயிர்த்தான். காணமற்போனான், திரும்பவும் காணப் பட்டான் என்றான். அப்படியே அவர்கள் சந்தோஷப்படத் தொடங்கினார்கள் (லூக்கா.15:17-24) என்று சொல்லுகிறது. நாமும் தேவனிடத்தில் இருந்து விலகிப்போனால் என்ன நடக்குமென்று இச்சம்பவம் தெளிவுப்படுத்துகிறது. நாம் அப்படிச் செய்யமாட்டோம். ஆனால், நாம் அப்படிச் செய்தால் நம்முடைய தகப்பன் நம்மை மன்னித்து திரும்பவும் ஏற்றுக்கொள்ளும்படியாக, நாம் மனந்திரும்பி நம்முடைய தவறுகளை அறிக்கை செய்வோம். யாக்கோபு ஆசிரியர் நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு உங்கள் குற்றங்களை ஒருவருக் கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள், நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதா யிருக்கிறது எனக் கூறுகிறார். '' (யாக்.5:16) .

இப்பொழுது, மறுபக்கத்தைப் பாருங்கள், நமக்கு விரோதமாக ஒருவன் பாவம் செய்துவிட்டால் என்ன செய்யவேண்டும்? இப்படிப்பட்ட சமயங்களில் கிறிஸ்துவின் ஆலோசனையைக் கவனியுங்கள். ''உன் சகோதரன் உனக்கு விரோதமாக குற்றஞ்செய்தால் அவனிடத்தில் போய்

*நீயும் அவனும் தனித்திருக்கையில், அவன் குற்றத்தை அவனுக்கு உணர்த்து; அவன் உனக்குச் செவிகொடுத்தால், உன் சகோதரனை ஆதாயப்படுத்திக் கொண்டாய்,'' அவன் செவிகொடாமற் போனால் இரண்டு மூன்று சாட்சிகளுடைய வாக்கினாலே சங்கதிளெல்லாம் நிலைவரப்படும்படி, இரண்டொருவரை உன்னுடனே கூட்டிக்கொண்டு போ, அவர்களுக்கும் அவன் செவிகொடாமற் போனால் அதைச் சபைக்கு தெரியப்படுத்து; சபைக்கும் செவிகொடாமற்போனால் , அவன் உனக்கு அஞ்ஞானியைப் போலவும் , ஆயக்காரனைப் போலவும் இருப்பானாக. பூலோகத்திலே நீங்கள் எவைகளைக் கட்டுவீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டப் பட்டிருக்கும்; பூலோகத்தில் நீங்கள் எவைகளை கட்ட விழ்ப்பீர்களோ அவைகள் பரலோகத்திலும் கட்டவிழ்க்கப் பட்டிருக்கும் என்று, மெய்யாகவே உங்களுக்கு ச் சொல்லுகிறேன்.(மத்.18:15-18)*

*நாம் மேலே கண்ட காரியங்களெல்லாம் நமக்குச்சொல்லும் பாடம் என்னவெனில், ஒருவன் தேவனுக்கு உகந்தவனாக இருக்க வேண்டுமானால், மனந்திரும்புதலைப் பெற்று கர்த்தராலே மன்னிக்கப் படவேண்டும்.*

*ஒரு பிராந்திய சபை ஆரம்பிக்கப்பட்டு, அது பரிசுத்தமானதாக காக்கப் படவேண்டுமானால், இந்த சத்திய வசனங்களின் உபதேசத்தை உங்கள் மனதில் இருத்திக்கொள்ளவேண்டும்.*

## ஞானஸ்நானம் பெற்ற பின் என்ன செய்யவேண்டும்?

1. தேவனுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். *(மத்.6:33)*
2. தேவனுடைய வார்த்தைகளை தியானிக்க வேண்டும் *(அப்.17:11)*
3. தேவனுக்கு முழு மனதோடு கீழ்ப்படியவேண்டும். *(மத்.7:21)*
4. ஜெபம் செய்ய வேண்டும். *(பிலி.4:6,7)*
5. தேவனை ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ளவேண்டும். *(யோவான் 4:24)*
6. பிறரை இரட்சிப்புக்குள் வழிநடத்த வேண்டும். *(மத்.28: 19,20)*

# கொள்கைச் சுத்தமாக இருப்பது எப்படி?

இப்பொழுது, கொள்கைச் சுத்தம் என்று நாம் எதைச் சொல்லு கிறோம். அது ஏன் அவ்வளவு முக்கியமானது? நாங்கள் இங்கே ஒருவன் இரட்சிக்கப்படுவதற்கும், பெற்றுக்கொண்ட இரட்சிப்பில் நிலைத்திருப் பதற்கும் அவசியமான கொள்கை, உபதேசம் மற்றும் சத்தியம் போதிக்கப் படுதல் போன்றவை பற்றிப் பேசுகிறோம்.

தேவன் பேசினார் என்பதை நாம் அறிவோம்.(எபி.1:1,2) கிறிஸ்து வார்த்தையாக உள்ளார் என்று சொல்லப்பட்டிருக்கிறது (யோவா.1:1,2) பிறகு, கர்த்தருடைய வார்த்தைகளை எழுதுவதில் பரிசுத்த ஆவியானவர், அப்போஸ்தலர்களையும், மற்றவர்களையும் வழிநடத்தினார் என்று சொல்லப்பட்டிருக்கிறது (II.தீமோ.3:16,17, II. பேது.1:21) இதையே வேறு வகையாகச் சொன்னால் கர்த்தர், நாம் அவருடைய சித்தத்தை அறிந்து கொள்ளும்படியாக, அவைகளை வேதாகமத்தின் பக்கங்களில் கொடுத் திருக்கிறார். குறிப்பாக இன்றைக்கு நமக்குப் பொருந்தக் கூடியதாக உள்ள புதிய ஏற்பாட்டின் பக்கங்களில் கொடுத்துள்ளார்.

சபையானது, எருசலேமில், ஸ்தாபிக்கப்பட்டதற்கு பிறகு அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அந்நியோந்நியத்திலும், அப்பம் பிட்குதலிலும், ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய்த்தரித்திருந்தார்கள் (அப்.2:42) என வாசிக்கிறோம். அப்போஸ்தலருடைய உபதேசம் என்பது என்ன? அது கர்த்தரிடத்திலிருந்து வந்தது. சீஷர்கள் அவைகளைத் தொடர்ந்து பின்பற்றினர். அதாவது, அவர்கள் தங்களுக்குப் போதிக்கப்பட்ட காரியங்களைத் தொடர்ந்து செய்தனர். அது என்ன? ஐக்கியமா யிருத்தல், அப்பம் பிட்குதல், ஜெபம் பண்ணுதல்.

ஆரோக்கியமான உபதேசம் பற்றி பவுல் பல சந்தர்ப்பங்களில் பேசியிருக்கிறார். உலக காரியங்கள், ஆரோக்கியமான உபதேசத்திற்கு எதிரானது என்று சொல்லியுள்ளார் (I.தீமோ.1:10) வேறொரு சமயத்தில் ஆரோக்கியமான உபதேசத்தை பொறுக்க மனதில்லாத சமயம் வரும் என்கிறார் (IIதீமோ.4:3) மூப்பர்களுடைய தகுதிகளைப் பற்றி பேசும்போது,பவுல் “.... குற்றம் சாட்டப்படாதவனும், தன்இஷ்டப்படி

செய்யாதவனும், முற்கோ பமில்லாதவனும், மதுபானப் பிரியமில்லாதவனும், அடியாதவனும், இழிவான ஆதாயத்தை இச்சியாதவனும் அந்நியரை உபசரிக்கிறவனும், நல்லோர்மேல் பிரியமுள்ளவனும், தெளிந்தபுத்தியுள்ள வனும் நீதிமானும், பரிசுத்த வானும், இச்சையடக்கமுள்ளவனும், ஆரோக்கியமான உபதேசத் தினாலே புத்தி சொல்லவும், எதிர் பேசுகிறவர்களைக் கண்டனம் பண்ணவும் வல்லவனுமாயி ருக்கும் படி, தான் போதிக்கப்பட்டதற்கேற்ற உண்மையான வசனத்தை நன்றாய் பற்றிக் கொள்ளுகிறவனுமாயிருக்க வேண்டும்.'' (தீத்.1:7-9) என்று சொல்லி யுள்ளார். மீண்டுமாக ''நீயோ ஆரோக்கியமான உபதேசத்துக் கேற்றவை களைப் பேசு.முதிர்வயதுள்ள புருஷர்கள் ஜாக்கிரதையுள்ளவர்களும், நல்லொழுக்கமுள்ளவர்களும், தெளிந்தபுத்தி யுள்ளவர்களும், விசுவா சத்திலும், அன்பிலும், பொறுமையிலும், ஆரோக் கியமுள்ளவர்களாயி ருக்கும்படி புத்திசொல்லு'' (தீத்.2:1,2) என்கிறார். இங்கே, கவனித்தால் விசுவாசத்தில் ஆரோக்கியமுள்ளவர்களாக இருக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் விசுவாசத்தில் ஆரோக்கியமாக இருப்பதற்கு, விசுவாசம் தேவனுடைய வார்த்தையை கேட்பதன் மூலம் வருகிறபடியால் (ரோமர் 10:17) ஒருவன் ஆரோக்கியமான உபதேசம் அல்லது வெளியாக்கப்பட்டுள்ள தேவசித்தத்தைக் கேட்க வேண்டும். மேலும் தீத்து.2:7,8 வசனங்களில் இவ்விதம் கூறுகிறார். நீயோ எல்லாவற்றிலும் உன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாகக் காண்பித்து, எதிரியானவன், உங்களை குறித்து, பொல்லாங்கு சொல்லுகிறதற்கு ஒன்றுமில்லாமல், வெட்கப்படத்தக்கதாக உபதேசத்திலே விகற்பமில்லா தவனும் நல்லொழுக்கமுள்ளவனும், குற்றம் பிடிக்கப்படாத ஆரோக்கி யமான வசனத்தைப் பேசுகிறவனுமாயிருப்பாயாக என்று கூறுகிறார்.

இப்பொழுது மேலே பார்த்த எல்லா வசனங்களிலும் நாம் ஆரோக்கியமான உபதேசம், உண்மையுள்ள வார்த்தை, விசுவாசத்தில் ஆரோக்கியம் மற்றும் ஆரோக்கியமான பேச்சு போன்ற வார்த்தைகள் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. இப்படிச் சொல்லுவது பரிசுத்த ஆவியான வருக்கு ஏன் அவசியமாயிருந்தது? காரணம் என்னவெனில், கர்த்தருடைய உபதேசம் முதலில் கொடுக்கப்பட்டபடியே, சுத்தமாகவும், உண்மை யாகவும் காக்கப்படும்படிதான். மற்றும் கள்ளப்போதகங்களிலிருந்து காப்பாற்றப்படும் படியாகவும், ஆரோக்கி யமான உபதேசம் பற்றி

வலியுறுத்த வேண்டியது அவசியமாயிருந்தது. அப்போஸ்தலன் பவுல் மேலும் தொடர்ந்து அன்றியும் சகோதரரே நீங்கள் கற்றுக்கொண்ட உபதேசத்திற்கு விரோதமாய் பிரிவினைகளையும், இடறல்களையும், உண்டாக்குகிறவர்களைக் குறித்து எச்சரிக்கையாயிருந்து அவர்களை விட்டு விலக வேண்டுமென்று உங்களுக்குப்புத்திசொல்லுகிறேன். அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியசெய்து நயவசனிப்பினாலும் இச்சகப்பேச்சினாலும் கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள் (ரோமர்.16:17,18) என்று கூறுகிறார்.

இளம்பிரசங்கியாகிய தீமோத்தேயுவுக்கு, அப்போஸ்தலன் பவுல் இப்படியாகக் கூறுகிறார். ''ஆதலால், என் குமாரனே , நீ கிறிஸ்து இயேசுவில் உள்ள கிருபையில் பலப்படு,அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்கு போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி '' (II.தீமோ.2:2) தொடர்ந்து அவர் ''நான் தேவனுக்கு முன்பாகவும் உயிரோடிருக்கிறவர்களையும்,மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கபோகிற கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகுதலையும் , அவருடைய இராஜ்ஜியத்தையும் சாட்சியாக வைத்து கட்டளையிடுகிறதாவது சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு, எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி கடிந்துகொண்டு, புத்தி சொல்லு, ஏனென்றால் அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்கு திரளாய்ச் சேர்த்துக் கொண்டு சத்தியத்திற்குச் செவியை விலக்கி, கட்டுகதைகளுக்குச் சாய்ந்து போகும் காலம் வரும்'' என்கிறார் (II.தீமோ.4:1-4). பேதுருவும் ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன் ஒருவன் உதவிசெய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன். எல்லாவற்றிலேயும் இயேசு கிறிஸ்து மூலமாய் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக அவருக்கே மகிமையும், வல்லமையும், சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக ஆமென். (I.பேதுரு 4:11) என்று கூறியுள்ளார்.

மேலுள்ள வசனங்களின் பின்னணியை நாம் கவனித்தால் அவைகள் சத்தியத்தின் முக்கியத்துவத்தையும் ஆரோக்கியமான மற்றும் உண்மையான உபதேசங்களின் அவசியத்தையும் காட்டு கிறது. நீங்கள் இருக்குமிடத்தில் ஒரு பிராந்திய சபையை ஆரம்பிப்பதாக இருந்தால் அது தேவனுடைய வார்த்தைகளின் போதனை யின்படிதான் செய்யப்படவேண்டுமென்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். தேவனுடைய முழுச்சித்தம் போதிக்கப்பட்டு அதற்குத் தங்களை கீழ்ப்படித்தினவர்களை மாத்திரம் உங்களது ஐக்கியத்தில் ஏற்றுக்கொள்ளுங்கள். அவர்கள் தேவனில் விசுவாசம் கொள்ளுகிறவர் களாகவும் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும் பினவர்களாகவும் கிறிஸ்துவின் மேலுள்ள தங்கள் விசுவாசத்தை அறிக்கையிட்டவர்களாகவும் தங்களுடைய பாவங்கள் மன்னிக்கப்பட ஞானஸ்நானம் பெற்றவர் களாகவும் இருப்பர். *(மாற்.16:15,16 ரோமர். 10:10, அப்.2:38)*. அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தை படித்தால் மனமாற்றப்பட்டவர்களின் பல உதாரணங்கள் அங்கே பட்டிய லிடப்பட்டிருக்கிறது. அவர்கள் எல்லோருமே இந்த உபதேச சத்தியத்திற்கு கீழ்ப்படிந்துள்ளனர். அதன் பலனாக, கர்த்தர் அவர்களை இரட்சித்து தமது சபையில் சேர்த்துக் கொண்டார். *(அப்.2:47)* யோவான் *3:3-5* வசனங்கள் மறுபிறப்பைக் குறித்து படம் பிடித்து காட்டுகிறது. ரோமர் *6:3,4* மற்றும் I.கொரி.*12:13* வசனங்களில் ஒருவன் இந்தக் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும் போது, கிறிஸ்துவிலும் அவருடைய சபையிலும் பிரவேசிக் கிறான் என்று போதிக்கப்படுகிறோம்.

பிறகு, பிராந்திய சபையானது இரட்சிப்பின் திட்டம் குறித்து உபதேசிக்கும். அதுமாத்திரமல்ல, ஒரே சபைதான் உண்டு என்றும், கிறிஸ்து அதைக் கட்டினார் என்றும், இயேசு அதன் தலைவர் என்றும் கிறிஸ்துவின் மீது அது கட்டப்பட்டிருக்கிறது என்றும், கிறிஸ்துவின் நாமத்தை அல்லது பெயரை அது தரித்திருக்கிறது என்றும், கிறிஸ்து அதற்காக மரித்தார் என்றும், அவர்தான் அதன் இரட்சகர் என்றும் அந்த சபைக்காக மீண்டும் ஒருநாளில் அவர் வருவார் என்றும் சபையானது போதிக்கும். *(மத்.16:15,16, எபே.4:4-6; மத்.16:18; கொலோ.1:8; I.கொரி.3:11; ரோமர் 16:16; அப்.20:28; எபே.5:23-27)* இங்கே நான் கொடுத்திருக்கிற வசனங்களின் அதிகாரப்படி, மேற்சொன்ன கருத்தை வெளிப்படுத்தினேன்.

பிராந்திய சபையானது, வசனங்களின் மூலமான மாதிரியை, வாரத்தின் முதல்நாளில் கூடிப்பாடுவதற்கும், ஜெபிப்பதற்கும், வேதம் வாசிப்பதற்கும், கர்த்தரின் பந்தியில் பங்கு பெறுவதற்கும்,கர்த்தர் நமக்குக் கொடுத்துள்ளதின்படி அவருக்குக் கொடுப்பதற்கும் பின்பற்றும். (அப்.20:7,எபே.5:19, தீத்.2:15, I.கொரி.11:23-29, I.கொரி.16:2) பிராந்திய சபை, தன்னுடைய அங்கத்தினர்களை பரிசுத்தமாக, தேவபக்திக்கேதுவான வாழ்க்கை வாழ்வதற்கு ஊக்கப்படுத்தவேண்டும் அப்போஸ்தலன் பவுல், "ஏனெனில் எல்லா மனுஷருக்கும் இரட்சிப்பை அளிக்கத்தக்க தேவகிருபையானது பிரசன்னமாகி, நாம் அவபக்தியையும், லௌகிக இச்சைகளையும் வெறுத்து, தெளிந்த புத்தியும், நீதியும், தேவபக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்தில் ஜீவனம் பண்ணி, நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும், மகா தேவனும், நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்னமாகுதலுக்கும், எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறபடி நமக்குப் போதிக்கிறது,அவர் நம்மை சகல அக்கிரமங்களின்று மீட்டுக்கொண்டு, தமக்கு உரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்தி வைராக்கியமுள்ளவர்களாகவும், நம்மைச் சுத்திகரிக்கும்படி நமக்காக தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார். இவைகளை நீ பேசி, போதித்து, சகல அதிகாரத்தோடும் கடிந்துகொள். ஒருவனும் உன்னை அசட்டை பண்ண இடங்கொடாதிருப்பாயாக." (தீத்.2:11-15) என்கிறார். பிராந்திய சபையானது வேதாகமம் எங்கே பேசுகிறதோ அங்கே பேசவும், எங்கே மௌனமாக இருக்கிறதோ அங்கே மௌனமாக இருக்கவும் வேண்டும். தேவனுடைய வார்த்தையோடு கூட்டவோ அல்லது குறைப்பதோ அல்லது மாற்று செய்வதோ இல்லாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும். (வெளி.22:18,19, கலா.1:6-9)

கர்த்தருடைய உபதேசம் மற்றும் கொள்கைகளை சுத்தமாக காத்துக்கொள்வதற்கு உள்ள ஒரு சிறந்த வழி யாதெனில் ஒவ்வொரு அங்கத்தினரும் தேவனுடைய வார்த்தையை வாசித்து அதில் பரீட்சையும் உள்ளவர்களாக இருக்கவேண்டும். (II.தீமோ.2:15) அப்படிச் செய்யும்போது தேவன் அவர்களிடத்தில் என்ன எதிர்பார்க்கிறார் என்பதை மாத்திரம் அவர்கள் தெரிந்து கொள்ளாமல் கள்ளப்போதகங்களுக்கு எதிராக தங்களைப் பாதுகாத்துக் கொள்ளவும் முடியும். சத்தியம் தான் விடுதலையாக்கும் என்பதை எப்பொழுதும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். (யோவா.8 :32)

# கிறிஸ்தவ வாழ்க்கை வாழ்வதெப்படி?

ஒருவன் கிறிஸ்தவனாக மாற வேண்டுமானால், கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்பதில் தனக்குள்ள விசுவாசத்தை அறிக்கையிட வேண்டும். அப்போஸ்தலர் 8-ம்அதிகாரத்தில் எத்தியோப்பிய மந்திரியின் மனமாற்றம் குறித்து நாம் வாசிக்கிறோம். அவன் ஞானஸ்நானம் பெறுவதற்கு முன், கிறிஸ்து தேவனுடைய குமாரனென்று, தான் விசுவாசிக்கிறேன் என்று சொன்னான். ரோமர்.10:10-ல் அப்போஸ்தலனாகிய பவுல் இரட்சிப்புண்டாக வாயினால் அறிக்கைபண்ணப்படும் என்கிறார். ஆனால், ஒருவன் தான் இரட்சிக்கப்படுவதற்கு, கிறிஸ்துவில் தனக்குள்ள விசுவாசத்தை அறிக்கையிடுவதோடு நிறுத்திக்கொள்ளாமல், அந்த இரட்சிப்பில் உறுதியாக நிலைத்திருப்பதற்கு, தன்னுடைய ஜீவிய காலமுழுவதும், கிறிஸ்துவின் நாமத்தைத் தொடர்ந்து அறிக்கை பண்ணவேண்டும். அதாவது, கிறிஸ்துவை தனது வாயினால் மாத்திரம் அறிக்கையிடுவதற்கு அவன் ஆயத்தமாயிராமல், அனுதின ஜீவியத்தின் மூலம் கிறிஸ்துவை அன்றாடம் அறிக்கை செய்யவேண்டும்.

ஒருவன் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவதன் பலனாக, அவன் இரட்சிக்கப்பட்டு,அவருடைய சபையாகிய குடும்பத்தில் சேர்க்கப் படுகிறான். இப்பொழுது அவன், மீண்டும் பிறந்த ஒரு மனிதன் (யோவான் 3:3-5). அதன்படி அவன்கிறிஸ்துவுக்குள் ஒரு புது சிருஷ்டி. இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின,எல்லாம் புதிதாயின. (II.கொரி.5:17) என்று பவுல் கூறுகிறார்.

ஆனால்,கிறிஸ்துவுக்குள் இருப்பது என்றால் என்னவென்றும், அவருக்குச் சொந்தம் என்றால் என்னவென்றும் தெரிந்து கொள்ள நாம் மேலும் தொடருவோம். பவுல் கொலோசே பட்டணத்திலிருந்த கிறிஸ்தவர்களுக்கு இவ்விதம் எழுதுகிறார். ''நீங்கள் கிறிஸ்துவுடன் கூட எழுந்ததுண்டானால் கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள். ஏனென்றால், நீங்கள்

மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது. நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடே கூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்.ஆகையால், விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள். இவைகளின் பொருட்டே கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவகோபாக்கினை வரும். நீங்களும் முற்காலத்தில் அவர்களுக்குள்ளே சஞ்சரித்த போது,அவைகளைச் செய்து கொண்டுவந்தீர்கள். இப்பொழுதோ கோபமும் மூர்க்கமும் பொறாமையும்,உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும்வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டுவிடுங்கள். ஒருவருக் கொருவர் பொய் சொல்லாதிருங்கள்; பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு, தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக் கொப்பாய்ப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருக்கிறீர்களே.அதிலே கிரேக்கனென்றும் யூதனென்றுமில்லை விருத்தசேதனமுள்ளவனென்றும், விருத்தசேதனமில்லாதவனென்றுமில்லை. புறஜாதியானென்றும், புறதேசத்தானென்றுமில்லை, அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை; கிறிஸ்துவே எல்லாரிலும் எல்லாமுமாயிருக்கிறார். ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும், பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையும், சாந்தத்தையும்,நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு;ஒருவரையொருவர் தாங்கி, ஒருவர் பேரில் ஒருவருக்கு குறைபாடு உண்டானால், கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, ஒருவருக்கொருவர் மன்னியுங்கள். இவை எல்லாவற்றின்மேலும் பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள். தேவசமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக் கடவது. இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள்; நன்றியறிதலுள்ளவர்களாயுமிருங்கள். கிறிஸ்துவின் வசனம் உங்களுக் குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரண மாக வாசமாயிருப்பதாக; சங்கீதங்களினாலும், கீர்த்தனைகளினாலும் ஞானப்பாட்டுகளினாலும் ஒருவருக்கொருவர் போதித்து புத்தி சொல்லிக்கொண்டு உங்கள் இருதயத்

திலே கர்த்தரைப் பக்தியுடன் பாடி; வார்த்தையினாலாவது கிரியையினாலாவது,நீங்கள் எதைச் செய்தாலும்,அதையெல்லாம் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே செய்து, அவர் முன்னிலையாகப் பிதாவாகிய தேவனை ஸ்தோத்திரியுங்கள்.(கொலே.3:1-17)

மேலும், அப்போஸ்தலன் பவுலுடைய வார்த்தைகளைத் தொடர்ந்து நாம் படித்து கிறிஸ்தவ வாழ்க்கை பற்றி தெரிந்து கொள்வோம். இங்கே அவர்,அந்நாட்களில் இருந்த கிறிஸ்தவர்கள் பற்றிப்பேசுகிறார்.அவர்கள் சபையானது ஆரம்பமானதற்கும்,அது வளர்ந்து பூரணத்தை அடைவதற்கும் எப்படி அற்புத வல்லமையின் உதவியை சார்ந்திருந்தார்களென்றும் கூறுகிறார். "மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமனப்பட்டவர்களாகி கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்கப் பூரண புருஷராகும்வரைக்கும், பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும், அவர் ,சிலரை அப்போஸ்தலராகவும், சிலரை தீர்க்கதரிகளாகவும் சிலரைச் சுவிசேஷகராகவும் சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார். நாம் இனிக்குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திராமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல், அன்புடன் சத்தியத்தை கைக்கொண்டு தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர் களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார். அவராலே சரீரம் முழுவதும்,அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு,ஒவ்வொரு அவயமும் தன்தன் அளவுக்குத் தக்கதாய்க் கிரியைசெய்கிறபடியே, அது அன்பினாலே தனக்கு பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீர வளர்ச்சியை உண்டாக்குகிறது. ஆதலால் கர்த்தருக்குள் நான் உங்களுக்குச் சாட்சியாகச் சொல்லி எச்சரிக்கிறது. என்னவெனில்,மற்றப் புறஜாதிகள் தங்கள் வீணான சிந்தையிலே நடக்கிறதுபோல நீங்கள் இனி நடவாமலிருங்கள். அவர்கள் புத்தியில் அந்தகாரப்பட்டு, தங்கள் இருதய கடினத்தினால் தங்களில் இருக்கும் அறியாமையினாலே தேவனுடைய ஜீவனுக்கு அந்நியராயிருந்து உணர்வில்லாதவர்களாய், சகலவித அசுத்தங்களையும் ஆவலோடே

நடப்பிக்கும்படி, தங்ளை காமவிகாரத்திற்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள். நீங்களோ இவ்விதமாய்க் கிறிஸ்துவைக் கற்றுக்கொள்ளவில்லை. இயேசுவினிடத்திலுள்ள சத்தியத் தின்படி நீங்கள் அவரிடத்தில் கேட்டறிந்து அவரால் போதிக்கப்பட்டீர்களே. அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப் போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு, உங்கள் உள்ளத்திலே புதிதானஆவியுள்ளவர்களாகி, மெய்யான நீதியிலும், பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக்கொள்ளுங்கள். அன்றியும், நாம் ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறபடியால் பொய்யைக் களைந்து அவனவன் பிறனுடனே மெய்யைப் பேசக்கடவன். நீங்கள் கோபம் கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள். சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது. பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள். திருடுகிறவன் இனி திருடாமல், குறைச்சலுள்ளவனுக்கு கொடுக்கத்தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலைசெய்து பிரயாசப்படக்கடவன். கெட்டவார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்படவேண்டாம். பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வார்த்தையுண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்.

அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள். சகல விதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்த துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது. ஒருவருக்கொருவர் தயவாயும் மனஉருக்கமாயும் இருந்து, கிறிஸ்துவுக்குள் தேவன் உங்களுக்கு மன்னித்ததுபோல நீங்களும் ஒருவருக்கொருவர் மன்னியுங்கள் *(எபே.4:11-31)*

புதிய ஏற்பாட்டுப் பகுதி அனைத்தையும் குறிப்பிடுவது என் நோக்கமல்ல. ஆனால், இந்த வசனங்கள் எல்லாவற்றிலும், ஒரு கிறிஸ்தவன் எப்படிப்பட்டவன், எப்படியிருக்கவேண்டும் என்பவைகள் சொல்லப் பட்டிருக்கிறது. கிறிஸ்தவ வாழ்க்கை என்பது பரிசுத்தமான தேவபக்திக்கு ண்டான வாழ்க்கையாகும். இது தேவனுக்கும், சக மனிதனுக்கும் சேவை செய்வதாகும்.

கர்த்தருக்கு நமது கீழ்ப்படிதலைக் காட்டுவதன்மூலம், கிறிஸ்துவின் நாமத்தை நாம் பெற்றுக்கொள்கிறோம். (அப்.11:26; I.பேதுரு 4:14) அப்படிச்செய்வதின் மூலம்,அவரைக் கனப்படுத்தி,அவர்தான் நமது கர்த்தரும் இரட்சகருமென்று அறிக்கையிடுகிறோம். நாம் அவரில் வாழ்கிறோம் என்றும், அவர் நமக்குள் வாழ்கிறார் என்றும் சொல்லுகிறோம். ஆகவே, நாம் அவருடைய நாமத்தை எடுத்துக்கொள்வதோடல்லாமல்,நம்முடைய பேச்சிலும், செய்கையிலும் ஒவ்வொருநாளும் அவரை அறிக்கையிடவேண்டும்.கிறிஸ்தவனாக இருப்பதற்கான சிறந்த வழிமுறை அதுதான்.

இப்பொழுது, நாம் புதிதாக தொடங்கப்பட்ட ஒரு பிராந்திய சபையின் அங்கத்தினர்களாக இருந்தாலும் நீண்ட நாட்களாக ஒன்றின் அங்கமாயிருந்தாலும், சிறிய அல்லது பெரிய சபையின் அங்கத்தினர்களாக இருந்தாலும் நாம் யார் என்றும், நாம் எங்கே அங்கமாயிருக்கிறோமென்பது குறித்தும் கவனிக்கப்படத்தக்கவர்களாகவேயிருப்போம்.

சில நேரங்களில், நாம் கிறிஸ்தவர்களாயிருப்பதை விட்டுக்கொடுக்க வேண்டியதாயிருக்கவேண்டுமோவென்று, நம்மை நாமே நொந்து கொள்கிறவர்களாயிருப்போம்.ஒருவன் கிறிஸ்தவனா யிருப்பது கடினமானது என்று கூட எண்ணக்கூடும். நாம் எந்தவொரு நற்காரியத்தையும் விட்டு விடவேண்டுமென கர்த்தர் கேட்கவில்லை. நம்மைத் துன்பப்படுத்தி நம்மை அழித்துப்போடக் கூடியவைகளிலிருந்து நம்மை விலக்கிக் கொள்ளும்படியாகவே கர்த்தர் கேட்கிறார். இது, நமது சரீரப்பிரகாரமான மற்றும் ஆவிக்குரிய இரண்டு வாழ்க்கைக்கும் பொருந்தும். அத்தோடு, நம்மோடிருந்து நமக்கு உதவிசெய்வேன் என்ற கர்த்தரின் வாக்குத்தத்தமும் நமக்குண்டு. இன்றும் நமக்கு உதவி செய்யும்படி, நமது பரம தகப்பனை ஜெபத்தின்மூலமாக நாம் அழைக்கலாம். மேலும் நமக்கு உதவி, நம்மை உற்சாகப்படுத்தும்படியாக நம்முடைய சகோதரர்களை நாம் நோக்கிப்பார்க்கலாம். உண்மையாகவே ஒரு கிறிஸ்தவன் மற்றெல்லாரைக் காட்டிலும் ஆசீர்வதிக்கப்பட்டவன்.

ஆகவே, நாம் ஒவ்வொருவரும், உண்மையுள்ள கிறிஸ்தவர் களாயிருந்து, நம்மை சுற்றியிருப்பவர்கள் கிறிஸ்துவை பின்பற்றுவது எவ்வளவு முக்கியமானதென்று உணரும்படி, நாம் நமது நடக்கையின் மூலம் காட்டுவோமாக!

# பிரச்சினைகளைக் கையாளுவதெப்படி?

இந்த இறுதிப்பாடத்தில், பிரச்சினைகளைக் கையாளுவதெப்படி? என்கிற பாடத்தைப் பார்க்கப்போகிறோம். ஆம், சபையை நடத்தும்போது, அவ்வப்பொழுது கேள்விகள் எழுவதுண்டு. பதில் எதிர்ப்பார்த்துக் கேட்கப் படும் கேள்விகள் அநேகம் எழுப்பப்படும். அவைகளில் சிலவற்றை குறித்து இங்கே விளக்குவதும், அதற்கு பதில் எழுதுவதும், பிரச்சினைகள் எழும்போது அவைகளைத் தீர்ப்பதற்கு மிகவும் உதவும்.

வெகு நாட்களுக்கு முன்பே, பேதுரு, இப்படிக் கூறுகிறார். "கர்த்தராகிய தேவனை உங்கள் இருதயங்களில் பரிசுத்தம் பண்ணுங்கள்; உங்களிலிருக்கிற நம்பிக்கையைக் குறித்து உங்களிடத்தில் விசாரித்துக் கேட்கிற யாவருக்கும் சாந்தத்தோடும் வணக்கத்தோடும் உத்தரவு சொல்ல எப்பொழுதும் ஆயத்தமாயிருங்கள்." (I.பேதுரு.3:15)

நாம் வேதத்திற்கு சுய விளக்கம் தர முயற்சிப்பது சரியா? இதோ மீண்டும் பேதுரு பதில் தருகிறார். "வேதத்திலுள்ள எந்த தீர்க்கதரிசனமும் சுயதோற்றமான பொருளையுடையதாயிராதென்று நீங்கள் முந்தி அறிய வேண்டியது.தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை.தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்" (II.பேது.1:20,21)

விசுவாசத்தினால் மாத்திரமே ஒருவன் இரட்சிக்கப்படமுடியும் என்று வேதம் போதிக்கிறதா? நாம் விசுவாசத்தினால் இரட்சிக்கப்படுகிறோம். ஆனால், விசுவாசம் மாத்திரம் ஒருவனை இரட்சிக்காது.ஒருவன் உண்மையாக விசுவாசித்தால், அல்லது அவனை இரட்சிக்கும்படியான விசுவாசம் அவனுக்கிருந்தால், அவனை கர்த்தர் என்ன செய்யச் சொன்னாரோ அவை அனைத்தையும் அவன் செய்வான். இப்படிப்பட்ட, விசுவாசம் இல்லாதவன், இரட்சிக்கப்பட முடியாது. கிறிஸ்து சொல்லுகிறார். "விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான். விசுவாசியாதவனோ ஆக்கினைக் குள்ளாகத் தீர்க்கப்படுவான்." (மாற்.16:16) நாம் பிதாவின் சித்தம் செய்கிறவர்களாக இருக்க வேண்டுமென்று கிறிஸ்து மொழிகிறார். "பரலோகத்திலிருக்கிற

என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்ஜியத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை'' (மத்.7:21) யாக்கோபு, நாம் திருவசனத்தின்படி செய்கிறவர்களாக இருக்கவேண்டும் என்கிறார். (யாக்.1:22) யாக்கோபு மேலும் சொல்லுகிறார். ''அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலே தானே செத்ததாயி ருக்கும். '' (யாக்.2:17)

ஞானஸ்நானம் நம்மை இரட்சிப்பதெப்படி? விசுவாசத்தைப் போலவே ஞானஸ்நானம் மாத்திரம் நம்மை இரட்சிக்காது. ஞானஸ்நானம் என்பது, ஒருவன் கர்த்தரை விசுவாசித்து, பாவத்திலிருந்துமனந்திரும்பி, கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனென்று தன்னுடைய விசுவாசத்தை அறிக்கையிட்டு, பின்பு,ஞானஸ்நானம் என்கிற கட்டளைக்கு கீழ்ப்படியும் படியாய்,பாவங்கள் கழுவப்பட தண்ணீருக்குள் அடக்கம் செய்யப்படும்போது நிறைவேறுகிறது. (எபி.11:6;லூக்.13:3; மத்.10:32; ரோமர் 6:3,4) பேதுரு, ஞானஸ்நானம் இரட்சிக்கும் என்று கூறும்போது அவர், கீழ்ப்படிதலை மையமாக வைத்து உலகத்தின் பாவத்திற்குள் இருக்கும் நாம், கிறிஸ்துவுக்குள் நம்மை உட்படுத்தும் போது இரட்சிக்கிறதென்று சொல்கிறார்.(I.பேதுரு.3:21;கலா.3:26,27;II.கொரி.5:17)

பரலோகத்திற்கு அநேக வழிகள் உண்டா? கிறிஸ்து சொல்லுகிறார். அதற்கு இயேசு; நானே வழியும் சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன் என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.(யோவா.14:6) மீண்டும் அவர் சொல்லும்போது ''மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.ஆட்டுத்தொழுவத்துக்குள் வாசல்வழியாய் பிரவேசியாமல், வேறுவழியாய் ஏறுகிறவன் கள்ளனும் கொள்ளைக் காரனுமாயிருக்கிறான்.'' (யோவா.10:1) என்கிறார். ஆண்டவர் இக்காரியத்தைக் குறித்து மிகவும் தெளிவாக கூறியிருக்கும்போது, பரலோகத்திற்கு எத்தனை வழி இருப்பதாக நீங்கள் எண்ணுகிறீர்கள்? பிறவழிகள் அநேகம் இருந்தால், கர்த்தர் இவ்வழியைத் தர ஏன் இவ்வளவு முயற்சிகளை மேற்கொண்டார்?

எந்த ஒரு சபையிலும் அங்கத்தினராயிராமல், இரட்சிக்கப்பட்டு பரலோகம் செல்ல முடியாதா? பிரிவு சபையிலோ அல்லது மனிதனால்

உண்டாக்கப்பட்ட சபையிலோ அங்கமாக இல்லாமல், இரட்சிக்கப்பட்டு ஒருவனால் பரலோகம் செல்லமுடியும். ஆனால், இவ்வுலகிலும், வரப்போகிற உலகிலும் ஒருவன் இரட்சிக்கப்பட கர்த்தருடைய சபையின் அங்கமாக ஒருவன் இருக்கவேண்டும். கிறிஸ்து சபைக்குத் தலையாயிருக்கிறதுபோல புருஷனும் மனைவிக்குத் தலையாயிருக்கிறான். அவரே சரீரத்திற்கும் இரட்சகராயிருக்கிறார். (எபே.5:23) ஆகவே ஒருவன் இரட்சிக்கப்பட சபையில்இருத்தல் அவசியம். நோவா கட்டிய பேழை அவர்களுக்கு இரட்சகராக இருக்கவில்லை. ஆனால், அவர்கள் இரட்சிக்கப்பட அந்த பேழைக்குள் இருக்கவேண்டியது அவசியமாயிருந்தது. முடிவிலே கிறிஸ்து தேவனுடைய ராஜ்யத்தை அல்லது சபையை பிதாவினிடத்தில் ஒப்புக்கொடுப்பாரானால், அதில் அங்கமாக இல்லாதவர்கள் என்ன ஆவார்கள்? உங்களுக்கே தெரியும் என நினைக்கிறேன்.

மோசேயின் பிரமாணம் கிறிஸ்தவர்களை இன்று கட்டுப்படுத்துகிறதா? வீட்டிலேயோ அல்லது பொழுது போக்குக்காகவோ? இசைக்கருவிகளைப் பயன்படுத்துவதில் எத்தவறுமில்லை. ஆனால் ஆராதனை என்று வரும்போது தான் அது சரியானதாக இருப்பதில்லை. கர்த்தர் நம்முடைய வாய்ப்பாட்டினால் மாத்திரம் அவரைத் துதிக்கவேண்டும் என்று வகைப்படுத்தி கூறியிருக்கிறார். (எபே.5:19; கொலே.3:16) அவர் இசைக்கருவிகளைப் பயன்படுத்தலாம் என்று கூறியிருந்தால், அதைப் பயன்படுத்துவதில் எத்தவறுமில்லை. ஆனால் அவர் அப்படிக் கூறவில்லை. ஆகவே இங்கு நாம் நம்மைப்பிரியப்படுத்துகிறோமா? அல்லது கர்த்தரைப் பிரியப்படுத்துகிறோமா என்பதுதான் முக்கியம். மனிதன், எல்லா விஷயங்களிலும் தனக்கு ஒரு வழியை உண்டுபண்ணுவதிலும், அதுதான் சரியானது என்று நிரூபிக்க அவன் செய்யும் முயற்சிகளையும் நினைத்தால் ஆச்சரியமாயிருக்கிறது.

கர்த்தருடைய பந்தியில் கிறிஸ்தவர்கள் எப்பொழுதெல்லாம் பங்குகொள்ளவேண்டும்? வாரத்தின் முதல்நாளில் அப்பம்பிட்கும் படி கூடிவந்தார்கள் என்று நமக்கு ஒரு முன் உதாரணம் இருக்கிறது. (அப்.20:7) ஆராதனைக்கென்று கிறிஸ்தவர்கள் எப்பொழுதெல்லாம் கூடிவர வேண்டும்? ஒவ்வொரு வாரமும் அல்லது ஞாயிற்று கிழமையும் என்பது சரியா? சரிதான். இப்படி கிறிஸ்தவர்கள் கூடி வரும் போதெல்லாம் கர்த்தருடைய பந்தியில் கலந்து கொள்ள வேண்டும்.

மூப்பரும் மற்றும் உதவிக்காரரும் இல்லாமல் வேதாகமத்தின் முறைமையின்படி சபையானது இயங்கமுடியுமா? ஆம், மூப்பராகவும், உதவிக்காரராகவும் வளர்வதற்கு அங்கத்தினர்களுக்கு காலம் எடுக்கும் (I.தீமோ.3: தீத்து.1) மூப்பர்கள் எழும்பிய பின் சபை இயங்க வேண்டுமென்றால், அது மூப்பர்கள் உண்டாகும் முன்னும் இயங்குவது அவசியம். ஒரு பிராந்திய சபை, மூப்பர்கள் ஆகும் தகுதியுள்ள மனிதர்களைக் கொண்டுள்ளதாயிருக்கும் முன், சபையின் அங்கத்தினர்கள், தலைமைத் துவத்தை சபையின் ஆண் அங்கத்தினர்களிடமே கொடுக்க வேண்டும். ஆனால், தகுதியுள்ள மனிதர்கள் ஒரு சபையில் இல்லாதிருந்தால் மூப்பர்களும், உதவிக்காரரும் இல்லாமலிருப்பது நல்லது. தகுதியில்லாதவர்களை மூப்பராகவும் உதவிக்காரராகவும் நியமிப்பது, சபைக்கு நன்மை தருவதை விட தீமையையே உண்டாக்கும்.

கர்த்தருடைய சபையை ஒரு நபர் எப்படி ஆரம்பிப்பார்? யாராவது ஒருவர் முன் நின்று நடத்தவேண்டும். நீங்கள் ஒருஅங்கத்தினராக இருந்து ஒன்றுக்கும் மேற்பட்டவர்களுக்குப் போதித்தால் அவர்களும் கர்த்தருக்குக் கீழ்ப்படிய முன் வரும்போது, அவர்களோடு சேர்ந்து கர்த்தருடைய சபையை தொடங்குவதாக ஆயத்தமாகிவிடுகிறீர்கள். நீங்கள் ஒன்றுக்கும் உதவாது வெறுமனே அமர்ந்து, ஒரு காரியத்தையும் கர்த்தருக்காகச் செய்யாவிட்டால், எதையும் உங்களால் இவ்வழியில் ஆரம்பிக்க முடியாது.ஆனால் கர்த்தரை நீங்கள் நேசித்தால், அதின் பின் ஒரு சபையை நீங்கள் ஆரம்பிப்பீர்கள் என்பது திண்ணம்.

நாம் அநேக கேள்விகளுக்கு பதில் சொல்லிக்கொண்டே போகலாம். ஆனால் நம்முடைய பாடத்தை முடிக்கும்முன், கள்ள போதனைக்கு உங்களை காத்துக்கொள்ளுங்கள் என்று வலியுறுத்துகிறேன். ஒருவேளை உங்கள் சகோதரர்களிடம் இருந்து வரும் போதனையானாலும் அதை ஏற்றுக்கொள்ளும் முன் வேதத்தின் வெளிச்சத்தில் அவசியம் அதைச் சரி பார்த்துக் கொள்ளுங்கள். உபதேசங்களைப் பொறுத்தவரை நாம் தாராளமனமுடையவர்களாயிருக்ககூடாது. ஆனால், அதே சமயம் உபதேசங்களைப் பொருத்தவரையில், நாம் நம்முடைய நிலைமையில் மூட அபிமானிகளாக இருக்கவும் கூடாது. நேர்த்தியான வழி ஒன்று உண்டு. அது கர்த்தருடைய வழி. நாம் அதின்படி நடக்க பெரும் முயற்சி எடுக்க வேண்டும்.